# என் வாழ்க்கையின் அம்சங்கள்

வ. ச. ஸ்ரீநிவாச சாஸ்திரி

080
070

கலைமகள் வெளியீடு

# என் வாழ்க்கையின் அம்சங்கள்

மகா கனம்

வ. ச. ஸ்ரீனிவாஸ சாஸ்திரி

கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் : : சென்னை-4

பதிப்புரிமை]

[விலை ரூ. 2-4-0

முதற் பதிப்பு: டிசம்பர், 1954.

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.

# பொருளடக்கம்


| | பக்கம். |
|---|---|
| முகவுரை | iv |
| காந்திஜியின் பாராட்டு | vi |
| வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் | vii |
| மகிழ்ச்சி நிகழ்ச்சிகள் | 1 |
| ஆசை மோசமானது | 52 |
| காயும் கனியும் | 67 |
| நல்ல நாளும் பெரிய நாளும் | 114 |
| சாஸ்திரியாரின் வாழ்க்கை அட்டவணை | 202 |

# முகவுரை

மகாகனம் சாஸ்திரியார் தமிழில் பேசவும் எழுதவும் வல்லமை வாய்ந்தவர் என்பதைப் பலர் அறியார். தமிழிலும் அவருக்கு நன்ருகச் சுவை ததும்பப் பண்பு மிளிர எழுதவும் வரும் என்பதற்கு, 'எனது வாழ்க்கையின் அம்சங்கள்' என்ற இப் புத்தகமே சான்று என்ருல் அது மிகைபடக் கூறுவதாகாது.

1941-ஆம் வருஷம் மேமீ 4உ முதல் டிசம்பர் 21-ஆந் தேதி வரை மகா கனம் சாஸ்திரியார் ஒவ்வொரு வாரமும் 'சுதேசமித்திரன்' வாரப் பத்திரிகையில் தம் வாழ்க்கைச் சம்பவங்களை விளக்கிக் கட்டுரைகள் எழுதிவந்தார்.

இவற்றைப் பதிப்பிப்பதற்குத் தமது உரிமைகளை இந்திய ஊழியர் சங்கத்திற்கு அளித்த 'மித்திரன்' ஆசிரியர் ஸ்ரீ.ஸி.ஆர். ஸ்ரீனிவாசன் அவர்களுக்கும் சாஸ்திரியாரின் திருக்குமாரர் ஸ்ரீ. வி. எஸ் சங்கரன் அவர்களுக்கும் திருக்குமாரி ஸ்ரீமதி ருக்மணி அவர்களுக்கும் எனது நன்றி.

இக் கட்டுரைகள் மித்திரனில் வெளியாவதற்குக் காரணமாயிருந்தவர் காலஞ்சென்ற ஸ்ரீ சுந்தரராகவன் ஆவார். அவருக்குச் சாஸ்திரியாரிடத்து அளவு கடந்த மரியாதை; அன்புங்கூட. மித்திரன் உதவி ஆசிரியராக இருந்த அவர், சாஸ்திரியாரை அடிக்கடி தூண்டி, இக் கட்டுரைகளை எழுதச் சொல்லி, வாரப் பத்திரிகைகளில் நூற்றுக் கணக்கான படங்களுடன் வெளியிட்டார். இக் கட்டுரை முழுவதையும் திரட்டுவது பகீரதப் பிரயத்தன மாகிவிட்டது. கடைசியாக, ஸ்ரீ சுந்தரராகவனுடைய இளைய சகோதரரான ஸ்ரீ ரங்கராகவனின் பேருதவியால் இக் கட்டுரைகளெல்லாம் எனக்குக் கிடைத்தன. இவரது உதவிக்கும் தாராள மனத்திற்கும் எனது நன்றி உரியது.

'என் வாழ்க்கையின் அம்சங்கள்' என்ற இக் கட்டுரைகளில், சாஸ்திரியார் தம் சுய சரிதத்தையும், வாழ்க்கையின் சம்பவங்களையும் சந்தித்த மனிதர்களையும் பற்றி, ஒரு புதிய முறையில் எழுதியிருக்கிருர். அவருடைய பாகுபாடே அலாதி. தமிழில் இத்தகைய சுய சரிதம் வருவது இதுவே முதல் தடவை. இவரது கட்டுரைகள் மற்ருெரு விஷயத்திலும் சிறப்புற்றவை.

பொது நடவடிக்கைகளில் சுமார் ஐம்பது வருஷம் பெரும் பங் கெடுத்துக்கொண்ட சாஸ்திரியார் திரைக்குப்பின் நடந்த, இது வரை வெளிவராத பல நிகழ்ச்சிகளை வெகு அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். நமது நாட்டுத் தலைவர்களைப் பற்றியும் பிரச்னைகளைப் பற்றியும் வெள்ளையர், அதிகாரவர்க்கத்தினர், பிற நாட்டினர், அவர்களது மனோ பாவம் முதலியவற்றைப் பற்றியும் சாஸ்திரியார் ஓர் ஓவியக்காரர்போல் இதில் சித்திரித்திருக்கிறார். இந்திய அரசியல் துறையிலும், வெளிநாடுகளில் இந்தியாவின் சார்பாக மகா நாடுகளில் கலந்து கொண்டபோதும், நேர்ந்த சம்பவங்கள், தலைவர்களின் வரலாறு, நோக்கம் முதலியவற்றை இதில் காணலாம். இம் மாதிரி தமிழில் ஒருவர் ஜீவிய காலத்தில் நிகழ்ந்த அரசியல் விவகாரங்களை எடுத்துரைக்கும் நூல்களில் (Contemporary political events,) இதுவேதான் முதலாக வெளி வருவது என்றால் அது மிகையாகாது.

சாஸ்திரியாரின் வாழ்க்கை வரலாறு ஒன்றும் இதில் சேர்த்திருக்கிறேன். இதில், வரிசைக் கிரமமாக அவரது வரலாறும், தமிழில் இதுவரை வராத சில சம்பவங்களும் சேர்ந்திருக்கின்றன. இவற்றைச் சாஸ்திரியாரின் உறவினர்கள், நண்பர்கள் முதலியோரிடமிருந்து திரட்டியும் வேறு ஆங்கிலப் புத்தகங்கள், பத்திரிகைகளைத் துருவிப் பார்த்துத் திரட்டி யும் தொகுத்தேன். இத் துறையில் உதவியவர்களான சாஸ்திரியாரின் இளைய சகோதரர் ஸ்ரீ. வி. எஸ். நரசிம்ம சாஸ்திரி, மாப்பிள்ளை ஸ்ரீ. எஸ். சுந்தரம், அண்ணாமலைப் பல் கலைக் கழகப் பேராசிரியர்களான ஸ்ரீ. ஆர். ராமானுஜாசாரி யார், திரு ஸி. ஆர். மயிலேறு, சாஸ்திரியாருடன் நெடுங்காலம் பழகினவரும் அவரிடம் ஈடுபட்டவருமான கோயம்புத்தூர் ஆர். ஸ்ரீநிவாசையங்கார், அண்ணாமலைச் சர்வகலாசாலை அதிகாரி கள், இவர்கள் எல்லோருக்கும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

இக் கட்டுரைகளைப் புத்தக உருவில் வெளியிட இசைந்த கலைமகள் காரியாலயத்து அதிபரான ஸ்ரீ என். ராமரத்னமவர் களுக்கும், இது புத்தக ரூபமாய் வெளிவருவதற்குப் பல விதத் திலும் உதவிய தமிழறிஞர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்க ளுக்கும் என் நன்றி.

இந்திய ஊழியர் சங்கம்,
8. வெஸ்ட்காட் ரோட்,
சென்னை-14.

**எஸ். ஆர். வேங்கடராமன்**

# காந்திஜியின் பாராட்டு

"காலன் நம்மிடையிலிருந்து மாத்திரமன்றி, இந்தப் பரந்த உலகத்திலிருந்தே இந்தியாவின் தலை சிறந்த தவப் புதல்வர்களுள் ஒருவரை அழைத்துக் கொண்டு போய்விட்டான். அவருக்கு இந்தியா மீதிருந்த தேசபக்தியும் ஆர்வமும் செப்பத்தரமன்று. நான் கடைசியாகச் சென்னைக்குச் சென்றிருந்த போது அவர் பேச்செல்லாம் இந்தியாவைப் பற்றியும் அதன் பண்பைப் பற்றியுமேதான். சாஸ்திரியார் அவற்றிற்கெனவே வாழ்ந்து உயிர் துறந்தார். தன்னல உணர்ச்சி சிறிதும் இல்லாதவர். படு கிடையாய்ப் படுக்கையில் நோய்வாய்ப்பட்டு இருக்கும் போதுங்கூடச் சுயநல உணர்ச்சி சிறிதும் அவரிடம் காணவில்லை. இது என் திடமான எண்ணம். அவர் சம்ஸ்கிருதத்தை நன்ருகப் படித்தவர். அவரது ஆங்கிலப் படிப்பைவிடப் பன்மடங்கு இது உயர்ந்த தென்றே சொல்லவேண்டும். நான் அதிகமாக ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. எங்களுக்கிடையில் அரசியல் துறையில் வேறுபாடுகள் இருந்தபோதிலும் எங்கள் மனம் இரண்டும் ஒருமித்திருந்தன. அவருடைய தேசபக்தி மிக உயர்ந்த வேறு எந்தத் தேசபக்தனுடைய தேசபக்திக்கும் எள்ளளவேனும் குறைந்ததல்ல. அவருடைய உடல் சாம்பலாகிவிட்டபோதிலும் அவதார புருஷராகிய சாஸ்திரி உயிரோடிருக்கிருர்."

ஆங்கில ஹரிஜன்—21-4-1946.

# சாஸ்திரியாரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

எஸ். ஆர். வேங்கடராமன்

*(இந்திய ஊழியர் சங்கம், சென்னை.)*

*காலஞ் சென்ற மகாகனம் வ. ச. ஸ்ரீனிவாச சாஸ்திரி யாரின் வாழ்க்கை வரலாற்றை அவரே, 'எனது வாழ்க்கையின் அம்சங்கள்' என்ற கட்டுரைகளில் எடுத்து விளக்கியிருக்கிறார்; அவரது வாழ்க்கை நடவடிக்கைகளை நன்குணர்ந்தவர்கள், அவரது வாழ்க்கையில் நிகழ்ந்த பல அம்சங்கள் அக் கட்டுரை களில் இல்லாததை உணர்வார்கள். அவரது உண்மையான வாழ்க்கை வரலாற்றை எழுதத் துணிந்தால் அது மிகப் பெரிதாக விரிவதுடன், அதனின்றும் நமது நாட்டின் அரசியல் வாழ்க்கை யின் போக்கு, அரசியல் சிக்கல்கள், கட்சி வாதங்கள், தலைவர் களின் போக்கு, பிரிட்டிஷ் வர்க்கத்தாரின் ஏகாதிபத்திய மனப் பான்மை எல்லாம் நன்கு புலப்படும். அவற்றைப்பற்றி யெல்லாம் இங்கே எழுதுவதாக உத்தேசம் இல்லை. அவரது வாழ்க்கையில் நிகழ்ந்த சில அம்சங்களையும் அவரது உயர்ந்த லட்சியம், அரசியல் ஞானம், பேச்சுவன்மை, தேசத் தொண்டு, இவற்றையும் பற்றித்தான் சுருக்கமாக இங்கே எழுத எண்ணுகிறேன்.*

## *பிறப்பும் வளர்ப்பும்*

*மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியார் தஞ்சாவூர் ஜில்லாவில் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள வலங்கைமான் கிராமத் தில், உயர்ந்த வைதிகமும் ஆசாரமும் நிறைந்த பிராமண குலத்தில் சங்கர நாராயண சாஸ்திரிகளுக்கும் பாலாம்பாள் அம்மாளுக்கும் தவப்புதல்வராகப் பிறந்தார். 'விளையும் பயிர் முளையிலே' என்னும் மொழிப்படி, சிறு வயசிலேயே படிப்பில் நல்ல தேர்ச்சி பெற்றுச் சிறப்பாகத் தமது பதினெட்டாம் ஆண்டில் பி. ஏ. பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்; ஆங்கிலத்திலும் சம்ஸ்கிருதத்திலும் மாகா ணத்திலேயே முதல் ஸ்தானம் பெற்றார்; சம்ஸ்கிருதத்தில்*

கோதேவாரிப் பொன் பதக்கத்தையும் சர்வகலாசாலையாரிட மிருந்து பரிசாகப் பெற்ருர்.

## ஆசிரியர் தொழில்

பின்பு, சில ஆண்டுகள் மாயவரத்திலும் சேலத்திலும் ஆசிரியராகத் தொண்டாற்றிய பின் சென்னைத் திருவல்லிக்கேணி ஹிந்து உயர்தரப்பள்ளியில் தலைமை ஆசிரியராக அமர்ந்தார். அப்பொழுது திருவல்லிக்கேணி ஹிந்து உயர்நிலைப்பள்ளி அவ்வளவு சீரான நிலையில் இருக்கவில்லை. சேற்றில் புதைந்து நகரமாட்டாமல் தவிக்கும் வண்டியின் சக்கரங்களைப் போன்ற நிலைமையிலிருந்தது அப் பள்ளி. தோள் கொடுத்து அச் சக்கரங்களை மேலேற்றிச் சரியாக வண்டி ஓடும் நிலைக்கு அப் பள்ளியைக் கொண்டுவந்த பெருமை, புகழ் அனைத்தும் சாஸ்திரி யாரைச் சார்ந்தவை.

## கூட்டுறவும் சாஸ்திரியாரும்

சாஸ்திரியாரைப் போன்ற பேரறிவாளிகளுக்குப் பள்ளிக் கூடத் தொண்டோடு பொதுநலத் தொண்டும் செய்ய வேண்டு மென்ற வேட்கை இருந்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. மேல் நாடுகளில் ஏழை மக்களும் நடு வகுப்பைச் சேர்ந்தவர்களும் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்திக்கொண்டு தமது பொருளா தார நிலைமையை மேம்படுத்திக்கொள்ளச் செய்துவந்த முயற்சி களை எல்லாம் பற்றிப் படித்துச் சென்னையிலும் அம்மாதிரி ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற அவா, சாஸ்திரி யாரின் உள்ளத்தில் சுரந்தது. நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களை எப்படி ஆரம்பிப்பது, எப்படி நடத்துவது என்பனவற்றைப் பற்றி - அரசாங்கத்தார் சட்டத்தை உண்டாக்கு முன்னரே - 1904-ஆம் வருஷத்தில், சாஸ்திரியாரும், அவர் நண்பர்களில் பதின் மூவரும் கூடித் திருவல்லிக்கேணியில் ஒரு கூட்டுறவுப் பண்டகசாலையை ஸ்தாபித்தார்கள். பல ஆண்டுகள் சாஸ்திரி யாரே அதன் தலைவராக நின்று அரிய சேவை செய்துவந்தார். இப்பொழுது அது ஓர் ஆலமரம்போல் சென்னை நகர எல்லைக் குள்ளும், அதற்கடுத்த வெளியூர்களிலும் கிளை ஸ்தாபனங் களுடன் பரவிச் சிறப்புற்று விளங்குகிறது. அதைத்தான் மக்கள் ஆங்கிலத்தில் டி. யு. சி. எஸ். என்கிருர்கள்.

## கிருஷ்ணஸ்வாமி ஐயரின் நட்பு

சென்னைக்கு வந்த சில நாட்களுக்குப் பின், மிக அறிவாளி யும் சட்ட நிபுணரும் இந்தியக் கலாசாரத்தில் நன்கு ஊறிய

வரும் பரோபகாரியும் தேசபகதரும எடுத்த காரியததை அஞ்சா நெஞ்சுடன் செய்யும் ஆற்றல் படைத்தவருமான வி. கிருஷ்ணஸ்வாமி ஐயருடைய நட்பு சாஸ்திரியாருக்குக் கிடைத்தது இந்த நட்பே சாஸ்திரியாரின் வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு பெரும் மாறுதலுக்குக் காரணமாக இருந்தது. சாஸ்திரியாருக்கும் கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கும் நட்பு ஏற்பட்டது முதல், சாஸ்திரியார் அவருடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டு, பொதுநல விஷயங்களிலும் அரசியல் விஷயங்களிலும் கிருஷ்ணஸ்வாமி ஐயரோடு ஒத்துழைத்து வந்தார்.

## கோகலேயின் சங்கத்தில் சேர்ந்தது

1905-ஆம் ஆண்டில் புனுவில் வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரின் ஆப்தநண்பரும் பெரும் புகழ் பெற்ற தேசபக்தரும் அரசியல் ஞானியுமான கோபாலகிருஷ்ண கோகலே அவர்கள் இந்திய ஊழியர் சங்கத்தை ஸ்தாபித்தார். வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரின் சிபாரிசின்பேரில், சாஸ்திரியார் அச் சங்கத்தின் ஆயுள் அங்கத்தினராக 1907-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 6-ஆந் தேதி சங்கத்தின் பிரதிக்ஞைகளை ஏற்றுக்கொண்டு கையொப்பமிட்டுச் சேர்ந்தார். அது முதற்கொண்டு சுமார் நாற்பதாண்டுகள் வரை சாஸ்திரியார் அரசியல் துறையிலும் சமூகத் துறையிலும் கல்வித் துறையிலும் இந்தியக் கலாசாரத் துறையிலும் தனிச்சிறப்புடன் தொண்டாற்றினுர். இச் சங்கத்தின் அங்கத்தினராகச் சேருபவர்கள் தமக்கெனப் பொருளீட்டுவதில் ஈடுபடக்கூடாது. தம் ஆற்றல், அறிவு, செல்வாக்கு எல்லாவற்றையும் நாட்டின் தொண்டிற்கே செலவழிக்க வேண்டும். எளிய வாழ்க்கை நடத்த எவ்வளவு பொருள் வேண்டுமோ அதைப் பெற்று, ஆடம்பரமற்று, மன நிம்மதியுடனும் ஆர்வத்துடனும் தேசத் தொண்டாற்ற வேண்டும். இதன் அங்கத்தினர்கள் நாட்டின் முன்னேற்றத்தைக் கருதி அவரவர்கள் ஆற்றல், விருப்பம், வாய்ப்பு இவற்றிற்கு ஏற்றபடி ஜாதி மத வித்தியாசமின்றி அரசியல் துறையிலும் கல்வித் துறையிலும், சமூகத் தொண்டிலும் பொருளாதாரத் துறையிலும் உழைத்து வருகிருர்கள்.

இந்திய ஊழியர் சங்கத்தில் சேர்ந்து ஆறு ஆண்டுகள் கழிந்ததும், 1913-ஆம் வருஷத்தில் சாஸ்திரியார் சென்னைச் சட்டசபைக்கு நியமனம் பெற்ருர். 1915-ஆம் வருஷம் இந்திய ஊழியர் சங்கத்தை ஸ்தாபித்த கோபாலகிருஷ்ண கோகலே காலமாகிவிடவே, சாஸ்திரியாரை அதன் தலைவராக மற்ற அங்கத்தினர்

கள் தேர்ந்தெடுத்தார்கள். பிறகு 1916-ஆம் வருஷத்தில் டில்லிச் சட்டசபைக்குச் சென்னைச் சட்டசபை அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1919-ஆம் வருஷத்தில் இந்தியா மந்திரி மாண்டேகு வெளியிட்ட அரசியல் சீர்திருத்த அறிக்கையை ஆதரித்து, அதைப்பற்றிச் சாஸ்திரியார் நாடெங்கும் பிரசாரம் செய்தார். பிறகு இங்கிலாந்துக்கு முதல் முதலாகச் சென்று நமது நாட்டிற்கு இன்னும் அதிகமான சீர்திருத்தங்கள் வேண்டுமென்று பல மேடைகளினின்றும் பேசினர். மந்திரிகளைக் கண்டும் வாதாடினர். பார்லிமென்ட் அங்கத்தினர்களுடனும் சம்பாஷித்து அவர்களது ஆதரவையும் பெற்றார்.

## சாம்ராஜ்ய மகாநாடும் குடியேறிய இந்தியர்களும்

**1921**-ஆம் வருஷத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மகாநாடு லண்டனில் நடந்தது. அதற்கு இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாகச் சாஸ்திரியாரும் சென்றிருந்தார். அம் மகாநாட்டில் சாம்ராஜ்ய நாடுகளில் குடியேறியிருக்கும் இந்தியர்களின் நிலைமை மோசமாக இருக்கிறதென்று கூறி, சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த ஒரு நாட்டினரை வேறு நாட்டினர் நிறம், பொருளாதார ஏற்றத் தாழ்ச்சி, இவை காரணமாகத் தாழ்மையாக நடத்தக்கூடாது என்று சாஸ்திரியார் வற்புறுத்தினர்.

சாஸ்திரியாரின் பிரசங்கத்தைக் கேட்ட கானடா, ஆஸ்திரேலியா, நியூஜீலண்டு நாடுகளின் பிரதம மந்திரிகள், சாஸ்திரியாரைத் தம் நாட்டிற்கு அழைத்து இந்தியர்களின் நிலைமையை நேரில் அறிந்துகொள்ள வேண்டுமென்றும் குறைபாடு ஏதேனும் இருந்தால் தெரிவிக்க வேண்டுமென்றும், அவற்றை நீக்கத் தம்மால் ஆவதைச் செய்வதாகவும் சொன்னர்கள். ஆனால் தென்னாப்பிரிக்கப் பிரதம மந்திரியான ஸ்மட்ஸ் அம் மகாநாட்டிற்கு வந்திருந்தும் பெரும்பான்மையான இந்தியர்கள் குடியேறியிருக்கும் தம் நாட்டிற்குச் சாஸ்திரியாரை அழைக்கவில்லை. சாஸ்திரியாரும் மற்றப் பிரதம மந்திரிகளின் அழைப்பிற்கு இணங்கிக் கானடா, ஆஸ்திரேலியா, நியூஜீலண்டு போன்ற நாடுகளுக்குச் சென்று, ஆங்காங்கே குடியேறியிருந்த இந்தியர்களோடு சல்லாபம் செய்து குறைகளை அறிந்து ஆவன செய்தார். குடியேறிய இந்தியர்களுக்குச் சம ராஜாங்க உரிமைகளையும், சமூக உரிமைகளையும் வழங்காமல் இருப்பது அநீதி என்று சென்ற இடமெல்லாம் தம் பிரசங்கங்களில் வற்புறுத்தினர். இது முதற்கொண்டு கடல் கடந்த இந்தியர்களுக்குச் சம அந்தஸ்தையும் எல்லாப் பிரஜா உரிமை

களையும் வாங்கி வழங்குவதற்காகவே சாஸ்திரியார் தம் வாழ் நாட்களைக் கழித்தார். சாஸ்திரியாரின் ஆவி பிரிவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு கூட, அவர் தென்னுப்பிரிக்க அரசாங்கத்தார் இந்தியர்களுக்கு இழைத்து வந்த அநீதியைப் பற்றிப் பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கையை விடுத்தார். ஆகவே கடல் கடந்த இந்தியர்களின் பிரச்னைகளைக் கண்கொட்டாமல், தூங்காமல் பார்த்துத் தக்க நடவடிக்கைகளை அவ்வப்பொழுது எடுத்துக்கொண்ட தலைவர்களுள் சாஸ்திரியார் முன்னணியில் நின்றார் என்றால் அது மிகையாகாது.

ஆனால் நிறத்திமிர் கொண்ட வெள்ளையர்களின் அரசாங்கங்கள் சாஸ்திரியாரின் யோசனைக்கு இணங்காததால்தான், இன்றைக்கும் நிறவெறி பிடித்த வெள்ளையர்கள் இந்தியர்களைப் பல விதத்தாலும் சட்ட மூலமாயும் அதிகார முறையிலும் ஒடுக்கி, விலக்கி ஹிம்சித்து, அவர்களை நாட்டை விட்டு ஓட்ட-மலான் போன்ற நிறத்துவேஷிகள்-இன்றும் வழி தேடி வருகிறார்கள். இம்மாதிரியான மனப் போக்குத்தான் உலகம் நிலை குலைந்திருப்பதற்கு முக்கிய காரணம். நிறத்துவேஷமும் ஏகாதிபத்திய மனப்பான்மையும் உலகில் நிலவும் வரையில் சமாதானம் நிலைக்காது. இதைத்தான் சாஸ்திரியார் ஆயுள் பரியந்தம் வற்புறுத்தி வந்தார்.

1923-ஆம் வருஷத்தில் கினியாவில் இந்தியர்களுக்கு இவ்விதமான மற்றொரு கேடு விளைந்தது. இந்த நிலைமையைச் சமனப்படுத்தச் சாஸ்திரியார் இங்கிலாந்துக்குச் சென்று பிரிட்டிஷ் அதிகாரிகளிடம், இந்தக் கினியா அநீதியை ஒழிக்கும்படி வாதாடினார். மிகவும் மேலான பிரிட்டிஷ் அரசியல் லட்சியங்களையும் தத்துவங்களையும் அடிப்படையான நேர்மைகளையும், அற்ப புத்தியும் துவேஷமும் நிறைந்த வெள்ளையர்கள் தம் சுய நலத்தைக் கருதிக் காற்றில் பறக்க விடுகிறார்களே என்று பொருள் படும்படியாகக் காரசாரமாகப் பேசினார். பிறகு இம்மாதிரியே தென்னுப்பிரிக்காவில் உள்ள இந்தியர்களின் நலத்திற்காகவும் பாடுபட்டார். மற்றெல்லாப் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளையும் விடத் தென்னுப்பிரிக்காவில்தான் நிறவெறி தீவிரமாகத் தலைவிரித்தாடுகிறது. மகாத்மா காந்தியும் கோபாலகிருஷ்ண கோகலேயும் இக் கொடுமையை நீக்கப் பட்ட பாட்டை இந்தியப் போராட்டச் சரித்திரம் படித்தவர்கள் நன்கறிவார்கள். 1926-ஆம் வருஷம் இந்திய அரசாங்கத்தின் சார்பாகத் தென்னுப்பிரிக்கா சென்ற தூதுகோஷ்டியில் சாஸ்திரியாரும் ஓர் அங்கத்தினராக இருந்தார். தென்னுப்பிரிக்க அரசாங்க அதிகாரிகளுடன் இத் தூது கோஷ்டி கலந்தாலோசித்ததன் பலனாக ஏற்பட்டதுதான் கேப்

டவுன் ஒப்பந்தம் என்பது. அந்த ஒப்பந்தத்தின்படியும் மகாத்மா காந்தியடிகளின் வற்புறுத்தல் காரணமாகவும் சாஸ்திரியார் தென் ஞப்பிரிக்காவிற்கு இந்தியாவின் ஏஜன்ட் ஜெனரலாகச் சென் ருர். அப்போது அவர் அநுபவித்த சங்கடங்களும் அவமானங்க ளும் கொஞ்சநஞ்சம் அல்ல. அவர் தென்ஞப்பிரிக் காவில் செய்த இரண்டு அரிய தொண்டுகளை இங்கே குறிப்பிடலாம்; ஒன்று; பல சங்கடங்களுக் கிடையே, இந்தியர்களிடமிருந்தே சுமார் மூன்று லக்ஷ ரூபாய் வசூலித்து இந்தியக் குழந்தைகளின் நலத்தை உத்தேசித்து ஓர் உயர்தரப் பள்ளியை ஸ்தாபித்தார். இரண்டாவது, இந்தியக் கலாசாரம், நாகரிகம், பண்பு இவற்றைப் பற்றித் தென்ஞப்பிரிக்க வெள்ளையர்களுக்கு ஒன்றுமே தெரியாமல் இருந்தது. உண்மையி லேயே தென்ஞப்பிரிக்காவிலிருக்கும் நீக்ரோவர்களுக்கும் இந்தி யர்களுக்கும் வித்தியாசம் இல்லை. காட்டு மிராண்டிகள் நிறைந்த நாடு இந்திய நாடு என்பதுதான் தென்ஞப்பிரிக்க வெள்ளையர் களுடைய கொள்கை. இந்த மனப்பான்மையை மாற்றச் சாஸ்திரி யார் இந்திய நாட்டின் உயர்ந்த பண்பு, கலைச்சிறப்பு, சமயம் இவற்றைப் பற்றி அடிக்கடி அறிஞர்கள் நிறைந்த கூட்டங்களில் சொற்பொழி வாற்றி வந்தார். தென்ஞப்பிரிக்காவில் சாஸ்திரி யார் நிகழ்த்திய பிரசங்கங்களைத் தொகுத்துத் தென்ஞப்பிரிக்க இந்தியர் ஒருவர் புத்தகமாக வெளியிட்டிருக்கிருர். நமது நாட் டின் கலாசாரம், பண்பு, வேதம், உபநிஷத்து, கீதை, பெண் டிரின் உயர்வு, சங்கரரின் தத்துவம் போன்ற அரிய விஷயங்களை யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில் தெளிவாக எடுத் துச் சொல்லியிருக்கிருர். இந்தியப் பண்பில் ஊறித் திளைத்த சாஸ்திரியார், தம் உயர்ந்த அறிவாலும் ஆற்றலாலும் சொல்வன்மையாலும் இனிய வார்த்தைகளாலும் பொறுமை யாலும் உயர்ந்த பரந்த நோக்கத்தாலும் வெள்ளையர்களுக்கு இந்தியர்களின் மீதிருந்த துவேஷத்தை ஒருவாறு கரைத்தார். இது மகத்தான சாதனையென்றே சொல்ல வேண்டும்.

## அரசியல் துறையில்

சென்னைச் சட்ட சபையில் சாஸ்திரியார் அங்கத்தினரா யிருந்த காலத்திலேயே அதாவது 1915-ஆம் வருஷத்தில் அவர் அரசியல் துறையிலும் கவனம் செலுத்திஞர். அப்பொழுது அரசியல்வாதிகள் தயாரித்த இந்திய அரசியல் சீர்திருத்தக் கோரிக்கையில் கையொப்பமிட்ட பதினெண்மர்களுள் சாஸ்திரி யாரும் ஒருவர். 1924-ஆம் வருஷத்தில் இந்திய சட்ட சபையில் ரௌலத் மசோதா விவாதத்திற்கு வந்தபொழுது அதைப்பற்றிச்

சாஸ்திரியார் தயைதாட்சிண்யமின்றி எதிர்த்துப் பேசினார். மித வாதக் கட்சியின் சார்பில் இங்கிலாந்துக்குச் சென்று இந்தியா வுக்கு இன்னும் அதிகமான அரசியல் உரிமைகள் வேண்டுமென்று வாதாடினார். பின்பு பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்திய அரசி யல் சீர்திருத்தங்களை விவாதித்து முடிவு கட்ட வட்ட மேஜை மகாநாடுகளை லண்டனில் 1930-32-இல் கூட்டியபோது சாஸ்திரி யார் முதல் இரண்டு மகாநாடுகளுக்கு இந்தியாவின் பிரதி நிதியாகப் போயிருந்தார். அவர் அப்பொழுது அரசியல் சீர்திருத்தங்கள் சம்பந்தமாகச் செய்த உபந்நியாசங்கள், கூறிய யோசனைகள், எல்லாம் ஈடும் எடுப்பும் அற்றவை. ஆனால் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தினரின் அஜாக்கிரதையினால் பல அரிய யோசனைகளைக் கூறிய சாஸ்திரியாருக்கு, அந்த யோசனை களை உருப்படுத்த ஏற்பட்ட பார்லிமெண்ட் கூட்டுக்கமிட்டியில் இடம் கிடைக்காதது வருந்தத் தக்கது. 1935 - ஆம் வருஷம் இந்திய அரசியல் சட்டப்படி, ஒரு தற்காலிக மந்திரிசபையைச் சென்னையில் அமைக்கும்படி அரசாங்கத்தார் சாஸ்திரியாரை அழைத்தபொழுது அப்படி ஒரு மந்திரி சபையை அமைக்கத் தாம் இசைவது முற்றும் தவறானது என்று சொல்லி மறுத்து விட்டார்.

## அண்ணாமலைச் சர்வகலாசாலை உப அத்தியக்ஷகர்

தமது வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே ஆசிரியத் தொழிலில் இறங்கிப் பதினேழு வருஷம் அத்துறையில் உழைத்துப் பேரும் புகழும் படைத்த சாஸ்திரியார் 1935-ஆம் வருஷத்தில் அண்ணா மலைச் சர்வகலாசாலையின் உப அத்தியக்ஷகர் பதவியை ராஜா சர் அண்ணாமலை செட்டியாரின் வற்புறுத்தலின்மேல் ஏற்றுக்கொண்டு சுமார் ஆறு வருஷ காலம் அந்தச் சர்வகலாசாலைக்கும் அதன் மாணவர்களுக்கும் பல விதத்தாலும் தொண்டு செய்து அதற்குப் பேரையும் புகழையும் தேடித் தந்தார். இதனிடையில் மலேயா வில் ரப்பர்த்தோட்டங்களில் வேலை செய்துவந்த இந்தியத் தொழி லாளர்களின் நிலைமையை இந்திய அரசாங்கத்தாரின் கோரிக்கைப் படி விசாரிக்க மலேயா சென்று அங்கே அவருடைய சம்பளம், வீட்டு வசதி, சுகாதார வசதி, படிப்பு வசதி முதலியவற்றைப் பற்றிச் சில சிபாரிசுகளை இந்திய அரசாங்கத்தாருக்குச் செய்தார்.

## இந்தியப் பிரிவினையைத் தீவிரமாக எதிர்த்தல்

இந்தியாவும் மற்ற உலக நாடுகளுக் கிடையில் ஒரு பெரிய நாடாக விளங்க வேண்டும் என்ற அவா சாஸ்திரியாரை முற்றும் விட்டு அகலவில்லை. இந்தியாவைப் பிரிக்க வேண்டுமென்ற

மகமத் அலி ஜின்னுவின் கட்சி வலுவடைந்து வந்ததைக் கண்ட சாஸ்திரியார் மனம் நொந்து எழுபது வயசு கடந்து, உடல் தளர்ந்து நோய் வாய்ப்பட்டிருந்த காலத்தும், வெகு ஆவேசத் தோடு தக்க காரணங்களைக் காட்டி ஜின்னுவின் பிரிவினைக்கொள் கையை எதிர்த்துப் பல மேடைகளில் பேசிப் பிரசாரம் செய் தார். இப்படி இந்தியா துண்டாக்கப்பட்டால் உலக விவ காரங்களில் இந்தியாவுக்குக் கிடைக்கும் ஸ்தானம், செல்வாக்கு எல்லாம் பாதிக்கப்படுமென்பது சாஸ்திரியாரின் உறுதியான கருத்து. ஒரு தடவை ராயப்பேட்டையில் வெகு ஆவேசத் துடன் இதைப்பற்றிப் பேசியபோது, சாஸ்திரியார் தளர்ந்து மூச்சுவிடத் திணறுவதை அறிந்த அவர் சிஷ்யரும் நண்பருமான டி.ஆர். வேங்கடராம சாஸ்திரியார் பயந்து, ''இத்தோடு இன்று போதும்; பிறகு பார்த்துக்கொள்ளலாம்'' என்று சொன்னுர். அப்போது சாஸ்திரியார் சிறிது சமாளித்துக்கொண்டு கனைத்து விட்டு, ''வந்தது வரட்டும்; என் மனத்தில் உள்ளதை இன்று சொல்லித்தான் ஆகவேண்டும்'' என்று மீண்டும் அரை மணி பேசினுர். என்னைப் போன்றவர்களுக்குச் சாஸ்திரியாருக்கு எந்த நேரத்தில் என்ன ஆகுமோ என்ற பயந்தான். ஒரு தடவை சென்னை இந்திய ஊழியர் சங்கத்தில் கோகலேயைப் பற்றிப் பேசிக்கொண் டிருக்கையில் மூர்ச்சை அடைந்து பிழைத்ததை நான் நேரில் அறிந்தவன். ஆதலால் அன்றும் அம்மாதிரி ஏற் பட்டால் என்ன செய்வது என்ற பயம் உண்டாயிற்று. சாஸ்திரி யாருக்கு நாட்டுக் கடமையே முக்கியம்; தேகசுகம் முதலியவை யெல்லாம் பின்னவைதாம்.

## சாஸ்திரியாரும் காந்தியும்

சாஸ்திரியாருக்கும் மகாத்மா காந்திக்குமிடையே அரசியல் விஷயங்களில் மாறுபாடான அபிப்பிராயங்கள் இருந்தபோதி லும் ஒருவருக்கு மற்றவரிடம் பரஸ்பர விசுவாசமும் உயர்ந்த நட்பும் எக்காலத்தும் உண்டு. 1914-ஆம் வருஷம் காந்தியடிகள் சென்னைக்கு வந்தபொழுது சாஸ்திரியார் அவருடன் தென்னுட் டில் தஞ்சை ஜில்லாவாசிகளும், தென்னுப்பிரிக்கா சத்தியாக்கிர கத்தில் உயிர் நீத்தவர்களுமான வள்ளியம்மை, நாகப்பன் இவர் களது ஊரான தரங்கம்பாடிக்குக் காந்தியை அழைத்துச் சென்று அவர்கள் வீட்டாரோடு சல்லாபம் செய்து வர உதவி புரிந்தார். அது முதற்கொண்டு இருவருக்கும் ஏற்பட்ட நட்பு, கடைசி நாள் வரையில் வளர்ந்துகொண்டே வந்தது.

1920-ஆம் வருஷம் காந்திஜி தமது ஒத்துழையாமை இயக் கத்தை ஆரம்பித்தபோது சாஸ்திரியார் அவ்வியக்கத்தைப்

பலமாகக் கண்டித்துக் கூடாது என்று ஆட்சேபித்தார். எனினும் அவர்களுடைய நட்பு இதனால் சிறிதும் பாதிக்கப்படவில்லை. 1924-ஆம் ஆண்டு புனாவில் சசூன் ஆஸ்பத்திரியில் காந்திஜி நோய் வாய்ப்பட்டிருந்தபோது, சஸ்திர சிகிச்சை பெறு முன்பு, அப்பொழுது புனா இந்திய ஊழியர் சங்கத்தின் தலைவரான சாஸ்திரியாரைத்தான் அழைத்து யோசனை கேட்டுப் பிறகு சஸ்திர சிகிச்சைக்குச் சம்மதப்பட்டார். சாஸ்திரியாரும் காந்திஜிக்குச் சஸ்திர சிகிச்சை நடக்கும்வரை கூடவே இருந்து அவருக்கு உற்சாகம் அளித்தார்.

1946-ஆம் வருஷம் சென்னை ஹிந்திப் பிரசார சபையின் வெள்ளிவிழாவைத் துவக்கி வைக்கக் காந்திஜி வந்தபோதும், மதுரையிலிருந்து திரும்பிச் சென்னை வந்தபோதும் நோய்வாய்ப் பட்டிருந்த சாஸ்திரியாரை இரண்டு தடவையும் ஆஸ்பத்திரியில் கண்டு வெகு வேடிக்கையாக இருவரும் அளவளாவினார்கள். அப்பொழுது சாஸ்திரியார் காந்திஜியுடன் ராமாயணத்தைப்பற்றிச் சல்லாபம் செய்தார். அந் நிகழ்ச்சியை ஸ்ரீமதி டாக்டர் சுசீலா நய்யார் வெகு விரிவாக ஆங்கிலக் கட்டுரை ஒன்றில் விவரித்திருக்கிறார். அதனின்றும் இவ்விரு மேதைகளின் உயர்ந்த லட்சியங்களின் ஒற்றுமையை அறியலாம்.

## சாஸ்திரியார் மிதவாதி

அரசியல் விஷயங்களில் சாஸ்திரியார் ஒரு மிதவாதி என்று சொல்லுவார்கள். மிதவாதக் கட்சியின் உயர்ந்த லட்சியங்களையும் தத்துவங்களையும் அவரைப் போன்று போஷித்து நடந்தவர்கள் இல்லை. அத்துறையில் அவரை ஒப்பாரும் மிக்காரும் யாரும் இல்லையெனப் பெரும் பேரோடு விளங்குகிறார். நம் பிரதமமந்திரி ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு தமது சுய சரிதத்தில் சாஸ்திரியாரை வர்ணிக்குங்கால், 'இந்திய மிதவாதிகள் எல்லோரிலும் அதிக சாமர்த்தியம் வாய்ந்தவர் சாஸ்திரியார்' என்று சொல்லியிருக்கிறார்.

## மிதவாதி யார்?

மிதவாதி என்ற பதத்தைப் பற்றிப் பல தப்பபிப்பிராயங்கள் மக்களிடை பரவியிருக்கின்றன. மகா மேதாவியும், தேசபக்தருமான நியாயாதிபதி ரானடே, மிதவாதம் என்றால் என்ன என்பதைத் தெளிவாக ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். அதன்படிதான் சாஸ்திரியாரும் தம் வாழ்க்கையை நடத்தினார்.

மிதவாதி என்பவரின் லட்சியங்கள் என்ன? எவனொருவன் பரந்த உள்ளத்தோடும் நிதான புத்தியோடும் நடக்கிறானோ,

அவனே மிதவாதி. பரந்த மனமுள்ளவனுக்கு ஜாதி மத நிறத் துவேஷங்கள் இரா. மனிதனுகப் பிறந்த எவனுக்கும் அவனுக்குரிய நியாயத்தை வழங்குவதில் பிறழாத பக்தியுண்டு. அரசாங்கத்தினிடம் விசுவாசம், அரசாங்கத்தார் அமல் செய்யும் சட்டங்களுக்கு உரிய மரியாதையை அளித்து அவற்றிற்குக் கீழ்ப் படிந்து நடப்பது, ஆளப்படுவோருக்குச் சட்டமளிக்கும் சமத்துவ உரிமைகளைத் தேடித்தருவது போன்ற மேன்மையான குணங் களை அவனிடம் காணலாம்.

நிதான புத்தியுள்ளவன் என்றால் அசடு என்று எண்ணிவிடக் கூடாது; கையாலாகாதவன் என்றும் பட்டம் கட்டிவிடக் கூடாது. நிதான புத்தியுள்ளவன் உண்மையிலேயே ஒரு பெரிய அறிவாளி. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவது போல் அல்ல. கைகூடாத, எடுத்துவராத, அடையக்கூடாத கைக் கெட்டாத லட்சியங்களுக்காக அவன் ஆசைப்படமாட்டான். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விநாடியும் தன் வேலையைச் செவ்வையாகவும் திறமையாகவும் செய்து படிப்படியாகத் தன் தொழிலில் முன்னேறிச் சகிப்புத் தன்மையுடனும் நடுவு நிலைமையுடனும் உழைப்பவன் நிதான புத்தியுள்ளவன். இதில் இழிவு ஒன்றும் இல்லையே! இந்த மனப்பான்மையுள்ளவர்களைத் தான் மிதவாதிகள் என்கிறோம்.

## தமிழில் ஆர்வம்

**சா**ஸ்திரியாருக்கு நமது பண்டைக் காலத்துக் கலாசாரங் களில் ஆழ்ந்த பற்றும் தளராத ஆர்வமும் உண்டு. தமது ஓய்வு நேரங்களில் செம்பாதியைச் சம்ஸ்கிருதம், வால்மீகி ராமாயணம் இவற்றைப் படித்து இன்புறுவதிலேயே கழிப்பார். சாஸ்திரியாருக்குத் தமிழில் அதிகப் பரிசயம் இல்லை என்று கூறுவோரும் உண்டு. இது சரியல்ல. நான் 1930-ஆம் வருஷம் புனாவிற்கு இந்திய ஊழியர் சங்கத்தின் ஆண்டுக் கூட்டத்திற்குச் சென்றபோது, சங்கத்தின் புத்தக சாலையில் சில தமிழ்ப் புத்தகங்களைப் பார்த்தேன். அவை தேவாரம், தாயுமானவர் பாடல், குறள், கம்பராமாயணம் போன்ற நூல்கள். இவற்றைப் பற்றி விசாரித்தபோது அவை சாஸ்திரியாருடையவை என்று அறிந்தேன். அவற்றில் சாஸ்திரியாருடைய கையொப்பமும் இருந்தன. பொதுநல வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த சாஸ்திரி யாருக்கு அதிகமான நேரத்தைத் தமிழ்ப் படிப்பில் கழிக்க அவகாசம் இல்லை என்பதுதான் காரணமே யொழிய, தமிழில் அவருக்கு ஆர்வம் இல்லை என்று கூற முடியாது. சாஸ்திரி

யாரிடம் மற்றொரு விசேஷத்தையும் காணலாம். அவர் தமிழில் பேசும்போது ஆங்கிலம் கலக்காத தமிழில் பேசுவார்.

1916-ஆம் ஆண்டு சரோஜினி நாயுடுவின் தலைமையில் காஞ்சீபுரத்தில் நடந்த சென்னை மாகாண மகாநாட்டிற்குச் சாஸ்திரியாரும் சென்றிருந்தார். அங்கே சத்தியமூர்த்தியும் வந்திருந்தார். சாஸ்திரியாருக்கு ஆங்கிலந்தான் பேச வரும், தமிழில் பேச வராது என்று எண்ணிய சத்தியமூர்த்தி யவர்கள், 'சாஸ்திரியார் இப்பொழுது தமிழில் பேசுவார்' என்று சபையில் அறிவித்தார். சாஸ்திரியார் முகத்தில் ஒரு விதமான கலவரமும் காணவில்லை. எழுந்து நின்று தமிழில் நிதானமாக, அழுத்தமாக வார்த்தைகளை உச்சரித்துத் தம் பேச்சை முடித்தார். இதைக் கண்டு வியந்த சத்தியமூர்த்தி, 'இந்தச் சாஸ்திரி ஓர் எமன்; தமிழில் பேசத் தெரியாதென்றல்லவா இருந்தேன்; இவ்வளவு அழகாகத் தமிழ் பேசிவிட்டாரே!' என்று கூறினாராம்.

சாஸ்திரியார் தமது வாழ்க்கையின் அம்சங்களைப் பற்றித் தமிழில் 1941-ஆம் வருஷம் எழுதியபோது, தம் நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தினின்றும் அவருக்குத் தமிழில் எவ்வளவு ஆர்வம் இருந்தது என்பது தெரியவருகிறது. ஆங்கில, சம்ஸ்கிருத இலக்கியங்களில் திளைத்து ஊறி அவற்றைச் சுவைத்த சாஸ்திரியார் தமது கடைசி நாட்களில் தமிழில் எழுத ஆரம்பித்த பிறகுதான் அவர் மனம் நிம்மதி அடைந்ததெனத் தெரிகிறது. 'தமிழில் நான் துணிந்து முதல் முதலில் எழுதத் தொடங்கியபோது, அது எனக்கு ஒரு மட்டில்லா மகிழ்ச்சியையும் புத்தம் புதிய உணர்ச்சியையும் அளித்தது. நான் எழுதுவது கோணல் மாணலாகவும், கரடு முரடாகவும் இருக்கலாம். படிப்போரும் என் தமிழைக் கண்டு சிரிக்கலாம், நானே பார்க்கிறேனே! இருந்தாலும் நான் தமிழ் எழுதும்போது, தமிழன்னை என்னைத் தன்வய மாக்கிக்கொள்கிறாள். அப்படி யிருக்க, விமர்சகர்களும் பண்டிதர்களும் என் தமிழைப்பற்றி என்ன சொன்னாலும் நான் அவற்றை ஏன் கவனிக்க வேண்டும்? எனது இரண்டாம் குழந்தைப் பருவத்தில் நான் கொஞ்சி மழலையாடுவது என் தாய்ப் பாஷையாகவே இருக்கட்டுமே' என்கிறார் அவர்.

### ராமாயணப் பிரசங்கம்

மூப்படைந்து உடல் தளர்ந்த காலத்தில், ஓய்வு கொள்ளுவது மானிடர் இயல்பு. கல்வித் துறையில் உழைத்து உயர்ந்த

உண்மைகளை இளங் குழந்தைகளுக்கு ஊட்டிய சாஸ்திரியார், தமது வயோதிகத்தில், நமது நாட்டின் அரிய பொக்கிஷமும், ஆதி காவியமுமான ராமாயணத்தின் பெருமையை, படிப் பினையை, அழகை, யாவரும் அநுபவித்து உணர வேண்டு மென்ற பேரவாவால், மயிலாப்பூர் சம்ஸ்கிருத அகாடமியின் சார்பில் ராமாயணப் பிரசங்கங்கள் செய்தார். அப் பிரசங்கங்க ளெல்லாம் இப்பொழுது ஆங்கிலத்தில் புத்தக வடிவமாக வெளி வந்திருக்கின்றன. மகாத்மா காந்தி, சாஸ்திரியாரை ஆஸ்பத் திரியில் சந்தித்தபோது சாஸ்திரியார் அவரிடம் சொன்னதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல வேண்டும். 'ராமாயணத்தில் புதைந்து கிடக்கும் உயர்ந்த நன்னெறிகளையும், உபதேசங் களையும் எடுத்துச் சிறுவர்களுக்குச் சொல்லவேண்டு மென்கிற பேரவா என் மனத்தில் பொங்குகிறது. சமயம் கிடைத்து, உடலில் தெம்பும் ஏற்பட்டால் நான் அத்தொண்டையும் செய் யத் தயங்க மாட்டேன்.' அவர் சொன்னபடி அம் மகத்தான பெரும் கைங்கரியத்தைச் சாஸ்திரியார் தமது கடைசிக் காலத் தில் செய்தது அவர் வழிபட்ட ஸ்ரீ ராமபிரானுடைய கடாக்ஷந் தான் என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

சாஸ்திரியார் ஒப்பற்ற நாவன்மை உடையவர். பேச்சில் கவர்ச்சியும், வாக்கில இனிமையும், ஒலியில் இசையும் உணர்ச்சி யில் உண்மையும், கருத்தில் லட்சியமும் ஒருங்கே அமைத்து எல் லோர் மனத்தையும் ஈர்க்கும் ஆற்றல் படைத்தவர். அவற்றேடு எவ்விதமான சங்கட நிலைமையிலும் நிதானத்தை இழக்காமல் சமாளிக்கும் பேராற்றல் படைத்தவர். 1920-ஆம் வருஷத்தில் நான் பச்சையப்பன் கல்லூரியில் மாணவனு யிருந்தபொழுது, சாஸ்திரியார் மாண்டேகு அரசியல் திருத்தச் சட்டத்தை ஆதரித்துக் கோகலே மண்டபத்தில் பேசினுர். கோகலே ஹாலில் எள்ளுப் போட்டால் எள்ளு விழாது; அவ்வளவு ஜனங்கள் கூடியிருந்தனர். அவர்களில் மாணவர்கள்தாம் அதிகம். மிஸஸ் அன்னிபெஸன்ட் அக்கிராசனம் வகித்தார். தீனபந்து ஆண்டி ரூஸ் பிரசன்னமாயிருந்தார். சாஸ்திரியார் பேசிக்கொண் டிருக் கும் பொழுது, சபையில் இருந்த சில இளங் கன்றுகள் காரசார மான கேள்வி அம்புகளைச் சாஸ்திரியார்மீது விடுத்தனர். அவர் மேலே பேச முடியாதபடி கலவரமும் செய்தனர். சாஸ்திரியார் என்ன செய்யப் போகிருர் என்று நான் பார்த்துக்கொண் டிருந்தேன். சாஸ்திரியார் முகத்தில் கோபக்கனல், வெறுப்பு, கவலை ஒன்றும் படராமல் கண் இமை கொட்டாமல், சித்தப்பிரமை பிடித்தவர்போல் நின்றுகொண் டிருந்தார். சிறிது நேரத்தில் ஆரவாரம் சற்று அடங்கியது. அப்பொழுது

தீனபந்து ஆண்டிரூஸ் மேடைமுன் வந்து கை கூப்பி வணங்கி, ''நான் இதோ ஐந்தே ஐந்து வார்த்தைகளைப் பேசப்போகிறேன். **உங்கள் நடத்தையைக் கண்டு நான் வெட்கப்படுகிறேன்** (*I am ashamed of you*)'' என்று கூறினர். இது மாணவர்களுக்கு ஒரு சூடு போட்டதுபோல் ஆகியது. மாணவர்களிடம் ஒரு நல்ல மனப்பான்மையையும் இது உண்டாக்கியது. சாஸ்திரியாரும் மேலே தொடர்ந்து அரைமணி நேரம் பேசினர். முடிவில் அன்னிபெஸன்ட் அம்மையார் பேசும் பொழுது, ''சாஸ்திரியார் பேசுவதில் அதிகத் தேர்ச்சி பெற்றவர். எல்லா நிலைகளிலும் மதியிழக்காதவர்'' என்று கூறி முடித்தார். முதலில் கலவரம் செய்த இளைஞர் கோஷ்டி, சாஸ்திரியார் பிரசங்கத்தை முடித்ததும் பலத்த கரகோஷம் செய்தது.

உலகிலேயே உயர்ந்த முறையில், யாவரையும் ஈர்க்கும் வகையில் ஆங்கிலத்தில் பேசும் திறம் படைத்த ஐவருள் சாஸ்திரியாரும் ஒருவர் என்ற பெயர் அவருக்கு உண்டு. ஆங்கில மொழிகளை நன்ருகப் படித்த ஆங்கிலேயர்களைவிடப் பன்மடங்கு உயர்வாகவே ஆங்கில மொழிகளை உச்சரிக்கவும் பேசவும் திறமை படைத்திருந்தார்.

இதன் ரகசியத்தைப் பற்றி நான் அறிய ஆவல் கொண்டு சாஸ்திரியாரைக் கேட்டபொழுது அவர், ''சம்ஸ்கிருத எழுத்துக்களை எவன் ஒருவனுக்கு, சப்த லோபமில்லாமல் உச்சரிக்கும் பயிற்சி யிருக்கிறதோ அவனுக்கு ஆங்கிலேய உச்சரிப்புத் தானகவே வரும். வெப்ஸ்டர் அகராதியும் அதற்கு ஒரு வழி காட்டி. சம்ஸ்கிருதத்தில் நல்ல படிப்புள்ளவனுக்கும், அகராதி புரட்டும் வழக்கமுள்ளவனுக்கும் எந்த மொழியிலும் நன்ருகப் பேசவும் எழுதவும் வரும்'' என்ருர்.

சாஸ்திரியாருக்குக் கர்நாடக சங்கீதத்திலும் ஆழ்ந்த ஞானம் உண்டு. அவர் பாட்டுக் கேட்கும்போது மற்றவர்களைப்போல சிரக்கம்பம், கரக்கம்பம் போன்ற அங்க சேஷ்டைகளைச் செய்ய மாட்டார். அவர் காது கேட்டு ஆனந்திப்பதை அவருடைய முகத்திலும் கண்களிலும் பார்க்கலாம். கச்சேரி முடிந்ததும், பாடகர் பாடிய பாட்டுக்களின் விசேஷ அம்சங்களைப் பற்றி நண்பர்களுடன் பேசுவார்.

சாஸ்திரியாருக்கு உலகிலேயே ஒப்பற்ற பிரசங்கி என்ற பெயர் உண்டு. அக் காலத்தில் இங்கிலாந்தில் பிரதம மந்திரியாக இருந்த லாயிட் ஜார்ஜ் என்பவர் சாஸ்திரியாரின் வாக்கு வன்மையைப் பற்றிப் பாராட்டியிருக்கிருர். பண்பு மிக்க பண்டிதர்களும் மேதாவிகளும் சாஸ்திரியாரது பேச்சு வசீகர

வன்மையில், இனிமையில், அழகில் ஈடுபட்டு அவர் பேச்சின் சுவையை அநுபவித்திருக்கின்றனர். இது உண்மை; வெறும் புகழ்ச்சியல்ல. ஆங்கில மொழியைச் சரியாக எவ்வாறு உபயோகிப்பது என்பதைச் சாஸ்திரியார்தாம் ஆங்கில உலகிற்கு எடுத்துக் காட்டினர் என்பதை ஆங்கிலேயர்களே ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஆங்கிலேயராகப் பிறக்காத ஒருவர், ஆங்கில மொழியில் இவ்வளவு பிரக்கியாதி பெற்றதைக் கண்டு பெரிய பெரியஆங்கிலேயப் பண்டிதர்களும் சாஸ்திரியார்பால் பொருமை கொண்டனர் என்ருல் அதில் புதுமை என்ன! சாஸ்திரியார் கல்கத்தா சர்வ கலாசாலையின் சார்பில் 'பிரஜா தத்துவம்' (Citizenship) என்ற பொருள் பற்றி நிகழ்த்திய கமலா ஞாபகார்த்தப் பிரசங்கங்களும், மைசூர்ச் சர்வகலாசாலையில் செய்த கோகலே பிரசங்கங்களும், சென்னையில் நிகழ்த்திய ஸர் பி.எம். மேத்தாவைப் பற்றிய பிரசங்கங்களும் இப்பொழுது ஆங்கிலத்தில வெளிவந்திருக்கின்றன. அவர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள கடிதங்களும் விசேஷமானவை.

## ஓர் ஒப்பற்ற அரசியல் வாதி

**சா**ஸ்திரி ஒரு பழுத்த அரசியல் ஞானி. சென்றவிடமெல்லாம் நல்லெண்ணத்தை வளர்க்கும் ராஜ தந்திரி. இந்தியாவின் புகழ் இவ் வையக மெங்கும் ஓங்கி ஒலிக்க உழைத்த இந்தியத் தாயின் உத்தமத் தவப்புதல்வர். தென்னுப்பிரிக்காவில் இந்திய அரசாங்கத்தின் ஏஜன்டாக இருந்த காலத்தைத் தவிர, தம் வாழ்நாள் முழுவதையும் உத்தியோகப் பற்றற்ற ஓர் அரசியல் வாதியாகவே இருந்து நாட்டிற்குத் தொண்டு புரிந்தார். என்றும் பாமர மக்களின் மனத்தைத் தம் கருத்திற்கு இணங்க மாற்றி வளைத்துப் பதவி மோகங்கொண்டு அவர்களின் ஓட்டுப் பெற்றுப் பதவியை அடைந்து குதூகலமாயிருக்கலாம் என்ற மனப்பான்மை சற்றும் இல்லாதவர். நாட்டின் பிரதிநிதிகளாக அயல் நாடுகளுக்குச் சென்ற தலைவர்களுள் சாஸ்திரியாரைப்போல் நாட்டின் நலத்திற்காகத் தொண்டாற்றி, இந்திய நாட்டின் மீது பிற நாட்டினருக்கு இவ்வளவு நட்பையும் மரியாதையையும் உண்டாக்கியவர் வேறு எவரும் இல்லை. இந்தியா இப்பொழுது உலக விவகாரங்களில் மற்ற வல்லரசுகளுடன் சம அந்தஸ்துடன் உட்கார்ந்து ஆலோசனை கூறும் பெருமையை அடைந்திருக்கிற தென்ருல் அதற்கு விதை போட்டவர் சாஸ்திரியார் என்பது மிகையாகாது.



சாஸ்திரியார் ஆபீஸில் வேலை செய்கிறார். சி. ரா. வேங்கடராமன், 1936.

# என் வாழ்க்கையின் அம்சங்கள்

## மகிழ்ச்சி நிகழ்ச்சிகள்

நல்லதும் பொல்லாததும் இணை பிரியாது பின்னி யிருக்கும் இவ் வாழ்வில் சிலர் பெரும்பாலும் நன்மையையும் சிலர் பெரும்பாலும் தீமையையும் காண்பது என்ன ஆச்சரியம்? 'தீமை நோக்கி' என்று என்னைச் சொல்வது வழக்கம். இது ஓர் வகையில் உண்மையே. ஆயினும் எனக்கு நூற்றுக் கணக்காய்ச் சுக சம்பவங்கள் நேர்ந்திருக்கின்றன. நானும் அவைகளை ஆனந்தத்துடன் பாராட்டியிருக்கிறேன். சிலரைப்போல் தலைவிரித்துக்கொண் டாடுவதில்லையே யொழிய ஓரள வுக்கு நானும் சந்தோஷிக்கும் இயல்புள்ளவன்தான். சிறு பிராயத்தில் அநுபவித்த முக்கிய நிகழ்ச்சிகளில் சில, சுகம் விளைவித்தனவென்று இப்பொழுதுங் கூட நினைவில் நிற்கின்றன. அவை இங்கே குறிக்கத்தகுந்தவை.

* * *

கும்பகோணம் நேடிவ் ஹைஸ்கூலில் அடி வகுப்பு முதல் மெட்ரிகுலேஷன் வரையில் படித்தேன். கோடை லீவுக்கெல்லாம் பத்து மைல் தூரமான சாத்தனூர்க் கிராமத்தில் என் தமக்கை வீட்டுக்குப் போவது வழக் கம். அப்போது கோலிப் பைத்தியம் பிடித்து, சாப்பிடு வதிலும் தூங்குவதிலும் போன நேரம் தவிர மற்றப் பொழுதெல்லாம் தெருவில் குழி தோண்டிப் பிள்ளை களுடன் ஆடிய வண்ணம், அந்த ஆட்டத்தில் முதல்

ஸ்தானம் பெற்றேன். கட்டை யடிப்பேனே யொழிய அகப்படுவதில்லை.

ஒரு நாள் சுமார் ஒன்பது மணிக்கு நல்ல ஜமா சேர்ந்தது. கொம்மாளமாய் ஆடுவதால் பெரியவர்கள் அநேகரும் வேடிக்கை பார்க்க வந்திருந்தார்கள். என்னைப் பரீக்ஷிக்க வேண்டுமென்று ஒருவர் ஒரு கோலியைக் கொஞ்சம் கஷ்டமான இடத்தில் சுமார் ஐந்தடி தூரத்துக்கு மேல் வைத்து, 'எங்கே இதை அடி பார்ப்போம்!' என்றார். சொன்னவுடன் இடது கட்டை விரலை நாட்டி நடுவிரலின் நுனியில் கோலியைப் பிடித்து, வலது கை விரல்களால் சுண்டி, பூமியில் புரளாமல் நேராய்க் குறிவைத்து விட்டேன். சரியான அடிபட்டு நல்ல ஒலியும் கேட்டது. 'பேஷ், பேஷ்!' என்று கோஷமிட்டு அங்கிருந்தவர்கள் என்னைச் சிலாகித்தார்கள். 'கீழ்த் தெருக் குப்புசாமி மச்சினன் என்ன கோலி யாட்டமென்கிறேன்!' என்று எல்லார் வாயாலும் புகழ் பெற்றேன்.

## முதலாவது க்ஷேம ஸமாசாரம்
## 1883
### பரீட்சையில் சிறப்பு

**1883**-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் என் பதினைந்தாவது வயதில் மெட்றிகுலேஷன் பரீக்ஷையாயிற்று. சம்பளம் கொடுத்து மேற் படிப்புக்குக் காலேஜுக்கு அனுப்ப என் தகப்பனாரால் முடியாது. அந்தக் காலத்தில் சென்னை மாகாணத்தில் 21 ஜில்லாக்கள் இருந்தமையால், மெட்றிகுலேஷன், எப். ஏ. இவ் விரண்டு பரீக்ஷைகளிலும் முதல் 21 பையன்களுக்குச் சம்பளம் இல்லாமல் காலேஜுகளில் சேர்க்கை உண்டு. கெட்டிக்காரப் பையன்கள் 'ரிஸல்ட், ரிஸல்ட்' என்று பறப்பார்கள். முதல் வாரம், தேறியவர்களின் எண்கள் மாத்திரம்

தெரியும். அடுத்த வாரத்துக் கெஜட்டில், பேர், வகுப்பு, ராங்க், எல்லாம் வரும். கும்பகோணம் தபாலாபீஸ் இப்பொழுது இருக்கும் இடத்தில்தான் அப்போதும் இருந்தது. கெஜட் வரும் தினம் மாலை ஏழு மணி முதல் ஒன்பது வரையில் ஆபீஸ் வாசலில் வெகு தூரத்திற்கு வெகு தூரம், பிள்ளைகளும் அவர்கள் உறவினர்களும் கூடுவார்கள். உபாத்தியாயர்களில் சிலர் வந்து கெஜட்டை வாங்கிப் பெயர்களை வரிசையாய் உரக்கப் படிப்பார்கள். கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டம் கலையும்.

1884-ஆம் வருஷத் துவக்கத்தில் கெஜட் வரும் நாள் சாயங்காலம் இருட்டினதும் நான் தபாலாபீஸ் வாசலுக்குப் போனேன். 'என்ன கதியாகிறதோ?' என்ற விசாரத்தால் ஒரு நிமிஷம் ஒரு யுகமாகத் தோன்றியது. எங்கள் பள்ளிக்கூட வாத்தியார்தாம் பெயர்களை வாசித்தார். ஆனால் நான் நின்ற இடத்தில் சரியாகக் கேட்கவில்லை. கூட்டம் கலையத் துவங்கினதும் ஆபீஸ் ஆளோடியை நோக்கிப் போனேன். முதல் உதவி வாத்தியார் எம். ஆர். சுவாமிநாதையர், "உன்னைத்தானே தேடுகிறேன்? பிழைத்தாய் போ" என்றார். 'ராங்க் என்ன?' என்று கேட்கப் 'பதின்மூன்று' என்றார். "வலங்கிமான் இப்பொழுதே போவாயா?" என்று கேட்டார்.

லீவுக்கு என் தாயும் தந்தையும் ஊருக்குப் போயிருந்தார்கள். துணைக்கு ஒரு பையனை அழைத்துக் கொண்டு இருட்டாயிருந்தாலும் ஆறு மைல்தானே யென்று வேகமாய்ப் போனேன். அப்படியும் பதினொரு மணி! அப்பா எதிர் வீட்டுத் திண்ணையில் ராமாயணம் சொல்லிக்கொண் டிருந்தார். அம்மா, "என்னடா அப்பா செய்தி?" என்றாள். மற்றவர்கள் கேட்கச் சொல்லக் கூடாதென்று வீட்டில் போய்ச் சொன்னேன். உடனே எப்படியோ அப்பாவுக்குச் செய்தி போய்விட்டது. எல்லோருக்கும் க்ஷேம சமா

சாரம் காதில் பட்டது. ராமாயணப் பிரசங்கமும் முடிந்தது. நல்ல வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு அவரவர்கள் வீட்டிற்குப் போனார்கள். எங்கள் அகத்தில் மட்டும் தூங்காமல் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தோம்.

## அடுத்த சந்தோஷம்

## 1885

இரண்டு வருஷங் கழித்து எப். ஏ. பரீக்ஷயில் நடந்தது வேறு மாதிரி. நாங்கள் லீவுக்கு ஊர் போகவில்லை. காவேரியின் அக்கரையில் மேலக் காவேரி யென்னும் கிராமத்திலேயே இருந்தோம். ஒரு நாள், முன் சொன்ன ஆர். எப். சுவாமிநாதையர் வீட்டு வாசலில் ஏழெட்டுப் பையன்கள் சேர்ந்து பச்சைக் குதிரை அடித்துக்கொண்டிருந்தோம். திடீரென்று டவுனுக்குப் போயிருந்த சுவாமிநாதையர் திரும்பி வந்து, பரபரப்புடன் என்னைக் கூப்பிட்டு, "பிரசிடென்ஸி பஸ்ட் (Presidency first); வீட்டுக்கு ஓடிப் போய்ச் சொல்" என்றார். எனக்கு ஒன்றும் தோன்றாமல் பிரமித்து நின்றேன்.

"நிஜந்தானடா, நீ இருபத்தொரு ஜில்லாவுக்கும் முதல் ராங்க் பெற்றாய்" என்று என்னை அன்புடன் அணைத்து முதுகில் தட்டினார். எனக்கு, அப்பா அம்மாவினிடம் தெரிவிக்க வேண்டுமென்ற ஆவல் தாங்க முடியாமல் இருந்தபோதிலும் அதை வெளியில் காட்டாமல் ஏதோ ஐந்தாறு நிமிஷம் பேசிவிட்டு வழக்கமாய்ப் போகிறவன் போலவே நடந்து போனேன். தெருவைத் தாண்டினதும் முன்பின் பார்த்து ஒருவரும் இல்லை என்று தெரிந்துகொண்டு, சீதையைக் கண்ட ஹனுமார்போல இரண்டு மூன்று குதி குதித்துவிட்டு ஒரே ஓட்டமாய் வீடு போய்ச் சேர்ந்தேன். தாய் தந்தை

யருக்கு விஷயத்தைச் சொல்லி அளவில்லாத சந்தோஷத்தை உண்டுபண்ணி, நானும் அநுபவித்தேன்.

## நல்ல தீர்மானம்

**ப**தினன்கு வயதிலேயே பிஞ்சில் பழுத்த கனி போல ஒரு நற் காரியம் செய்தேன். நீதிப் புத்தகத்தில் படித்தோ, பெரியோர் சொல்லக் கேட்டோ, ஒருவரிடமும் சத்துரு பாவம் கூடாதென்று தீர்மானம் கொண்டேன். இக் காலத்துப் பிள்ளைகள் என்ன செய்கிறார்களோ, நன்றாய்த் தெரியாது. என் பால்யத்தில் அற்பத்திற்கெல்லாம் சண்டை போட்டு ஒருவருக்கொருவர் 'எனிமி'யென்று விளம்பரம் போட்டு, 'பேசக்கூடாது, பெயர் சொல்லக்கூடாது, ஒரு விதமான சம்பந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாது' என்றெல்லாம் வைரம் பாராட்டுவது உண்டு. கொஞ்சம் துவேஷம் தணிந்தவுடன் மத்தியஸ்தன் யாராவது தூது நடந்து ராஜி செய்து வைப்பான். 'யார் முதலில் பேசுகிறது?' என்று கட்சியாடுவார்கள். ஒரே க்ஷணத்தில் முன் பின் தெரியாமல் ஒருவன் பெயரை மற்றொருவன் சொல்வான். அல்லது காகிதத்தில் எழுதிக் காட்டுவான். இப்படியெல்லாம் அரசர் பிரிந்து திரும்பச் சேருவது போல் பெருங் கூத்தடிப்ப துண்டு. இந்தப் பால்யச் சேஷ்டையெல்லாம் நமக்குத் தகாதென்று யார் யார் 'எனிமி'யோ அவர்களிடம் நேரில் சென்று நானே முதலில் சிநேக பாவங் கொண்டாடி உயர்நிலை யடைந்து மனத்தில் அடங்காப் பெருமையை உணர்ந்தேன். அது முதல் நான் யாரிடத்திலும் எதிரி எண்ணம் கொள்ளக் கூடாதென்று விரதம் வைத்துக் கூடியவரை நிறைவேற்றி வருகிறேன். என் மனத்துக் கேற்பக் கடுந் துரோகம் செய்தவர் என்றாலும் பேச்சுப் பழக்கத்தை நிறுத்தாமல் உண்மையாகவே பொறுமை யென்கிற பெருந் தருமத்தைச் செய்ய முயல்கிறேன்.

மனிதனாய்ப் பிறந்தவன் காமக் குரோதம் முதலிய கூடப் பிறந்த தோஷங்களை முற்றும் வெல்ல முடியுமா? ஏதோ முடிந்தவரையில் இவைகளுக்கு இடங்கொடாமல் இருப்பதே பெரிது. வெளியில் காட்டாமல் யோசனைகளையும் செயல்களையும் அடக்கி வந்தால், நாளடைவில் இம்மாதிரி துர்க்குணம் குன்றிவிடும் என்பது அறிவுடையோர் கொள்கை. கடவுளுக்கும் மனச் சாட்சிக்கும் ஊர் வாய்க்கும் பயந்து பால்யம் முதற்கொண்டே குணப் பயிற்சி செய்து வருகிறேன். கொடிய தீமை செய்தவருக்குங்கூடப் பதில் தீமை செய்யாமலும் எண்ணமும் நடத்தையைச் சீரான வழியில் செலுத்த வேண்டுமென்கிற கவலை என்றும் எனக்கு உண்டு. விரோதியைப் பற்றி அபிப்பிராயம் சொல்ல வேண்டி வந்தால் வெகு ஜாக்கிரதையாய்க் கெடுதலைக் கொஞ்சம் அமிழ்த்தி நல்லதைக் கொஞ்சம் தூக்கியே நான் வெளியிடுவேன்.

மன மறிய ஒருவரிடந்தான் 'வைஷம்யம்' தோன்றியது. இது இருபத்திரண்டாம் பிராயத்தில் நேர்ந்தது. அவர் மாளும் வரையில் அதாவது நாற்பத்திரண்டு வருஷ காலம் இந்த நிலைமை மாறவில்லை. அவரை முதலில் சந்தித்ததுமே இப்படிப் பார்வையில் ஏற்பட்டது. பத்து வார்த்தைகள்கூட எங்களுக்குள் பேச நேர்ந்ததில்லை. நான் அவருக்குக் கேடு செய்ததும் இல்லை; நினைத்ததும் இல்லை. அவராலும் எனக்குத் துளியாவது கேடு இடையாது. ஆனால் இன்னதென்று குறிப்பிட முடியாத ஒரு நேசமின்மை ஊன்றி நின்றது. நெருங்குவதில்லை; பேசுவதில்லை. எலியும் பூனையும் என்றாற்போல நிஷ்காரண வைரம். ஆங்கிலத்தில் ஒரு வேடிக்கைச் செய்யுள் உண்டு. *'ஓய் டாக்டர் பெல், உம்மைக் கண்டால்

---

*1. இதன் ஆங்கில வசனத்தை எனக்குத் தயை கூர்ந்து ஆராய்ந்து அளித்தவர் பிரிட்டிஷ் கௌன்ஸிலைச் சேர்ந்த H. C. நார்மின்டன் அவர்களாவார்.

எனக்குப் பிடிக்கவில்லை. ஏனென்று சொல்ல முடியாது. இது மட்டும் களுர்தான். உம்மைக் கண்டால் எனக்குப் பிடிக்கவேயில்லை' என்பது அது." அதுபோன்றதுதான் இந்த உணர்ச்சியும்.

## மாயவரம் பள்ளிக்கூடத்தில்

## 1887

**பி.**ஏ. தேறின பின் சில மாதங்கள் வேலையில்லாமல் இருந்தேன்; முதல் வகுப்பில் இரண்டாம் ஸ்தானம் பெற்றும். தஞ்சாவூர் ஜில்லாவில் ஐம்பது வருஷங்களுக்கு முந்திகூடத் தகுந்த உத்தியோகம் கிடைப்பது அரிதாக இருந்தது. சர்ட்டிபிகேட் - அதாவது, நடத்தை, திறமை இவைகளைப்பற்றிய அத்தாட்சி - வேண்டுமென்று முதல், முதல் புரொபஸர் சுந்தரராமையரிடம் போனேன். நான் சரித்திர வகுப்பில் சேராதவனுலும் வெகு நன் மொழிகளை யமைத்துக் கண்ணில் ஒத்திக்கொள்ளத் தகுந்த தம்முடைய அழகிய எழுத்தில் ஒன்று எழுதிக்கொடுத்தார். பிறகு சாது சேஷையரிடமும் பில்டர்பெக்கிடமும் நற்சாட்சிப் பத்திரங்கள் கிடைத்தன. மாயவரம் முனிசிபல் ஹைஸ்கூலில் ஒரு வாத்தியார் தேவையென்று தெரிந்தது. சாது சேஷையர் எனக்கு உடனே சிபாரிசுக் கடிதங்கள் கொடுத்தனுப்பினர்: ஒரு கடிதம் சேர்மன் அழகப்ப பிள்ளைக்கும், ஒரு கடிதம் ஹெட்மாஸ்டர் ராஜகோபாலையங்காருக்கும்; ராஜகோபாலையங்கார் ஹெட்மாஸ்டர் ஸ்தானத்தை விட்டு, நாராயணஸ்வாமி ஐயர் அதை அடைந்த தருணம். அப்போது நான் பார்வைக்குப் பதினெட்டு வயதாகத் தோன்றவில்லை. ஆகிருதி போதாது. வெகு சங்கோசமும் கூட. முகத் தெளிவையும் இளமையையும் கண்டு தயவு கூர்ந்து அதிகாரிகள் நான் வருந்திக் கேட்காவிடினும் என்மேல் பக்ஷமாக நின்று உதவினர்கள்.

அப்பொழுது சப்ரிஜிஸ்ட்ராக இருந்த டி. ஜி. சுந்தரேசையர் வெகு கெட்டிக்காரர். குணசாலியான சிறுவர்களிடம் அபிமானம் உள்ளவர். அவர் மனம் வைத்தால் சேர்மனிடம் எந்தக் காரியமும் கைகூடு மென்பது பிரசித்தி. ராஜகோபாலையங்கார் அவர் களிடம் என்னை அழைத்துப் போய்ப் பலமான சிபாரிசு செய்தார். அவருக்கு என்னைப் பார்த்ததுமே அன்பு மேலிட்டு, நாற்பது ரூபாய்தான் பி. ஏ. க்குக் கொடுக்கிறது என்கிற வழக்கத்தை மீறி ஐம்பது ரூபாய்க்கு உத்தரவு வாங்கிக் கொடுத்தார்.

என்னுடைய அதிருஷ்டம் காரணமாக எல்லாச் சந்தர்ப்பமும் அநுகூலமாயிருந்தன. பிள்ளைகள் மணி யென்றால் மணிதான். அந்தப் பள்ளிக்கூடத்தில் எல்லாம் கண்டிப்பு. அமல் அதிகம். எனக்கு நான்காம் வகுப்பும், ஐந்தாம் வகுப்பில் சில பாடமும் ஆறாம் வகுப்பில் சில பாடங்களுங்கூடக் கொடுத்தார்கள். இதனால் தக்க கௌரவந்தான். ஆனால் எனக்குத் தனியாய் ஜாகை யில்லாமல், ஹோட்டலில் பையன்களுடன் பையனாகப் பழகிக்கொண் டிருந்தேன். இது நேரல்லவென்று புது ஹெட்மாஸ்டர் நாராயணஸ்வாமி ஐயர் தம் அகத்தி லேயே வைத்துக் காப்பாற்றினார். இப்படிச் சில மாதங்கள் அவர் போஷணையாலும் நெருங்கிய உபதேசத் தாலும் எனக்குப் பள்ளிக்கூடத்தில் செல்வாக்கு அதி கரித்தது. உலகம் அறியாத சிறுவனை, நமக்கென்ன வென்று உதாசீனமா யில்லாமல் அன்போடு அணைத்து நல்ல வழியில் செலுத்தி அவர்கள் ஆளாக்கியதை நினைத்தால், 'என்ன பெரும் பாக்கியம் எனக்குக் கிடைத் தது!' என்று சந்தோஷிக்கிறேன்.

மற்றொரு பெரும் பாக்கியமும் உண்டு. நான் முதலில் சொல்லிவைத்த ஐந்தாவது வகுப்பு மிகவும் சிலாக்கியமானது. சமர்த்தர்களும் ஆவலுள்ளவர்களு மான பிள்ளைகள் நிறைந்தது. நானும் தெரிந்ததையும்

புதிதாய்க் கற்றதையும் மாணாக்கர்களுக்கு ஊட்டிவிட வேண்டுமென்ற ஆசை கொண்டிருந்தமையால் அந்தப் பிள்ளைகளுடன் நெருங்கிப் பழகி மிக்க மகிழ்ச்சி யடைந்தேன். அவர்களில் மயிலாப்பூருக்குத் திலகமாய் விளங்கும் டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி ஒருவர். சிறுவர்களாய்ச் செய்துகொண்ட அந்தச் சிநேகம் காலப் போக்கில் பாந்தவ்யம், பொதுக்காரிய சம்பந்தம் முதலியவைகளால் அதிகரித்து எங்கள் வாழ்வைச் சுகத்தால் நிரப்பிச் சிறப்பிக்கிறது.

## ஒரு துணிவு
## 1891

இவ்வாறு மூன்று வருஷம் மாயவரத்தில் விசாரம் என்பதை நெருங்கி யறியாமல் இருந்துவிட்டுச் சைதாப்பேட்டை உபாத்தியாயர் பயிற்சிக் காலேஜில் 1891-ஆம் வருஷம் சேர்ந்தேன். பன்னிரண்டு மாதம் வேடிக்கையாகவே போயின. என்னைப்போல் தொழிலுக்கு வேண்டிய படிப்பைக் கற்க வேண்டுமென்று வந்தவரில் ஏறக்குறைய முதன்மைப் பதவியிலேயே என்னை வைத்து வந்தார்கள். உரிய பாடங்களைக் கவலையாகக் கற்காவிடினும் பிரசங்கம், நாடகம், விளையாட்டு இத்தகைய வெளி யாடம்பரங்களில் தலையிட்டு எளிதில் பெயர் வாங்கினேன்.

அப்போது காலேஜுக்குத் தலைவர் (Principal) ஏ. ஏ. ஹால். சிறந்த ஞானம் இல்லாவிடினும் பயிற்சிக்கு வந்திருக்கும் மாணாக்கரிடத்தில் தயை உள்ளவர். பார புத்தியில்லாதவர்போல் விளையாட்டாய்ப் பேசுவார். ஒரு நாள் எல்லாரையும் சேர்த்து வைத்து இங்கிலீஷ்ப் புஸ்தகத்தைப் படிக்கச்சொல்லிப் படிக்கும் முறையைக் காட்டினார். உச்சாரணத்தில் நாங்கள் பல பிழைகள் செய்தோம். எங்களைக் கண்டித்தும் திருத்தியும் பார்த்தார். ஒரு நாளில் கற்கும்

விஷயமா? வரிசையாய் வாசித்துப் பத்துப் பன்னிரண்டு பேர் ஆன பிறகு என் முறை வந்தது. நான் படித்தது நன்று யிருக்கிறதென்று மிகவும் சிலாகித்தார். சிலாகித்து நிறுத்தாமல் அதே வாயில் மற்றவர்களைக் கடுமையாகத் திட்டினார். என்னை அவர் தனியாய் ஒதுக்கி நல்மொழி கூறியது எனக்குப் பெருமையாகத் தோன்றவில்லை. ஏதோ அடக்க முடியாத ஆவேசத்தை உண்டுபண்ணிற்று. இன்னதென்று நன்றாய் நினையாமல் எழுந்திருந்து ஒரு வார்த்தை சொல்ல அனுமதி வேண்டினேன். அநுமதி கொடுத்தார். வகுப்பில் சிநேகிதர்கள் எல்லோரும், ஆச்சரியத்துடனும் விசாரத்துடனும் தலை தூக்கிக் கேட்டார்கள். "இங்கிலீஷ் எங்களுக்குச் சொந்தப் பாஷை யல்ல. மற்றப் பாஷைகளை விடக் கடினமென்றும், நிர்ணயமற்றதென்றும் பிரசித்தம். மேலும் எங்களுக்குப் பால்யம் முதல் வெள்ளையரிடமும் சிட்சை இல்லை. பேச்சுப் பழக்கமும் இல்லை. ஆகவே, நாங்கள் இவ்வளவாவது தெரிந்துகொண்டோமே என்பது ஆச்சரியம்" என்றேன். இதுவரை சொன்னது தவறல்ல. யாராகிலும் எடுத்துக் காட்ட வேண்டியதுதான். ஆனால் அத்துடன் நிற்காமல் என்னை யறியாது தோன்றிய துணிச்சலால் மேல் ஒரு படி யேறினேன். "எங்கள் பேரில் குற்றம் சுமத்தாமல் கருணை காட்டுவதற்கு இன்னும் ஒரு முகாந்திரமும் உண்டு. அதை விசேஷ உத்தரவு பெற்றுத்தான் சொல்லலாம். உத்தரவு கிடைக்குமா?" என்று கேட்டேன். அது ஏதோ விபரீதமானதாகவே இருக்கும் என்று வகுப்பிலுள்ளோர் நடுங்கிச் சித்திரத்தில் எழுதிய பதுமைகள்போல அசைவற்றுக் கவனித்தார்கள்.

பிரின்ஸிபால் ஹால் துரை, "அதென்ன, சொல்லும்" என்று திறந்த வாயும் விழித்த கண்ணுமாய் என்னை நோக்கினார்.

"சொந்தப் பாஷையைப் பேசும் நீங்களே இந்த அரை மணிக்குள் மூன்று சொற்களைப் பிழையாக அழுத்தம் (Accent) வைத்துச் சொன்னீர்கள்" என்றேன். "எவை?" என்று அவர் கேட்டதுதான் தாமதம். Magnificent, Formidable, Execrable, மூன்றையும் கணீரென்று கேட்கும்படியாகச் சொன்னேன். இவைகளில் வரிசையாய் இரண்டாவது, முதலாவது, முதலாவது உயிரில் அழுத்தம் விழ வேண்டியது. அவர் முதலாவது இரண்டாவது, இரண்டாவதாகச் சொன்னார். ஒருவாறு, "இப்பொழுது சொல்லுங்கள்" என்று கேட்டபோது என்னைப் பிடித்த நல்லவேளை தப்பாகவே சொன்னார். சரியான ஆக்ஸெண்ட் இவ்வாறு என்று காட்டினேன்.

"ஆக்ஸ்போர்டில் மகா வித்வான்களிடம் பழகியிருக்கிறேன். அவர்கள் இப்படித்தான் சொல்லுகிறார்கள். குழந்தைப் பருவம் முதல் நான் படித்தது பிசகுமா?" என்றார்.

"அது எப்படி எனக்குத் தெரியும்? அகராதி (Dictionary)யில் நான் சொன்னபடிதான் இருக்கும்" என்றேன்.

"அகராதியை நான் ஒப்புவேனா? எனக்குத் தெரியாததா, என் பாஷையில்?" என்றார்.

சற்றுப் பொறுத்து வகுப்பில் சல சலப்புக் கேட்கவே, "டிக்ஷனரியைத்தான் பார்ப்போமே" எனவே, மூன்று நான்கு அகராதிகள் வந்தன. எல்லாவற்றிலும் நான் சொன்னதுதான் சரியென்று வெளிப்பட்டது. ஒரு நிமிஷம் பிரமித்து முகம் சிவக்க, "நான்தான் தப்பினேன். இனி ஸ்ரீநிவாசன் இருக்கும் இடத்தில் உச்சாரணத்தைத் திருத்தப் பயப்படுவேன்" என்றார். பாடமும் முடிவுபெற்றது. சில சிநேகிதர்கள் சந்தோ

ஷித்தனர். சிலர் அனர்த்தத்தை விலைக்கு வாங்கிக் கொண்டேன் என்று பயந்தார்கள்.

## மற்றொரு ஸாகஸம்

இரண்டு மாதம் ஆன பிறகு இந்த ஹால் துரையிடமே வேறொரு சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டேன். என். வைத்தியநாதையரைச் சைதாப்பேட்டைக் காலேஜுக்கு மனஸ்தத்துவ சாஸ்திரத்திற்குப் பெரிய ப்ரொபஸராக நியமித்தார்கள். அதுவரை ஹால்துரை தான் எங்களுக்கு அந்தப் பாடம் சொல்லி வைத்துக் கொண்டிருந்தார். வைத்தியநாதையர் பேரில் அச் சமயம் சர்க்காருக்கும் வெள்ளையருக்குமே வெகு அதிருப்தி. அவர் கும்பகோணம் காலேஜில் இருக்கும் போது, சர்க்கார் நிலவரி வசூலில் செய்த சில காரியங்களை அநியாயமென்று - தாமும் ஒரு மிராசுதார் ஆதலால் - கண்டித்துப் பத்திரிகைகளில் எழுதினார். உத்தியோகஸ்தர் பகிரங்கமாய்ச் சர்க்காரை எதிர்ப்பது முறையல்லவென்று சிக்ஷிக்க யோசித்தார்கள். அவர் எளிதில் தலை வணங்கும் பேர்வழி யல்ல. இந்தத் தகராறில், அவர்பேரில், 'ஏதோ கோர்ட்டில் சாதிக்க முடியாத சில விஷயங்களைச் சொன்னார்' என்று குற்றம் சாட்டி, பத்திரிகை மூலமாய்த் தூஷித்து அவரைச் சைதாப் பேட்டைக்கு மாற்றினார்கள்.

இந்த மாற்றம் வெளியானதும் எங்கள் வகுப்பில் ஹால்துரை, "உங்களுக்குப் புது உபாத்தியாயர் வருகிறார். என்னைக் கேட்காமலே நியமிக்கப்பட்டவர். ஏதோ பொய்சொல்லி அகப்பட்டுக்கொண்டு ஜெயிலுக்குப் போக வேண்டியவர். உன் பாடு என் பாடென்று தப்பினவராம்" என்றார். திடீரென்று இந்த அவதூறைக் கேட்டதும் எனக்கு ஆத்திரம் பொங்கிற்று. "தங்களுடைய அபிப்பிராயம் விஷய மனைத்தையும் தெரிந்துகொள்ளாமல் ஏற்பட்டிருக்கிறது. வைத்திய

நாதையர் செய்தது குற்றம் அல்ல. ஏதோ சர்க்கார் விதிகளுக்கு விரோதமா யிருக்கலாம். உண்மைக்கும் ஒழுங்குக்கும் ஒத்தே நடந்துள்ளார். ஜெயில் என்ற அந்தச் சத்புருஷன் விஷயமாய்ச் சொல்வதே அநீதி'' என்றேன்.

எனக்கு வைத்தியநாதையரை நேரில் தெரியாது. நான் ஸயன்ஸ் வகுப்பில் சேர்ந்தவனாதலால் காலேஜில் அவரது பரிசயம் கிடைக்கும் பாக்கியமில்லை. வந்து வேலையை ஒப்புக்கொண்ட பிறகுதான் யாரிடமோ நடந்ததைக் கேட்டு என்னை அழைத்துத் தெரிந்துகொண்டார். பயந்து ஆபத்திற்கு ஒதுங்குவது என்பது அவருக்குச் சற்றேனும் தெரியாது. ஹாலுக்கும் அவருக்கும் ஒத்துக் கொள்ளவே இல்லை. ஐயர் பேரில் ஏதோ குற்றம் அகப்பட்டு விட்டதென்று டைரக்டரிடம் புகார் போயிற்று. அக் காலத்தில் டைரக்டர் டாக்டர் டங்கன். வைத்தியநாதையர், மனஸ்தத்துவ சாஸ்திரத்தில் நிபுணரென்று அவரிடம பக்தியும் சிநேகமு முள்ளவர். புகாரை வாசித்ததும் ஹாலைக் கண்டு எச்சரிக்கை செய்தார் துரை மறு நாள் என்னை யழைத்து, "வைத்தியநாதையா மகா புருஷனுமே; வித்வத் கோஷ்டியில் முதல் வர்க்கத்தில் சேரத் தகுந்தவராமே. 'அவருடன் சண்டை போடவாவது? உடனே சிநேகம் பண்ணிக்கொள்' என்று டைரக்டர் சொன்னார். உனக்கு அவரை நன்றாகத் தெரியுமே. அவரிடம் சொல்லிச் சமாதானம் செய்து வை'' என்றார். எனக்கு ஏதோ கனவு போல் இருந்தது. 'அவ்வளவு பெரியவர்களுக்குள் ராஜி நான் செய்துவைக்க வாவது!' என்றெல்லாம் நினைத்து வெகு அச்சப்பட்டேன். ஹால் துரை பெரிய மனமுள்ளவராதலால் நான் பிழைத்தேன். வேறு அற்ப புத்தியுள்ளவரா யிருந்தால் என் கதி என்னவா யிருக்குமோ? வாலாறே வேறுபட்டிருக்கும். இவ்வளவு நாள் கழித்து நினைக்கும்போதும் அதிருஷ்டவசத்தால் திருப்திகரமாய் முடிந்ததென்று மனம் குளிர்கிறேன்.

## சேலத்தில்
## 1893

**1893**-ஆம் வருஷத்திலே சேலம் முனிசிபல் காலேஜில் முதல் உதவி உபாத்தியாயரானேன். கூட உபாத்தியாயரா யிருந்தவர்களுடன் மிக்க ஒற்றுமையும் அன்பும் ஏற்பட்டன. இங்கேதான் கே. சேஷு ஐயர் நண்பரானார். நெறி தவறாத ஒழுக்கத்திலும் மனோ தைரியத்திலும் உயர்ந்த நோக்கத்திலும் அவரை ஒத்தவர் கிடைப்பது அரிது. பிறகு மாயவரம் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியராகிப் பேரும் புகழும் ராவ் பகதூர் பட்டமும் பெற்றார். எனக்குச் சம்பந்தியும் ஆனார். எனக்கு உயிருக்குயிரான சகா இவர்.

இவரும் நானும் இணைபிரியாமல் இரண்டு வருஷ காலம் பொதுக் காரியங்களில் தலையிட்டோம். மிகுந்த உற்சாகத்தையும் பெருமையையும் விளைவிக்க ஒரு கிளர்ச்சி நேர்ந்தது. 'சர்க்கார் உத்தியோகஸ்தர், மற்றவர்' என்ற கட்சிகள் பிரிந்தன. சேலம் முனிசிபாலிடியின் பேரில் சில குற்றங்களைச் சாட்டி ஐந்நூறு ரூபாய் சம்பளத்தில் ஒரு டெபுடி கலெக்டரைத் தலைவராக நியமிக்கச் சென்னை அரசாங்கத்தார் பிரயத்தனம் செய்தனர். உத்தியோக வர்க்கத்தார், 'இதுதான் சரி' என்றும், மற்றவர், 'இது கூடாது' என்றும், ஊர் இரண்டு பட்டு, பேச்சாலும் எழுத்தாலும் கலகம் நடந்தது. அரசாங்க உத்தியோகம் இல்லாதாருக்குத் தலைவர் ஸி. விஜயராகவாசாரியார். அவர் அப்போது 'சேலம் வீரர்' என்று ஜனங்களாக வழங்கிய பெயருடன், ஒப்பற்ற செல்வாக்குடன் நாயகப் பதவியைப் பெற்றிருந்தார். வக்கீல், வியாபாரி, மிராசுதாரர் எல்லாரும் அவர் பின் நின்று உதவினார்கள். நானும் சேஷு ஐயரும் அந்தக் கட்சியில் சேர்ந்து கூச்சல் போட்டோம். 'முனிஸிபல் காலேஜில் வேலையா

யிருப்பவர் சர்க்கார் உத்தியோகஸ்தரில் முக்கால் திட்டம். ஆகையால் அவர்கள் கிளர்ச்சியில் சேர்ந்தால் நீக்கப்படுவார்கள்' என்று பயமுறுத்தினார்கள். நாங்கள் கொஞ்சமேனும் அசையவில்லை. இந்தச் சமயத்தில் நான் ஹிந்துப் பத்திரிகைக்கு வியாசங்கள் அனுப்ப அவை வெளியாயின. ஒன்றிரண்டு தலையங்கத்திலும் அச்சிடப்பட்டன. விஜயராகவாசாரியாரும் ஒப்புக் கொண்டு எனக்குத் தம் கட்சியில் இடங் கொடுத்தாரென்று எனக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவே இல்லை.

## உபாத்தியாயர் சங்கம்

## 1895

சேலத்தில் இரண்டு வருஷம் இருந்துவிட்டுப் பிறகு சென்னைப் பச்சையப்பன் ஹைஸ்கூலில் இங்கிலீஷ் வாத்தியாராகச் சேர்ந்தேன். வந்து சில நாளைக்கெல்லாம், 'ஹிந்து' பத்திரிகையில் வாத்தியார்களின் தொழில் அபிவிருத்திக்காக ஒரு சங்கம் வேண்டுமென்று வாதித்து ஒரு கடிதம் எழுதினேன். இக் கடிதம் நல்ல பருவத்தில், நல்ல பூமியில் போட்ட நல்ல விதைபோல் ஆயிற்று. இ. டி. டேவிஸ் என்ற டவ்டன் காலேஜ் தலைமை வாத்தியார் பதில் எழுதினார். நாங்கள் சந்தித்து எப். டபிள்யூ. கெல்லெட் என்பவருடன் கலந்துகொண்டோம். இவர் படிப்பு, விநயம், பெருந்தன்மை, எல்லாக் குணங்களும் பொருந்திய பெரியவர். சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியின் சரித்திரப் போசிரியர்.

வெகு சீக்கிரத்தில் 'மதராஸ் டீச்சர்ஸ் கில்டு' என்ற பெயர் பெற்ற ஸ்தாபனம் ஏற்பட்டது. இதில் நானும் என்னுடைய நண்பர்களாகிய கே. பி. ராமநாதையரும் பி. லக்ஷ்மி நரஸு நாயுடுவும் டப்ளியூ. ஆர். பார்த்த

சாரதி ஐயங்காரும் எஸ். வாசுதேவாசாரியாரும் இந்திய அங்கத்தினரில் முக்கியமாய் நின்று உழைத்து வந்தோம். இப்போது, நானும் வாசுதேவாசாரியாரும் தான் பாக்கி நிற்கிறோம். இந்த ஸ்தாபனம் இப்போது ஆலமரம்போல் கிளையூன்றி பள்ளிகளில் உழைத்து வரும் உபாத்தியாயர்களுக்கு உபயோகப்படுகிறது என்பது பெருமையாக இருக்கிறது.

## 'டி. யூ. ஸி. எஸ்.'

## 1904

இப்படியேதான் திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலில் தலைமை வாத்தியாராக இருந்த காலத்தில், என் வீட்டில் நாங்கள் சில சிநேகிதர்களாகக் கூடிச் சாப்பிட்டுக் 'கோவாபரேடிவ் ஸ்டோர்' வைக்க வேண்டுமென்று சர்க்கார் சட்டம் செய்வதற்கு முன்னதாகவே துவக்கினோம். இது ஓங்கி வளர்ந்து கியாதியாயிருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இங்கே வளர்த்துச் சொல்ல வேண்டாம்.

## ஹிந்து ஹைஸ்கூல்

ஹிந்து ஹைஸ்கூல் நிர்வாகம் அப்போதெல்லாம் எளிதல்ல. பிள்ளைகளிடத்திலிருந்து மட்டுந்தான் உபத்திரவம் என்பது இல்லை. மற்றெல்லாப் பக்கங்களிலிருந்தும் உபத்திரவம் உண்டாகும். கூடிய வரையில் விரோதம் காட்டாமல் பொறுமையே காக்குமென்று நம்பி, அதிகாரத்தை அடக்கிவைத்தே காரியங்களை நிறைவேற்றி வந்தேன். ஒரு நிகழ்ச்சி, எடுத்துரைக்கத் தக்கது. இக் காலத்தில்போல், எல். டி. யும், மற்றத் தொழில் பரீக்ஷை கொடுத்தவரும் மலிவாகக் கிடைக்கும் காலம் அல்ல அது. திருவல்லிக்கேணியில் எங்கே

பார்த்தாலும் சட்டம் படிப்பதற்கு வந்திருக்கும், பி., ஏ. எம். ஏ. முதலியவர் நிறைந்திருப்பார்கள். இத்தகையாருக்குப் பள்ளிக்கூட முறைகளிலும், படிப்பின் நேர்மையிலும் சிரத்தை குறைவென்றால் ஆச்சரியம் என்ன? முக்கிய உத்தேசம் சட்டப் பரீக்ஷை. பள்ளிக்கூடக் காரியம் இரண்டாம் பக்ஷந்தான். இவர்களிடம் பூர்ண சம்மதியுடன் வேலை வாங்குவது சிற் சில வேளைகளில் கஷ்டம்.

நாலைந்து தடவை பி. எல். பரீக்ஷை தவறியவர் ஒருவர்; பெரிய சம்சாரி. ஊரில் எல்லோருக்கும் செவ்வையாய்த் தெரிந்தவர். ஏதோ, பொல்லாத வேளையில் என் பேரில் கோபம் வந்து முரண்டினார். இவருக்குச் சுதர்சனம் ஐயங்கார் என்று பெயர் வைப்போம். நயமாகச் சொல்லிப்பார்த்தேன். கேட்கவில்லை. எழுத்து மூலமாய் வியவகரித்தால் அஞ்சுவாரோ, பார்க்கலாமென்று அவ்வழி சென்றேன். வெகு அலக்ஷ்யமாயும் ஒழுங்கு மீறியும் பதில் அனுப்பினார். நிர்வாகக் கமிட்டியாருக்கு, அறிவித்தால் சுதர்சனமையங்காருக்கு ஏதாகிலும் கடும் தண்டனை கிடைக்கும். இது எனக்கு இஷ்டமேயில்லை. ஸாம மார்க்கத்தை விட்டு அகலக்கூடாதென்று அவருக்கும் எனக்கும் பொதுவான சிநேகிதர் சிலரிடம் கடிதங்களைக் காட்டி, 'ஏன் இப்படிக் குழியில் விழவேண்டு'மென்று நற்புத்தி சொல்லுங்களென்று சொல்லி, இரண்டு மூன்று நாள் பொறுத்தேன். அவர் அதிருஷ்டத்தாலும் என் அதிருஷ்டத்தாலும் இந்த மருந்து பிடித்தது. சுதர்சனமையங்கார் முரட்டுக் கடிதங்களை வாபீஸ் வாங்கிக்கொண்டு அது முதல் என்னிடம் சுமுகமாக இருந்து நண்பரானார். இப்பொழுது அவர் காலமாகி விட்டார், பாவம்!

இந்தச் சம்பவத்தை நாற்பது வருஷங்களுக்குப் பின் நினைத்தாலுங்கூட மனத்திற்குத் திருப்தியாகவே இருக்கிறது. அவருக்குத் தண்டனை வாங்கி வைத்திருந்தால் எனக்கு என்ன லாபமா? பெருமையா? மற்ற வாத்தியார்

களிடந்தான் சௌஜன்யமாக இருக்க முடியுமா? உலகத்தில் சமாதானத்திற் கிணங்குபவன் ஒருவனுனால் இணங்காதவரோ மூவர் இருக்கிறார்கள். ஆனாலும் அதிகார வர்க்கத்தார் சமாதானத்தையே கையாண்டு இனி முடியாதென்று ஆன பிறகுதான் தண்டோபாயத்தை அணுக வேண்டும்.

## ஒரு புதுக் கருத்து

மற்றொரு சந்தர்ப்பத்திலும் நான் ஹிந்து ஹைஸ்கூலிலிருந்தபொழுது சந்தோஷித்தேன். நாகப்பட்டினத்தில் பாதிரிகளின் பள்ளிக்கூடத்தில் ஏதோ அதிருப்தி யுண்டாகி, பெரிய மனிதர் சேர்ந்து நாஷனல் ஹைஸ்கூல் என்று பெயர் வைத்து ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபனம் செய்ய முயன்றார்கள். கல்வி இலாகாக்காரர்களுக்கு இஷ்டமில்லை. திரவிய உதவிதான் நமக்குள் தெரியுமே! மட்டாகவே நின்றது. ஹெட்மாஸ்டர் நல்ல திறமை, மனத்திடம், ஒழுக்கம் எல்லாம் கூடியவராய் அவசியம் இருக்க வேண்டும். அத்தகைய ஒருவருக்குத் தக்கபடி சம்பளம் கொடுக்க நாகப்பட்டினத்தாருக்கு வலிமை கிடையாது.

நான் அப்போது 'எடுகேஷனல் ரிவ்யூ' என்ற மாதப் பத்திரிகைக்கு அதிபர். அதில் ஒரு புதிய அபிப்பிராயத்தை வெளியிட்டேன். ஹைஸ்கூல்களில் முனிஸிபாலிடியார் வைத்திருப்பவை முதல் தரம். அவற்றில் பணத் தட்டு அவ்வளவு இராது. பாதிரிமார் வைத்திருப்பவை இரண்டாந் தரம். இவை சர்க்கார் கவனமும் நிறைந்தன. தேசியக் கமிட்டிகள் நடத்தும் பள்ளிக்கூடங்கள் மூன்றாந் தரம். இவை மிகச் சிரமப்படுகின்றன. அநேகமாய்ப் பணங் கிடையாது. டிபார்ட்மென்டாரும் மூத்தாள் குழந்தையாகவே அவற்றை நினைக்கிறார்கள். இவை கூடி ஒரு சங்கம்போல் இருந்து ஒன்றுக்கொன்று துணையாய் நின்று சர்க்காருடன் போராடினால்தான் முன்னேற்றம் அடையலாம்.

இவ்வாறு பொதுவாய் எழுதியதைச் செய்து காட்டக் கருதி, ஹிந்து ஹைஸ்கூல் பெரிதும் வலிமையுள்ளதாதலால் நாகப்பட்டினத்தில் புதிதாய் நிலை பெறுமல் தத்தளிக்கும் நாஷனல் ஸ்கூலுக்குத் தங்களுடைய ஹெட்மாஸ்டரை ஒன்று அல்லது இரண்டு வருஷ காலத்திற்கு இரவல் கொடுக்க வேண்டுமென்றும், அந்த ஏற்பாட்டுக்கு உட்பட நான் சித்தனென்றும் அப்போது எனக்குச் சம்பளம் நூற்றுமுப்பதாயிருந்தாலும் அதைக் குறைத்துக்கொண்டு நூறு ரூபாய் வாங்கிக்கொண்டு நாகப்பட்டினம் போகிறேனென்றும் இரண்டு ஸ்கூல் நிர்வாகக் கமிட்டியாருக்கும் எழுதினேன். இப்படிச் சிறிது காலம் எங்கே நம்முடைய கைங்கரியம் அவசியமோ அங்கே தோள்கொடுத்துப் பிரயோஜனப்படுவதற்குத் தயாரென்று நானாகவே முன் வந்ததில் மிக உற்சாகம். இப்பொழுது நினைத்தாலும் சற்றுப் பெருமை பாராட்டலாமென்று தோன்றுகிறது.

ஆனால் இந்த எண்ணம் நிறைவேறவில்லை. என் பள்ளி அதிகாரிகள் சம்மதிக்கவேயில்லை. நாகப்பட்டினத்திலும் வி. ஆர். குஞ்சிதபாதமையர், நான் நஷ்டப்பட்டாலும் நல்ல காரியத்திற்கு உதவினால் உதவிசெய்யும் எனக்குப் புகழே யொழிய, உதவி பெறும் தங்களுக்கு மனவருத்தம் தவிர வேறில்லையென்றும், ஆதலால் அதைப் பெறுமலே சமாளிக்க வேண்டுமென்றும் தம் கமிட்டியாரைத் தீர்மானம் செய்யச் செய்தார்.

## அசுவினி குமார் தத்
## 1907

இந்திய ஊழியர் சங்கத்தில் 1907-ஆம் வருஷம் ஜனவரியில் சேர்ந்தேன். உடனே கீழ் வங்க தேசத்தில் ஒரு மாதம் சஞ்சாரம் செய்யும்படி கோகலே என்னை

அனுப்பினர். அப்போது வங்கப் பிரிவினையை மாற்றி மறுபடியும் வங்கத்தை ஒன்றாக்க வேண்டுமென்ற கிளர்ச்சி வெகு மும்முரமாக நடந்தது. சர்க்காருக்கும் குடிமக்களுக்கும் பரஸ்பரத் துவேஷம் தீவிரம். முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் கேட்க வேண்டுமா? வெள்ளையர் பஹிஷ்காரம் கன கடுமையாய் நடைபெற்ற சமயம். பாரிஸால் என்ற பட்டணத்தில் ஒரு வாரம் பாபு அசுவினி குமார் தத் என்னும் பெரிய ஜனத் தலைவர் வீட்டில் தங்கினேன். இந்த ஏழு நாளும் என் வாழ்வில் உத்தம நாளென்றே இப்போதும் தோன்றுகிறது. அவர் என்னுடன் நெருங்கிய சிநேக பாவத்தைக் காட்டினார். அசுவினி பாபுவுக்கு அகில இந்தியக் கீர்த்தி யில்லாவிடினும் அத்தகைய கீர்த்தி பெற்றவரில் ஆயிரத்தில் ஒருவருக்கும் அவரது குணமும் தேசாபிமானமும் இல்லை. கீழ் வங்கமெல்லாம் அவரைப் பூஜை செய்யாத தொன்றுதான் குறை. அவருக்கு இருந்த செல்வாக்கால் அவரைச் சாதாரண ஜனங்கள், 'ராஜா!' என்றே அழைத்தார்கள். வெள்ளையர் ராஜ்யம் நின்றுவிட்டதென்றுதான் பொதுக் கொள்கை. நேஷனல் வாலன்டியர் என்று போத்துப் போத்தாகிச் சிறு பிள்ளைகள் ட்ரில் தினமும் செய்து கொண்டு, உயர்ந்த காரியம், தாழ்ந்த காரியமென்கிற பேதமேயில்லாமல் ஒவ்வோர் ஊரிலும் அசுவினி பாபுவால் நியமிக்கப்பட்ட நாயகரின் உத்தரவுப்படி கைங்கரியம் செய்துவந்தார்கள். விதேசி சாமான் ஒன்றும் கண்ணிலே தென்படாது. அந்த வியாபாரம் செய்யும் கடையெல்லாம் மூடிவிடப் பட்டன. வெள்ளையருக்கு அவசியமான சர்க்கரை, சாராயம் மட்டும் அவர்கள் எழுதிக் கேட்டுக்கொண்டால் அசுவினி பாபுவின் கையெழுத்துப் போட்ட சீட்டைக் காட்டி வாங்கிக்கொள்ள வேண்டும். வண்டி முதலான சௌகரியங்களுக்கும் அவ்வாறே.

நான் சஞ்சரிக்கும்பொழுதெல்லாம் வாலன்டியர் இரண்டு பேராவது கூட வருவார்கள். மூச்சுக் கூட அவர்களின்றி விடக்கூடாது என்பார்கள். பாரிஸாலில் முக்கிய இடங்களுக்கு அவரே அழைத்துப் போய்க் காட்டினார். ஒரு பெரிய காலேஜ்; எம். ஏ. படிப்பு வரை யுள்ளது; அதைச் சொந்தமாக வைத்திருந்தார். ப்ரஜ் மோஹன் காலேஜ் என்று தகப்பனார் பேர் வைத்திருந்தார். இதில் அவரே இங்கிலீஷ்ப் பாடம் சொல்லிக் கொடுப்பார். அவருக்குப் பர்க் (Burke) பிரசங்கங்களில் வெகு மோகம். எங்கே எடுத்தாலும் தட்டில்லாமல் ஒப்பிப்பார். பிள்ளைகளுக்கும் அதே ஊக்கத்தைக் கற்பித்தார். நான் அவரிட மிருந்தபோது அவர் தாயாருக்குக் கிழத்தனத்தால் தள்ளாமையும் வியாதியும் சேர்ந்து காலமாகி விடுவார்போல் இருந்தது. காலே, மாலே, இரண்டு வேளேயும் அவரை நமஸ்கரித்து அவருடைய பாதங்களேக் கையால் தொட்டுக் கண்களில் ஒத்திக்கொண்டு கொஞ்ச நேரம் இருந்து வேண்டிய சுச்ரூஷையைச் செய்துவிட்டு விடைபெற்றுத்தான் வெளியே வருவார். மிருது சுவபாவம்; பேச்சு, குரல், எல்லாம் இனிப்பு. ஐந்தடி ஐந்தங்குலம் இருப்பார். நடை, சம்பாஷணே முதலியவை மெதுதான். படபடப்பில்லே. கோபம் வராது. வந்தால் சற்று விசிறி யடித்துச் சாந்த மாகிவிடும். சுருக்கமாகச் சொல்லுகிறேன். எந்த விதத்திலும் பிறர் மனத்தைக் கவர்ந்து தம்முடைய அன்பையும் பிறருக்கு வஞ்சனே யில்லாமல் அளிப்பார்.

## இவரது குண விசேஷம்

இவரது மேன்மையான குணங்களே அறிந்து, பொதுஜன விரோதியாயிருந்த லெப்டினன்ட் கவர்னர் ஸர் பாம்பில்ட் புல்லர் (Sir Bampfylde Fuller) கூட இந்தியாவை விட்டுப் போகும்போது ஒரு கடிதம் எழு

தினர். அதை அசுவினிபாபு என்னிடம் காட்டினர். அதன் முக்கியக் கருத்தாவது: "உங்களைத் தெரிந்து கொள்வதில் எனக்கு மிக்க சந்தோஷம். தைரியத்திலும் தேசாபிமானத்திலும் அற்பத்தனம் சிறிதேனும் கலக்காத ஔதார்யத்திலும் உங்களுக்கு மேற்பட்டவரை அறியேன். தங்களைப் போல இந்த வங்க தேசத்தில் இன்னும் ஐந்தாறு பேர் உண்டானல் முன்னேற்றத்திற்கு ஐயம் இல்லை." அவர் பெருமையையும் மதிப்பையும் விளக்க இது ஒன்றே போதும்.

அசுவினி பாபு உபாக்கியானம் நீண்டுவிட்டது. இன்னும் சில சில்லறை விஷயங்களை எழுதிவிட்டால் பூர்த்தியான படலம்போல் ஆகிவிடும். அவருக்குச் சம்ஸ்கிருதம் நன்ருக வரும். உயர்ந்த காயஸ்த வம்சத்தைச் சேர்ந்தவர். ஜப தபங்கள் தவருது செய்வார். கீதையைப் பாராயணம் செய்வார். இந்திய ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த தேவதார் என்பவரிடத்தில் கீதாபக்தியால் அதிகப் பிரீதி உண்டு. கீழ்வங்காளத்தார் பெரும்பாலாரைப் போல் மீனில்லாமல் சாப்பாடு கிடையாது. கறி, குழம்பு, பச்சடி எல்லாவற்றிலும் இருக்கும். நான் அதில் வெறுப்புக் காட்டவே, 'ஓகோ வைஷ்ணவமோ? ஒன்றும் யோசிக்க வேண்டாம். நம் அகத்தில் மீன் சேர்க்காத விதவைகள் இருக்கின்றனர். அவர்களுடன் சேர்ந்துவிடலாம்' என்று வார்த்தை வேகத்தால் வந்த வேடிக்கையை அநுபவித்துச் சிரித்தார். இவரிடத்தில் ஒரு விநோதம் உண்டு. தம்மைப் படர்க்கையில் வைத்தே பேசுவார். 'அசுவினி பாபுவுக்கு இது பிடிக்காது. அசுவினி பாபுவுக்கு இது தெரியாதா? அசுவினி பாபுவையா ஏமாற்றப் பார்க்கிறீர்?' என்றெல்லாம் சொல்லுவார். மற்ற வங்காளிகளைவிட ஓங்கி அகாரத்தை ஓகாரமாக உச்சரிப்பார். எத்தனை தடவை கேட்டாலும் எனக்குச் சிரிப்பு வராமல் இராது.

நான் அவர் அகத்திலிருந்த ஒரு வாரத்தில் வேடிக்கை ஒன்று சம்பவித்தது. ஒரு நாள் காலை சுமார் எட்டு மணிக்குக் காம்பவுண்டில் கூச்சல் கேட்டது. எல்லோரும் வெளியே வந்து பார்த்தோம். முப்பது ஜனங்கள் இடுப்பில் ஒரு துண்டை மட்டும் கட்டிக்கொண்டு ஒரு பெரிய சர்ப்பத்தைச் சுற்றி, 'ராஜா, ராஜா!' என்று அடிக்கடி கத்தினார்கள். சர்ப்பம் வெகு நீளம்; ஐந்தரை அல்லது ஆறடி இருக்கலாம். அதற்குத் தகுந்தபடி பருமனும் இருந்தது. கீழே விட்டு மறுபடியும் பிடித்துக் காட்டினார்கள். பயங்கரமாய்ச் சீறியது. ஏதோ சில வார்த்தைகள் அவர்களுடன் பேசி, என்னிடம் பாபு விசேஷத்தைத் தெரிவித்தார். மாகாணப் பிரிவினைக் கிளர்ச்சி - வங்காளப் பிரிவினைக் கிளர்ச்சி - துவக்கியது முதல் கீழ்வங்காள ஜனங்கள் அசுவினி பாபுவை உண்மையாகவே ராஜாவாகக் கொண்டாடினார்கள். ஹிந்துக்களின் பண்டை வழக்கத்தை அநுசரித்து, எவ்வகைப் பண்டத்திலும் அரிதாயும் ஆச்சரியமாயுமுள்ளதை ராஜாவிடம் சமர்ப்பணம் செய்ய வேண்டியதென்னும் கடமையைத் தலையால் வகிக்கிறோம் என்றார்களாம். என் மனத்தில் தோன்றிய வியப்பையும் ஆழ்ந்த எண்ணங்களையும் தெரிவிக்க வேண்டுமென்றால் ஒரு தனிப் புஸ்தகம் பிடிக்கும். இவ்வளவு ராஜபக்தியும் கபடமின்மையும் சம்பிரதாய சிரத்தையும் உள்ள பேதை ஜனங்களை எவ்விதமும் திருப்பலாமே. நம் பாபுதான் தர்மப் பிரபு. கண் கொட்டாது பிரஜா பரிபாலனமென்னும் காரியத்தை மனு முதலிய பெரியோர் காட்டிய வழியாகச் செய்வார். துஷ்ட ராஜாவுக்கும் இவ்வாறுதானே படிந்து போவார்கள்? என்ன பாபத்தைச் செய்ய மாட்டார்கள்! என்ன சங்கடங்களுக்கு உள்ளாக மாட்டார்கள்! அறியாமையும் பயமும் பலசாலியினிடம் வைக்கும் விசுவாசமும் அளவுக்கு மிஞ்சியவை. நல்ல அரசன்

ஒருவனுக்குத் துஷ்ட அரசன் பத்துப் பேர் அல்லவா? இந்த யோஜனை என் உள்ளத்தை விட்டு அகலவில்லை. இறுதியில் அசுவினி பாபுவின் வீட்டை விட்டுப் போகும்போது மிக்க வருத்தத்துடன் போனேன். நல்ல ஞானத்தையும் ஒழுக்கத்தையும் பெருக்கிய ஒரு தசை முடிந்ததென்று நினைத்தேன். விநயமாய் நமஸ்காரஞ் செய்து என்னை மறக்கக் கூடாதென்று கேட்டுக்கொண்டேன். "என்ன சொல்கிறீர்? அசுவினி பாபுவா மறப்பவன்? அவனிடம் அந்தச் சந்தேகம் வேண்டாம்!" என்கிற மொழி காதில் பட விடைபெற்றுச் சென்றேன்.

## லார்ட் பென்ட்லண்டு காட்டிய பிரீதி
## 1916

**1916**-ஆம் வருஷத்தில் சென்னைச் சட்ட சபையிலிருந்து இந்தியா சட்டசபைக்கு இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பம் வந்தது. நான் ஓர் அபேக்ஷகன். போட்டி வெகு தீவிரம். சேலம் விஜயராகவாசாரியார், டாக்டர் நாயர், பி. என். சர்மா ஆகியவர்கள் மற்ற அபேக்ஷகர்கள். நான் சென்னைச் சட்ட சபையில் சர்க்காரால் நியமிக்கப்பட்ட அங்கத்தினர். அப்போதைய கவர்னர் லார்ட் பென்ட்லண்டுக்கு - ராஜ்ய காரிய முறைகளில் எவ்வளவு பேதமிருந்தாலும் அடிக்கடி நான் அவர் அபீஷ்டத்திற்கு விரோதமாய்ப் பேசியும் நடந்தும் இருந்தாலும் - என்னிடத்தில் வெகு பிரீதி. என் முன்னேற்றத்திற்குக் கேடு வரக்கூடாதென்று கவலை யுண்டு. ஒருகால் இந்தியா சபைப் பிரயத்தனம் நிறைவேறாமற்போனால் என்ன செய்கிறதென்று ஆதங்கப்பட்டார். சென்னைச் சபையில் உத்தியோக மற்றவர் வோட்டர்க ளாதலால் இவ்விடத்தில் தேர்ந்

தெடுப்பும் நியமனமும் முடிவடைய வேண்டும். அப்படியே அநேகமாய் ஆகிவிட்டது. ஒரு நியமன ஸ்தானத்தை மட்டும் காலியாய் நிறுத்தி வைத்திருந்தார். நிர்வாகக் கவுன்சிலரும் மற்றப் பெரிய செல்வாக்குள்ள வர்களும் அந்த ஸ்தானத்திற்குச் சிபாரிசுகள் செய்தும், 'ஆகட்டும் ஆகட்டுமெ'ன்று தள்ளிப்போட்டே வந்தார். ஊரில் சந்தேகம் என் பேரில் பாய்ந்தது. நமக்கேன் இந்த அபவாதமென்று ஒரு நாள் லார்ட் பென்ட்லண்டிடம் போய், "ஏன் இந்தப் பேச்சுக்கு இடம் கொடுக்க வேண்டும்? அந்த ஸ்தானத்திற்கு யாரையாவது நியமனம் செய்து விடுகிறதுதானே.'' என்று கேட்டேன். அதற்கு அவர், "அது சரியல்ல? உங்களுக்கு அங்கும் இடமில்லை, இங்கும் இடமில்லை என்று முடிந்தால் பொதுக்காரியத்திற்குப் பெருங் கேடு (Public calamity)'' என்றார். இது எனக்கு ஏதோ ஒரு கிரீடம் வைத்ததுபோல் இருந்தது.

## லார்ட் செம்ஸ்போர்டு
## 1920

இங்கிலீஷ்காரர்களுக்கு ராஜீய விஷயங்களில், எதிரிகளிடத்தில் வைரமுண்டானால் தீவிரமாயும் இருக்காது; தீர்க்கமாயும் இருக்காது. இந்த ஔதாரிய குணம் எப்பொழுதும் உண்டென்று தோன்றவில்லை. இப்பொழுது, நூறு நூற்றைம்பது வருஷங்களுக்குள், பார்லிமென்ட் பழக்கங்கள் - நல்ல நாகரிகம் இருந்த பொழுது - உண்டாயின. நம் விஷயத்திலும் அவ்வாறே. சட்ட சபைகளில் இடைவிடாது தேச சேவை முதலிய பெருங் காரியங்களில், ஊக்கத்துடன் பிரவிர்த்தி ஏற்பட்டால் எதிரிகளின் குணத்தை அறியவும் சிலாகிக்கவும் வேண்டிய பெரும் போக்கான குணங்களும் கட்டாயம் உண்டாகுமென நம்பலாம்.

லார்ட் செம்ஸ்போர்டுக்கு என்னுடைய பிரசங்கங்களும் செயல்களும் பிடியாமல் மனத்தில் புண்போல் சில வேளை வேதனை செய்தன. ஆயினும் 1920-ஆம் வருஷத்தில் பழைய சாம்ராஜ்ய சட்டசபையில் நான் அங்கத்தினரா யிருந்த போது அவருக்கும் நிர்வாகக் கௌன்ஸிலருக்கும் இஷ்டமில்லாதபடி, பஞ்சாபில் சர்க்கார் கொடுமை களைப்பற்றி ஒரு பிரேரணை செய்வதாக நோட்டீஸ் கொடுத்தேன். ஜனங்கள் மறந்துவிட வேண்டிய விஷயத்தைச் சர்ச்சை பண்ணக் கூடாது என்று எண்ணி நிர்வாக சபையினர்களில் சிலர் என்னை அந்தத் தீர்மானத்தை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டு மென்று வெகுவாய்ச் சொல்லிப் பார்த்தார்கள். நான் இணங்கவில்லை. வைஸ்ராய் தம் விசேஷ அதிகாரத்தைச் செலுத்தி, 'அதற்கு இடங்கொடேன்' என்று பகிரங்க மாய் உத்தரவு போடும்படி யாயிற்று. அப்பொழுது நான் மனவருத்தப்பட்டு அதை வெளியிடுவதற்காக அடுத்த சபையில் வேறு தீர்மானங்களைப் பிரேரணை செய்யமாட்டேனென்று கொஞ்சம் ஒத்துழையா வழக்கத்தைக் கையாண்டேன். என்னைப் போலவே வேறு சில அங்கத்தினர்களும் செய்தார்கள். என்னிடம் அவ்வகைக் காரியம் அபூர்வமாதலால், அங்கும் இங்கும் பரபரப்பு உண்டாயிற்று. மறு தடவை சபை கூடிய பொழுது வைஸ்ராய் தம் விசேஷ அதிகாரத்தைப் பிரயோகித்ததற்குக் காரணத்தைச் சொல்லுங்கால், 'இப்படி ஆட்சேபிக்கக் கூடிய பிரேரணை செய்ய உத்தேசித்தவர் ஸ்ரீநிவாச சாஸ்திரி என்றால் பரிசுத்த மான எண்ணத்துடன் உத்தேசித்த தென்று சொல்ல வும் வேண்டுமோ?' என்றும் சொன்னார். என்ன ஆச்சரியம்! தூஷணம் செய்ய வேண்டியவர் பூஷணம் செய்தாரேயென்று என் உள்ளத்தில் ஏதோ ஒரு கலக்கம் உண்டாயிற்று. சபை கலைந்ததும் நன்றி பாராட்டி ஒரு கடிதம் எழுதினேன். பதிலும் அவர்

பெரிய நடையில் அனுப்பினார். கொஞ்ச காலம் கழித்து லண்டனில் சாம்ராஜ்ய மகாநாடு (Imperial conference) ஏற்பட்டு அதற்கு இந்தியா கவர்ன்மென்டாருடைய பிரதிநிதியாக என்னைக் குறிப்பிட்டார். அப்பொழுது ஆட்சேபித்த சிலரிடம் லார்ட் செம்ஸ்போர்டு சொன்னாராம், 'மிஸ்டர் சாஸ்திரி சரியானவர். அவர் வாயைத் திறந்து இரண்டு வாக்கியம் சொன்னவுடனே மகாநாட்டில் எல்லாரும் ஒரு நாளும் படாத ஆச்சரியத்தைப் பட்டுக் கவனிப்பார்களே!'

## மாண்டேகுவின் பெருந்தன்மை
## 1923

லார்ட் வின்டர்டன் ஒரு தடவை என்னைப் பார்க்க மாட்டேன் என்று இந்தியா ஆபிஸிலிருந்து திருப்பியடித்தாரென்று முன் எழுதியிருக்கிறேன். இது 1923-ஆம் வருஷம் இனியாக் கிளர்ச்சியின் பொழுது. அன்று ஹோடேலில் என் முகம் குன்றியிருப்பதைக் கண்டு, மாண்டேகு காரணத்தை விசாரித்துத் தெரிந்துகொண்டு என்னிடம் சரியாய்ச் சொல்லிக் கொள்ளாமல் வெளியில் போனார். ஒரு மணி நேரத்தில் திரும்பி, "வின்டர்ட்டனை நன்றாய்த் திட்டினேன். லார்ட் பீலிடமிருந்து சமாதானப் பத்திரம் கிடைக்கும்" என்று சொன்னார். இதில் எனக்குச் சொல்ல முடியாத திருப்தி. மாண்டேகுவுக்கு வந்த கோபம் என்னிடத்திலுள்ள வாத்ஸல்யத்தால் மட்டும் அல்ல. இந்தியாவுக்கு நேர்ந்த அவமானத்துக்கு உடனே பரிகாரம் தேட வேண்டுமென்று ஓடினார். அவர் நம்முடைய நாட்டுக்குப் பட்ட பாட்டை நன்குணர்ந்தவர் பலர் இல்லை.

## பெருமையின் மேன்மை
## 1927

தென் ஆப்பிரிக்காவில் ஏஜன்ட் வேலைக்குப் போய்ச் சிறிது நாளைக்குள் நத்தால் மாகாணத்தில்

ஒரு பட்டணத்தில் பிரசங்கம் செய்தேன். வெள்ளையர் ஆண் பெண்கள் பெருங்கூட்டம். என் பேச்சு முடிந்ததும் அவர்களில் ஒருவர் - பென்ஷன் வாங்கிய ராணுவத் தலைவர் - நான் சொன்னதைத் தாறுமாருக நிந்தித்துக் காலங்கெட்டதற்கு அடையாளமாகச் சொன்னூர். "பாருங்கள், முன்னெல்லாம் இந்தியரைக் கண்டவிடத்தில் சுடலாம். கேட்பார் இல்லை. இப்பொழுது அவருடைய பிரசங்கத்தையும் பொறுத்துக் கேட்க வேண்டியிருக்கிறது" என்ருர். இதைக் கேட்டதும் எல்லாரும் தலையைத் தொங்கப்போட்டார்கள். என்னைச் சில கேள்விகள் கேட்டார்கள். அவைகளுக்கெல்லாம் படபடப்பில்லாமல் பதில் சொன்னேன். கடைசியில் அந்த ராணுவ உத்தியோகஸ்தர் பேச்சில் கேள்வி போல் இருந்த அம்சங்களுக்கு மட்டும் உத்தரம் சொல்லி முடித்தேன்.

என் குரலிலாவது சொல்லிலாவது கலக்கம் ஒன்றும் காணவில்லை. கூட்டம் கலைந்து வண்டி ஏறும் போது ஒரு மாது, "கொஞ்சம் நிற்கவேண்டும்; உள்ளே வர வேண்டும்" என்று அழைத்தார். உள்ளே சென்றதும் அந்தக் கொடுமையைப் பேசியவர் ஒரு பக்கத்தில் நின்று விம்மி விம்மிக் கைக்குட்டையை எடுத்துக் கண்ணைத் துடைத்துக்கொண் டிருந்தார். அம்மாது என்னிடம், "அவர் கையைப் பிடித்துக் குலுக்கி, மன்னித்தேன் என்று சொல்லுங்கள்" என்ருர். அவர் ஏதோ சொல்லத் தொடங்கினூர். அதற்குள் நானே, "போதும்; நான் க்ஷமித்தேன். துக்கப்பட வேண்டாம்" என்று கையைப் பிடித்துக் குலுக்கி வெளியே வந்துவிட்டேன். சண்டைக்கு ஸன்னுகம் பண்ணி வந்தவருங்கூடப் பொறுமையைக் கண்டால் ஒரு சமயம் படிந்து விடுவார்.

## பிறந்த நாள் பரிசு
## 1927

தென் ஆப்பிரிக்காவில் இந்தியருக்குள்ள துன்பங்களும் கஷ்டங்களும் மகாத்மா காந்திக்கும் தீனபந்து ஆன்ட்ரூஸுக்கும் தெரிந்தது போல வேறு யாருக்கும் தெரியாது. என்னை இந்தியா கவர்ன்மெண்டின் ஏஜண்டாகப் போகும்படி தூண்டின பொழுது, 'இந்தக் கடினமான காரியத்தைச் செய்து ஒரு முறை பரீக்ஷை பார்க்க வேண்டுமானால் நீங்கள்தாம் ஏற்றவர்' என்று துதித்தார். எனக்கு மனத்தில் வெகு பயம் உண்டு. ஒன்றும் சாத்தியப்படாது என்றாலும் ஒருவரும் போகாமல் இருந்து விடலாமா? சம்பளத்திற்கும் அந்தஸ்துக்கும் ஆசைப்பட்டுச் சிலர் போவர். ஆனால் அவர் கோபம் காட்டி, 'இந்த நாட்டில் நியாயம் ஏது? கேப்டவுன் உடன்படிக்கை பிறந்ததுமே மாண்டு விட்டதே!' என்று கைவிட்டுத் திரும்புவார். நமக்கு அவமானம் வந்தாலும் பரவாயில்லை. பிரயத்தனம் சரியானபடி செய்துதான் விடவேண்டும்? என்று வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு பரிடோரியா போய்ச் சேர்ந்தேன்.

கேப்டவுன் உடன்படிக்கையில் ஒரு முக்கிய அம்சம் நத்தாலில் நம் ஜனங்களின் படிப்பு நிலைமையை விசாரிக்க ஒரு கமிஷன் நியமிக்கப்பட வேண்டும் என்பது. இந்த அம்சம் அதில் கலந்ததற்கு நானே ஒருவாறு ஜவாப்தாரி. ஆகையால் வேறு அநேக பிரயத்தனங்கள் செய்ய வேண்டியிருந்தும் இந்தக் கமிஷன் திட்டமாவதில் அதிகக் கவலையுற்றேன். பெருத்த உபத்திரவம் நேர்ந்தது. வட்ட மேஜை ஆலோசனை முடிந்தது முதலாகவே யூனியன் கவர்ன்மென்டாருக்கும் நத்தால் கவர்ன்மென்டாருக்கும் கலகம் துவங்கிற்று. கமிஷனை நியமிக்க அதிகாரம் நத்தால் சர்க்காருக்குத்தான். யூனியன் கவர்ன்மென்டார்

கேட்டவுன் ஒப்பந்தத்தைத் தெரிவித்து, 'எங்கள் காரியம் தீர்ந்தது' என்றார்கள். நத்தாலியர், 'எங்கள் அதிகாரத்திற்கு உள்ளானதை எங்களைக் கலந்துகொள்ளாமல் எப்படிப் பிரிடோரியாக்காரர் அங்கீகரிக்கலாம்? நாங்கள் அவர்கள் வாக்கை நிறைவேற்றமாட்டோம்' என்று பிடிவாதம் பிடித்தார்கள். போய்ச் சேர்ந்ததும் இந்தச் சங்கடத்தை உள் நாட்டு மந்திரி (Minister of Interior) ஆகிய டாக்டர் மாலன் என்னிடம் சொல்லி, 'வீண் காலம் இங்கே போக்காமல் நீங்கள் மாரிட்ஸ்பர்குக்குப் போய் உங்கள் சாமர்த்தியத்தையெல்லாம் காட்டிச் சாதித்துக்கொள்ளுங்கள். சிபாரிசு நாங்கள் செய்தால் விரோதமாக முடியும்' என்று கைவிட்டார். மாரிட்ஸ் பர்குக்குப் போனால் ஹோட்டேலில் கூட இடம் கிடைக்கவில்லை. கவர்ன்மெண்டார் கவனிக்கவில்லை. 'எங்கேயோ கண் காணச் சீமைக்கு வந்துவிட்டோமே!' என்று துயரப்பட்டேன். என் காரியதரிசி டைஸன் தங்கம் போன்றவர். ஒரு நாள் அவரிடம் மனமாற அந்தரங்கமாய்ப் பேசிக்கொண்டிருந்தபோது, "நாம் வந்ததற்கு வேறு உபயோகம் இல்லாவிடினும், கமிஷன் விசாரணையைச் சீராக நடத்த முடியாமற் போனாலும் கமிஷன் நியமிக்கப்பட்டது என்ற பெயராவது போதும். ஊர் போய் ஒளியாமல் தலை தூக்கலாம்" என்று சொல்லி விசனித்தேன்.

இந்தியரைப் பிடித்த இடையூறுகள் நல்ல வேளையாக ஒன்றொன்றாய் நீங்கின. இதற்கு இன்றியமையாத உபகாரம் அளித்தவர் கவர்னர் ஜனரல் அத்லோன் பிரபு. இந்த மகா புருஷனைக் குளிர்ந்த வேளையில் நினைக்க வேண்டும். அட்மினிஸ்டிரேடரிடமும் அவருடைய மந்திரிகளிடமும் எனக்குச் சிநேகம் உண்டாக்கி என் கட்சியை வியவரிக்க அவகாசம் செய்வித்தார். கதையை இங்கே வளர்த்துவானேன்? என்னிடத்தில் முன் சொல்லாமல் 1927-ஆம் வருஷம்

செப்டம்பர் 22உ யன்று பத்திரிகைகளில் கமிஷன் நியமிக்கப்படும் என்று விளம்பரம் வெளியாயிற்று. அது என் ஜன்ம தினம் என்று தெரிந்துகொண்டு, 'பிறந்த நாள் பரிசு' என்று கூறினார்கள். அன்று நான் மிகவும் களித்தேன் என்று சொல்லவும் வேண்டுமோ?

## கோகலேயின் பாராட்டு

சிறு வயதில் வாத்தியார் போன்ற பெரியோர்களிடம் பெற்ற புகழ் எவ்வளவு வயதான போதிலும் மறப்பதில்லை. பிறகு உண்மையான வெகுமானங்கள் கிடைப்பினும் நினைக்கும்பொழுதெல்லாம் அவை அவ்வளவு சந்தோஷத்தைக் கொடுப்பதில்லை. எனக்கு முப்பத்தைந்து வயதுக்கு மேலாயினும் இந்திய ஊழியர் சங்கத்தில் சேர்ந்தபொழுது அதன் ஸ்தாபகர் கோகலேயிடம் குரு விசுவாசம் இருந்தபடியால் அவர் சில வேளையில் என்னைக் கொண்டாடிப் பேசியது பால்யத்தில் கிடைத்த பெருமை போல இப்பொழுதும் நினைக்க நினைக்க ஆனந்தமா யிருக்கிறது. அவருக்குக் குருவாயிருந்த ரானடே மிகவும் பெரியவர். அவரிடத்து நிரம்பப் புகழ் பெறுவது கடினமாகும். ஒரு சமயம் அநேக புத்தகங்களையும் சர்க்கார் தஸ்தாவேஜுகளையும் படித்து வெகு ஜாக்கிரதையாக எழுதிய விண்ணப்பத்தை ரானடேயிடம் கொண்டுபோய்க் காட்டிய பொழுது, நன்றாய்ப் படித்து முகத்தில் களிப்புத் தோன்றியும், 'பரவாயில்லை' என்று மட்டுஞ் சொன்னாராம். அதையே பெரிய பாராட்டாகக் கோகலே சொல்லிக்கொள்வார். இவர் பிறரைப் புகழ்வதில் அவ்வளவு செட்டுப் பிடிக்க மாட்டார். நான் சங்கத்தில் சேர்ந்த சில காலத்திற்கெல்லாம் பங்களூரில் ரானடே டெக்னிகல் இன்ஸ்டிட்யூட் என்கிற ஸ்தாபனத்திற்கு உதவிப் பணம் வசூல் செய்வதற்காகப் போயிருந்தேன். அங்கே ரானடேயைப் பற்றி ஒரு பிரசங்கம் செய்ய, அதில், "இவரது ஆத்மா ஒரு நக்ஷத்திரம் போல் இருந்து

ஏகாந்தமாக விளங்கியது (His soul was like a star and dwelt apart - Wordsworth)'' என்று கவி எழுதியதைச் சொலலிப் புகழ்ந்தேன். இதைப் பத்திரிகையில் படித்து ரானடேக்கு ஏற்றது என்று அவர் மிகவும் மகிழ்ந்தார்.

## சுந்தரமான வியாசம்
## 1908

**1908**-ஆம் வருஷத்தில் கன்வென்ஷன் காங்கிரஸ் கூடுவதற்காக, ஜில்லாதோறும் கமிட்டிகள் ஏற்படுத்த வேண்டுமென்று சென்னை மாகாணத்தை இரண்டாகப் பிரித்து ஸர் வி. ஓய். சிந்தாமணி ஒரு பகுதிக்கும் நான் ஒரு பகுதிக்கும் காரியதரிசியாக நியமிக்கப்பட்டோம். இந்த வேலை முடிந்த பிறகு புனைவுக்குத் திரும்பியதும் என்னுடைய அநுபவங்களை விரித்து ஒரு வியாசம் எழுதிப் படிக்கும்படி நேர்ந்தது. கோகலே அக்கிராசனம் வகிக்கச் சுமார் ஒரு மணி காலம், வேடிக்கையும் வினையுமாகக் கலந்து நடந்ததையும் சொல்லி, நடக்க வேண்டியதையும் நான் குறிப்பிட்டேன். பிரசங்கம் முடிந்ததும் பிறர் பேசுவதற்கு இடங்கொடாமல், 'இது ஒரு சுந்தரமான வியாசம் (It was a beautiful paper), இதைப் பிறகு விவகரிக்கலாம்' என்று கூறி முடித்தார்.

## 'உம்மிடம் பிழைகள் இருந்தால்தானே?'

**வே**று ஒரு சமயம் நான் பிரசங்கம் பண்ணி முடித்த பிறகு அவர் வெகு சந்தோஷத்துடன், 'நீங்கள் இங்கிலீஷ் ஞானத்தில் எங்கள் எல்லோரையும் விட மேலானவர்தாம்' என்றார். கோகலேக்கு நீர் ரோகம் அதிகரித்த காரணத்தால் அவர் சிறிதேனும் துன்பம் பொறுக்க முடியாமல் அடிக்கடி கோபங் கொண்டு கடிந்து பேசுவார். என்னுடன் கூட இருந்த அங்கத்தினர்

எல்லோரும் இதற்கு உள்ளானவர்கள்தாம். என்னை மட்டும் ஒரு நாளும் கண்டித்துப் பேசியதில்லை. இதை நான் பெருமையென்று நினையாமல், மற்றவரிடம் கொண்டாடுகிற சுவாதீனம் நம்மிடம் இல்லையென்று குறையாகவே கருதினேன். இந்த அபிப்பிராயத்தை நான் அவரிடம் வெளியிடவே, "அப்படியல்ல, சிநேகப் பான்மை ஒன்றும் குறைவில்லை. உம்மிடம் பிழைகள் இருந்தால் அல்லவா நான் கோபிக்க வேண்டும்?" என்று சொன்னார். இவை போன்ற சில நிகழ்ச்சிகளை நினைக்கும்போது மற்ற இடங்களில் கிடைத்த மிகப் பெரிய வெகுமானங்களை விட இவை மேலானவை என்று தோன்றுகிறது.

## வீண் அபவாதம்

## 1917

உலகத்தில் சிநேகபாவம் ஒரே சீராய் இருப்பதைக் காட்டிலும் நடுவில் ஓரோர் காலத்தில் மனஸ்தாபம் ஏற்பட்டுச் சமாதானமானால் அதற்குப் பிறகு சிநேகம் வலுத்திருக்கும். ஸ்தம்பத்தை ஆட்டி நடுவது போல் என்பார்கள். அதிலும் பெரியோர்கள் நம்மீது சிறிது காலம் குற்றம் சாட்டிப் பிறகு மன்னித்துப் பிரீதி காட்டினால் நம் உள்ளம் களிப்பது அரிய அனுபவமாகும். ஸர். எஸ். சுப்ரஹ்மண்ய ஐயர் என் பேரில் 1917-ஆம் வருஷத்தில் அநியாயமாகக் கோபங் கொண்டார். அது, லார்ட் பென்ட்லண்டு காலத்தில்; மிஸஸ் பெஸன்டை வெளியே சஞ்சரிக்க விடாமல் உதகமண்டலத்தில் தடுத்து வைத்திருந்த சமயம். ராஜீய வாதிகள் அனைவரும் அந்த அம்மையாரை விட்டு விட வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். நானும் பத்திரிகைகளில் அவர் பட்சமாக எழுதினேன். அதில் பின் வருமாறு ஓர் வசனம் அமைந்திருந்தது: 'நான் மிஸஸ் பெஸன்டின் தியஸாபிகல் சொஸைடியின் சிஷ்

யன் அல்ல. அவரது ஹோம்ரூல் கிளர்ச்சியையும் அனுசரித்தவன் அல்ல' என்பது. ஆயினும் என் போதாத வேளை காரணமாக என் யோசனையைக் கேட்டுத்தான் லார்ட் பென்ட்லண்டு இந்தக் கொடுமையைக் காட்டினார் என்ற அபவாதம் உண்டு. இதை நம்பி என் பேரில் மிக அதிருப்தி கொண்டு ஸர் சுப்ரஹ்மண்ய ஐயர் பேபரில் இவ்வாறு எழுதினார்: 'தியஸாபிகல் சொஸைடியுமல்ல, ஹோம் ரூலுமல்ல என்றால் ஒருவருக்குப் பெருமையோ? தியாஸபிஸ்டும் ஹோம் ரூலரும் இழிவானவரோ?' நான் என்ன சமாதானம் சொல்லியும் கேட்கவில்லை. மிஸஸ் பெஸன்ட்மட்டும் என் பேரிலிருந்த அபவாதத்தை நம்பவில்லை. வெளியே வந்த பிறகு என்னுடன் சிநேகம் பாராட்டிச் சில பொதுக் காரியங்களில் என்னை உதவியாகவும் சேர்த்துக்கொண்டார். சில வருஷங்களுக்குப் பின்னர் என் பேரில் சுமத்தப் பட்ட குற்றங்கள் பொய் என்று அறிந்துகொண்டு ஸர் சுப்ரஹ்மண்ய ஐயர் என்னைப் பார்க்க வேண்டுமென்று சொல்லியனுப்பினார். நான் அவரைப் போய்ப் பார்த்ததும் கணீர் என்று இல்லாமல் தீன ஸ்வரத்தில், "நான் ஏதோ விரோதமாய் எழுதினேன் என்று வருத்தப்படக் கூடாது. மிஸஸ் பெஸன்ட் பேரிலிருந்த அபிமானத்தால் அவ்வாறு எழுத நேர்ந்தது. அதை மறந்து விடவும்" என்றார். இதைச் சொன்ன மாதிரியும் அவர் என்னிடம் பேசிய அன்பும் அவருடைய பெருந்தன்மையை விளக்கின. எனக்கும் அளவற்ற சந்தோஷத்தை அளித்தன.

## மற்றொரு சம்பவம்
## 1906

**1906**-ஆம் வருஷம் சுந்தராமையர் அவர்கள் என்னிடம் வெறுப்புக்கொண்டார். இதற்குக் காரணமோ சொன்னால் பொருந்தாததுபோல்

இருக்கும். ருதுமதி விவாகம் என்று ஒரு பெரும் வியாசத்தை நமது சாஸ்திரப் பிரமாணங்களைப் பெரியவர்களிடம் தெரிந்துகொண்டு நான் விளம்பரப்படுத்த நேர்ந்தது. இதைக் கண்டித்துச் சில பண்டிதர்கள் பதில் எழுதினார்கள். பெரும்பாலும் இதில் நான் சாதித்த கட்சி உடையவில்லை. பிரமாணங்களும் சருந்தபடி விசாரிக்கப்படவில்லை. ஆனால் மஹா மஹோபாத்யாய யக்ஞசாமி சாஸ்திரிகள் பெரும் நடையில் சாஸ்திரங்களை வியவகரித்து, 'ப்ரௌடையான பெண்களை விவாகம் செய்வது பிசகு' என்று வாதித்து எழுதினார். எனக்கு அவரிடம் ஏற்கனவே நல்ல பழக்கம் உண்டு. கோவிந்தபுரம் போதேந்திர ஸ்வாமிகள். பகவந்நாம சங்கீர்த்தனத்தின் மகிமையை ஸ்தாபிப்பதற்காக எழுதிய புஸ்தகத்தை அவருடைய உபதேசத்தால் சற்றுப் படித்து அறிந்துகொண்டேன். இந்த ஸ்வாதீனத்தைக் கொண்டு அவருடைய எதிர் வாதத்தை மெச்சி எனக்குச் சரியான எதிரி என்று கொண்டாடி ஒரு கடிதம் எழுதினேன். இந்தக் கடிதம் சுந்தரராமையர் பார்வையில் படவே ஏதோ கொஞ்ச காலமாக மத ஒழுக்கத்தினின்றும் தவறியவன் நான் என என்பேரில் இருந்த தப்பு அபிப்பிராயத்தை மனத்தில் வைத்துக்கொண்டு அவர், "சாஸ்திர முறையே தெரியாத நீர் எப்படி அந்த மகா வித்வானுக்குச் சமானமாவீர்? நான் சில காலமாகவே உமது கர்வம் அதிகரித்து வருவதைக் கவனித்திருக்கிறேன். இதனால் அதிசீக்கிரம் கேடே விளையும்" என்று கடுமையாகத் திட்டினார். நான் மிகப் பணிவாய், "மனத்தில் யாதொரு கெட்ட எண்ணமும் இல்லாமல் நெருங்கிப் பழகிய சுவாதீனத்தைக்கொண்டு எழுதினேன்" என்று சொல்லி மன்னிப்புக் கேட்டேன். இதனால் அவர் கோபம் அடங்கவில்லை. அநேக வருஷங்கள் கழித்து நான் தென் ஆப்பிரிக்காவிலிருந்து திரும்பி வந்த பொழுது திருவல்லிக்கேணியில் என்னை வரவழைத்து

வாத்ஸல்யத்துடன், "நான் உன்னை முன்பு கடிந்து பேசியது அறியாமை. என்னை மன்னிக்கவும்" என்று கண்ணீர் ததும்ப என் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு வேண்டினார். எனக்கும் கண்ணில் நீர் சுரந்து, தெளிவாய்ப் பேச முடியாமல், "என்னை மறுபடியும் தங்கள் ஆசீர்வாதத்துக்குப் பாத்திரனாகக் கொள்ள வேண்டும்" என்று நமஸ்கரித்துக் கேட்டுக்கொண்டேன்.

சுந்தரராமையர் ஸ்வபாவம் நல்ல பெரும் போக்கு; கபடமற்றவர். முற்றும் க்ஷமித்துவிட்டார். அப்பொழுது ஏற்பட்ட ஒரு விசுத் துக்கத்தோடு கலந்த திருப்தியானது இப்பொழுது நினைத்தாலும் பரிபூரண சந்தோஷத்தைத் தருகிறது.

## மன்னர்பிரான் காட்டிய கவனம்

## 1921

நம்முடைய சக்கரவர்த்தியான ஐந்தாம் ஜார்ஜ் மன்னரிடம் மூன்று நான்கு தடவைகள் நெருங்கிச் சம்பாஷிக்கும் பாக்கியம் எனக்கு வாய்த்தது. அதைப் பற்றி விஸ்தாரமாக எழுதுவது ஒழுங்கல்ல என்று சிலர் கொள்ளலாம். ஆனால் விசேஷப் பெருமை தந்த இரண்டு சம்பவங்களை எழுதலாம் என்று துணிகிறேன். 'பக்கிங்ஹாம் பாலஸ்' என்ற அவர் அரண்மனையில் அவர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு விவாகம் நடந்தது. அதற்கு ஆயிரக்கணக்கில் பெரிய மனுஷ்யர்கள் வந்திருந்தனர். ராஜவம்சத்தினர்-சக்கரவர்த்தி, (King Emperor), சக்கரவர்த்தினி (Queen Emperess), வேல்ஸ் இளவரசர் (Prince of Wales), அலெக்ஸாண்ட்ரா ராணியார் (Queen Alexandra) மற்றும் சிலர் வரிசையாக நின்று வந்திருந்தவர்களை ஒவ்வொருவராகக் கை குலுக்கி வரவேற்றனர். நீண்ட சட்டையையும் தலைப்பாகையையும் அணிந்த நான் சக்கரவர்த்தி

பின் முன்னிலைக்கு வந்ததும் என் பெயரை அங்கிருந்த காரியதரிசி ஒருவர் படிக்க, சக்கரவர்த்தி உடனே என் கையைப் பிடித்துத் தமது ஸ்தானத்திலிருந்து நகர்ந்து தம் தாயார் அலெக்ஸாண்ட்ரா ராணியாரிடம் என்னை அழைத்துப்போய் நான் இன்னார் என்று ஒரு புகழ் வார்த்தை சொல்லி என்னை அறிமுகப்படுத்தினார். சக்கரவர்த்தி இப்படிக் காட்டிய கவனத்தால் எனக்குப் பின் நின்ற விருந்தினர்கள் சற்று நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. என்னையும் எல்லோரும் உற்று நோக்கினார்கள்.

## மந்திரியின் பிடிவாதம்

மற்றொரு நாள் மாலை அரண்மனையில் பெரிய விருந்தொன்று நடைபெற்றது. நான் தற்செயலாய் அன்று லார்ட் கர்ஸனைச் (Lord Curzon) சந்திக்க, அவர் வேல்ஸ் இளவரசரை இந்தியாவுக்கு அனுப்புவதாகச் செய்திருக்கும் யோசனையைப்பற்றி என்னுடன் நெருங்கிப் பேசினார். நான் அது அப்பொழுது யுக்தமல்லவென்றும் அதனால் இந்தியாவிலுள்ள அமளி அடங்காது என்றும் சில கேடுகள் விளையலாம் என்றும் சொன்னேன். "அப்படி உமக்குத் தோன்றினால் இந்தப் பிரயாண உத்தேசத்தை நிறுத்தவேண்டாமா?" என்று அவர் கேட்டார். "அது எப்படிச் சாத்தியம்?" என்று நான் கேட்க, "நான் வழி காட்டுகிறேன் வாரும்" என்று அழைத்து அங்கிருக்கும் செக்ரெடரியிடம் சொல்லிச் சக்கரவர்த்தியுடனும் சக்கரவர்த்தினியுடனும் பேட்டிக்கு ஏற்பாடு செய்தார். சக்கரவர்த்தி எல்லாவற்றையும் விவரமாய்க் கேட்டு, "மந்திரிமாரும் நானும் கூடிச் செய்த தீர்மானத்தை இனி மாற்ற முடியாது. லார்ட் ரெடிங், விபரீதம் ஒன்றும் நேராமல் ஏற்பாடு செய்வார். விபரீதம் ஏற்படவும் கூடாது" என்று திடமாய்ச் சொல்லிவிட்டார். சக்கரவர்த்தினியோ,

நான் சொன்னதால் கொஞ்சம் அச்சமுற்று, "இதில் யோசிக்க வேண்டிய விஷயங்கள் இருக்கின்றன" என்று தயங்கியதாகக் காட்டினார். மறுநாளே இது எப்படியோ வெளியாகி, மிஸ்டர் மாண்டேகு என்னைக் கண்டு, "நீங்கள் என்ன கலகம் செய்துவிட்டீர். லார்ட் கர்ஸனைக் கிளப்பிவிடலாமா?" என்று வருத்தத்துடன் கேட்டார். நான் இந்தியாவிலுள்ள விஷயங்களைச் சிறிதும் ஒளிக்காமல் கூறி, 'கெடுதலாகவே முடியும்' என்று பலமாக ஆக்ஷேபித்தேன். அதற்கு அவர் வெகு ஆத்திரத்துடன், "நாங்கள் செய்த தீர்மானத்தை மாற்ற மாட்டோம். வேல்ஸ் இளவரசர் போய்த்தான் தீரவேண்டும்" என்று ஓங்கி அடித்தார். இந்தப் பிடிவாதம் அநேகம் அனர்த்தங்களுக்கு மூலமாயிற்று என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

## ப்ரிவி கவுன்சிலர்

இந்தக் காலத்தில்தான் எனக்குப் ப்ரிவி கவுன்சிலர் (Privy Councillor) பதவி கிடைத்தது. மிஸ்டர் மாண்டேகுவும் பிரதம மந்திரி லாயட் ஜார்ஜுமாக யோசனைசெய்து சக்கரவர்த்தியிடம் சிபார்சுசெய்து அவருடைய சம்மதிபெற்று என்னிடம் அதை மிஸ்டர் மாண்டேகு தெரிவித்தார். அப்பொழுது அவர் சொன்னது இன்றுபோல் ஞாபகத்தில் இருக்கிறது. "டைட்டில்களுள் ப்ரிவி கௌன்ஸிலர் என்பதும் உத்தியோகங்களுள் வைஸ்ராய் கவுன்ஸில் ஹோம் மெம்பர் ஸ்தானமும்தாம் உங்களுக்குத் தகுந்தவை!" இந்தக் கௌரவத்தைப் பெறுவதற்கான தினம் குறிப்பிட்ட பிறகு இதற்காக நிர்ணயிக்கப்பட்ட உடையைச் சம்பாதிக்க முயன்றபோது, இதைச் செய்வதற்கு ஏகபோக உரிமை பெற்ற ஒரு தையற்காரர் கடையில் தாழ்ந்த பக்ஷம் இருநூறு பவுன் கேட்டார்கள். 'இந்தப் பெருந்தொகை என்றால்

கொடுக்க முடியாது' என்று அதிகாரிகளுக்குத் தெரிவித்தேன். அப்பொழுது தொழில் கட்சியிலிருந்து மந்திரி பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்னைப் போலவே ஆக்ஷேபித்து உடை நிர்ப்பந்தத்திலிருந்து விலக்கைப் பெற்றிருக்கிறார்களென்றும், கேட்டால் எனக்கும், அவ்வாறு விலக்குக் கிடைக்கும் என்றும் சொன்னார்கள். குறிப்பிட்ட தினத்தில் வழக்கம் போல, நீண்ட கோட், தலைப்பாகை இவையுடன்தான் நான் அரண்மனை போய்ச் சேர்ந்தேன். லார்ட் ஸௌத்மாரோ சக்கரவர்த்தியிடம் என்னை அழைத்துச் சென்றார். அங்கே மிஸ்டர் ஆர்தர் ஜேம்ஸ் பால்பரும் வேறு இரண்டு மந்திரிகளும் நின்றுகொண்டிருந்தார்கள். இதுதான் ப்ரிவி கவுன்ஸிலர் மீட்டிங் என்பது. ஒரு பேராக நின்ற தஸ்தாவேஜுகளை ஒன்றொன்றாக எடுத்து அதன் தலைக்கட்டை ஒரு உத்தியோகஸ்தர் படித்தார். அரசர், "ஒப்புக் கொண்டேன் (Approved)" என்று சொல்ல ஒவ்வொன்றும் கீழே வேறு பக்கத்தில் போடப்பட்டது. இதுதான் 'மாட்சிமை தங்கிய அரசர் கவுன்சிலில் (His Majesty the King in council)' என்று வழங்கப்படுகிறது. பிறகு மன்னர் முன்னிலையில் மண்டியிட்டு என் கையில் கொடுத்திருந்த ப்ரிவி கவுன்சிலர் பிரமாணத்தை உறக்கப் படித்தேன். இதில் அநேகர் ஒருவிதமான பயத்தால் பிழைகள் செய்து மோசம் போவது வழக்கமாம். நான் ஒரு தப்பிதமும் செய்யவில்லை. அன்றே, நான் வெளி வந்த பிறகு மிஸ்டர் பால்பருக்கும் 'எர்ல்' பிரபுப் பட்டம் கிடைத்தது.

## மஹா கனம்

ப்ரிவி கௌன்ஸிலர் பதவி என்பது துவக்கத்தில் பெருத்த அதிகாரம், சம்பளம் எல்லாம் வாய்ந்தது; இப்பொழுதெல்லாம் அது வெறும் பட்டந்தான். நம் நாட்டில் படித்தவர் அநேகர் கூட எனக்கு ஏதோ தகுந்த

சம்பளம் கிடைக்கிறதென்று நினைப்பது உண்டு. என் பேருக்கு முன்னால், 'மஹாகனம் (Right Honorable)' என்று சொல்வதுதான் இதனால் ஏற்பட்ட பெருமை.

## கில்ட் ஹால் பிரசங்கம்
## 1921

இதே வருஷத்தில் (1921) எனக்கு வேறு ஒரு பெருத்த மரியாதையும் கிடைத்தது. அதை லண்டன் நகரின் சுதந்தரம் (Freedom of the city of London) என்பார்கள். இந்தப் பெருமையைக் கட்ச் சமஸ்தானாதிபதிக்கும் கூட அளித்தார்கள். பெரிய சபை ஒன்று கூட்டி அதில் எங்கள் இருவரையும் பற்றி ஓர் அதிகாரி புகழ்ந்து பேசினார். பிறகு தங்கப் பேழையில் பண்டைய லிபியில் சட்ட ரீதியில் வரையப்பட்ட ஒரு நீண்ட தஸ்தாவேஜியைச் சுருட்டி வைத்து எங்களுக்குக் கொடுத்தார்கள். பேழையின விலை ஐந்நூறு பவுன் என்று சொல்லக் கேள்வி. பின் கட்ச் மகாராஜாவும் நானும் அந்தச் சபையில் பிரசங்கம் செய்தோம். என்னுடைய பிரசங்கத்தில், 'இந்தியாவுக்குச் சுதந்தரம் சித்தம் என்பதற்குச் சூசகமாக எனக்கு லண்டன் நகர் சுதந்தரம் கிடைத்தது' என்று சமத்காரமாகச் சொன்னேன். அந்தப் பிரசங்கத்தை அப்போது அநேகர் சிலாகித்தது தவிர இந்தியாவில் வெகுவாய்ப் பிரசாரம் செய்து ஆங்காங்கே பிள்ளைகள் மனப்பாடம் பண்ணி ஒப்பிக்கிறார்கள். அன்றைத்தினம் கில்ட் ஹால் (Guild Hall) என்ற பிரசித்தி பெற்ற ஸ்தலத்தில் மத்தியான்னம் $1\frac{1}{2}$ மணிக்கு 300 பேர்களுக்கு விருந்தளித்தார்கள். இங்கும் உபசாரப் பேச்சு உண்டு. ஸ்ரீ மாண்டேகு உடம்பு அசௌக்கியத்தால் வர முடியவில்லை. அவர் ஸ்தானத்தில் உதவி மந்திரியான லார்ட் லிட்டன் (Lord Lytton) என்னைக் கௌரவித்துப் பேசினார். நான் பதில் மொழிந்ததைப் பலர் கொண்டாடினார்கள்.

லேடி லிட்டன் 'சிறந்த சொற்சிற்பி' யென்று என்னைப் புகழ்ந்தார்.

## ஒரு வேடிக்கையான அம்சம்

இந்தச் சுதந்தரத்தினால் பண வருவாய் ஒன்றும் கிடையாது. இதிலுள்ள விசேஷங்களெல்லாம் ஒவ்வொன்றாய்க் கழிந்து போய் இப்போது ஒரே உரிமை ரத்தாகாமல் இருப்பதாகச் சில சம்பிரதாய நிபுணர்கள் சொல்லுகிறார்கள். அது வேடிக்கையான தாதலால் இங்கே குறிப்பிடுகிறேன். லண்டன் நகரில் பஞ்சம் வந்து ஜனங்களுக்கு இலவசச் சாப்பாடு போட்டால் நானும் என் மூத்த பிள்ளையும் அந்தப் பிரயோஜனத்தை அடையலாமாம். நான் திரும்பி வந்தபோது பம்பாய்த் துறைமுகத்தில் சுங்க இலாகா அதிகாரிகள், "ஆயிரம் ரூபாய் வரி கொடுத்தால்தான் அந்தத் தங்கப் பேழையை உள்ளே கொண்டுபோக அநுமதிப்போம்" என்றனர். "ஆனால் நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்" என்று அவர்களிடமே அதைக் கொடுத்து விட்டு, வைஸ்ராயின் நிர்வாக சபை அங்கத்தினர் ஸர் சார்லஸ் இன்னிஸிடம் இதைத் தெரிவித்தேன். உடனே அவர் அந்த வரியை ரத்துச் செய்துவிட்டார்.

## எடின்பரோ சுதந்தரம்

இதற்குப் பத்து வருஷம் கழித்து வட்டமேஜை மகாநாட்டிற்குப் போயிருந்தபோது போபால் நவாபும் நானும் எடின்பரோ நகரத்தில் இதே மாதிரி சுதந்தரம் பெற்றோம். இதை லண்டன் நகர சுதந்தரத்துக்கு அடுத்தபடியாகக் கொண்டாடுவார்கள்.

## மகாத்மாஜி கோரிக்கை 1924

**1924**-ல் புனாவில் மகாத்மா காந்தி சிறையில் இருக்குங்கால் அவருக்கு, 'குடல் அநுபந்த (Appendi-

citis)' வியாதி வந்து வலி பொறுக்க மாட்டாமல் உயிருக்கு ஹானி வருமோ என்கிற பயம் உண்டாயிற்று. அப்பொழுது அவரை ஸஸுன் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்து ஓர் ஐரோப்பிய சஸ்த்ர வைத்தியர் ரண சிகித்சை செய்யத் தயாரானார். அந்தச் சமயம் டாக்டர், காந்தியைப் பார்த்து, "சிகித்சை மிகவும் கடினமானது. உங்களுக்கு அவசியமாக யாரையாகிலும் கண்டு பேச வேண்டும் என்கிற ஆசையிருந்தால் இப்போதே சொல்லுங்கள்" என்று கேட்டார். காந்திஜி, "இந்திய ஊழியர் சங்கத்தில் ஸ்ரீநிவாச சாஸ்திரி தற்செயலாய் இருப்பாரானால் அவரை வரவழையுங்கள்" என்று கோரினார். இந்தச் செய்தி எனக்கு எட்டியவுடன் நான் அவரிடம் போய்ச் சில வார்த்தைகள் பேசினேன். அப்போது அவர் தமது கடைசி அறிக்கையாக ஒன்றை வெளியிட என்னை எழுதிக்கொள்ளச் சொன்னார். அது உடனே வெளியாயிற்று.

## இரண்டு அம்சங்கள்

அப்போது விசேஷமாய் என் மனத்தில் பதிந்தவை இரண்டு அம்சங்கள். முதலாவது: சற்றேனும் படபடப்பில்லாமல், அவசியமாகச் சொல்லவேண்டியவற்றை மறக்காமல் ஒன்று சேர்த்து அவர் சுருக்கிச் சொன்னது. இரண்டாவது: சிகித்சை விபரீதமாய் முடியுமானால் அந்த ஐரோப்பிய ரணவைத்தியரை நம் ஜனங்களுடைய வீணை தூஷணைக்கு உள்ளாக்கக் கூடாதென்ற கவலையுடன், "இந்த வைத்தியரிடம் எனக்குப் பூர்ண நம்பிக்கை. அவரைச் சஸ்திர சிகித்சை செய்யும்படி நான் மனப்பூர்வமாகவே கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று அவர் குறிப்பாகக் காட்டியது.

## சாஸ்திரி காலேஜ்

தென் ஆபிரிக்காவில் நம் ஜனங்களுக்குப் படிப்புச் சௌகரியங்கள் வெகு குறைவு என்பதை நேயர்கள் நன்

ருக அறிவார்கள். மெட்ரிகுலேஷன் வரையாவது படிப்புக்கு வேண்டிய ஸ்தாபனங்களை நாட்ட வேண்டுமென்று அங்கே நான் போனவுடனேயே ஆசை கொண்டேன். கட்டடத்திற்கு வேண்டிய திரவியத்தை நம்மில் பணமுள்ளவர்களிடம் வசூலித்து டர்பன் நகருக்குள்ளேயே பள்ளிக்கூடத்தை நிர்மாணம் பண்ணி, அரசாங்கத்திடம் நிர்வாகத்தை ஒப்பிப்பதாகவே முதலிலிருந்து உத்தேசம். இந்தியப் பிரமுகர்கள் முன்வந்து தாராளமாகப் பணம் கொடுத்து உதவியதை நான் ஒரு நாளும் மறவேன். டர்பன் நகரசபை அதிகாரிகள் இந்தியர் பள்ளிக்கூடத்திற்கு இடம் கொடுக்கமாட்டோமென்று பலமான ஆக்ஷேபம் செய்தார்கள். "கொடுத்தாலும் கட்டடத்திற்கு மட்டும் இடம் கொடுப்போமே யொழிய, தோட்டம், விளையாட்டு மைதானம் முதலிய சௌகரியங்களுக்கு இடம் கொடோம்'' என்று முரண்டு செய்தார்கள். இந்த எதிர்ப்பை வென்று காரியத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு நான் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சம் அல்ல. முனிசிபல் கார்ப்பரேஷன் கூடியிருக்கும்போது மனுச்செய்ய விடைபெற்று, எவ்வளவோ நயமாகக் கட்சி பேசினேன். ஒருவாறு பலித்தது. கட்டடத்தை முடித்துப் பார்க்க எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. அஸ்திவாரக் கல்லை மட்டும் நத்தால் அட்மினிஸ்டிரேட்டர் கார்டன் வாட்ஸன் (Gordon Watson) நாட்டினார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பெரிதாகக் கொண்டாடிப் பிரசங்கங்களாலும் தேநீர் விருந்து முதலிய உபசரணைகளாலும் நம் இந்தியர்களுக்குச் சாதகம் சம்பாதித்துக்கொண்டோம். ஸ்தாபனத்திற்குச் 'சாஸ்திரி காலேஜ், (Sastri College) என்று பெயரிட்டு என் முயற்சியை எல்லோரும் பாராட்டினார்கள்.

## அத்லோன் பிரபு

நான் இந்தியாவுக்குத் திரும்பி வந்த பிறகுதான் சாஸ்திரி காலேஜ் கட்டடம் முடிந்து பாடபோதனை

துவக்க மாகியது. இந்தத் திறப்பு விழாவை நடத்தி வைத்தவர் கவர்னர் ஜனரலாகிய அத்லோன் பிரபு (Earl of Athlone). அவரும், இங்கிலீஷ் ராஜ வம்சத்தைச் சேர்ந்த அவருடைய மனைவியார் ஆலிஸ் ராஜகுமாரியும் (Princess Alice) ஸரஸமானதும் உதாரமானதுமான தங்களது குணத்தினால் தங்கள் உயர் பிறப்பைச் சிறப்பித்து, எல்லா ஜனங்களுடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டனர். நான் அவர்களுடன் கொஞ்சம் நெருங்கிப் பழகினேன். எனக்காக வேண்டி ஒரு குட்டி யானையுடன் அவர் பரிசயம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று நான் வேடிக்கையாய் எழுத, அவர் அவ்வாறே செய்து கடிதத்தில் எனக்குத் தமது சந்தோஷத்தைத் தெரிவித்தார்.

## நெல்லி வரவு

இந்த யானையைப் பற்றிச் சில மொழிகள் கூறவேண்டும். டர்பன் நகரத்தில் ஒரு சிறிய மிருகக் காட்சிசாலை (Zoo) உண்டு. அதற்கு ஒரு பெண் யானைக்குட்டி வேண்டுமென்றும், அது இந்திய ஜாதியாயிருந்தால் ஆப்பிரிக்கா ஜாதி யானையைக் காட்டிலும் உயர்தரமானதாகுமென்றும் என்னை அந்த அதிகார வர்க்கத்தார் கேட்டுக்கொண்டார்கள். நான் எங்கே, யானை எங்கே? இருந்தாலும் துணிந்து, 'ஆகட்டும்' என்று சொல்லி விட்டேன். என மானத்தைக் காப்பாற்றக் கூடியவர் பரம தயாளுவும் அசாதாரணமான பெருந்தன்மை உள்ளவருமான காலஞ்சென்ற மைசூர் மஹாராஜாதாம் என்றும், இந்த உபகாரத்தின் அருமையை அவர்தாம் உணரக் கூடியவர் என்றும் எண்ணி அவருக்கும் அவர் திவானும் என் பரம நண்பருமான ஸர் மிர்ஸா இஸ்மேலுக்கும் கடிதம் போட்டேன். அதி சீக்கிரத்திலேயே, "மைசூர் மிருகக்காட்சி சாலையிலேயே பிறந்து வளர்ந்த ஒன்பது மாதம் நிரம்பிய பெண் யானைக்குட்டி இருக்கிறது. அதை அனுப்புகிறோம்" என்று கடிதம்

வந்தது. கப்பல்காரர்களும், "நாங்கள் ஜாக்கிரதையாய்க் கொண்டுபோய்ச் சேர்க்கிறோம்" என்று ஒப்புக் கொண்டார்கள். நான் அதற்கு இரண்டு மூன்று பெயர் கள் தகுந்தவை என்று யோசித்திருந்தேன். ஆனால் கப்பலில் ஏறியவுடன், 'நெல்லி (Nelly)' என்று பெயரிட்டு வழங்கிப் பத்திரிகைக்காரர்கள் எல்லாரும் வருணித்து, அது வந்து சேர்ந்தமையால் என் கோரிக்கை ஈடேறவில்லை. 'நெல்லி' கொஞ்ச காலத்திற் குள் பாலர் முதல் விருத்தர்வரை எல்லோருடைய அன்பையும் சம்பாதித்துவிட்டது. நான் இந்தியாவுக் குத் திரும்பிய பிறகு அத்லோன் பிரபுவுக்கு ஒரு கடிதத்தில் நான் ஆசைவைத்திருக்கும் நெல்லியையும் பாடசாலையையும் பற்றி விசாரித்து எழுதினேன்.

## கவர்னர் ஜனரலின் பதில்

**அ**தற்கு அவர் எழுதிய பதிலைத் தமிழில் கீழே வரைகிறேன். இதற்கு அவர் அநுமதியில்லாவிடினும் யாதொரு தவறும் இதில் இல்லை என்று துணிகிறேன். இது எழுதப்பட்ட தேதி 1929-ஆம் வருஷம் அக்டோ பர் மாதம் 11-ஆம் தேதி. "என் மாளிகைக்குப் பக்கத் தில் இருக்கும் நெல்லியைக் குறித்து நீங்கள் அன்புடன் எழுதிய கடிதத்திற்கு மிக்க வந்தனம். அதைக் கண்ட க்ஷணமே அதன்மேல் எங்களுக்கு நேசம் உண்டாயிற்று. தான் கற்ற வேடிக்கைகளை யெல்லாம் வெகு நேர்த்தியாகக் காட்டியது. நாளைக்குப் போய் உங்களுடைய சந்தோஷத்தை அதனிடம் தெரிவிக்கிறேன். உங்கள் கடிதம் வந்தபோது நான் அரசியல் வேலையாக வெளியில் போயிருந்தமையால் உடனே பதில் போட முடியவில்லை. சாஸ்திரி காலேஜைத் திறந்துவைத்த பிறகு ஒரு தடவை அதைப் பார்வையிட்டு எனக்குத் தோன்றிய அபிப்பிராயங்களை எழுதலாம் என்று காத்திருந்தேன். அங்கிருந்து இப் போதுதான் திரும்பி வந்தேன். அவ்விடத்தில் இந்தக்

காலேஜை ஸ்தாபித்தபொழுது விரோதமாயிருந்த அநேகர் இப்பொழுது அநுகூல புத்தியுடன் இருப்பதைப் பார்த்துச் சந்தோஷித்தேன். இந்தியர்கள் அநேகர் வந்திருந்தார்கள். சிலரை ஆலிஸ் ராஜகுமாரிக்கும் எனக்கும் அறிமுகமாக்கி வைத்தார்கள். வேறு காரியமாய் இருந்ததால் என் மனைவி துவக்கத்திலேயே வரக்கூடாமல் பிறகு அட்மினிஸ்டிரேட்டர் வாட்ஸனுடனும் அவர் மனைவியுடனும் சேர்ந்து வந்தார். நல்ல வேளையாய் அப்பொழுது பெய்துகொண்டிருந்த மழை சற்று நிற்கவே, கட்டிடத்தின் படிகளில் நின்றுகொண்டு பிரசங்கங்கள் செய்தோம். உங்கள் விருப்பத்தைக் கேட்டு, வந்திருந்தவர் யாவரும் களிப்புடன் கரகோஷம் பண்ணினார்கள். உங்களது விருப்பம் நிறைவேற ஆரம்பித்ததை நீங்களே நேரில் பார்க்கவில்லையே என்று வருத்தப்பட்டேன். கட்டிடம் எல்லாவிதத்திலும் சரியாய் அமைந்திருக்கிறது. அன்றைய நிகழ்ச்சியிலெல்லாம் பெரிய உத்ஸாகம் காணப்பட்டு மிக்க நன்மை விளையுமென்று திடமான நம்பிக்கையும் உதித்தது. தங்களுடைய கடிதத்தை நாங்கள் இருவரும் படித்து மகிழ்ந்தோம்.''

## ஷஷ்டியப்த பூர்த்தி
## 1929

**1929**-ஆம் வருஷம் செப்டம்பர் 22-ஆம் தேதி நான் பெங்களூரில் குடியிருந்தபொழுது எனக்கு ஷஷ்டியப்த பூர்த்தி நடந்தது. அப்பொழுது ஒரு சம்பவம் அபூர்வமான சந்தோஷத்தைக் கொடுத்தது. ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் என்னிடத்தில் தாம் வைத்துள்ள சகோதரபாவத்தைத் தம் அந்தஸ்துக்குப் பொருந்தியவிதமாய்க் காண்பிக்க விரும்பி என் பத்தினி பெயரால் பத்தாயிரம் ரூபாய் கொடுத்தார். இப்படிக் கொடுப்பார் என்பது இரண்

டொரு சிநேகிதர்களுக்குத் தெரிந்திருந்தும் என்னிடம் சொல்லாமல் ரகசியமாகவே வைத்திருந்தார்கள். இது வெளியானதும் எனக்கு உண்டான ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் அளவிட முடியவில்லை. ஸ்ரீ கே. பால சுப்பிரமணிய ஐயர் இந்த மங்களகரமான சந்தர்ப்பத்தில் அங்கே வந்திருந்தார். அப்பொழுது அவருக்குச் சொந்தமான ஒரு வீட்டைக் குறித்துச் சொல்லி அந்தத் தொகைக்கே அதை எனக்கு விற்கவேண்டுமென அவரைக் கேட்டேன். அந்த வீடு அதிக விலை பெறுமாயினும் அவர் அச் சமயத்தில் உத்ஸாகத்திற்கு உள்ளாகி என் பேரில் தயை கூர்ந்து இந்த உபகாரம் செய்யச் சம்மதித்தார். இப்பொழுது நான் மயிலாப்பூரில் குடியிருக்கும் 'ஸ்வாகதம்' என்ற பெயர் கொண்டது தான் அது.

## செட்டிநாட்டு ராஜாவின் விசுவாசம்

ராஜா ஸர் அண்ணாமலை செட்டியாரிடம் நான் பெற்றிருக்கும் உபகாரம் கணக்கிட முடியாது. இதற்கெல்லாம் மேலாக ஒரு விசுவாசம் அவருக்கு என்னிடம் உண்டு. அதைத் தக்கபடி வருணிக்க எனக்கு வலிமையில்லை. அண்ணாமலை சர்வகலாசாலைக்கு என்னை உப அத்தியக்ஷகராக (Vice chancellor) நியமித்து ஸர்வாதிகாரத்தையும் என்னிடத்தில் ஒப்பித்து ஸ்வப்னத்திலுங்கூட, எள்ளளவேனும் அதிருப்தியோ சந்தேகமோ காட்டாமல் பூர்ண நம்பிக்கையுடன் கௌரவித்து வந்தார். பிள்ளைகள் படிப்பை நிறுத்திச் சர்வகலாசாலைக்குப் பெருங் கேடு வரும்படி கிளர்ச்சி செய்தபோதுங்கூட இந்த நம்பிக்கை சிறிதேனும் குறையவில்லை. என் புத்திக்கும் சக்திக்கும் மிஞ்சிப் போயிற்று என்று இரண்டு மூன்று தடவை அவரை, "அண்ணாமலை நகருக்கு வாருங்கள்; நீங்கள் இந்தப் பொறுப்பை என்னுடன் சேர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று வருந்தி அழைத்தேன். அதற்கும்

அசையாமல், "நாடெல்லாம் தேடிப் பெருமையாய்க் கொண்டு வந்து வைத்த நீங்கள் பார்த்து என்ன செய்தாலும் சரி. எவ்விதமானாலும் ஆகட்டும்" என்று பிடிவாதமாக இருந்துவிட்டார்.

இதனால் எனக்கு ஒரு விதத்தில் பேரானந்தம் உண்டெனினும் தலையில் சுமத்தப்பட்ட பாரம் பதின்மடங்கு அதிகமாகத்தான் தோன்றியது. ஏராளமான திரவிய மளித்து வெகு கவலையுடன் பிள்ளைபோல வளர்த்து வந்த இப் பெரிய ஸ்தாபனத்தை மற்றொருவர் கையில் ஒப்பித்து, துரோகம், மோசம், நஷ்டம், மானக்கேடு இவை ஒன்றும் வராது என்ற திடமான புத்தியைக் கொண்டது உலகத்தில் நேரும் சம்பவங்களுக்கெல்லாம் சிறந்தது என்று நான் சொல்லவும் வேண்டுமோ.?

## சாஸ்திரி ஹால்

இத்தகைய அசாதாரணமான சிநேகத்தை உலகத்தாருக்குத் தெரிவிப்பதற்கென்றே ஏற்பட்டவை போல இரண்டு காரியங்கள் செய்து வைத்திருக்கிறார். எல்லாரும் வியக்கத் தகுந்த விதம் என் உருவப்படத்தைப் பெரிதாகச் செய்யச் சொல்லிப் பார்வையான இடத்தில் அதை நிறுவியிருக்கிறார்.

இதைச் சென்னை கவர்னர் எர்ஸ்கின் பிரபு (Lord Erskine) என்னை அளவுக்கு மிஞ்சிப் புகழ்ந்து பேசித் திறந்து வைத்தார். வருஷந்தோறும் பட்டம் அளிப்பதற்காக ஒரு பெரிய ஹால் வெகு அழகாக அமைந்திருக்கிறது. அதில் ஒரு பக்கத்தில் நடராஜ விக்கிரகமும், மற்றொரு பக்கத்தில் கோவிந்தராஜர் விக்கிரகமும் ஆறடி உயரத்தில் பார்த்தவர் கண்களைப் பறிக்கும்படியான சுந்தர வடிவாய்ப் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. இவ் விஷயத்தில் நான் செய்த முயற்சி சுலபமாயும் புகழத் தக்கதாயும் முடிந்ததில் ஏதோ

தேவ கைங்கரியம் செய்து ஒருவராலும் அடையக் கூடாத புண்ணியத்தைப் பெற்றாற்போல மனமகிழ்ந் தேன். இந்த ஹாலுக்கு எல்லாருடைய சம்மதத்தையும் பெற்றுக்கொண்டு செட்டியாரவர்கள் முதல் முதல் அங்கே பட்டமளிப்பு விழா நடக்கும்போது என் பெயர் விளங்குவதற்காக, 'ஸ்ரீநிவாஸ சாஸ்திரி ஹால்' என்று நாமகரணம் செய்தார்.

## எனக்குக் கிடைத்த மோதிரம்

திடீரென்று ஒரு நாள் தென்னமெரிக்காவிலிருந்து கிடைத்த ஒரு தந்தி பத்திரிகைகளில் பிரசுரமாயிற்று. ஜொஹானெஸ் பெர்க் (Johannesberg) என்கிற நகரில் சாம் அலெக்ஸாண்டர் என்னும் யூதர் தம் உயிலில் எனக்குச் சில நகைகளை எழுதிவைத்து மாண்டார் என்று சமாசாரம் வந்தது. நான் அங்கிருக்குங்கால் அவர் என்னுடன் சிநேகமாயிருந்தது தவிர, நான் திரும்பிவந்த பின்னருங்கூட இரண்டொரு கடிதங்கள் நாங்கள் ஒருவருக்கொருவர் எழுதிக்கொண்டது உண்டு. மற்றச் சிநேகிதங்களைவிட மேன்மையாக யாதொன்றும் கிடையாது. உயிர் துறக்குங்கால் மனத்தில் அதிகப் பிரியமான விஷயங்களைத்தான் ஜனங்கள் நினைப்பார்கள் என்பது பெரும்பான்மை அநுபவம். உயிலில் பேர் கண்டிருப்பது உண்மையான அன்புக்கு அடையாளமென்று கருது வார்கள். ஜாதியில் ஸ்வஜாதி யல்ல; கூடப் படித்தவர் அல்ல; பிறப்பு, நிறம் எல்லாம் வேறு. ஆயினும் கடைசிக் காலத்தில் என்னை அவர் நினைத்தது என் பேரில் வைத்திருந்த மதிப்புக்கும் அன்புக்கும் அடை யாளமாயிற்று. இதுவே பெருமை யல்லவா?

ஆனாலும் என் சிநேகிதர் சிலருக்குத் தோன்றாத யுக்திகள் தோன்றின. சாம் அலெக்ஸாண்டர் சொத் தில் பெரும் பாகத்தை எனக்கு எழுதி வைத்து என்னைப் பணக்கார ராக்கிவிட்டார் என்று நிச்சயித்துக் கொண்டு வந்த பணத்தை விநியோகம் எவ் வகையில்

செய்ய வேண்டுமென்று சில யோசனைகளும் எழுதினார்கள். முடிவில் ஏழெட்டு மாதங்களுக்குப் பின்னர் எனக்குக் கிடைத்தது பழைய கால இந்திய மோதிரம் ஒன்று. அதை ஒருவரும் அணிய முடியாது. அது இங்கே வந்து சேர்ந்ததால் எனக்குச் சுமார் அறுபது ரூபாய் செலவு! 'பணமில்லையே' என்கிற குறை கிடையாது. 'இந்தப் பெருமை வாய்த்ததே!' என்ற சந்தோஷமே ஓங்கி நிற்கிறது.

## புத்திர வாஞ்சை
## 1937

**1937**-ஆம் வருஷத்தில் நான் அண்ணாமலை சர்வ கலாசாலையில் வைஸ் சான்ஸலரா யிருக்கையில் இந்தியா கவர்ன்மென்டார், 'மலேயாவில் ரப்பர் முதலிய தோட்டங்களில் நம் தேசத்துக் கூலி ஜனங்கள் இருக்கும் நிலைமையைப் பற்றித் தீர விசாரித்துத் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்' என்று என்னைக் கேட்டுக் கொண்டார்கள். எனக்கு உதவியாக இந்தியன் ஸிவில் சர்விஸைச் சேர்ந்த மிஸ்டர் ஜி. எஸ். போஸ்மன் என்னும் பெரிய உத்தியோகஸ்தரை நியமித்தார்கள். எனக்குப் பணப் பிரயோஜனம் வேண்டாமென்று, சொந்த சுஸ்ரூஷைக்காக என் மகன் வி. எஸ். சங்கரனை அழைத்துப்போக அநுமதி கேட்டுப் பெற்றேன். ஏன் இந்தச் சிறிய அலுவலை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சில நண்பர்கள் ஆட்சேபித்தனர். இழிவொன்றும் இல்லாவிடில் ஜனோபகாரத்தில் பெரிது, சிறிதென்று வித்தியாசம் செய்யலாகாது என்பது என் கொள்கை. மேலும் உத்தியோக வர்க்கத்தில் சேராத என்னைச் சர்க்கார் வருந்தி அழைத்தால், அதில் ஏதோ விசேஷமான கௌரவமோ கடினமோ இருக்க வேண்டும். எனக்குத் தகுந்ததாவென்று சந்தேகப் படக்கூடாது. கேள்வி கேட்பது அழகல்ல என்று

எனக்குத் தீர்மானமான எண்ணம். வழியில் ரங்கூனை நெருங்கியதும் சங்கரனுக்கு வயிற்றில் பொறுக்க முடியாத வலி கண்டு ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போனதில் அப்பெண்டிஸைட்டிஸ் வெகு கடுமையாக இருப்பதால் உடனே ஆபரேஷன் செய்தால்தான் நல்லதென்று சொன்னார்கள். ஆபரேஷன் பண்ணின டாக்டர் மிகச் சிறந்தவர். 'ஐந்தாவது நாள் கட்டவிழ்த்துப் பார்த்த பிறகுதான் பிள்ளை பிழைப்பாரோ, பிழைக்க மாட்டாரோ என்று முடிவாய்ச் சொல்வேன்' என்று பயமுறுத்தினர். இந்த ஐந்து நாளும் நான் பட்ட விசாரத்தைச் சொல்லவும் முடியாது, எழுதவும் முடியாது. ஒரே பிள்ளையையுடைய தகப்பன்மாருக்கு இந்த வேதனை தெரியும். ஐந்து நாள் கழித்து, 'இனிப் பயமில்லை' என்று டாக்டர் வாக்களித்தபொழுது நான் எவ்வாறு சந்தோஷித்தேனென்று படிக்கும் நேயர்கள் தாங்களே அறிந்துகொள்ளலாம்.

# ஆசை மோசமானது

## எதிர்பார்க்காதவை

## 1917

என் வரலாற்றின் இந்த அத்தியாயத்தில், நன்மை கிடைக்குமென்று முழு நம்பிக்கை வைத்து, அப்படிக் கிடைக்காமல் மோசம்போன சில சந்தர்ப்பங்களை விவரிக்க எண்ணுகிறேன். ஆனால் இந்த ஆசையெல்லாம், என் சொந்த லாபத்தையாகிலும் பெருமையையாகிலும் பொறுத்தவை அல்ல. பொது நன்மையையே ஒட்டியவை.

சென்ற மகா யுத்தத்தின்போது 1917-ஆம் வருஷம் இந்தியா சட்டசபை (Imperial Legislative Council) யில் பொக்கிஷ மெம்பர் ஸர் வில்லியம் மயர் (Sir William Meyer) பிரேரணையின் பேரில் 150 கோடி ரூபாய் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கு உதவியாய்க் கொடுக்கப்பட்டது. இதைக் கூடாதென்று தடுத்துப் பேசியவர் மதன்மோகன் மாளவியாவும் ஸ்ரீ கே. வி. ரங்கசாமி ஐயங்காரும். நான் கொடுப்பதற்குச் சம்மதித்துப் பேசினேன். 'தொகை பெரிது; இந்தியாவின் சக்திக்கு மேற்பட்டது' என்று நான் தயங்கியபோது ஸர் வில்லியம் மயர் என்னிடம் வந்து யுத்தத்திற்குப் பிறகு இந்தியாவின் சுதந்தரம் இதனால் அதிகரிக்குமென்று வெகு வலுவாய் என்னைத் தூண்டினார். அவர் தாமும் நம்பி என்னையும் நம்பும்படி செய்தாரென்றுதான் இப்போதும் நினைக்கிறேன். நான் உலக இயல்பு தெரியாமல் ஏமாந்துபோகிறவன் என்று ஒருவரும் சொல்ல மாட்டார்கள். இந்த 'ஓட்' கொடுத்தபோது நம் இந்திய அரசாங்கத்தினருக்குள், 'இந்த எண்ணம் பலியாது; மோசம் போவோம்' என்று எண்ணியவர் எவராகிலும் இருந்தாரோ என்றும் சந்தேகிக்கிறேன். ரோலட்சட்டம் (Rowlat bill) வருமென்றாகிலும், பஞ்சாப் கொடுமை நேரிடுமென்றாகிலும் அப்போது ஜோசியம் தெரியுமா?

லயனல் கர்ட்டிஸ் (Lionel Curtis) என்பவர் இந்தியாவுக்கு வந்து மாண்டேகுவை வசப்படுத்தி எங்கும் வழங்காத இரட்டை யாட்சி முறை (Dyarchy)யை ஏற்படுத்தி வைப்பார் என்று யார் யோசித்திருக்கக்கூடும்? முடிவில் கிடைத்த சுதந்தரங்கள் தோற்றத்திற் கேற்பக் கைகூடிப் பலிக்கவில்லை என்பது திண்ணம்.

## வீண் நம்பிக்கை

பிற்காலத்து அநுபவத்தைக் கொண்டு, 'எனக்கு அப்பொழுதே தெரியுமே!' என்று பெருமை பேசுவோர் அநேகர். 19 9-ஆம் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்ட் சட்டம் நம் தேசத்திற்கு அநேக அநுகூலங்களைச் செய்ததென்பது என் அபிப்பிராயம். இது எப்படியிருந்தாலும் பிரிட்டிஷ் டொமினியன்களிலும் காலனிகளிலும் சாம்ராஜ்யத்துக்கு உட்பட்ட பிறதேசங்களிலும் குடியேறியிருக்கும் நம் தேசத்தாருக்குத் துன்பங்கள் நீங்கி க்ஷேமம் கிடைக்குமென்று நான் நம்பியிருந்தேன். யுத்தத்தில் நாம் பேருதவி புரிந்தோம் என்றும் அதற்குப் பிரதியுபகாரம் பரிபூர்ணமாய்ச் செய்யவேண்டுமென்றும் சொல்லாத ராஜீயவாதிகளும் அதிகாரவர்க்கத்தாரும் இல்லை. இவர்களுடைய வாசகங்களைக் கேட்டும் படித்தும் எனக்கு உள்ளம் பூரித்து நாம் முறையிட்டவுடன் குறைகளைத் தீர்த்து வைப்பார்கள் என்று திடமாய் எண்ணியிருந்தேன்.

## கினியா ஏமாற்றம்
## 1923

**1923**-ஆம் வருஷம் கினியாவில் நம் இந்தியர் பல விதச் சிறுமைகளுக்கு உள்ளானார்கள். இவைகளை நீக்குவதற்காக இந்திய சட்டசபையிலிருந்து நானும் மற்றும் இருவரும் அங்கே போய்ப் பட்ட கஷ்டங்களை ஒருவாறு முதல் அத்தியாயத்திலேயே சொல்லியிருக்கிறேன். கினியா யுத்தகளத்திலேயே இந்திய வீரர்கள் போரில்

மாண்டனர். ஐந்து வருஷத்திற்கெல்லாம் அவர்கள் சத்துருக்களுடன் ஒற்றுமை கொண்டாடி நம்மை விரட்ட முயன்றார்கள். அப்போது கினியா வெள்ளையர் செய்த முரட்டாட்டம் பொறுக்க முடியாமல் நான் பிரசங்கங்கள் செய்ததுமன்றி மந்திரிமார் அநேகரைக் கண்டும் பேசினேன். அவர்களில் ஒருவர் கான்டர்பரி ஆர்ச் பிஷப் (Archbishop of Canterbury). அப்போது அந்த ஸ்தானத்தில் இருந்தவர் அரசியல் விஷயங்களில் நன்கு தேர்ந்தவர் என்று பெயர் பெற்றவர். வெகு நேரம் விஷயங்களை யெல்லாம் வியவகரித்த பிறகு, "நல்லது; உங்கள் கட்சி நியாயமானதுதான். இந்த நெருக்கடியான நிலைமையில் நீங்கள் என் ஸ்தானத்தில் இருந்தால் என்ன செய்வீர்கள்?" என்று அடி மடியில் கை போடுவதுபோல் கேட்டார்.

அதற்கு நான் பின்வாங்காமல், "நைரோபி (Nairobi) யில் லார்ட் டெலமீர் (Lord Delamere) என்பவர் இந்த விஷமத்திற்கெல்லாம் ஆணி வேர். அவரை ஊரை விட்டு வெளியேற்றுவேன்" என்றேன்.

"அது வெகு ஸாகஸம். எங்களால் முடியாது" என்று சொல்லி, விவாதத்தை முடித்துவிட்டார்.

அவ்வளவு துஷ்டக் காரியம் ஓர் இந்தியர் செய்திருந்தால் அவரை நீக்கக் கொஞ்சமேனும் தயங்குவார்களா என்று எண்ணி மிகுந்த துக்கத்தை அடைந்தேன். 'போர்வீரரும் போர் வீரரும் கூடினால் அவர்களுக்குள் உண்டாகும் சிநேகப் பான்மைபோல் உலகில் ஏதாகிலும் உண்டோ?' என்று சில கவிகள் பாடியிருக்கிறார்கள். இந்தப் பெரும் நீதியெல்லாம் இந்தியரைக் கண்டால் சிதறிப் போகின்றன.

## இந்தியச் சீர்திருத்தம்
## 1919

**1919**-ஆம் வருஷம் பார்லிமெண்டார் நிறைவேற்றிய இந்தியா கவர்ன்மெண்ட் சட்டம் உடனே எல்லா

உரிமைகளையும் கொடுக்காவிடினும், அடிக்கடி பெரிய கிளர்ச்சிகளும் சூழ்ச்சிகளும் இல்லாமலே கிரமமாக மேல் மேல் அவை அபிவிருத்தியாகும் என்று நம்பினேன். இதற்கு அத்தாட்சியாகச் சட்டத்தில், 'பத்து வருஷமான பிறகு ஒரு கமிஷனை நியமித்து விசாரணை செய்து அடுத்தபடி எவ்வளவு ராஜீய முன்னேற்றத்தை எப்படி ஏற்படுத்துவது என்று சிபாரிசு பண்ணலாம்' என்று ஒரு ஷரத்து இருந்தது. இந்த ஷரத்தில் நான் தான் உயிர் வைத்திருந்தேன் போலும்! குழந்தை போன்ற என் பேதைமை இவ்வளவு என்று காண்பிக்க இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்? எங்கள் இந்திய ஊழியர் சங்கம் எதற்காக ஏற்பட்டதோ அது கஷ்டமில்லாமல் நயமாகவே கைகூடிவிடும் என்றெண்ணி, இனி அரசியல் துறையை விட்டு, படிப்பு, ஆசாரச் சீர்திருத்தம், பொருளாதார முற்போக்கு ஆகிய விஷயங்களைக் கவனிக்க வேண்டுமென்று ஓர் அபிப்பிராயம் நான் கொண்டதும் உண்டு. இதை நினைத்தால் இப்பொழுதும் வெகு வெட்கமாய் இருக்கிறது. இந்தக் கமிஷன் பற்றிய ஷரத்தைத்தான், 'நமக்கு மானக் கேடு', 'பிள்ளைகளைப்போல் பரீக்ஷையா செய்கிறது?' என்று வெகுவாய் நம்மவர் பலர் தூஷித்தனர்.

1927-ஆம் வருஷத்தில் இந்தியர்கள் கலவாமல் ஏற்பட்ட ஸைமன் (Simon) கமிஷன் அடைந்த கதியை இங்கே விஸ்தரிக்கவேண்டாம். 1929-ஆம் வருஷமே நாம் அடைந்திருக்க வேண்டிய முற்போக்கு 1935-ஆம் வருஷம் பிற்போக்காக முடிந்தது. 'பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது' என்று ஒரு சமயம் சொல்லியிருக்கிறேன்.

## வட்ட மேஜை மகாநாடு
## 1930

இதற்கு உள் நாடகமாக 1930, 31, 32 - ஆம் வருஷங்களில் வட்டமேஜை மகாநாடு (Round Table

Conference) நடந்தது. இதற்கு மூல காரணம் 1929-ஆம் வருஷத்தில் லார்ட் இர்வின் (Lord Irwin) தொழிற் கட்சி கவர்ன்மென்டார் அநுமதியுடன் பிரசுரித்த டொமினியன் அந்தஸ்து விளம்பரம் (Dominion State Declaration). இந்த அந்தஸ்தை அமலுக்குக் கொண்டு வரத்தான் வட்டமேஜையைச் சுற்றி நாங்கள் 50 பேர் பல மாதங்கள் பிரதி தினமும் கூடிக் கூடி மன்றாடினோம். இந்த மகாநாட்டில் முக்கிய விஷயங்களைப் பேசத் துவக்கிய சில தினங்களுக்குள் பிரிட்டிஷ் பிரதிநிதிகள் எங்களுடன் ஒற்றுமையாக இருந்ததைக் கண்டு காரியம் சித்தி பெறும் என்ற நிச்சயம் தோன்றியது.

காங்கிரஸ்காரர் சேரவில்லை என்கிற ஒரு குறை மட்டும் பெரிய இடையூறாகத் தோன்றியதால் நாங்கள் மகாத்மா காந்தியைச் சீக்கிரத்தில் வரவழைக்க வேண்டுமென்று வற்புறுத்தினோம். அவர் வந்த பிறகு எங்கள் மனத் திடம் கொஞ்சம் தளர்ந்தது. முஸ்லிம்களுடைய ஒத்துழைப்புக் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்தது. ஆனால் நாங்கள் தைரியத்தை விடவில்லை.

## எல்லாம் சிதறின

**1931**-ஆம் வருஷக் கடைசியில் இங்கிலாந்தில் நடந்த பொதுத் தேர்தலில் கன்ஸர்வேட்டிவ் கட்சியார் பெருவாரியாய் வெற்றி பெற்றனர். ஸர் ஸாமுவேல் ஹோர் (Sir Samuvel Hoare) இந்தியா மந்திரியானவுடன் நற்குறிகளெல்லாம் மறைந்துவிட்டன. அநுகூலமாயிருந்த லார்ட் ரெடிங்கூட வியாபாரம், தொழில் ஆகிய விஷயங்களில் நமக்கு விரோதி யாகிவிட்டார். இந்த இரண்டு வருஷங்களில் பிரிட்டிஷாருக்கும் எங்களுக்கும் ஏற்பட்ட நல்ல ஒப்பந்தங்கள் எல்லாம் 1933-ஆம் வருஷம் பார்லிமென்டரி கூட்டுக் கமிட்டி (Parliamentary Joint Committee) முன்பாகச் சிதறிப்போய் நம் நாட்டுப் பிரதிநிதிகள் வெகுவாய்க் கேட்டுக்கொண்ட

உரிமைகளும் சலுகைகளும் 1935-ஆம் வருஷத்திய சட்டத்தில் கிடைக்காமலே போயின.

## மூன்று வேதனைகள்

இந்த நிகழ்ச்சியிலெல்லாம் மூன்று அம்சங்கள் மனத்தில் வேதனை செய்தன. பிரிட்டனில் மேல் வகுப்பினருக்குள்ளும் அரசியல் நிபுணர்களுக்குள்ளும் முதன்மையான லார்ட் ஹ்யூ ஸெஸில் (Lord Hugh Cecil) என்பவர், 'டொமினியன் அந்தஸ்தை இந்தியாவுக்குக் கொடுப்பதாக யார் ஒப்புக்கொண்டார்கள்? மந்திரிமாரும் வைஸ்ராயும் சேர்ந்து வாக்குறுதி-யளித்தால் போதுமா? அதைப் பார்லிமென்டில் நிராகரிப்போம்' என்று போராடினார். இதை நாம் நம்பிக்கைத் துரோகம் என்று எண்ணுவதில் அநியாயம் என்ன? இரண்டாவது: இந்த டொமினியன் அந்தஸ்து வாதம் மும்முரமா யிருக்கும்பொழுது மூலபுருஷரான லார்ட் இர்வின், 'டொமினியன் அந்தஸ்தை இப்பொழுதே கொடுப்பதாகச் சொல்லவில்லையே. படிப்படியாய் இந்தியா முன்னேறிக் கடைசியில் அந்த அந்தஸ்தைப் பெறும் என்றுதான் அபிப்பிராயம்' என்று வியாக்கியானம் செய்து, நம் மனத்திலிருந்த ஆசையை யெல்லாம் பங்கப்படுத்தினார். மூன்றாவது: பிரதம மந்திரியான ராம்ஸே மாக்டானல்டு (Ramsay Macdonald) இந்தியாவைக் கைவிட்டுவிட்டது மிக விசனிக்கத்தக்கது. 'இன்னும் சில வாரங்களுக்குள் இந்தியா ஒரு டொமினியனாகிவிடும்' என்று தாராளமாய்ப் பேசிய இவர் நம் தேசத்தை, சத்ருவாகிய ஸர் ஸாமுவேல் ஹோரிடம் காட்டிவிட்டு ஒதுங்கினார். அரசியல் வரலாற்றில் இதற்கொப்பான துரோகத்தைக் காண்பது அரிது!

## சர்வதேச சங்கம்

சர்வதேச சங்கம் (League of Nations) என்னும் உலக சபையின் முதல் கூட்டம் ஜினிவாவில் 1920-ஆம்

வருஷம் கூடிற்று. அடுத்த வருஷம் நிகழ்ந்த இரண்டாம் கூட்டத்துக்கு நம் தேசப் பிரதிநிதியாக நான் போனேன். பிரதிநிதி கோஷ்டிக்கு ஸர் வில்லியம் மயர் தலைவர். மற்றொரு மெம்பர் கட்ச் மஹாராஜா. ஸர் வில்லியம் மயர், இந்தியாவின் முறை வந்தபோது-தமக்குப் பேச உரிமை இருந்த போதிலும் - என்னையே மேடையேறிப் பிரசங்கம் செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

என்னுடைய பிரசங்கத்தை அனைவரும் வியப்புடன் கேட்டார்கள். அதில் நான் வெளியிட்ட அபிப்பிராயங்களுள் - முக்கியமானவை இரண்டு. முதலாவது தென்னாப்பிரிக்காவில் நம் ஜனங்கள் படுங் கஷ்டமும் துன்பமும் இந்த உலகச் சங்கத்தின் அடிப்படையான கொள்கைகளுக்கு விரோதம் என்பது. இதைச் சபையில் பெரும்பாலரும் மெச்சினார்கள். நல்ல செல்வாக்குடையவரும் எல்லோருடைய பிரீதிக்கும் பாத்திரமானவருமான லார்ட் ராபர்ட் ஸெஸில் (Lord Robert Cecil) என்னிடம் வந்து என் பேச்சைப் பாராட்டியதுமன்றி, 'இந்தத் தென்னாப்பிரிக்கா கொடுமைப் பேச்சுப் பிரயோஜனப்படும்' என்றும் சொன்னார். தலைவர் மயருக்கும் மெத்த சந்தோஷந்தான். ஆனால் மிஸ்டர் பால்பூர் (Balfour) முதலிய பிரிட்டிஷ் பிரதிநிதிகள், 'சாம்ராஜ்யத்தில் உள்ள ரஸாபாஸமான மனஸ்தாபங்களை இந்தச் சபையில் வெளியாக்குவது உசிதமல்ல' என்று அபிப்பிராயப் பட்டார்கள். இதை என்னிடமும் நேரில் தெரிவிக்கவில்லை. சுற்றிமுற்றி வந்து என் காதில் விழுந்தது. மேலும் இந்த வருஷத்தில் ஒரு கமிட்டியில் பிரிட்டிஷ் கோஷ்டியாருக்கு விரோதமாய் நாங்கள் ஓட் செய்தோம். இந்தியப் பிதிநிதிகள் பிரிட்டிஷ் பிரதிநிதிகளுக்கு அடங்கியவர்கள் என்பது அப்போது கண்டிப்பாய் ஏற்படவில்லை. பிற்காலத்தில் இந்த நிர்ப்பந்தம் ஊர்ஜிதப் பட்டதாகக் கேள்வி.

## வருங் கேடு தெரியுமா?

என் பிரசங்கத்தில் இரண்டாவது முக்கியமான அம்சம் இவ் வுலகத்தில் உள்ள ராஜாங்கங்களுக்குள்ளும் ஜாதியாருக்குள்ளும் பரஸ்பரம் உண்டாகும் விரோதங்களையெல்லாம் அவை உண்டானபோதே விசாரித்துத் தீர்த்து வைக்க வசதிகளை ஏற்பாடு செய்ததைப்பற்றிப் புகழ்ந்ததுதான். இதனால் இனி யுத்தமென்பது நின்று பிரபஞ்சத்து ஜனங்கள் யாவரும் ஒரே குடும்பத்தாராகி, சகோதர பாவத்துடன் இருப்பார்கள் என்றும், இவ் வுலகத்தில் சமாதானமென்பது சாஸ்வதமாய் நிலைபெற்றதென்றும், இனி எல்லோருடைய முயற்சிகளும் ஸ்திரமான பலனளிக்கும் வழியில் செலுத்தப்படலாம் என்றும் என் மனத்தில் பொங்கி நின்ற நம்பிக்கையை உணர்ச்சி ததும்ப வெளியிட்டேன். இந்த விஷயத்தை நான் உரைத்தபொழுது அங்கிருந்த எல்லோருக்குமே அதே நம்பிக்கையும் உணர்ச்சியும் இருந்தன என்பதை வழக்கமான ஆரவாரங்களால் தெரியப்படுத்தினார்கள். வரும் கேட்டைச் சற்றேனும் அறியாதவர்களே அதிகம்! எவராகிலும், 'இந்த ஆசையெல்லாம் மோசமாகும். உலகத்தாருடைய கலகம் நிற்காது. சண்டை வந்துதான் தீரும்' என்று எண்ணி என் போன்றவர்களைப் புன்னகையுடன் பரிகசித்திருப்பார்களா? ஒருவர், இருவர் இருந்திருக்கக் கூடும். அதுவும் உறுதியாய் என்னால் சொல்ல முடியவில்லை.

## பெரிய நாடுகளின் பதவிப் போட்டி

இவ்வாறு நாங்கள் ஆசை கொண்டது அறியாமை என்றே மிஸ்டர் பால்பூர் நினைத்ததாக எனக்கு மட்டும் ஒரு சந்தேகம் உண்டு. மனுஷ்ய ஜாதியினுடைய குறைகளையும், நற்குணங்களையும் நன்கறிந்த அவர் போன்ற புத்திமான்களுக்கும், கிணற்றுத் தவளையாயிருந்து நாட்டுவளப்பம் சற்றேனும் அறியாத என்

போன்றவர்களுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள பேதம் இருக்கிறதல்லவா? அந்தச் சபையிலேயே நடந்த சில விஷயங்களை உற்றுக் கவனித்திருந்தால், நம்பிக்கை அவ்வளவு மேலிட்டிருந்திருக்காது: போலந்து அரசாங்கத்தார் லிதுவேனியாவுடன் அநியாயமான சச்சரவை வளரவிட்டது, லீக் அசெம்பிளியிலும் (League Assembly) லீக் கவுன்சிலிலும் (League Council) பகிரங்கமாக இரு கட்சியும் வாதம் செய்து சமாதானம் செய்யமுடியாமல் அதிருப்தியாகவே முடிந்தது. லீக் மகாநாட்டுக்குச் செக்ரட்ரி ஜெனரல், சர்வதேசத் தொழிலாளர் சங்கக் காரியாலயக்(International Labour office) காரியதரிசி, மற்றுமுள்ள உதவிக் காரியதரிசிகள் ஆகிய உத்தியோகங்களுக்கெல்லாம் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் ஆகிய பெரிய ராஜாங்கத்தார், 'உனக்கு, எனக்கு' என்று வெகு கேவலமாய்ப் போட்டி போட்டார்கள். மற்றச் சில்லறை தேசத்துப் பிரதிநிதிகள், 'நமக்கில்லையே' என்று அசூயைப்பட்டுப் பதவி பெற்றவர்களைக் கண்டபடி தூஷித்தார்கள்.

## ஒரு முக்கிய விஷயம்

மற்றுமோர் விஷயம் - சிறிதுபோல் இருந்தாலும்- விஷயங்கள் போகும் மார்க்கத்தை நன்றாய் விளக்கியது. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு பருக்கை பதம் காட்டுமல்லவா? சங்கத்திற்கு ஏராளமான செலவு ஏற்பட்டமையால் அதை அங்கத்தினர்களான ராஜாங்கங்களுக்குள் எந்த விகிதாசாரப்படி பங்கிட்டுக்கொள்வது என்பதைப்பற்றித் தீர்மானம் செய்ய ஒரு பெரிய கமிட்டி நியமிக்கப்பட்டது. அநேகவித யோசனைகள் சொல்லப்பட்டன. ஒரு யோசனை என்னவென்றால் அந்த அந்த ராஜாங்கத்திற்கு அடங்கிய ஜனத்தொகைப் பிரகாரந்தான் என்பது. இப்படியானால் இந்தியாவுக்கும் சீனாவுக்குந்தான் முக்கால் வாசிப் பாரம் தலையில் விழும். நாங்கள் இதற்கு எப்படிச் சம்மதிக்கிறது என்று

யோசிக்கும்பொழுதே பிரதிநிதிகளே வரிசையாக, 'உங்கள் நாட்டின் ஜனத்தொகை என்ன? உங்கள் நாட்டின் ஜனத்தொகை என்ன?' என்று கேட்டு வந்தார்கள். தென்னாப்பிரிக்காப் பிரதிநிதியைக் கேட்டபொழுது, 'சுமார் 18 லக்ஷம்' என்றார். ஸர் வில்லியம் மயர் ஒன்றக்கும் அஞ்சாது, யாரையாவது புரளி பண்ண நேர்ந்தால் பண்ணியே விடுவார். "ஐயா, $1\frac{3}{4}$ லக்ஷம் இந்தியர்களேயும் 60 லக்ஷம் கறுப்பு ஜாதியாரையும் கணக்கில் சேர்க்காமல் அவர் சொல்லுகிருர்" என்று கூறி எல்லோரும் நகைக்கும்படி செய்தார். தென்னாப்பிரிக்காவில் ஆட்சி புரியும் வெள்ளேயர்களிடம் அவர்களுக் குள்ளடங்கிய ஜனங்களுக்கு என்ன உரிமையும் நியாயமும் கிடைக்கும் என்பது அப்போதே ஒருவாறு வெளியாயிற்று. இத்தகைய சம்பவங்கள் பிரத்தியக்ஷமாக இருந்தும் உலகத்தில் எங்கும் பரவிய மானிட வர்க்கத்தாருக்கே ஒற்றுமை உணர்ச்சி வந்துவிட்டதாகக் கருதிய என் போலியருக்கு அற்ப புத்திதான் என்பதற்கு என்ன சந்தேகம்?

## வாஷிங்டன் மகாநாடு

1921 - 22 - இல் வாஷிங்டனில் வல்லரசுகளின் பிரதிநிதிகள் கொண்ட ஒரு பெரிய சங்கம் கூடியது. அதன் உத்தேசம் இந்த அரசுகள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கப்பல் முதலிய தளவாடங்களில் வருஷத்திற்கு வருஷம் அதிகமான தொகைகளேச் செலவு செய்து நாட்டு ஜனங்களேயெல்லாம் நடுங்க வைத்துக் கிலேசப்படுத்துவதைத் தடுப்பதே. இதற்கு இந்தியாவிலிருந்து ஒரு பிரதிநிதிக் கோஷ்டி போக வேண்டுமென்று என்னேத் தலைவராகவும் எனக்கு ஆலோசனை கூறுபவர்களாக, 'ஸிவில்' பக்கத்துக்கு ஒருவரையும் 'மிலிடரி'ப் பக்கத்துக்கு ஒருவரையும் நியமித்து அனுப்பினர்கள். இங்கிலாந்திலிருந்து பிரிட்டிஷ் பிரதிநிதி கோஷ்டியாருடனே கப்பலேறிப் போனேன்.

இந்தச் சங்கத்தைப்பற்றிச் செவ்வையாகக் கவனிக்க வேண்டிய விஷயங்கள் இரண்டு. முதலாவது: பத்திரிகை நிர்வாகத்தில் காணப்பட்ட அசாதாரணத் திறமை. 'பிரதிநிதிகளுக்குப் பழைய காலத்துத் துவேஷங்களும் சந்தேகமும் கொஞ்சமும் தணியாமல் தளவாடங்களைக் குறைக்க முடியாதே' என்று வாதித்து வந்தார்கள். ஒவ்வொரு தேசத்திலும் மகா ஜனங்கள் வைத்திருந்த ஆசையை நிறைவேற்ற, வந்திருந்த பிரதிநிதிகள் இஷ்டப்படவில்லை. ஆனால் நூற்றுக் கணக்காய்க் கூட்டம் கூடியிருந்த பத்திரிகைக்காரர்களின் நிர்ப்பந்தம் காலை மாலை இரண்டு வேளையும் அதிகரித்து அவர்கள் மனத்தைக் கரைத்தது. கடைசியாக இந்த முக்கிய உத்தேசம் ஒருவாறு நிறைவேறியது, பத்திரிகைகளின் மகிமையே! உலகத்தினுடைய சரித்திரத்திலேயே ஐந்தாறு சமயங்களில்தான் பத்திரிகைகளுக்கு இவ்வளவு உயர்வு கிடைத்தது.

## சீனரிடம் பரிவு

இரண்டாவது விஷயம்: இதைப் படிப்போர்களுக்குச் சீனர்களின் பேரில் அமெரிக்கர்களுக்கு அபூர்வமான பிரீதி உண்டு என்பது தெரிந்திருக்கும். இது ஜப்பானியர் மேலுள்ள வெறுப்பாலோ சீனர்களின் குணங்களிடம் அபிமானத்தாலோ என்பதை விசாரித்து அறிய முடியாது. அவர்களிடத்தில் தயை கூர்ந்து நிறைந்த ஒத்தாசை பண்ணி சுதந்தரத்தைச் சம்பாதித்துக் கொடுக்க முயன்றனர். சீனா, குடியரசாக இருந்தாலும் ஐரோப்பிய ராஜ்யங்களுக்கும் அமெரிக்கா, ஜப்பான் ராஜ்யங்களுக்கும் அநேக விதங்களில் உட்பட்டிருந்தது. முக்கியமாய் வசூலாகும் வரிகளில் பெரும்பாகம் அந்நிய நாடுகளுக்கு; பாக்கிதான் உள்ளூருக்கு. இந்தக் கொடுமைகளாலும் ஓயாமல் நடந்து வந்த உள்நாட்டுக் கலகங்களாலும் வெகு துன்பமும் சிறுமையும் பட்டுச் சுதந்தரம் கொஞ்சமேனும் கிடையாத

தேசம் போல் சீனு தாழ்ந்திருந்தது. விலங்குகளை உடைத்துத் தேசத்தை உத்தாரணம் பண்ணி எப்படியாகிலும் சீனர்களை மற்றத் தேசத்தார் போல் உரிமைகளையெல்லாம் பயமின்றி அநுபவிக்கச் செய்ய வேண்டுமென்று அமெரிக்கப் பிரதிநிதிகளுக்குப் பெருங் கவலை. மற்ற நாட்டார் இதை அவ்வளவாக அங்கீகரிக்க வில்லை.

## பிரயோஜனப்படவில்லை

ஆயினும் அங்கிருந்த மாகாணங்களுடைய நிர்ப்பந்தம் பொறுக்க மாட்டாமல் சீனுவின் பேரில் தங்களுக்குள்ள பிடிப்பை அமெரிக்கர் தளர்த்திவிட்டார்கள். 'அமெரிக்க அதிகாரிகளுக்கும் பத்திரிகைகளுக்கும் இவ்வளவு செல்வாக்கும் அதிகாரமும் உண்டா?' என்று எனக்குப் பெரிய ஆச்சரியம் உண்டாயிற்று. 'சீனுவைக் கைதூக்கி விட்டபடி இந்தியாவையும் கைதூக்கி விடுவார்களா?' என்று எண்ணியதும் உண்டு. இந்த அற்புதமான முன்னேற்றம் கடைசியில் சீனுவுக்குக் கைகூடவில்லை. இது எல்லாரும் அறிந்த விஷயம். அங்கே வந்திருந்தவர்களில் உலக மறிந்து, 'வல்லரசுகள் பிடித்ததை விடுவது அரிதாயிற்றே. சீனுவுக்கு மோட்சம் உண்டோ?' என்று சந்தேகித்தவர் சிலர் உண்டு. நான் மட்டும் அரசியல் விஷயங்களில் அறியாமையால் பூர்த்தியாய் நம்பி விட்டேன். அந்தக் காலங்களில் சீனுவில் பிரிட்டிஷ் ஸ்தானீகராக வெகு காலம் இருந்த ஸர் ஜான் ஜார்டன் (Sir John Jordon) என்கிற ஒரு பெரிய அறிஞருடன் அடிக்கடி சம்பாஷித்தேன். இவருக்குச் சீனர்களது பாஷை, நாகரிகம், நடவடிக்கை ஆகியவையெல்லாம் தலைகீழ்ப் பாடமாகத் தெரியும்.

## ஒரு சம்பாஷணை

கொஞ்ச காலத்தில் அவரிடம் அநேக விஷயங்களைத் தெரிந்துகொண்ட பிறகு நான் அவரிடம் ஒரு

கேள்வி கேட்டேன். அதாவது, "இப்பொழுது சீனர்களுக்கு இருக்கும் சுதந்தரத்தைக் காட்டிலும் இந்தியர்களின் அடிமைநிலை (Subjection) உயர்வுபோல் காண்கிறதே" என்று. இதற்கு அவர், "ஆம் அதில் தடையென்ன?" என்றார்.

"சீனர்களுக்கு உண்மையான சுதந்தரம் கிடைக்கு முன்னர் இந்தியர்களுக்குக் கிடைக்குமா?"

"அநேகமாய்க் கிடைக்கும்."

"இதற்குக் காரணம் இந்தியாவுக்கு எஜமானன் ஒருவன். சீனாவுக்கு யஜமானன் பல பேர் என்பது தானே?"

"ஆமாம்!"

## மற்றோர் ஆசா பங்கம்

இதே காலத்தில் வேறு ஒரு சிறிய விஷயத்திலும் ஆசாபங்கம் உண்டாயிற்று. இந்தச் சமயத்தில் இங்கிலாந்தில் குடியேற்ற நாட்டு மந்திரியாக இருந்தவர் மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில். கினியாவில் வெள்ளையருக்கும் நம்மவருக்கும் தகராறு முற்றியிருந்தது. மாண்டேகுவுக்கு உதவி மந்திரி வின்டர்ட்டன் பிரபு. சர்ச்சிலுக்கு உதவி மந்திரி மிஸ்டர் வுட் (பிறகு இர்வின் பிரபுவும் ஹாலிபாக்ஸ் பிரபுவும் ஆனவர்). எனக்கு இருவரும் நன்றாய்த் தெரிந்தவர்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் கினியாத் தகராறுகளைத் தீர்க்க வேண்டிப் பேரம் வெகுவாய்ப் பேசி வுட் வின்டர்ட்டன் ஒப்பந்தம் (Wood Winterton Agreement) என்று ஒரு தஸ்தாவேஜு ஏற்படுத்திக்கொண்டார்கள். அதில் வெள்ளையருக்கும் இந்தியருக்கும் கூடிய அளவில் சமரசமாக ஷரத்துக்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் மாண்டேகுவிற்கு இந்த விஷயத்தில் பேராசை. பரஸ்பரம் உள்ள சிநேகத்தாலும், ஏதோ ஒரு சிறு

ஏற்றவினாலும் அதிகத் தைரியம் கொண்டு சர்ச்சிலை அவர் கடுமைப்படுத்தினார். சர்ச்சில் இடம் கொடுக்கவில்லை. என்றால் ஆகுமோ வென்று ஆசைப்பட்டு எனக்காகச் சர்ச்சிலிடம் போய்ப் பேட்டி கேட்டார். அவர் அதை மறுத்து விட்டார்.

இந்தச் சம்பவம் ஒரு நீதியை விளக்குகிறது. ராஜீய விஷயங்களில் உழைப்பவர், 'முழுமையும் கிடைத்தால் கிடைக்கட்டும்; இல்லாவிட்டால் ஒன்றும் வேண்டாம் (All or nothing)' என்று பிடிவாதம் செய்வது அநேகமாய்க் கேடாகவே முடியும். திலகர், சொல்வாராம்: 'வந்ததை வாங்கிவைத்துப் பாக்கிக்குச் சண்டைபோடலாமே' என்று.

## ராஜாங்க சபையில்

**1925** - ல் மற்றோர் ஏமாற்றம் எனக்கு ஏற்பட்டது. இந்தியா கவர்ன்மென்டில் அடங்கிய இலாகாக்களில் ஒன்றிலாவது காரியதரிசி, கூட்டுக் காரியதரிசி என்கிற பெரிய பதவிகள் இந்தியர்களுக்கு இல்லாமல் இருந்தது. இந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டுமென்று தீவிரமான எண்ணம் டெல்லியிலிருந் இந்தியருக்கெல்லாம் இருந்தது. அப்போதுதான ராஜாங்க சபையில் (Council of State) ஒவ்வொரு இலாகாவில் ஓர் இந்தியராவது இவ்வித ஸ்தானத்தை வகிக்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நான் பிரேரணை செய்தேன். இதைச் சபையில் விவாதிப்பதற்கு முன்பு அப்போது ஹோம் மெம்பராயிருந்த ஸர் மால்கம் ஹெயிலி (Malcolm Hailey) யுடன் கலந்து அவர் சம்மதியைக் கொண்டுதான் முயற்சி செய்தேன். 'இந்தக் காரியம் தடையின்றிக் கைகூடிற்று' என்ற ஆசையும் வைத்துவிட்டேன்.

ஆனால் விஷயம் விவாதத்திற்கு வந்த தினம், ஹெய்லி கௌன்ஸிலுக்கு வராமல் தமது காரியதரிசி

யாகிய மிஸ்டர் க்ரேரர் (Crerar.) என்பவரை விடை சொல்லும்படி திட்டம் செய்தார். அவர் என் கோரிக்கையை ஏற்க வில்லை. "இந்தியர் செக்ரடரி உத்தியோகங்களுக்குக் கூடாதென்று நாங்கள் யாதொரு கட்டுப்பாடும் செய்ய வில்லை. கிரமமாகப் பிரமோஷன் பெற்று வருவதில் இந்தியர் ஒருவர் கூட இச் சமயம் இல்லாதபடி நேர்ந்திருக்கிறது" என்றார் அவர்.

## ஹெய்லி மௌனம்

எனக்கு இது ஒழுங்கான விடை அல்லவென்று தோன்றியது. "இது அநியாயம். யோக்கியதை உள்ள இந்தியர் ஒருவர் கூடக் கிடைக்க வில்லை என்பது ஒப்புக்கொள்ளக் கூடிய சங்கதி அல்ல. இதில் ஏதோ பித்தலாட்டம் இருக்கிறது" என்று பதில் கட்சி பேசினேன். அப்போது ஸிவில் சர்விஸ் உத்தியோகஸ்தர்களுக்கு என் பேரில் வெகு ஆத்திரம். பேச்சுத் தவறியதற்கு ஸர் ஹெய்லி ஏதாவது முகாந்திரம் சொல்வார் என்று வெகு காலம் காத்திருந்தேன். எனக்கு அவர் மிக்க நண்பராதலால் அவர் ஒன்றும் பேசாமல் இருந்தது பெரிய சந்தேகத்திற்கு இடம் கொடுத்தது. அது என்ன வெனில், வைஸ்ராய் லார்ட் ரெடிங் லிபரல் வர்க்கத்தினராயினும், முக்கியமான விஷயங்களில், நமது முற்போக்கிற்குப் பிரதி கூலமாயிருந்தார். லண்டன் இந்தியா கௌன்ஸிலில் செக்ரடரி அதாவது இந்தியா மந்திரி ஸ்தானம் வகித்த லிபரல் (Liberal) கட்சியார் சிலர் நமக்குப் பொல்லாக் கேடுகளைச் செய்திருக்கிறார்கள். இந்தியாவுக்கு அதிகாரவர்க்கத்தினராய் வந்தாலும் அப்படித்தான். நம் தேச விஷயத்தைத் தொட்டால் தாராளக்கையுள்ளவர்களும் கருமி யாகிவிடுகிறார்கள்.

## காயும் கனியும்

### சாரீர சம்பத்து

என் வரலாற்றில் நான் செய்த பிரசங்கங்களைப் பற்றி விசேஷமாகச் சொல்லவேண்டும் அல்லவா? அதிகப் பிரசங்கி என்று பெயர் வாய்த்திருக்கிறதே! உண்மையில், பேசுவதில் நான் அவ்வளவு ஆதுரன் அல்லன். தீராத சமயங்களில்தான் பேசுவது; அதுவும் வேண்டிய அளவுதான். இந்திய ஊழியர் சங்கத்தில் சேர்ந்த பிறகே வெளியே வந்து பொதுக் கூட்டங்களில் பேசத் துவக்கினேன். அதற்கு முன்பாகப் படிப்பு விஷயமாக வாத்தியார் கூட்டங்களில் சிற்சில வேளைகளில் பேசியிருப்பேன். இயற்கையிலேயே கொஞ்சம் சாரீர சம்பத்து உண்டு. பால்யம் முதல் இங்கிலீஷில் அதிகப் பிழையில்லாமல் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கச் சக்தி வாய்ந்தது. இது தவிர, வெகு கவலையுற்று, அடிக்கடி தட்டாமலும் ஆ, ஊ என்று இழுக்காமலும் ஆரம்பித்ததை முடிக்காமலும் மாற்றாமலும், பேசுவதற்குச் சௌகரியம் எப்படியோ எனக்குக் கிடைத்தது.

### வீண் வைராக்கியம்

அடிக்கடி என் சிநேகிதர்களும் பிள்ளைகளும், 'எப்படி யாரிடம் பேசக் கற்றீர்கள்?' என்று கேட்பது வழக்கம். 'எங்களுக்கும் அந்த ரகசியத்தை உபதேசிக்கலாகாதா?' என்பாரும் உண்டு. எனக்கு இன்னார் குரு என்றும் எப்படி இந்த வரத்தைப் பெற்றேன் என்றும் சொல்லத் தெரியவில்லை. மந்திரமும் இல்லை; மாயமும் இல்லை. பிறப்பால் உண்டான சில அநுகூலங்களும், வழக்கமாய் நாம் செய்துகொள்ளும் உஷார்களுந்தான் திறமைக்கு மூலமானவை. நான் பேசக் கேட்போர்கள் எனக்குக் கொஞ்சமேனும் சபா கம்பம் (அதாவது கூட்

டத்தைக் கண்டு கோஷைத்தனர்) கிடையாதென்று நினைக்கிறார்கள். இது முற்றும் பிசகு. இப்பொழுதுங் கூடப் பேசுவதற்கு முன் உதறல் உண்டு. சில வாக்கியங்கள் ஆன பிறகுதான் அது நிற்கும்.

முன்னாளில் அது நிற்பதே கிடையாது. பிரசங்க விஷயங்களைப்பற்றி முன்னதாகவே நன்றாய் ஆலோசனை பண்ணி வைத்துக்கொள்வது வழக்கம். அப்பொழுதெல்லாம், 'ஏன் இதை ஒப்புக்கொண்டோம்?' என்று வெகுவாய் மன வருத்தமும் ஆத்ம நிந்தனையும் செய்து கொள்வேன். ஒவ்வொரு சமயத்தில், 'ஏதாகிலும் கடும் ஜ்வரம், கெட்ட செய்தி முதலான பெரிய விபத்துக்கள் வந்து பிரசங்கத்தை நிறுத்தாதா?' என்று பிரார்த்தனைகூடச் செய்வதுண்டு. 'இன்று ஆகிவிட்டால் இனி இந்த வழிக்கே போவதில்லை' என்று சபதம் செய்தும் இருக்கிறேன். ஆனால் இதெல்லாம் ஸ்மசான வைராக்கியம் போல உடனே விலகிவிடும்.

## அற்புதச் சுருக்கம்

முக்கியப் பிரசங்கங்கள் ஒரு மணி அல்லது ஒன்றே கால் மணி நேரம் ஆகும். அபூர்வமாய் ஒன்றரை மணியும் உண்டு. தென்னாப்பிரிக்காவில், ஜோஹானெஸ்பர்க் (Johannesburg) மாநகரத்தில், சங்கருடைய வேதாந்தத்தை எடுத்துப் பேசியபோது என்னை அறியாமல் கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் பேசினேன். எனக்கும் காலம் போனது தெரியவில்லை. சபையிலும் சற்றாவது கவனக் குறைவு காணவில்லை.

பெரிய விஷயங்களைச் சுருக்கிச் சொல்லவும் அப்பியாசம் பண்ணினேன். ஒரு தடவை இந்திய சட்ட சபையில் - சென்ற மகா யுத்தத்தின்போது - அவகாசக் குறைவைக் கண்டு ஒரே வாக்கியத்தில் அநேக அம்சங்களை 'அமைத்துச் சபையார், 'இதென்ன வேடிக்கை!' என்று சொல்லும்படி செய்தேன்.

மற்றொரு தடவை லண்டனில் வட்ட மேஜை மகாநாடு நடந்தபோது பிரதம மந்திரி மிஸ்டர் ராம்ஸே மக்டோனல்டு பேசிய பின் ஒவ்வொருவர் பேச்சுக்கும் 10 நிமிஷம் என்று அவர் வரையறை விதித்தார். ஆள்வார் மகாராஜா 45 நிமிஷம் பேசினார். மக்டோனல்டுக்குச் சொல்ல முடியாத வருத்தம். இன்னும் சிலர் இந்த வரம்பைத் தாண்டினர். நான் விதிக்கு உட்பட்டுப் பல சமாசாரங்களை அடக்கிவைத்துச் சொன்னேன். இதை, 'அற்புதச் சுருக்கம், (Marvel of compression)' என்று சிலர் புகழ்ந்தார்கள்.

## என் அநுபவங்கள்

ராஜீய வாதிகள் தங்கள் கட்சிகளை விவரிக்கும் போது பேசக்கூடாதென்று தடுக்கப்படவும் அவதூறான சொற்களைக் கேட்கவும் தயாராக இருக்க வேண்டும். அபிப்பிராய பேதங்கள் அடிக்கடி வெளியாகுமாதலால் கேட்போர் சும்மாயிருக்க மாட்டார்கள். கோபத்தால் அடிக்கடி மிதமிஞ்சிய அவமானத்திற்கும் உள்ளாக்குவார்கள். கூட்டம் நடைபெறுமலே சச்சரவாய்க் கலைவதும் உண்டு. எனக்கும் இத்தகைய அநுபவங்கள் நேர்ந்திருக்கின்றன. அநேகமாய் இவையெல்லாமே 1920-27-ஆம் வருஷங்களில் மகாத்மாவின் ஒத்துழையாமை இயக்கத்தை நான் ஆங்காங்கு எதிர்த்துக் கட்சியாடியபோது நேர்ந்தன.

## லண்டன் கூட்டத்தில்

லண்டனில் நம் இந்தியப் பிள்ளைகளுக்காக இப்பொழுது உள்ள கவர் தெரு விடுதி (Gover st. hostel), 20 வருஷங்களுக்கு முன்பு 'ஷேக்ஸ்பியர் ஹட்' என்னும் இடத்தில் இருந்தது. அங்கே ஒரு சமயம் பெரிய கூட்டத்தில் இந்த இயக்கத்தைப்பற்றிப் பேசலானேன். 'மிஸ்டர் காந்தி' என்று நான் ஒரு முறை

சொன்னபொழுது 'மகாத்மா காந்தி' என்று சொல்லும்படி கூச்சல் போட்டார்கள். 'மிஸ்டர் காந்தி என்றால் தோஷ மில்லையே' என்று சொல்லிப் பார்த்தேன். அவர்கள் கேட்கவில்லை. 'எனக்கு அவரை மகாத்மா வென்று சொல்வதில் என்ன ஆக்ஷேபம்? முழுச் சம்மதியுடனே சொல்லுகிறேன்' என்று சமாளித்து மேலே போனேன். கொஞ்ச நேரம் பொறுத்து, 'அரசியல் விஷயங்களில் சிலவற்றை விட்டு, சிலவற்றைப் பிடிப்பதே (Compromise)' நலம் என்று நியாயம் சொல்லி, 'மகாத்மாவுக்கு இதில் நம்பிக்கை போதாது' என்று விவரித்தேன். நாலா பக்கத்திலிருந்தும், 'விட்டுக் கொடுக்கக் கூடாது (No Compromise)' என்ற ஒரே சப்தம் கிளம்பிற்று. சப்தம் ஓய்ந்தவுடன், 'விட்டுக் கொடுத்தல் என்பது பாபமும் அல்ல; அறியாமையும் அல்ல; ஒழுங்கான வழியே' என்று கால் மணி நேரம் அதைப்பற்றியே பெரு நடையில் பிரசங்கித்தேன். இது முடிந்ததும், சப்தம், தடை ஒன்றும் இல்லாமல் பேச்சு முடியும்வரை கேட்டார்கள். இறுதியில் வழக்கம் போல் கரகோஷத்துடன் உபசாரம் பெற்றேன்.

## ஆக்ஸ்போர்டு மஜ்லிஸ்

சில மாதங்களானதும் ஆக்ஸ்போர்டு மஜ்லிஸ் என்னும் சபையில் பேச வேண்டி வந்தது. ஆரம்பித்தது முதல் சங்கடந்தான். அநேக வாக்கியங்களை முடிக்கவே இடம் கொடுக்கவில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால் நான் சொல்வது இன்னதென்று முடியத் தெரிந்து கொள்ளாமலே கனைத்து, மேஜையைத் தட்டிப் பெருங் கூச்சல் போட்டார்கள். அவர்களது ஆக்ஷேபம் எனது அபிப்பிராயங்களுக்கா அல்லது எனக்கேதானா என்று சந்தேகம். இந்த ஆக்ஸ்போர்டு மஜ்லிஸில் பிள்ளைகளின் இஷ்டப்படி பேசாத எவரும் தப்பி வருவதில்லை. பிறகு ஒரு தடவை கேம்பிரிட்ஜுக்குப் போனேன். அங்கும் சிறிது உபத்திரவம் உண்டு. ஆனால் ஆக்ஸ்போர்டில்

நேர்ந்த கடுமையில்லாமல், ஏதோ பேச்சு முடிந்தது என்று பேர் பண்ணினேன்.

## பம்பாய்ச் சம்பவம்

**ப**ம்பாயிலும் புனாவிலும் பேசவொட்டாமல் என்னைக் கஷ்டப்படுத்தினார்கள். பம்பாயில் நிகழ்ந்தது மிக வேடிக்கை. பிரின்ஸிபால் பராஞ்ஜபை அக்கிராசனம் வகித்தார். நாங்கள் ஹாலுக்குள் நுழைவதற்கு முன்னமேயே தாங்க முடியாத கூட்டம் புகுந்து ஓரே கோஷமாயிருந்தது. பராஞ்ஜபை இரண்டு வாக்கியங்கள் கூடச் சொல்ல முடியவில்லை. அவர் உடனே தாம் நிறுத்திக்கொண்டு என்னைச் சபைக்குக் காட்டிக் கொடுத்தார்.

நான் எவ்வளவு உரக்கப் பேசியும் கொஞ்சமேனும் கேட்கவில்லை. சப்தம் மட்டுமல்ல. கொடிய சொற்களும் பேசினர். நான் ஒரு யுக்தி செய்தேன். கூட்டத்தார் கவனிக்காமற் போனாலும் பத்திரிகைகளிலாவது சொன்ன விஷயம் வரட்டும் என்று சமீபத்திலிருந்த பத்திரிகை நிருபர்களுக்கு மட்டும் கேட்கும்படி சில வாக்கியங்கள் சொன்னேன். அருகிலிருந்த பிள்ளைகள், 'ரிபோர்ட்டும் செய்யக்கூடாது' என்று கனைத்தும் பொறுக்க முடியாமல் கூச்சலிட்டும் பயங் காட்டினர். இனி முடியாதென்று நிச்சயமானவுடன் கூட்டத்தைக் கலைத்து நாங்களே வெளியேறப் பிரயத்தனம் பண்ணினோம். பிள்ளைகள் நெருங்கிச் சுற்றிக்கொண்டு போக வழிவிடாமல், முற்றுகை போட்டார்கள். வெளி வாசற்படியில் எங்களைத் தாக்கிக் கெடுதிசெய்யத் தயாராயிருப்பதுபோல் தெரிய வந்தது. இது கண்டு நாங்கள் இருவரும் அங்கிருந்த சில நண்பர்கள் உதவியினால் பின்பக்கமாய்த் தப்பிப் போனோம். இவ்வளவு மோசமாய்க் கூட்டம் கலைந்து போனது என் அநுபவத்தில் இங்கே மட்டுந்தான்.

## கும்பகோணம் கூட்டம்

இதற்கு ஏறக்குறையச் சரியாய் எண்ணக் கூடியது கும்பகோணத்தில் நடந்த சம்பவம். என்னுடைய சொந்த ஊராயிருந்தும் கூட்டத்தில் முக்கால் பங்கு ஜனங்கள் என்னை நன்ருய் அறிந்தவர்களாயிருந்தும், சின்னபின்னம் பண்ணிவிட்டார்கள். முதல் நாள் இங்கிலீஷிலும் இரண்டாம் நாள் தமிழிலும் பேசுவதாக முன்னரே விளம்பரம் செய்திருந்தும், முதல் நாளே தமிழில் பேசவேண்டுமென்று பிடிவாதம் பிடித்துக் குறுக்கிட்டார்கள். சென்னையிலிருந்த சில காங்கிரஸ்காரர்களுடைய தூண்டுதலால் இந்தக் கேடு நடந்தது. விளம்பரப் பிரகாரம் கூட்டம் நடைபெற வேண்டுமென்று சரசமாய்த் தலைவரும் நானும் கேட்டுப் பார்த்தோம். கலவரம் பெருகவே, 'என்ன செய்யலாம்?' என்று அங்கும் இங்கும் பார்க்கையில் 'நேடிவ் ஹைஸ்கூல்' ஹெட்மாஸ்டராகிய ராவ்பகதூர் அப்புசாஸ்திரிகள் கிட்ட நின்றிருந்தவர், மேஜையண்டை வந்து கையிலிருந்த பிரம்பைக் கீழே தட்டி மேஜைமீது வைத்து, உரக்க, "ஸ்ரீநிவாசா, இப்போது நீ பேசு பார்ப்போம்" என்ருர். அவர் மிகுந்த பலசாலி. ஊரில் செல்வாக்குள்ளவர். ஏதோ மந்திரமோ மாயமோ என்று சொல்லும்படி முரட்டுத்தனம் செய்த எல்லோரும் அடங்கி என்னைப் பேசும்படி விட்டார்கள்.

## இதர இடங்களில்

திருச்சிராப்பள்ளி, மதுரை இவ் விரண்டு இடங்களிலும் சற்றுக் கலக்கம் ஏற்பட்டது. ஆனுல் எளிதில் ஓய்ந்தது. ஸ்ரீவில்லிபுத்தூர் சின்ன ஊராயிருந்தாலும் கூட்டம் அவ்விடத்தில் சரிவர நடக்கவில்லை. வந்தவர்கள் அநேகமாய் ஹைஸ்கூல் மாணவர்கள் தாம். சில ஆசிரியர்களே கண்ணடித்துக் கிளப்பிவிட்டார்கள். 'தமிழ், தமிழ்!' என்று கூச்சல்போட்டு, 'தமிழையும்

கேட்கமாட்டோம்' என்று சபையைக் கலைக்க வைத்தார்கள்.

## நியூயார்க்கில்

அமெரிக்கா போயிருந்தபோது நியூயார்க் நகரத்தில் சபைக்கு வந்திருந்த இந்தியச் சிறுவர்கள் சில கேள்விகள் கேட்டார்கள். நல்லெண்ணத்துடன் இவ்வாறு கேட்காவிடினும் என்னுடைய பிரசங்கத்திற்கு இடையூறு இல்லாமல் நேர்மையாகவே முடிந்து விட்டது.

## 'ஹிந்து எழுதியது'

இவ்விடத்தில் ஒரு விசேஷக் குறிப்பைச் சேர்க்க வேண்டும். கும்பகோணத்தில் கூட்டத்தைக் கலைக்கப் பிரயத்தனம் செய்ததையும், என்னை அவமதிப்புக்குள்ளாக்கியதையும், 'ஒழுங்குத் தவறு' என்று கண்டித்துப் பத்திரிகைகள் எழுதின. அவைகளில் 'ஹிந்து' வும் ஒன்று. அப்பொழுது ஹிந்து நிர்வாகிகளுக்கு என்னிடத்தில் பிரீதி இல்லை. ஆயினும் பொதுக் காரியங்கள் நடைபெறும் முறை எல்லோருக்கும் பொதுவானதால், அதை மீறியவர் யாராயிருந்தாலும் ஒழுக்கத்தைக் காப்பதற்காக ஏற்பட்ட பத்திரிகாசிரியர் சிட்சிக்க வேண்டியதுதான். ஸ்ரீமான் கஸ்தூரிரங்க ஐயங்கார் என் பட்சமாக எழுதலானார். ஆனால் எழுதிய பின் ஒரு பொது நியாயத்தைத் திட்டமிட்டார். அதை நான் அப்பொழுது ஒப்புக்கொள்ளவில்லை. இப்பொழுதும் ஒப்புக்கொள்ளவில்லை.

'கூட்டங்களில் பிரசங்கம் செய்யப் போகிறவர்கள் மகாஜனத்திற்குத் திருப்தியில்லாத அபிப்பிராயங்களை அவர்கள் கேட்டே தீர வேண்டுமென்று நிர்ப்பந்திப்பது யுக்தமல்ல' என்பதே அது. இது ஸ்தூலப் பார்வைக்கு மட்டும் சரிபோல் இருக்கிறது. சற்றுக் கவனித்தால் அதில் உள்ள தப்பிதம் வெளியாகும்.

வேறு ஏதோ விஷயத்திற்காகக் கூடிய சபையில் இடைவெளி கண்டு அதில் உட்பிரவேசித்து வாய்த்த சமயம் அடித்துவிடவேண்டுமென்று ஒருவர் தம் கொள்கைகளை வெளியிட்டால் இந்த நியாயத்தைச் சொல்லி அவர் பேரில் குற்றஞ் சாட்டலாம். கும்பகோணத்தில் கூட்டம் எனக்காகவென்று முன்னறிக்கையிட்டுக் கூட்டப்பட்டது. என்னையும் அங்கெல்லோரும் நன்ருய் அறிந்தவர்கள்தாம். என் பிரசங்கத்தைக் கேட்க இஷ்டமுள்ளவர்கள் வரலாம். மற்றவர் வரவேண்டாம். வந்த பிறகு என் அபிப்பிராயங்கள் யார் மனத்திற்காகிலும் புண்போல் இருந்தால், அவர்கள் விலக வேண்டியதே தவிர என்னைப் பேசவொட்டாமல் தடுப்பது நியாயம் அல்ல. மேலும் கிளர்ச்சி முற்றின போது அநேகவித அபிப்பிராயங்களையும் ஜனங்கள் பொறுமையாய்க் கேட்டறிய வேண்டியது குடியரசுக்குரிய தர்மம். 'மேல் நாட்டிலும் இப்படித்தான். இஷ்டமில்லாத பிரசங்கிகளை ஜனங்கள் அவமதித்துப் பேச்சை நிறுத்தும்படி செய்வது வழக்கம்' என்று சிலர் சாதிப்பர். இதுவும் சரியல்ல. மேனாட்டாருடைய தோஷங்களையும் நாம் மேற்கொள்ள வேண்டுமோ?

## அபூர்வ அநுபவம்
## 1922

கூட்டங்களில் பேசும் பழக்கம் உள்ளவர்களுக்கு ஏற்படும் அபூர்வமான அநுபவம் ஒன்று எனக்கும் உண்டு. அவ்வித அநுபவத்தை வருணித்து யாராகிலும் எழுதியிருப்பார்களோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. மனஸ்தத்துவ சாஸ்திரத்தை ஆராய்ச்சி செய்பவர்களுக்கு இது ஒரு பிரச்னை ஆகும். பால்டிமோர் (Baltimore) என்கிற பெரிய நகரத்தில் இங்கிலீஷ் அஸோஸியேஷன் என்ற மகா சபையில், வருஷக் கொண்டாட்டம் 1922-ஆம் வருஷத்தில் நடந்த போது என்னை முக்கியப் பிரசங்கியாக அழைத்

தார்கள். இது மிக்க பெருமை யென்று எண்ணி, விஷயத்தைப்பற்றி வெகு நேரம் ஆழ்ந்து யோசனைகள் செய்து அம்சங்களை வரிசையாக மனத்தில் அமைத்து, ஒரு நாளும் இல்லாத முன் தயாரிப்புடன் போய்ச் சேர்ந்தேன். பெருங்கூட்டம். மனம் கலங்கிற்று. வழக்கமான சபா கம்பம் பதின்மடங்கு அதிகரித்தது. எழுந்து இரண்டு வாக்கியங்கள் வெளியிட்டவுடன் ஏதோ கனமான திரை போட்டதுபோல் திட்டம் பண்ணி யிருந்த பிரசங்கமெல்லாம் மறைந்து விட்டது. என்னமோ விபரீதம் வந்ததென்று பயந்து எப்படியாகிலும் ஞாபகம் திரும்பாதா என்று இரண்டு மூன்று வாக்கியங்கள் வாயில் வந்தபடி சொல்லிப் பார்த்தேன். பிரயோஜனப்படவில்லை.

## எதிர் பார்க்காதது

அர்த்தத்தை அவ்வளவாகக் கவனியாமல் மறுபடியும் இரண்டு வாக்கியம் வாயால் உச்சரித்தேன். அப்பொழுதும் யோசித்த விஷயம் தோன்றாமல் வேறு ஒரு விஷயம் மனத்தில் உதயமாயிற்று. வேண்டாமென்று அதை ஒதுக்க வலிமையும் இல்லை; அவகாசமும் இல்லை. அதையே வைத்துக்கொண்டு, அம்சம் உபாம்சம் எல்லாவற்றையும் அப்போதைக் கப்போது விவரித்துப் பிரசங்கத்தை முடித்தேன். 'இன்று குழியில் விழுந்தோம்' என்று நான் மனத்தில் வருத்தத்தை அடைய, சபையாரோ கரதாளம் செய்து மிகவும் மெச்சினார்கள். கூட்டம் கலைந்த பிறகு அநேகர் - ஆண், பெண்கள் - தனித்தனியாகவும் வந்து கைகுலுக்கிக் கொண்டாடினார்கள். இதெல்லாம் எனக்கு மாயமாகவே காணப்பட்டது.

வெளியே வந்து வீடு சேர்ந்த பிறகு மெலிந்த ஸ்வரத்துடன் என் காரியதரிசி பாஜ்பேயை மெதுவாய்க் கேட்டபோது அவர், 'எல்லாம் சிறப்பாய்த்

தான் இருந்தது; வழக்கம் போலவே இருந்தது. ஏதோ அந்தச் சமயத்தில் ஒவ்வொரு கணமும் யோசனை செய்து பேசியதாகச் சற்றேனும் தோன்றவில்லை' என்று அநேக விதமாய்த் தைரியம் சொல்லி என்னைத் தேற்றினார். உண்மையில் இன்று வரை நான் அங்கே சொன்ன விஷயம் இன்னதுதான் என்று தெளிவாக நினைவுக்கு வரவில்லை.

## மீண்டும் ஒரு முறை

இவ்வகை மறதி வெகு நாள் நேராமல் சுமார் மூன்று வருஷங்களுக்கு முன்னால் ஒரு முறை தலை காட்டியது. புரொபஸர் எம். ரங்காசாரியாருடைய உருவப் படத்தை மயிலாப்பூர் ரானடே ஹாலில் திறந்து வைப்பதாக ஒப்புக்கொண்டு, அவர் பேரில் எனக்கு அத்யந்த கௌரவமும் அபிமானமும் இருந்ததால் பிரசங்கத்துக்கு நன்றாய் முன் யோசனைகள் எல்லாம் செய்து ஏற்பாட்டுடன் ஸ்தலத்திற்கு வந்தேன். ஓர் அம்சம் சரியாகச் சொன்னேன். உடனே திரை விழுந்து மூடிற்று. கிரமமாக வைத்திருந்த அம்சங்களெல்லாம் போக எதையோ என் உள்ளம் அறியாது சொல்லிச் சமாளித்தேன். தலை கனத்து, புத்தி மயங்கி, சரீரம் எல்லாம் வியர்த்து விறு விறக்க வண்டியில் உட்கார்ந்து ஸ்ரீ வெங்கடராம சாஸ்திரிகளுடனும் மற்றும் இரண்டு நண்பர்களுடனும் சவாரி போகும்போது அழமாட்டாத குறையாய்ப் பிரசங்கம் கெட்டுப்போனதை க்ஷமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அவர்கள், "பிரசங்கம் கெடவில்லையே. 'வழக்கத்திற்குமேல்' என்று சொல்லலாமே தவிர ஒன்றும் குறைவில்லையே என்று நிச்சயமாய்ச் சாதித்தார்கள். எனக்குப் பால்டிமோர் ஞாபகம் வரவே 16 வருஷம் கழித்து அதே அனுபவம் மறுபடியும் நேர்ந்தது வெகு ஆச்சரியமென்று சொல்லிச் சொல்லி வியந்தேன்.

## இப்போது விசாரித்ததில்

இப்போது நன்றாய் விசாரித்ததில் நான் தீர்மானித்து வைத்திருந்த அம்சங்களில் இரண்டுதான் சொல்லப்பட்டன வென்றும் மற்றவையெல்லாம் அப்போது தோன்றியவையென்றும் தெரிகிறது. எனக்குச் சுயமான அறிவு மட்டும் அந்தக் காலத்தில் இல்லை. சொந்த மூளையின் கோளாறனபடியால் அதைச் சரிவர எடுத்துரைக்க முடியவில்லை. என் வசத்திலுள்ள முதல் பக்ஷமான புத்தி மேலிட்டதுபோல் தோன்றுகிறது. இந்த உபாதி இந்த இரண்டு சந்தர்ப்பங்களில் தான் கடுமையாய் என்னைப் பாதித்தது. வேறு இரண்டொரு சமயங்களில் கொஞ்சம் தோன்றி உடனே மறைந்து விட்டது.

## புத்திக் குழப்பம்

இந்தப் புத்திக்குழப்பம் அநேக ஜனங்களுக்கு நேர்ந்திராது. அவர்களுக்கு இப்படி உண்டாவென்று கொஞ்சம் அவநம்பிக்கையும் தோன்றலாம். இது போன்ற சில சாதாரண அநுபவங்களைக் குறித்துக் காட்டினல் நம்பிக்கை உதிக்கலாம். கள் குடிப்பவர்களில் சிலர் செய்கைகளைப் பார்த்தால் ஒரு விஷயம் தெரியும். நல்ல புத்தியுடன் வீடு போய்ச் சேருபவர் போல், அதிகமாய் அப்படியும் இப்படியும் ஆடாமலும் தாமே பிதற்றாமலும் எதிர் வரும் வண்டி முதலியவற்றைக் கண்டு ஒதுங்கித் தப்புவர். தூங்கியெழுந்த பிறகு நினைத்து, 'மயக்கத்துடன் எப்படி வழியில் நடந்தேன். என்ன என்ன நேர்ந்தது?' என்று ஞாபகமில்லாமல் திகைப்பர். எல்லாவற்றையும் அறிந்து நாயகம் செய்கிற புத்தி, உறங்கினாலும், நீடித்த வழக்கத்தைக் கொண்டு காலத்திற் கொத்த காரியங்களைச் செய்யும் புத்தி மற்றொன்று இருந்தே வருகிறது. இவ் விரு புத்திகளும் சில சந்தர்ப்பங்களில் ஒரே பிராணியிடங் கூட இருக்க வேண்டாம்

இரவில், நாம் சாலைகளில் வண்டி போவதைக் கவனித்தால் இரு வகை நிகழ்ச்சிகள் தென்படும். ஓட்டுபவன் விழித்துக் குஷியாயிருந்தால் பாடுவான்; மாடுகளுடன் கொஞ்சிப் பேசுவான்; விரட்டுவான்; மெதுவாய்ச் செலுத்துவான்; ஒதுக்க வேண்டிய வேளைகளில் ஒழுங்காய்ப் பார்த்து ஒதுக்குவான்; மூக்கணாங் கயிற்றைக் கெட்டியாய்ப் பிடித்து இழுப்பான்; தளர்த்திவிடுவான். ஓட்டும் வித்தையில் தனக்குத் தெரிந்ததை யெல்லாம் காட்டுவான். சில சமயம் கயிற்றை முளையில் மாட்டிவிட்டுப் படுத்துத் தூங்குவான். அப்பொழுதுங் கூட மாடுகள் - நன்றாகப் பழகிய வழியாதலால் - ஆங்காங்கு மேடு கொடிகளுக்குத் தக்கபடி நடந்து ஒதுங்க வேண்டிய காலங்களில் ஒதுங்கி எப்படியோ கேடில்லாமல் ஊர் போய்ச் சேருவது உண்டு. வண்டிக்காரன் விழித்த பிறகு மாடுகளை அவிழ்க்கும்போது, "நான் தூங்கினாலும் நீங்கள் நேராய் வந்து சேர்ந்தீர்களே!" என்று சந்தோஷித்து மாடுகளைத் தட்டிக் கொடுப்பான். ஏதோ இவ்வகையில்தான் நமக்கும் ஒவ்வோர் அவஸ்தையில் நோயாலோ, கொடிய விசாரத்தாலோ அளவுக்கு மிஞ்சி யோஜனை செய்வதாலோ மேலான நாயக புத்திகளைத் துப் படுக்கிறது. கீழ்த்தர வழக்க புத்தி நிகாவைத்து மனிதரைக் காட்டிக் கொடாமல் நிகழும் வியாபாரத்தை ஒழுங்கு முற்றும் தவறாமல் இரண்டாம் பக்ஷமாய் முடித்துக் கொடுக்கிறது. நவீன மனத்தத்துவ நிபுணர்கள் இரு வகைப் புத்தி வெவ்வேறாக உண்டு என்று சொல்லமாட்டார்கள். ஒரே புத்திதான் சமயோசிதமாய் இரு விதமாயும் வேலை செய்கிறது என்பார்கள்.

## பிரசங்கங்கள்

இந்தப் பகுதியில் நான் செய்த பிரசங்கங்களில் எவை இயற்கையாகவே உயர்தரமானவையோ, எவை சிறந்த பலனைக் கொடுத்தனவோ, எவை மூலம் எனக்குப் புகழ் கிடைத்ததோ அவற்றைக் குறித்து எழுத

உத்தேசிக்கிறேன். நான் ஹிந்து ஹைஸ்கூலை விட்டுப் போகும்போது பிள்ளைகளும் மித்திரர்களும் கூடிப் பெரிய உபசாரணை செய்தார்கள். என்னிடத்தில் இவர்களுக்கெல்லாம் மெத்தப் பிரியம் உண்டு என்று அநேக விதமாய் வெளியாயிருந்த போதிலும் அன்று எல்லாம் திரண்டு உருவம் அளித்தது போல் பிரகாசமாயிற்று. பிரிவதில் உள்ள துக்கம் பொறுக்க முடியாமல் இருந்தது. முடிவில் உபசாரத்திற்கு நன்றியை வெளிப்படுத்தி விடை கேட்கும்போது என் பேச்சில் மன வருத்தமே முன் நின்றது.

## ஹிந்து ஹைஸ்கூல் பிரிவுபசாரம்

என் பிரசங்கத்தைச் சோபிக்கச் செய்தது ஒரு ராமாயண சந்தர்ப்பம். கேட்டவர் மனத்தை அது கவர்ந்தது. ஸ்ரீ ராமர், 'காட்டுக்குப் போகிறேன்' என்று கௌஸல்யையிடம் சொல்லிக்கொள்ளப் போன பொழுது அவர் வெகுவாய்த் தடுத்தும் கேட்காமல், 'போகவே வேண்டும்' என்று பிடிவாதம் பிடிக்க அவ்வம்மணி, 'போய் வா' என்று அனுமதி கொடுத்தார். அப்பொழுது மகனுக்கு அநேக விதமான ஆசிர்வாதங்களும் அளித்தார். அதில் ஒரு வசனம் கம்பீரமும் அழகும் கூடியது. 'இவ்வளவு தைரியத்துடனும் நியமத்துடனும் எந்தத் தர்மத்தை நீ மேற்கொள்ளுகிறாயோ, அந்தத் தர்மமே உன்னைப் பூரணமாகக் காப்பாற்றுமாக'' என்பது.

यं पालयसि धर्मं त्वं धृत्यां च नियमे न च ।
सवै राघवशार्दूल धर्मस्त्वां मभि रक्षतु ॥

''யம் பாலயஸி தர்மம் த்வம் த்ருத்யாம்ச நியமேனச.

ஸ, வை ராகவ சார்த்தூல தர்மஸ்த்வாம் அபிரக்ஷது!''

இந்த உதாரணத்தை மற்ற அநேகர் சிலாகித்த போதிலும் மஹாமஹோபாத்தியாய பண்டிட் சுவாமிநாதையர் கிட்ட வந்து அவர் ஸ்வபாவத்தை யொத்து மெதுவாயும் அன்பாயும், "அந்தக் கௌஸல்யையின் மேன்மையான வாழ்த்தை எடுத்து உரைத்தது வெகு அழகாயிருந்தது; மனம் இளகாதவர் இருக்க மாட்டார்" என்று சொன்னார்.

## மற்றொரு பிரசங்கம்

மற்றொரு சமயம் ராமாயண ஸ்லோகம் சொல்லியே ஒரு பிரசங்கம் சிறப்படைந்தது. திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் சொஸைட்டி என்னும் ஸ்தாபனத்திற்கு நான் சில வருஷங்கள் பிரஸிடென்டாக இருந்தேன். அப்பொழுதெல்லாம் இந்த ஸ்தாபனத்தின் வேலை எல்லாம் வெகு தொல்லை. நிர்வாகம் செய்து வந்த டைரக்டர்களுக்கும் சம்பளம் வாங்கிய காரியதரிசிக்கும் பொழுது விடிந்தால் தூஷணமும் சாபமுந்தான். சாமான்களை வாங்குவதில் சிலர் லாபம் சம்பாதித்தும் வாங்கிய சாமான்களில் மேலானவற்றைத் தாங்கள் முதலாகவே எடுத்துக் கொண்டும் வேறு சில அநுகூலங்களை அடைந்தும் ஒழுங்கு தப்பி இருந்தோமென்ற குற்றச் சாட்டுகளுக்கு ஜவாப் சொல்வதிலேயே எங்களுக்குப் பொழுது போயிற்று.

## தப்பிய விதம்

பொது மெம்பர் கூட்டங்களில் கேட்கும் கேள்விகளும் பிரேரணம் செய்யும் தீர்மானங்களும் வாதாடும் கட்சிகளும் நாகரிகம், மரியாதை இவை யாவற்றையும் கடந்தவை. இவ்வாறு காரியதரிசியையும் என்னையும் பலவிதமாய் அவதூறு சொல்லிக் கேவலம் செய்தவர் ரங்காச்சாரி, ராஜு சாஸ்திரி, ராமஸ்வாமி ஐயர் என்ற

மூவர். ஒரு கூட்டத்தில் இவர்களுடைய கொடுமையைப் பொறுக்காமல் ராவணனிடத்தில் மாரீசன் சொன்ன வசனத்தை மொழிந்தேன். தன்னை ஒரு கால் பாணங்களால் பிடித்து வெகு தூரத்திற் கப்பால் தூரத்தி யடித்த ராமனை நினைத்தாலுங்கூட நடுக்கம் என்று சமத்காரமாய் வருணிக்கும்பொழுது, "ராமன் பெயரின் முதலெழுத்தான 'ர'காரத்தை முதலெழுத்தாயுள்ள எந்தச் சொல்லாயிருந்தாலும், அதாவது ரத்னம், ரதம், என்ற சொல்லாயிருந்தாலும் என்னை நடுங்க வைக்கின்றது" என்று மாரீசன் முறையிட்டான்.

रकारादीनि नामानि रामत्रस्तस्य रावण ।
रत्नानि च रथाश्चैव संत्रासं जनयन्ति मे ॥

ரகாராதீனி நாமானி ராமத்ரஸ்தஸ்ய ராவண ।
ரத்னானி ச ரதாஶ்சைவ ஸந்த்ராஸம் ஜனயந்தி மே ॥

இந்தச் சுலோகத்தைச் சொன்னதும் சபையோர் 'கொல்'லெனச் சிரித்து அப்போதைக்குச் சாந்தமாக இருந்தனர்.

## சாமான்யர் சார்பாக

ஏறக் குறைய இதே காலத்தில்தான் பிரஸிடென்ஸி காலேஜில் ஏதோ ஒரு விசேஷ சந்தர்ப்பத்தில் ஒரு பிரசங்கம் செய்தேன். ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அப்போது அக்கிராசனம் வகித்தார். மார்க் ஹன்டர் முதலிய அறிஞர்கள் கூடினார்கள். பிரசங்க விஷயம் 'சாமான்யர் சார்பாக (In defence of mediocrity)' என்பது. இந்தத் தலைப்பைப் பார்த்தவருக்கெல்லாம், 'என்ன சொல்லப் போகிறாரோ?' என்ற ஆவல் மிகுதியாய் இருந்தது. 'உலகத்தில் உத்தமர் என்று பெயர் பெற்றவர் சாமான்யரை அலக்ஷ்யமாய்ப் பேசுவதும் கருதுவதும் வழக்கம். இது நியாயம் அல்ல. இயற்கைச்

சாஸ்திரம், சரித்திரம், இலக்கியம் முதலிய கல்வித் துறைகளில் முதல் ஸ்தானம் பெற்றவர்கள் தங்களுடைய செயல்களைத் தாங்களே பிரசித்தப்படுத்துவது முடியாது. சாமான்யர்கள் தாம் தங்கள் சக்திக்கும் அறிவுக்கும் ஏற்றவாறு பெரிய தத்துவங்களைத் தாங்கள் தெரிந்துகொண்டு உலகமெல்லாம் பரவச் செய்கிருர்கள். உத்தமர்களுடைய குணங்களும் பெருமையும் கூடச் சாமான்யர் இல்லாவிடில் சோபிப்பது அரிது. புத்திமான்கள் தம் சிஷ்ய பரம்பரைகளை ஆதரித்து அவர்களால் கிடைக்கும் நன்மையைத் தலையால் கொண்டாடித் தங்கள் மனம் ஒப்பி நன்றி செலுத்த வேண்டும்.' இவ்விதமாய் வேடிக்கை வசனங்களைக் கலந்து உண்மையான அபிப்பிராயத்தையும் வெளியிட்டேன். சபையோர் வழக்கம்போல் மெச்சினர்.

கிருஷ்ணஸ்வாமி ஐயர் மிகவும் தோத்திரம் செய்தார். மார்க் ஹன்டர் வந்தனம் அளிக்கும்பொழுது முத்துப் போன்ற அழகிய சொற்களால் என்னைப் புகழ்ந்தார். கிருஷ்ணஸ்வாமி ஐயரும் மார்க் ஹன்டரும் சிறந்த ரஸிகர்களாதலின் அந்தக் கூட்டம் இப்போதும் என் நினைப்பை விட்டு அகலவில்லை.

## சென்னைச் சட்ட சபையில்

சென்னைச் சட்ட சபையில் ஒரு சமயம் வரவு செலவுத் திட்டம் அங்கத்தினர் பரிசலனைக்கு வந்தபோது கல்வி இலாகாச் செலவில் ஓர் இனம் தகாது என்று நான் ஆக்ஷேபித்தேன். அது என்னவெனில், பிரஸிடென்ஸி காலேஜில் இங்கிலீஷ் புரொபஸராயிருந்த மார்க் ஹன்டர் (Mark Hunter) என்பவருக்கு மட்டும் வேறு ஒருவருக்கும் இல்லாத அலவன்ஸ் (Special personal allowance) ஆக மாதம் 250 ரூ. அளிக்கக் குறிப்பிடப்பட்டிருந்தது. அப்போது சென்னைப் பொக்கிஷ அங்கத்தினர் (Finance member) கட்சியாடுவதில் நிபுணரான ஸர் ஹாரல்ட் ஸ்டுவர்ட்

(Sir Harold Stuart) என்பவர். ஆக்ஷேபங்களுக்கெல்லாம் சமாதானம் சொல்லுங்கால் இந்த இனத்தைப் பற்றிக் கூறியது பின் வருமாறு: 'அநேக கோடி ரூபாய்த் திட்டத்தில் 250 ரூபாய் ஒரு பொருட்டாகுமா? இதற்கு ஆக்ஷேபம் சமாதானம் சொல்வது இச் சபையின் காலத்தை வீணாக்குவதாகும்.' அடுத்தபடி எனக்குப் பேசும் முறை கிடைத்ததும், 'இனத்தின் தொகை பெரிதல்ல என்பது உண்மைதான். ஆனால் அது நியாயமா, தர்மமா, என்று விசாரிப்பது நம் கடமையே' என்று வழக்கிட்டு, 'மிட்ஷிப்மன் ஈஸி' (Midshipman Easy) என்னும் இங்கிலீஷ் கதையிலிருந்து ஒரு சந்தர்ப்பத்தை எடுத்து உரைத்தேன். அந்தக் கதையில் ஒரு கன்னிப் பெண் குழந்தையைப் பெற்றெடுக்கவே, 'இதென்ன கேடு?' என்று கேள்வி பிறக்க, 'ஐயோ பாவம், மிகவும் சிறிதாச்சே!' என்று சொல்லி அவள் தப்பப் பார்த்தாள் என்பது. இதைக் கேட்ட எல்லோரும் நகைத்தனர். சபை கலைந்ததும் ஸர் ஹாரெல்ட் ஸ்டுவர்ட் என்னிடம் வந்து, "என்ன? என்னைப் பெருங் கேலி பண்ணிவிட்டீரே!" என்று விளையாட்டாகச் சொன்னார். ஹிந்துப் பத்திரிகையில் இதைத் தலையங்கத்தில் குறிப்பிட்டுச் சிலாகித்தார்கள்.

## ருது மதி விவாகம்

நான் சென்னைச் சட்ட சபை அங்கத்தினனாயிருந்த பொழுது ருதுமதி விவாகத்திற்குச் சட்டத்தில் அநுமதி கிடைக்க வேண்டுமென்று ஒரு மசோதாவைக் கொண்டு வந்தேன். சட்ட நிபுணர்கள் பலரை இதற்காகக் கலந்து பேசினேன். இவர்களுள் முழு மனத்துடன் ஒப்புக்கொண்டவர் ஜஸ்டிஸ் சதாசிவையர். இது அநாவசியமென்று சிலர் நிறுத்தவும் பார்த்தார்கள். பம்பாயில் பேர் பெற்ற, 'இந்தியன் • சோஷல் ரிபார்மர்' பத்திரிகையின் ஆசிரியர் கே. நடராஜன், 'இந்த

மசோதா வீண்' என்று பலமாய் வாதித்தார். ஆயினும் நான் சபையில் அநுமதி கேட்கத் தீர்மானித்துச் சாதக பாதகங்களை முடிந்த அளவுக்குச் சர்ச்சை செய்தேன். இந்தப் பேச்சு மேலான விஷயத்துக்குத் தக்கபடி மேலான சிறப்புடன் இருந்ததென்று அநேகர் நல் வார்த்தை கூறினார்கள். மசோதாவுக்கு அநுமதி கிடைத்ததே தவிர மேல் காரியம் ஒன்றும் நடைபெறவில்லை.

## சாம்ராஜ்ய சட்ட சபை
## 1916

**1916** - ஆம் வருஷம் நான் சாம்ராஜ்ய சட்ட சபை (Imperial Legislative Council) அங்கத்தினனானேன். இங்கே அடிக்கடி பேசுவதற்கு எனக்கு அவகாசம் கிடைத்தது. முக்கியமாய்ச் சர்க்கார் இலாகாக்களின் மேல்தர உத்தியோகங்களில் இந்தியர் தொகை தகுந்தபடி இல்லையென்று வாதித்து, நியமன விகிதத்தை ஜாஸ்தி யாக்க வேண்டுமென்று கட்சியாடினேன். ஒவ்வோர் இலாகாவையும் எடுத்துக்கொண்டு சோதித்தபடியால் நிர்வாக சபையாருக்கும் எனக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டது. உள்நாட்டு விவகார அங்கத்தினர் ஸர் வில்லியம் வின்ஸெண்ட் (Sir William Vincent) என் கட்சி என்னவென்று முன்னதாகவே என்னிடம் வந்து கேட்டுக்கொள்வார். "உங்களைப் போல் தஸ்தாவேஜுகளைப் படித்துத் தயார் செய்து கொள்வது கஷ்டம்" என்பார் அவர். இந்திய சிவில் சர்விஸ் இலாகாவைக் கவனிக்கையில் அந்த இலாகா உத்தியோகஸ்தர்களுக்கு வசதிகளும் சலுகைகளும் அளவுக்கு மீறியவை என்று நான் வாதாடும்போது அந்த உத்தியோகஸ்தர்களுக்கு ஸர்க்கார் அளித்திருக்கும் ஒட்டுச் சம்பளங்கள் (Allowances) இன்னின்னவென்று ஏழெட்டைக் குறித்து, 'பஸ்டு அலவன்ஸ்' என்றும் உண்டு என முடித்தேன். சபையோர் நகைத்தனர். இதற்கு ஜவாபு சொன்ன ஜேம்ஸ் டுபுலே (James

DuBoulay) என்கிற உள்நாட்டு விவகாரக் காரியதரிசி தட்டுத் தடுமாறியதால் சிவில் சர்விஸ்காரர்களுக்கு மன வருத்தம் உண்டாயிற்று. டூபுலே சொன்னவற்றில் சுவையுள்ள ஒரு விஷயத்தை இங்கே குறிக்க விரும்புகிறேன். "அநியாயச் சம்பளம் என்று போராடியவர் சாதாரண மனிதரா யிருந்தால், நான் சரியானபடி பதில் சொல்வேன். சாஸ்திரியார் இந்திய ஊழியர் சங்கத்தில் அங்கத்தினராதலால் அவரிடம் நம் கட்சி செல்லாது என்று அஞ்சுகிறேன்."

## நான்காம் பாதம்
## 1918

**1918** - ஆம் வருஷம் இந்தியாவுக்கு மிக்க சங்கடம் விளைந்த காலம். நம் நாட்டு முன்னேற்றத்திற்காக **1917** - ஆம் வருஷத்தில் ஆகஸ்டு மாதத்தில் வெளியான மாண்டேகுவின் அறிக்கையை நிறைவேற்றுவதற்காகச் சீர்திருத்த யோசனைகள் பிரசுரமானது முதல் சில தலைவர்கள் இவைகளுக்கு அநுகூலமாயும் வேறு சிலர் பிரதிகூலமாயும் பிரிந்து தேசம் இரண்டுபட்டது. இதுவரை ஒன்றாயிருந்த காங்கிரஸ் இந்த வருஷத்தில் பிளந்தது. இந்தக் கலக்கம் போதாதென்பதுபோல் ரௌலட் மசோதா (Rowlat Bill) என்ற குரூரமான சட்டத்தை நிறைவேற்ற இந்திய அரசாங்கத்தார் பிரயத்தனம் செய்தார்கள். இந்தச் சட்டத்தின் விவரம் தெரிந்தவுடனேயே எங்கும் பயமுண்டாகிப் பெரிய கிளர்ச்சி ஏற்பட்டது. இதில் சேராத அரசியல் வாதிகளே இல்லை. மகா யுத்தத்தில் இந்தியா பெருத்த உதவி செய்ததென்று வெகுவாய்க் கொண்டாடி தக்க வெகுமதி வருமென்று ஜனங்கள் ஆசையாய்க் காத்திருக்க, சோற்றுக்குத் திறந்த வாயில் மண்ணைப் போடுவது போல ரௌலட் மசோதா யாவரையும் நடுங்கச் செய்யும் பூதம் போல் வெளியாயிற்று. அநேக வருஷங்க

ளாக வங்க தேசத்தில் பயங்கர இயக்கம் மேலோங்கி இருந்தது; மாண்டேகு செம்ஸ்போர்டு திட்டம் வெளி வந்ததும் அது அடங்கியது.

## எங்கும் அதிருப்தி

மசோதாவை விளம்பரம் செய்தபோது நாட்டில் கடுமையான கலக்கம் ஒன்றும் இல்லை. 'பூரண அமைதி இருக்கும்போது இவ்வாறு கொடுமை செய்வானேன்?' என்று எல்லோருக்கும் யோசனை. ஸர்க்காருடைய எண்ணம் வெகு கெடுதலா யிருக்க வேண்டுமென்று எங்கும் சந்தேகமும் அதிருப்தியும் பரவின. ஆகையால் சட்ட சபையில் மசோதா விவாதத்திற்கு வந்ததும் ஒரு நாளும் இல்லாத விநோதம் ஒன்று காணப்பட்டது. உத்தியோக வர்க்கத்தைச் சேராதவர் அனைவரும், ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டவரும், ஸர்க்காரால் நியமிக்கப்பட்டவரும், ஒருவர்கூட நீங்காமல் ஒற்றுமையாக எதிர்த்தார்கள்.

## மசோதாப் பிரிவுகள்

இந்த மசோதா அநுஷ்டானத்திற்கு வந்தால் நாட்டில் நிர்வாகத்தினருக்குக் கட்டில் அகப்படாத அதிகாரம் வரும். ஜனங்களை எவ்வித நிர்ப்பந்தத்திற்கும் உள்ளாக்கலாம். குற்றம் சாட்டிக் கோர்ட்டு முன்பாக விசாரணைக்குக் கொண்டு வராமலே எவ்வளவு காலம் வேண்டுமானாலும் சிறையில் போட்டு வைக்கலாம். இப்படி ஒரு பகுதியின் பிரிவுகள். மற்றொரு பகுதியின் பிரிவுகள் கோர்ட்டை முற்றும் நீக்காவிட்டாலும் நியாய முறையையும் ஒழுங்கையும் மிகவும் முறித்து நியாயம் கிடைக்காத வழியைத் தழுவின. பிரஜைகளின் சுதந்தரங்களைக் கண் விழித்துக் காக்கும் ஜட்ஜுகளுக்கே நுழைய இடங் கொடாத சட்டம் என்ன சட்டம். இதற்குச் சம்மதித்தால்தான் சுதந்தர உரிமைகளுக்கு இந்தியர் தகுதியானவரென்று ருஜு

ஏற்படுமென்று ஸர் வில்லியம் வின்ஸெண்ட் துணிந்து சொன்னார்.

## ஆண் புலிப்பால்

மசோதாவிற்கு எத்தனை விதம் முட்டுக்கட்டை போடலாமோ அத்தனை விதமும் போட்டோம். இதைச் சட்டமாக்குவதற்கு அப்பொழுதுதான் இரவிலும் சபை கூடியது. நான் அடிக்கடி பேச நேர்ந்தது. அதில் இரண்டு சந்தர்ப்பங்களில் விஸ்தாரமாகப் பிரசங்கித்தேன். நேரில் கேட்டவர்களும் பிறகு பத்திரிகைகளில் படித்தவர்களும் மசோதாவுக்கு வலுத்த கண்டனம் இதுதான் என்று ஒரு மனதாய்ச் சொன்னார்கள். இந்தச் சமயத்தில்தான் விசித்திர மான உதாரணம் ஒன்றை நான் எடுத்துக் கூறினேன். ஸர் வில்லியம் மயர் எங்களை மயக்கி, தேசத்திற்குச் சுதந்தரம் கிடைக்குமென்று ஆசை யூட்டி, பணம் முதலான சகாயங்களைப் பெற்றதை மனத்தில் வைத்து ஆராத துக்கத்துடன், 'எங்களைச் சோதிப்ப தற்காகக் கடுமையான வேலைகள் கொடுத்தீர்கள். அவைகளைச் செய்து முடித்ததும் இன்னும் கடினமான வேலையிட்டீர்கள்; அவற்றையும் செய்தோம். "புலிப்பாலைக் கொண்டு வாருங்கள்" என்று உத்திரவிட, எப்பாடு பட்டோ கொண்டு சேர்த்தோம்; "இது பெண் புலிப் பால், ஆண் புலிப்பால் அல்லவா கேட்டோம்?" என்கிறீர்களே! இது அடுக்குமா?' என்று முறையிட்டேன். கொஞ்ச காலத்திற்கு இதுவே டில்லியில் பேச்சாக இருந்தது. உத்தியோக வர்க்கத்தினர்-சில வெள்ளையருங்கூட - என்னிடம் வந்து, 'இப்போதே ஓட்டுக் கொடுத்தால் உங்கள் பக்ஷமே போடுவோம்' என்றனர்.

## மகாத்மாஜி எழுதியது

மேல் தட்டில் (Gallery) உட்கார்ந்து பார்த்தவர்களுள் மகாத்மா காந்தி ஒருவர். அவர் பின்பு அடியிற்

கண்டவாறு எழுதினர்: 'சாஸ்திரியார் செய்த உஷ்ணமான சொற்பொழிவை, செம்ஸ்போர்ட் பிரபு அவர் பேரில் இருந்த பார்வையைச் சற்றேனும் திருப்பாமல், கவனித்துக்கொண் டிருந்தார். அவர் முக ஜாடையைப் பார்த்து, மசோதாவை வாபஸ் வாங்கி விடுவார் என்றே நம்பினேன்.' ஆனால் இந்த நம்பிக்கை வேறு ஒருவருக்கும் இல்லை. எனக்கும் இல்லை. எனக்கோ இரவெல்லாம், 'இதை ஏன் சொன்னோம்? அதைச் சொல்ல வில்லையே!, இப்படிச் சொன்னதை அப்படிச் சொல்லியிருக்கலாதா?' என்றெல்லாம் அதிருப்தி ஏற்பட்டு, நன்றாய்த் தூங்க வில்லை. மறு நாள் காலையில் ரெயில்வே கமிட்டியார் கூடிய போது அதன் தலைவராகிய ஸர். வில்லியம் ஆக்வொர்த் (Sir William Ackworth) என்பவரும் மற்ற அங்கத்தின ரும் என் பிரசங்கத்தைப்பற்றிச் சற்று நேரம் வெகு உற்சாகத்துடன் சிலாகித்தார்கள். "நீர் ஒரு நாளும் இப்படிப் பேசின தில்லையாமே! நேற்றிரவு ஹோட்டேல் முதலிய இடங்களில் இதுவே பேச்சு" என்று சொன்னார்கள். அப்பொழுதுதான், என் பேச்சு - எனக்கு எப்படித் தோன்றினாலும் - சபையோருக்கு உகப்பா யிருந்ததென்று தெரிய வந்தது.

## ஓர் சாபமா?

தேசமெங்கும் பெருங் கிளர்ச்சி உண்டாகவே சர்க்கார் ஏதோ இரண்டு மூன்று முக்கியாம்சங்களை விட்டுக்கொடுத்தார்கள். அதனால் எங்கள் எதிர்ப்புக் குறையவே இல்லை. முடிவில் சட்டத்தைச் செய்து கொண்டார்களே யொழிய அதை ஒரு தடவைகூட அமலுக்குக் கொண்டு வரவில்லை. 'அதில்லாமலே ராஜ்யம் நடத்திக்கொள்ள முடிந்தபொழுது, ஏன் இவ்வளவு சச்சரவு பண்ணி மகாத்மா காந்திக்கும் கோபமூட்டினார்கள்?' என்று கேள்வி கேட்கலாம்.

ஜவாப்தான் நாளது வரை நேராகத் தெரியவில்லை. புதுத் திருத்தங்கள் ஏற்படுவதில் உத்தியோகஸ்தர்களுக்கு இருந்த மனக்கொந்தளிப்புத்தான் காரணமென்பார் சிலர். 'பிரிட்டிஷ்காரர் நல்ல காரியம் செய்தாலும் ஒழுங்காய்ப் பூர்ண மனத்துடன் செய்து பிரஜைகளுடைய நன்றியறிவையும் பிரீதியையும் சம்பாதிக்க முடியாமற் போகட்டும்' என்று ஓர் சாபம் இருக்கிறது போலும்!

## கூட்டுக் கமிட்டி முன்பு
## 1919

**வ**ருஷக் கிரமமாய்ச் செய்த பிரசங்கங்களில், நல்ல மதிப்புப் பெற்றவையென்று பொறுக்கினாலும்கூடக் கதை வளர்ந்துவிடும்; அபிநயம் போலவும் ஆகும். இதற்குப் பயந்து, விடக் கூடாத சிலவற்றை மட்டும் குறிப்பிட நேயர்களின் அனுமதியைக் கோருகிறேன். 1919-ஆம் வருஷத்தில் எனக்கு 50 வயசு ஆனபோது முதல் முதல் இங்கிலாந்துக்குப் போனேன். இன்னும் அநேகரும் வெவ்வேறு அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகளாகச் சென்றனர். மிதவாதிகளுக்குத் தலைவர் ஸுரேந்திரநாத் பானர்ஜி; இந்திய அரசியல் சீர்திருத்த மசோதா விஷயமாய் எம். ராமசந்திரராவும் நானும் சேர்ந்து ஒரே காலத்தில் பார்லிமென்டரி கூட்டுக் கமிட்டி முன்பு சாட்சி சொன்னோம். குறுக்கு விசாரணையும் விசேஷமாய் நடந்தது. நான் எடுத்து நிரூபித்த பொருளையும் பேசிய திறமையையும் பலரும் கொண்டாடினார்கள்.

## ஸ்ரீமதி பெஸன்ட் பாராட்டு

**இ**ந்த மசோதா சட்டமான பிறகு சென்னைக் கோகலே ஹாலில் மூன்று தினங்கள் அதனுடைய குண தோஷங்களை எடுத்து விவரித்தேன். அந்த விவரணம்

மிக்க உபயோகமாக இருந்ததென்று அப்போது சொல்லிக்கொண்டார்கள். 'நியூ இந்தியா' பத்திரிகையில் பெஸன்ட் அம்மையார், 'நுட்ப விஷயங்களைத் தெளிவாகச் சொல்லும் சக்தியைக் காட்டும் நிகரற்ற பிரசங்கம்!' என்று துதித்து எழுதினர்.

## சாம்ராஜ்ய மகாநாடு
## 1921-22

**1921-22**-ஆம் வருஷங்களில் எனக்குப் பல இடங்களில் பேசும்படியான அவகாசம் நேர்ந்தது. லண்டனில் நடந்த சாம்ராஜ்ய மகாநாட்டில் (Imperial Conference) இந்தியப் பிரதிநிதியாகப் போயிருந்தபோது தென் ஆப்பிரிகாவில் நம் ஜனங்களுக்கு இருக்கும் கஷ்ட நிஷ்டூரங்களை எடுத்து உரைக்க நல்ல சந்தர்ப்பம் வாய்த்தது. யூனியன் கவர்ன்மென்ட் பிரதம மந்திரியான ஜெனரல் ஸ்மட்ஸ் (General Smuts) வந்திருந்தார். பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் லாயிட் ஜார்ஜ், நம்முடைய இந்தியா மந்திரி மாண்டேகு பால்பூர் (Balfour), கர்ஸன் (Curzon), பர்க்கென்ஹெட் (Birkenhead), சர்ச்சில் (Churchill) போன்ற பிரசித்தி பெற்ற மந்திரிகள் கூடியிருந்தார்கள். நான் ஒரு மணி நேரம், விடாமல் ஊக்கத்துடன் நம் கட்சியை வாதித்தேன். ஜெனரல் ஸ்மட்ஸ் இருப்புக்கொள்ளாமல் கலவரப் பட்டுக்கொண்டிருந்தார். மற்றவர்களுக்கெல்லாம் திருப்தி. ஏனென்றால் பிரிட்டன், ஐரோப்பா இவ்விடங்களில் நடக்கும் அரசியல் விஷயங்களைத் தாட்சிண்யம் இல்லாமல் ஸ்மட்ஸ் கண்டித்துப் பேசுவார். 'இவர் ராஜ்யத்தில் செய்கிற ஒழுங்கு இதுதானா!' என்று வியப்புடன் என் பிரசங்கத்தைக் கேட்டார்கள்; முடிந்த பிறகு பால்பூர் (Balfour) இது மிகவும் நேர்த்தியான உபந்நியாசமென்று கூறி என்னைத் தூக்கிவைத்தார். இதனால் ஜெனரல் ஸ்மட்ஸுக்கும் எனக்கும் ஏற்பட்ட விவாதங்களை இங்கே எடுத்துரைக்கச் சாத்தியமில்லை.

## முக்கியஸ்தர் உபசாரம்

அந்தச் சமயத்தில் பார்லிமென்ட் சபைகளில் முக்கியமானவர்கள் எல்லாரும் கூடி ஒரு விருந்து நடத்தினார்கள். அதற்கு லார்டு சான்ஸலர் (Lord Chancellor) பர்க்கென்ஹெட் பிரபு (Lord Birkenhead) தலைமை வகித்தார். உபசாரப் பிரசங்கங்களும் பதில் பிரசங்கங்களும் பலமாய் நடந்தன. இந்தியப் பிரதிநிதியாகிய என் முறை கடைசியில் வந்தது. இப்படித்தான் எனக்கு எப்போதும் துரதிருஷ்டம்! எல்லோரும் களைத்து எப்போது வீடு திரும்புவோம் என்று நினைக்கும்போது என் முறை வரும். அன்று பிரிட்டிஷ் பார்லிமென்டுக்கும், டில்லியில் கானாட்டுக் கோமகன் (Duke of Connaught) புதிதாய்த் திறந்து வைத்த சட்டசபைக்கும் உள்ள தாரதம்மியங்களை, விளையாட்டுப் போல் - நம் தரப்பைத் தூக்கியும் பிரிட்டிஷ் தரப்பைத் தாழ்த்தியும் - எடுத்துப் பேசினேன். இதை எல்லாரும் கவனமாய்க் கேட்டு அநேகம் தடவை சிரிப்பாலும் கரகோஷத்தாலும் மெச்சினார்கள். பர்க்கென்ஹெட் பிரபு விசேஷமாய் இதைப் பாராட்டினார். 'நான் இந்த விருந்துக்கு வெகு தூரத்திலிருந்து வந்தேன். அந்தச் சிரமத்திற்குத் தக்க பரிசு கிடைத்தது. இந்தியாவிலிருந்து வந்திருக்கும் நண்பர் பேசியது பொருட் சுவையும் சொற்சுவையும் கலந்து வெகு அழகாய் இருந்தது' என்றார்.

## லார்டு ஸெஸில் சந்தோஷம்

பிறகு ஜினீவாவில் சர்வதேச சங்கம் (League of Nations) கூடிய போது அதன் அஸெம்பிளியில் நம் தேசத்தின் சார்பாய்ப் பேசும்படி நேர்ந்தது. நானா தேசங்களிலிருந்தும் வந்த பிரமுகர்கள் செய்த பிரசங்கங்களுள் முதலாவது அல்லது இரண்டாவது சிறப்பு ஸ்தானத்தை ஏகோபித்து எனக்கு அளித்தார்கள். ஸர் வில்லியம் மயர் (Sir William Meyer) இந்தியப்

பிரதிநிதிகளின் தலைவர். அவருக்குப் பரம சந்தோஷம். லார்ட் ராபர்ட் ஸெஸில் (Lord Robert Cecil) என்னைத் தேடி வந்து ஒரு நல்மொழி கூறினார். இந்தப் பெரும் சபையால் சண்டை சச்சரவெல்லாம் ஒய்ந்து எல்லாத் தேசத்தாரும் ஒருவருக் கொருவர் சிநேக பாவம் அடைவார்கள் என்று கூறியும், சபை ஏற்றுக் கொண்ட காரியங்களைத் தூஷித்துச் சிலர் பேசியதைக் கண்டித்தும் 'ஸி' வகுப்பு மாண்டேட்கள் (Mandates) என்கிற தஸ்தாவேஜிகளைப் பற்றி சில எச்சரிக்கைகளைச் செய்தும், நான் என் பிரசங்கத்தைப் பூர்த்தி செய்தேன். இந்தக் கடைசி விஷயமானது தென் ஆப்பிரிக்கா முதலான கவர்ன்மென்டாருக்குக் கொஞ்சம் மனஸ்தாபத்தை ஏற்படுத்தியிருக்கும். ராபர்ட் ஸெஸிலுக்கு விசேஷமாக இந்த அம்சந்தான் பிடித்ததாம்.

## கானடா வாசிகள் விருந்து

மற்றொரு சமயம் லண்டனில் கானடா டொமினியனிலிருந்து வந்து தங்கியிருப்பவர், தங்கள் தேசத்திற்குச் சுதந்தரம் கிடைத்த தினத்தைக் கொண்டாடினார்கள். அங்கே ஒரு சமயம் கவர்னர் ஜெனரலாயிருந்த கானட்டுக் கோமகன் (Duke of Connaught) அக்கிராசனம் வகித்தார். இங்கே நடந்த பேச்சுகள் பல. மிஸ்டர் ஆஸ்க்வித் (Asquith) பேசியதை அப்போது ஒரு தடவைதான் நான் கேட்டேன். அந்தப் பிரசங்கத்தின் அழகில் நான் அப்போது மோகமடைந்தேன்; வழக்கம் போல் கடைசிப் பேச்சு என்னுடையதுதான். கானடா சர்க்கார், கோமகனை இவ்வளவுதான் புகழ்ந்தார்கள் என்று அளவிட முடியாது. அவரும் தமக்குக் கானடாவின் பேரில் உள்ள பக்ஷம் ஒப்புயர்வற்றது என்று அநேக விதமாய்த் தெரிவித்தார்.

## கானட்டுக் கோமகன் களிப்பு

சில மாதங்களுக்கு முன்புதான் இந்தியப் பார்லிமென்டை அவர் திறந்துவைத்தபோது, டில்லிமாநகரில்

இதே மாதிரி இந்தியாவுக்கு அவர் பேரில் உள்ள காதலும் அவர் இந்தியாவிடம் வைத்த அன்பும் அவரால் வெகு சாதுரியமாய் வருணிக்கப்பட்டன. என் பேச்சு முறை வந்ததும் நான் இந்தியா சம்பவத்தை எடுத்து வேடிக்கையாய்ச் சொல்லி, "எங்கள் தேசந்தான் தர்மபத்தினி என்று நாங்கள் பெருமை கொண்டாட, இதற்கு முன்பு வேறு ஒரு தர்மபத்தினி இருக்கிறாள் என்பதைத் தெரிந்து மிகவும் துக்கித்து, 'இதற்கு என்னவழி, விவாக ரத்து நியாயஸ்தலத்துக்கு இவரை இழுப்போமா?' என்று யோசிக்கிறேன்" என்றேன். இந்தச் சொற்களைக் கேட்டதும் சபையோர் மிகவும் களித்து உரக்கச் சிரித்தார்கள். கோமகனும் இதில் மனமாரச் சேர்ந்துகொண்டார். சில தினங்களுக்குப் பிறகு, ஒரு விருந்துக் கூட்டத்தில் தங்கள் வீட்டு ஸ்திரீகளிடம் என்னை அழைத்துப் போய், "இவர் பேச்சில் வெகு நிபுணர். அன்று என்னைப் புரளி பண்ணினார்" என்று கூறி அறிமுகப்படுத்தினார்.

## ஆக்ஸ்போர்டு பிரசங்கம்

### 1921

**1921**-இல் ஆக்ஸ்போர்டு பட்டணத்தில் ஒரு பொதுஜன சபையில் இந்தியாவின் சுதந்தரத்தைக் குறித்துப் பிரசங்கித்தேன். பேலியல் காலேஜுக்குத் தலைவரான ஏ. எல். ஸ்மித் என்பவர் அக்கிராசனம் வகித்தார். மேற்படிப்பு விஷயங்களிலும் பொருளாதார சம்பந்தமான விஷயங்களிலும் இவரை அடிக்கடி ஆஸ்கவித் போன்ற மந்திரிமார்களுங் கூடக் கண்டு யோசனை கேட்பார்களென்று பிரசித்தி யுண்டு. எனக்குக் கொஞ்சம் நெருங்கித் தெரியும். பிரசங்கம் முடிந்ததும் மிகப் பெரிய மனதுடன் என்னைப் புகழ்ந்து பேசினார். நேரில் கேட்ட இந்தியர்கள் மூலமாய் ஒரு வசனம் நம் தேசத்தில் எங்கும் எட்டியிருக்கிறது.

ஆனால் வெவ்வேறு மாதிரியாய்ச் சொல்கிறார்கள். கொஞ்ச காலமாக என் ஞாபகம் கிழத்தனத்தால் தெளிவு குறைந்திருக்கிறது. ஏதோ ஞாபகமுள்ள வரையில் சொல்கிறேன். முதல் சாட்சி என்று சிறிது மதிக்கலாம். "சாஸ்திரியின் பேச்சைக் கேட்ட பிறகு தான் நம் பாஷையின் அழகு இவ்வளவென்று தெரிந்து கொண்டேன்." இங்கிலீஷ்காரர் நன்றாகத் திருப்தியடைந்தால் அன்னியரையுங்கூட மிதமில்லாமல் உயர்த்தி வைப்பாரென்பது இதனால் தெரிகிறது.

ஜினீவா, ஆஸ்திரேலியா, நியூஸீலன்டு, கானடா என்கிற டொமினியன்களில் 1922-ல் நான் எத்தனையோ பிரசங்கங்களைச் செய்திருக்கிறேன். இவற்றை அந்த ஊர்ப் பெரிய மனிதர்களும் பத்திரிகைக்காரர்களும் மிகக் கொண்டாடினார்கள். நீட்டாமல் மாதிரிக்காகச் சில புகழ் உரைகளைமட்டும் மொழி பெயர்த்து இங்கே தருகிறேன்:

ஜினிவாவில் 'டேய்லி நியூஸ்' என்ற பத்திரிகையின் அன்னிய நாட்டு விஷய நிருபரும், சர்வதேச சங்கத்திற்கு அனுப்பப்பட்ட பத்திரிகைக்காரர் சங்கத் தலைவருமான மிஸ்டர் எச். வில்ஸன் ஹாரிஸ் (Wilson Harris) என்பவர் 'அவுட்வர்ட் பவுண்டு' (Owtward Bound) என்ற பத்திரிகைக்கு ஜினீவாவில் என்னைப்பற்றி எழுதியது இது:

'சென்ற வருஷம் ஒரு சமயம் ஒரு விருந்தில் நான் பல இந்தியப் பிரமுகர்களையும் அநேக இங்கிலீஷ்காரர்களையும் நன்கறிந்த ஒருவர் பக்கத்தில் உட்கார்ந்திருந்தேன். "இந்தியாவில் மிதவாதக் கட்சியைத் திறம்படவும் தைரியமாகவும் எடுத்துக் கூறக் கூடியவர் யார்?' என்றேன். இதற்குப் பதில் உடனே கூற அவர் தயங்கவே இல்லை. "ஆமாம்; சாஸ்திரிதான். அதற்கென்ன சந்தேகம்" என்று அவர் சொன்னார்.

'அப்புறம் கோகலேக்குப்பின் தலைமை ஸ்தானம் ஏற்று இந்திய ஊழியர் சங்கத்துக்குச் சாஸ்திரி செய்துவரும் சேவையை அவர் சுருக்கமாக எடுத்துக் காட்டினார். இதற்கு மேல் நானே சாஸ்திரியாரிடமிருந்து அநேக விஷயங்களைத் தெரிந்துகொண்டேன். இச் சங்கத்தில் சர்வகலாசாலைப் பட்டதாரிகள் இருக்கின்றனர். இவர்கள் இதில் சேர்ந்தவுடன் சில பிரதிக்ஞைகளை எடுத்துக்கொண்டு 5 வருஷ காலம் பயிற்சி பெறுகின்றனர். அக் காலத்தில் அவர்கள் பேசவும் எழுதவும் கூடாது. பின்பு சங்க உத்தரவுப் பிரகாரம் சமூக நலத்திற்காகவோ ராஜீய மேம்பாட்டிற்காகவோ அவர்கள் உழைக்கின்றனர். ஆரம்பத்தில் பிரதி வருஷமும் அவர்களுக்கு 30 பவுன் கொடுக்கிறார்கள். 80 பவுன்களுக்குமேல் ஒருவருக்கும் கொடுப்பதில்லை. சாஸ்திரிக்கும் இத்தொகைதான் கிடைக்கிறது. ஆடம்பரமின்றி அவர் பிரயாணம் செய்கிறார். தம் சொற்ப சாமானைத் தாமே எடுத்துச் செல்கிறார். அவருக்குத் திருப்தியுண்டா?

"பூரணமாக!" என்றுதான் அவர் பதிலுரைப்பார். அவரிடம் பணம் கிடையாது. ஆனால் மற்றவை யாவும் உண்டு.

"இந்திய ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த சாஸ்திரியைப்பற்றி இவ்வளவும் தெரியவேண்டும். சாம்ராஜ்ய மகாநாட்டிற்கும் சர்வதேசச் சங்கக் கூட்டத்திற்கும் மிஸ்டர் சாஸ்திரி வந்தபோது இந்த மாதிரிச் சந்நியாச வாழ்க்கையை விட்டு விலகவேண்டியதாயிற்று. இந்திய சர்க்காரின் பிரதிநிதி மற்றச் சர்க்காரின் பிரதிநிதிபோல் இருக்க வேண்டாமா? கார்ல்டனில் அவருக்குச் சர்க்கார் வசதி ஏற்படுத்திக் கொடுத்ததால் அங்கேதான் அவர் தங்கவேண்டியிருந்தது. அங்காகட்டும் வேறு எங்கும் ஆகட்டும், மாம்ஸ பக்ஷணமோ, மதுபானமோ அவர் செய்ததே கிடையாது. ஜினிவாவிலும் வாஷிங்க்டனிலும்

மிகத் தூய்மையான வெள்ளைத் தலைப்பாகையையும் காலரில்லாத நீண்ட கோட்டையும் அவர் அணிந்தது, லண்டனில் வெஸ்ட் எண்டில் கையாளப்படும் அசட்டு நாகரிக வேஷத்தைக் கண்டிப்பதுபோல் இருக்கிறது. 'வீண் ஆடம்பரத்தில் பற்றுதலில்லாத மிஸ்டர் சாஸ்திரி' என்ற நினைவில் அவர் ஜினிவா அசெம்பிளியில் வரவேற்கப்படவில்லை. 'பிரசங்க நிபுணர் மிஸ்டர் சாஸ்திரி' என்றே அவரை எல்லோரும் அமோகமாக வரவேற்றனர்.

'அசெம்பிளிக் கூட்டத்தின் இரண்டாம் வாரத்தில்தான் அவருக்குப் பேசும் சந்தர்ப்பம் வாய்த்தது. அது முதற்கொண்டு அவரைப் பற்றிய பேச்சுத்தான் எங்கே பார்த்தாலும். அஸெம்பிளியில் பேசியவர்களுள் எவர் சிறந்தவர் என்பதைப் பற்றி ஒவ்வொருவரும் விவாதிக்க ஆரம்பித்து விட்டனர். அது யார்? சாஸ்திரி யார்தாம். அவரைப் பற்றி ஒருவரும் குறை கூற முடியவில்லை. அதிக காலம் நீடித்து நடந்த ஒரு விவாதத்தில் கடைசியாகப் பேசும் சந்தர்ப்பம், பொறுமையுடன் காத்திருந்த அவருக்கு வந்தது.மணியோ ஆகிவிட்டது. ஹாலிலிருந்து அங்கத்தினர்கள் கலைய ஆரம்பித்து விட்டனர். ஆனால் மிஸ்டர் சாஸ்திரி பேச ஆரம்பித்தது முதல் முடிக்கும்வரை ஒருவரும் இடத்தைவிட்டுப்போகவில்லை. தப்பில்லாத பதங்களை அமைத்து நிதானமாக அவர் பேசியது எல்லோரது கவனத்தையும் கவர்ந்துவிட்டது.

'மிஸ்டர் சாஸ்திரி கூறியதாவது: சங்கத்தைப் பற்றிக் குறை சொல்வோர் பலர். ஆனால். இவர்களுள் சிலரை நாம் மரியாதையுடன் கவனிக்க வேண்டும். சங்கத்தின் வேலையில் ஈடுபடாதவர்கள் விஷயத்தில் நாம் அவர்களது கண்டனத்துக்குச் செவி சாய்க்க வேண்டியதில்லை. ஒருவர் என்னிடம் வந்து, 'சங்கம் இதைச் செய்யவில்லையே' என்றால், 'அவரே அதற்குக் காரணமல்லவா?' என்றுதான் எனக்கு உடனே கேட்கத்

தோன்றுகிறது. "இந்த இந்தக் காரியங்கள் பாக்கி நிற்கின்றன" என்று ஒருவர் சொல்வாரானால், "ஏன் நீங்கள் வந்து எங்களுக்கு உதவக்கூடாது?" என்றே கேட்க எனக்கு ஆசையாய் இருக்கிறது.'

## கானடாவில்

கானடாவிலிருந்து ஒரு பிரபலஸ்தர் பம்பாய் முக்கியஸ்தர் ஒருவருக்கு எழுதிய கடிதம் டைம்ஸ் ஆப் இந்தியா (Times of India) வில் பிரசுரமாயிற்று. அதன் சாராம்சம் வருமாறு:

"மாண்ட்ரீலில் ஸ்ரீமான் சாஸ்திரியின் வேலை முடிவடைந்து விட்டது. இவர் அங்கே பத்து நாட்கள் இருந்து பொதுஜன அபிப்பிராயத்தை, அதிலும் மேல் வகுப்பாரின் நோக்கத்தை எவ்வளவு தூரம் உருப்படுத்தியுள்ளார் என்பதை மிகைப்படுத்திக் கூறுவது முடியாது. பிரதி தினமும் அவருக்கு அசாத்திய அலுவல்கள். ஒன்று அல்லது இரண்டு பிரசங்கங்களுக்குக் குறைவில்லை. பத்திரிகைகளிலும் தினந்தோறும் இந்தியாவைப் பற்றிய செய்திகள்தாம். அவை பிரியத்துடன் குறிப்புகளை எழுதின. கானடியன் கிளப், கானடியன் ஸ்திரீகள் கிளப் இங்கெல்லாம் பெரிய கூட்டங்களில் அவர் பேசினார். ஒரு சில பெரிய மனிதர்கள் அடங்கிய கூட்டங்களில் அவர் செய்த பிரசங்கங்கள்தாம் அதிகப் பலன் தருவனவாகத் தோன்றுகின்றன. அவரைக் கௌரவிக்க நான் ஒரு விருந்து நடத்தி அநேக முக்கியஸ்தர்களை அழைத்திருந்தேன். இதற்கு முன், இம்மாதிரி பல திறத்தினரும் ஒன்று கூடியதில்லை. பத்திரிகை நிருபர்கள் அநுமதிக்கப்படாததால் ஸ்ரீமான் சாஸ்திரி சங்கோசமின்றி உள்ளத்தில் இருப்பதை ஒரு மணி நேரம் எடுத்துச் சொன்னார். அவர் பேச்சு எல்லோருக்கும் மகிழ்ச்சியை அளித்தது. அவருக்குப் பிறகு கானடா மாஜிப் பிரதம மந்திரி ஸர் லோமர் குயின் (Sir Lomer Gouin) பேசினார். இவர்

ஸ்ரீமான் சாஸ்திரியாரின் கருத்தை ஆதரித்தார். கானடாவில் இருக்கும் இந்தியர்களுக்கு ஓட்டுக் கொடுக்கும் விஷயத்தில் அவர் உதவி செய்வாரென்னும் அபிப்பிராயம் எங்களுக்கு அப்போது ஏற்பட்டது. இந்த மாதிரி ஒரு பெரிய நண்பர் கிடைப்பது அரிது. ஆகவே ஸ்ரீமான் சாஸ்திரியாரின் வேலை சித்தி பெறும் என்பதில் சந்தேகமே இல்லை; வெற்றி நிச்சயம்; அதுவும் கூடிய சீக்கிரத்திலேயே. ஸர் லோமருக்கு அடுத்தபடியாக கன்ஸர்வேடிவ் (Conservative) கட்சித் தலைவரும் மாஜிப் பிரமத மந்திரியுமான மகாகனம் ஆர்தர் மீகன் (Arthur Meighen) பேசினார். அவரும் ஸ்ரீமான் சாஸ்திரியாரைப் பூரணமாக ஆதரித்தார்.

"'ஒவ்வொரு சமயமும் சாம்ராஜ்யத்தில் எந்தப் பகுதியிலும் அதே சாம்ராஜ்யத்தின் மற்றொரு பகுதியில் உள்ளவர்களை விலக்கக்கூடாது என்பதை ஸ்ரீமான் சாஸ்திரி தெளிவாக எடுத்துக் காட்டினார். தற்போதைய நிலைமையில் டொமினியனில் இருக்கும் எல்லா இந்தியப் பிரஜைகளுக்கும் ஓட்டுரிமை கொடுக்க வேண்டும் என்ற கட்சியை விவரித்தார். அவர் பேசியதைக் கேட்டவர்கள், அவரை ஆதரிக்காமல் இருந்திருக்க முடியாது.

"அவரது பிரசங்கம் ஒவ்வொன்றிலும் ஒரு சிறந்த அம்சம் எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. அவர் சபையோர் மயங்கும் விதத்தில் பேசி அநேக விஷயங்களை எடுத்துச் சொன்னார். சில சமயங்களில் அவர் கூறிய விஷயங்கள் அதிருப்திகரமானவையாக இருந்தாலும் எடுத்துச் சொன்ன முறை கேட்போர்களது உள்ளத்தை வசப்படுத்துவதாகவே இருந்தது. ஏற்கனவே எனக்கு இந்தியாவைப் பற்றி அதிகம் தெரியுமாயினும் அவர் பேசியதைக் கேட்ட பின்பு நான் பின்னும் அதிகம் அறிந்தேன். அங்கே சுயாட்சி முறை எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது என்பது எனக்கு இதுவரை தெரியாது.

இங்கிலாந்தில் பல நூற்றுண்டுகளாக உருவாகி வந்த ஒன்று, இந்தியாவில் சொற்ப காலத்திலேயே ஏற்பட்டு விட்டதற்கு அந் நாட்டு மக்களைப் பாராட்டுகிறேன். இதற்குமுன், கானடாவில், இந்தியாவினிடத்து அவ்வளவு அக்கறை காட்டப்பட்டது கிடையாது. இந்தியா நமது சாம்ராஜ்யக் குடும்பத்தின் கீழ்த் திசைப் பாகஸ்தர் என்பது வலியுறுத்தப்பட்டது. ஸ்ரீமான் சாஸ்திரி போன்றவர்களை டொமினியன்களுக்கு அனுப்பியது மிகவும் புத்திசாலித்தனமாகும். இத்தகையவர்கள் இருப்பது இந்தியாவின் பாக்கியம். இம்மாதிரியான பெரியவர்கள் சாம்ராஜ்யத்தின் வேறு பாகங்களுக்கும் போய் வருவதால் பரஸ்பர நல்லுணர்ச்சியும் பரிவும் அதிகரிக்கும். ஸ்ரீமான் சாஸ்திரியைப் பற்றியும் அவரது வேலையைப் பற்றியும் எனக்கு அபார மதிப்பு ஏற்பட்டிருப்பதால் அவருடைய சிநேகிதர்களுள் ஒருவன் என்று கூறிக்கொள்வதில் நான் பெருமையடைகிறேன்.''

## வாஷிங்டனில்

'நியூயார்க் டைம்ஸ்' (New York Times) பத்திரிகையில் மிஸ்டர் எல்மர் டேவிஸ் (Elmer Davis) எழுதியதாவது:

"இங்கே நற்பெயர் சம்பாதித்த மற்றொரு பிரிட்டிஷ் பிரதிநிதியைப் பற்றியும் குறிப்பிடவேண்டும். இந்த வாஷிங்டன் மகா நாட்டிற்கு முன்பு-அமெரிக்காவில்-இந்திய வாசியான ஸ்ரீனிவாச சாஸ்திரியை ஒருவரும் அறியார். ஆனால் இனி அவரைப் பற்றி அடிக்கடி கேள்விப்படாமல இருக்க முடியாது. இந்தியாவின் சார்பில் அவர் இரண்டு தடவை பேசினார். அதிகாரவர்க்கத்தின் பக்கமாகவும், அதிலும் பிரிட்டிஷ் அதிகாரவர்க்கத்திற்குச் சாதகமாகவும் அவர் பேசுவார் என்று கூறியதெல்லாம் பொய்யாகியது. இந்தியாவுக்குச் சுயாட்சி வேண்டும் என்பதை அவர் ஒளிக்கவில்லை. இந்தியக் கலை, நடையுடை பாவனை, ஹிந்து மதம் இவற்றைப்பற்றியும்

அதிகமாக அவர் கவலைப்படுவதாகக் காணும். இந்தியர்களின் விருப்பங்களைப்பற்றி அவர் மிகவும் தெளிவாகப் பேசுகிறார். ஒரு நாளில் எதுவும் செய்து முடிப்பது சாத்தியம் அன்று என்பதையும், இருப்பதைக் கொடுத்து விடுவது எளிது என்பதையும் அவர் உணர்ந்தவர். இந்தச் சாஸ்திரி எந்தச் சந்தர்ப்பத்திலும் நிமிர்ந்து நிற்கும் பெரியவர் என்பதே இவரது பேச்சுக்களைக் கேட்டவர் பலரது அபிப்பிராயம். பிரிட்டிஷ் அல்லது அமெரிக்கப் பிரதிநிதிகளைவிடச் சற்று உயர்வாகவே இவர் ஆங்கிலத்தை உச்சரிக்கிறார்."

## ஸ்ரீமான் பிஷர் பாராட்டு

லிட்டன் பிரபுவுக்கு 1922-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 3-ஆம் தேதி நான் நடத்திய விருந்தில் ஸ்ரீமான் எச். ஏ. எஸ். பிஷர் பின்கண்டபடி என்னைப் பற்றிப் பேசினார்: "சென்ற செப்டம்பர் மாதம் சர்வதேச சங்கக் கூட்டத்திற்கு நானும் பிரிட்டிஷ் பிரதிநிதியாகச் சென்றிருந்தேன். அச் சமயம் ஸ்ரீமான் சாஸ்திரியாரின் நாவன்மைதான் எங்கும் முழங்கியது. நான் சங்க அறையிலிருந்து வெளியே வந்தபோது, தென் அமெரிக்க அரசாங்கம் ஒன்றின் பிரதிநிதி என்னிடம் வந்து, 'பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை நான் பாராட்டுகிறேன். பிரிட்டிஷ் இந்தியாவின் மகிமையையோ அல்லது இந்தியாவுக்குப் பிரிட்டன் செய்த சேவையையோ நான் ஸ்ரீமான் சாஸ்திரியின் பிரசங்கத்தைக் கேட்கும் வரை உணரவில்லை. (கரகோஷம்). ஸ்ரீமான் சாஸ்திரியார் தமது நாவன்மையாலும், தமது உயர்ந்த நடத்தையாலும் உலகம் முழுவதும் பிரிட்டனின் பெருமை பரவச் செய்திருக்கிறார் என்பதே என் கருத்து."

## ஆஸ்திரேலியாவில்
## 1922

ஆஸ்திரேலியாவிலிருந்து புறப்படும் சமயத்தில் பிரதம மந்திரி மிஸ்டர் ஹ்யூஸ் (Hughes) எனக்குப்

பின்கண்ட கடிதம் எழுதினார். அதன் சாரத்தைக் கீழே தருகிறேன்:

“நீங்கள் இங்கே தங்கியிருந்தது எங்களுக்குச் சரியான பாடம் கற்பிப்பதாயிற்று. உங்களது பிரசங்கங்கள் மூலமாக, எங்களுக்கிருந்த தப்பபிப்பிராயங்களைப் போக்கி நாங்கள் இந்தியாவைப் பற்றி உண்மையறிய உதவினீர்கள். உங்களுடைய சிறந்த பேச்சுக்கள் மூலம் பார்லிமென்டிலும் வெளியிலும் சாதகமான அபிப்பிராயத்தைத் தோற்றுவித்து, உங்களது வருகைக்கு முன்பு அசாத்தியமெனத் தோன்றிய காரியத்தைச் சாத்தியமானதாகச் செய்துவிட்டீர்கள். 1918, 1921-ஆம் வருஷ மகா நாடுகளின் தீர்மானங்கள் மூலம் உத்தேசிக்கப்பட்ட சீர்திருத்தங்கள் அநுஷ்டான சாத்தியம் என்பதையும் நீங்கள் நிரூபித்து விட்டீர்கள். உங்கள் தேசத்தின் சார்பாக நீங்கள் பேசியது பலனளிப்பதாகும். உங்கள் கருத்து நிறைவேறச் சிறிது தாமதம் ஏற்பட்டாலும் அதற்காகப் பொறுமையை இழக்கக் கூடாது. உங்கள் வேலை ஆச்சரியகரமானது. ஆஸ்திரேலியாவில் உள்ள உங்கள் தேச மக்கள் பூரணப் பிரஜா உரிமை அடைவதற்குத் தடையாயிருந்த சில தப்பு அபிப்பிராயங்களையும் தீய நோக்கங்களையும் நீங்கள் அடியோடு அகற்றி விட்டீர்கள் என்பதே என் அபிப்பிராயம்.”

## கோகலேயைப் பற்றிப் பேசியது

பங்களூரிலும் மைசூரிலும் நான் செய்த பிரசங்கங்கள் பல. அவற்றுள் சில கேட்டோர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தன. யூனிவர்ஸிடி பட்டமளிப்பு விழாவில் நான் பேசியது, பிள்ளைகள் படிக்கும் பாடபுத்தகத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. மைசூர் யூனிவர்ஸிடிக்காரரே மறுபடியும் என்னைச் சிறப்புப் பிரசங்கம் பண்ண வேண்டுமென்று ஒரு வருஷம்

வருந்தி அழைத்தார்கள். இந்தச் சமயம் பெரும் பிரயாசைப்பட்டு, கோகலேயைப் பற்றி மூன்று பிரசங்கங்கள் பங்களூரிலும், மூன்று பிரசங்கங்கள் மைசூரிலும் செய்தேன். கூட்டம் வரவரக் குறைவது வழக்கம். இப்பொழுது மட்டும் நாளுக்கு நாள் அதிகரித்தது. உடம்பு மெலிந்தும் எப்படித்தான் இந்தப் பெரிய காரியத்தைச் சாதித்தேன் என்பதை நினைக்கையில் எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. என் மனத்தில் தோன்றிய ஆழ்ந்த திருப்தியை அப்பொழுது வெளியிட்ட மாதிரியில் இங்கே திரும்ப எழுதலாமென்று நினைக்கிறேன். "இந்துக்களுள் பெற்றோருக்கு உத்தரக்கிரியை செய்வது ஒப்பற்ற கடமை. அதை ஒழுங்காய் நடத்தினால்தான் பிள்ளைக்கும் பெற்ற தாய் தந்தையருக்கும் நற்கதி கிடைக்கும் என்பார்கள். இந்தக் கடனைத் தீர்க்கச் சங்கற்பம் செய்துகொண்டவருக்கு வியாதியும் இரண்டு வாரம் ஒதுங்கி ஒரு நாளும் இல்லாத வலிமை உண்டாகும் என்னும் கொள்கை உண்டு. இதைப் பின்பற்றித்தான் எனக்குக் குருவான கோகலேக்குச் செய்யும் கைங்கரியத்தை பித்ரு காரியமென்றே கொண்டதால் என் சரீரத்திலுள்ள பலக்குறைவு ஓடிவிட்டது." இவ்வாறு நான் ஊக்கத்துடனும் தீன ஸ்வரத்துடனும் முடிவில் சொன்னதைக் கேட்டவரில் பலர் மனம் உருகினார்கள்.

## நம் பெண்களின் நிலை

மறுபடியும் சில வருஷங்களுக்கு அப்பால் பங்களூரில் இரண்டு பிரசங்கங்கள் செய்ய நேர்ந்தது. "நம் பெண்கள் அடைய வேண்டிய நிலை" என்ற பொருள் பற்றிப் பேசினேன். இந்த ஏற்பாடு வைஸ் சான்ஸலர் ஸ்ரீ என். எஸ். சுப்பராவின் நிர்ப்பந்தத்தால் நிகழ்ந்தது. டாக்டர் அபயாம்பாள் என்று மைசூர் சமஸ்தானத்தில் பெண் கல்விக்காகவும் பெண் முன்னேற்றத்திற்காகவும் வெகு பாடு பட்டுள்ள ஒரு பெண்

மணியின் பேரில் அவர்களது சகோதரர்களால் நிறுவப் பெற்ற ஸ்தாபனம் ஒன்று எனக்காக இரண்டு வருஷங் காத்திருந்து முதல் தடவை பிரசங்கம் நான் செய்ய வேண்டுமென்று உத்தேசித்தது. டாக்டர் அபயாம் பாளைப்பற்றித் தெரியாதவருக்கு ஒரு வார்த்தை சொல்லவேண்டும். அவர் பால்யத்தில் விதவையாகி மறு மணம் புரிந்துகொள்ளாதவர். எம். ஏ. பரீக்ஷையில் தேறியவர். படிப்புக்காக வெகு கஷ்டப்பட்டவர். கடைசியில் சர்க்கார் உதவியுடன் லண்டன் போய் மேற்படிப்புப் படித்தவர். நான் லண்டனில் அவர் இருந்த இடத்துக்குப் போய், அவருடன் பழகியவர்கள் அவரிடம் எவ்வளவு மேலான அபிப்பிராயம் கொண் டிருந்தார்களென்பதை நேரில் அறிந்தேன். நம் பெண் பாலர் உலகமெலாம் புகழும்படி கைக்கொண் டிருக்கும் அடக்கம், சீலம், நட்புணர்ச்சி முதலிய நற்குணங்களை தம் நடையுடை பாவனைகளால் அவர் விளக்கிக் காட்டினார்.

## டாக்டர் அபயாம்பாள்

ஒரு நாள் கோயம்புத்தூரில் தோட்டத்தில் நானும் என் மனைவியும் வழக்கம்போல் ரேடியோப் பாட்டுக் கேட்டுக்கொண் டிருக்கும்போது திடீரென்று டாக்டர் அபயாம்பாளும் அவருடைய தம்பியும் தோன்றினார்கள். "என்ன செய்தி, எங்கே வந்தீர்கள்?" என்று கேட்டேன். "உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். வேறு விசேஷ மில்லை. ஏதோ பார்க்கவேண்டுமென்ற விருப்பம் மேலிட் டது" என்றாள் அபயாம்பாள். "அப்படியா?"வென்று நம்பாதவனைப்போல் நான் விழித்திருக்கவேண்டும். உடனே, "ஏன் உங்களைக் காணப் பிரயாணம் செய்யக் கூடாதா?" என்று அன்புடன் கூறினாள். கொஞ்ச நாளைக் கெல்லாம் அவர் போய்விட்டார் என்று கேட்டபடியால் இந்தச் சம்பாஷணை - ஞாபகம் குறைந்த எனக்கு - இப் பொழுது கெட்டியாய் மனத்தில் இருக்கிறது. மார்பு

வலி எப்படி இருந்தாலும் இந்தக் கடமையைச் செலுத்தாமல் இருக்கலாகாதென்று பிரசங்கம் செய்தேன் ஜனங்கள் பலர் கூடினார்கள். விசேஷமாய் மெச்சினார்கள் என்றும் தெரிந்தது. என் கட்சி இரு பாலாரும் சமானமாக வாழவேண்டும் என்பது; படிப்பில் சிற்சில பாடங்கள் பேதப்படலாமே யொழிய, அடியோடு பொருள் வேற்றுமை, உயர்வு வேற்றுமை, உரிமை வேற்றுமை இவையெல்லாம் கூடாவென்றே விவகரித்தேன். சிலர் அவ்வளவு தூரம் போகலாகாதென்கிறார்கள் என்றால் நம் நாட்டில் இது ஆச்சரியம் அல்ல. மேல் நாட்டிலும் இப்படிச் சொல்வோர் பலர் உண்டு. இரண்டாவது பிரசங்கத்தின் முடிவு நல்ல சொற்களால் அமைந்துளது என்று கேட்டிருக்கிறேன்.

## "கமலா பிரசங்கம்"
## 1926

**1926**-ஆம் வருஷத்தில் கல்கத்தா சர்வகலாசாலையின் வேண்டுகோளுக்கு இணங்கிக் கமலா பிரசங்கமென்று மூன்று நாள் விரிவாய்ப் பேசினேன். ஸர் ஆசுதோஷ் முகர்ஜி என்பவர் தம் பெண் கமலா என்பவர் பேரால் நிறுவியது இது. அந்தப் பெண் நற்குணமும் படிப்பும் நடத்தையும் வாய்ந்தவள். இரு முறை விதவையாகிச் சிறு வயசிலேயே இறந்துவிட்டாள். இந்தப் பிரசங்கம் செய்வோருக்கு ஒரு தங்கப் பதக்கமும் ஆயிரம் ரூபாய் பரிசும் கிடைக்கும். மற்றோர் இந்தியச் சர்வகலாசாலையிலும் பிரசங்கங்களைத் திரும்பச் செய்யவேண்டும். முதல் வருஷத்திற்கு ஸ்ரீமதி பெஸன்டையும் இரண்டாம் வருஷத்திற்கு என்னையும் பிரசங்கக்காரராக நியமித்து, எங்களுக்குப் பிரசங்க விஷயங்களையும் ஸ்தாபகரே குறிப்பிட்டுப் போனதாகச் சொல்கிறார்கள். எனக்கு அவர் விதித்த விஷயம், 'நம் அரசாங்க முறையில் இந்தியர்களுக்குள்ள உரிமைகளும் கடமைகளும்.'

இதற்கு வேண்டியவற்றைப் படித்து நான் தயார் பண்ணிய பொழுது எனக்குச் சட்ட சமாசாரங்களைக் கூறி உதவியவர், என். ராஜகோபாலையங்கார் என்கிற அட்வொகேட். அப்பொழுது சிறுவரா யிருந்தாலும் சட்ட விஷயங்களில் தேர்ந்த நிபுண ரென்று அவருக்கு நல்ல பெயர். அவருக்கு என் நன்றியை இப்பொழுதும் செலுத்த நான் கடமைப் பட்டவன். மற்றொருவருக்கும் என் நன்றியை நான் நினைத்த பொழுதெல்லாம் செலுத்த வேண்டும். அவர் எனக்குக் கோகலே காலம்முதல் உற்ற நண்பர். அவர் டாக்டர் ஸர். நீலரத்ந ஸர்க்கார். கல்கத்தா போவதற்கு முன்பே கடுமையான மார்பு வலி. போய்ச் சேர்ந்ததும் இது அதிகமாயிற்று. பிரசங்கம் செய்வது அபாயகர மென்று சொல்லியும் ஒரு காலால் நின்று பிடிவாதம் பிடித்தேன். இந்த டாக்டர் என் கூடவேயிருந்து வேறு வேலைகளையெல்லாம் குறைத்துக்கொண்டு வெகு கவலை யோடும் அன்போடும் கவனித்து வந்தார். இத்தகைய உபகாரங்களுக்குப் பிரதியுபகாரம் என்பதே இல்லை. பதில் செய்ய வேண்டுமென்று எண்ணுகிறவர் பதில் பெற வேண்டும் என்கிறவர் இருவர் நினைப்புமே தவறாகும். இவர்கள் மற்றவருக்குப் பெரும் விபத்தை வேண்டுகிறவர்போல் ஆகிறார்கள். ஸ்ரீராமர், சீதையைப் பற்றிய செய்தியைக் கொண்டு வந்த ஹநுமாரிடம் சொன்னது ஒப்பற்றவசனம்:

मय्येव जीर्णतां यातु यत्त्वयोपकृतं हरे ।
नरः प्रत्युपकारार्थी विपत्तिमभिकाङ्क्षति ॥

"மய்யேவ ஜீர்ணதாம் யாது யத் த்வயோபக்ருதம் ஹரே!
நர: ப்ரத்யுபகாரார்த்தீ விபத்திமபிகாங்க்ஷதி."

"வானர வீரனே, நீ எனக்குச் செய்த உதவி என்னோடு போகட்டும். ஏனென்றால், கைம்மாறு ஒன்றை

எதிர்பார்ப்பவன், கூடவே விபத்தையும் விரும்பி எதிர்பார்க்கிறான்.''

## சென்னையில் ஏற்பாடு

இந்தப் பிரசங்கங்களைக் கல்கத்தா சர்வகலா சாலையார் புத்தக ரூபமாய் அச்சிட்டு விற்கிறார்கள். 'நாம் இயற்றியது நெடுங்காலம் படிப்பவர்களுக்கு உபயோகமாக இருக்கும்' என்று நினைப்பது பேராசையும் அறியாமையுமே ஆகும். செய்யும் போது இவை பெரும் புகழைப் பெற்றன. சில மாதங்களுக்குப் பிறகு சென்னைச் சர்வகலாசாலையில் மறுபடி ஒருவாறு இதையே ஒப்பித்தேன். ஆண்டர்ஸன் ஹாலில் தாங்கமுடியாத கூட்டம்; எள்ளுப் போட்டால் எள்ளு விழாது என்பார்களே, அவ்வாறுதான் இருந்தது. இந்தப் பிரசங்கங்களைக் கொண்டாட என் நண்பர் ராவ்பகதூர் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் வெகு முயற்சி செய்து பணம் சேர்த்துப் பெரிய கூட்டம் கூட்டி விலையுயர்ந்த பரிசு அளித்து மித மிஞ்சிய கௌரவமும் சம்பாதித்துத் தந்தார். பிறகு என் பேரால் சர்வகலாசாலைச் சார்பில் ஒரு பிரசங்க ஏற்பாடும் (Lectureship) செய்திருக்கிறார். இத்தகைய மேன்மைக் கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்யக் கிருஷ்ணசாமி ஐயர் ஒருவரால்தான் முடியும். வால்மீகி வாக்கியந்தான் நமக்கு எப்பொழுதும் முன்னின்று கரை யேற்றுகிறது.

यथा स एवार्हति तत्र कर्तुम् ।

"யதா ஸ ஏவார்ஹதி தத்ர கர்த்தும்''

"இந்த விஷயத்தில் அவன் ஒருவனே அப்படிச் செய்ய முடியும்.''

## மிதவாதிகள் மகா நாட்டில்

தென் ஆப்பிரிக்காவில் அரசாங்க ஏஜன்டாக ஒன்றரை வருஷம் இருந்தேன். இந்த ஒன்றரை

வருஷத்தில் இடை விடாமல் பிரசங்கம் செய்து கொண்டே இருந்தேன். மற்றப்படி என் ஏஜன்டு உத்தியோகம் அதி முக்கியமானதாகையால் வேறோர் அத்தியாயத்தில் விரிவாய் எழுதுகிறேன். இப்பொழுது பாதி அமலிலும் பாதி அமலில்லாமலும் இருக்கிற 1935-ஆம் வருஷத்து இந்திய அரசியல் சட்டமென்று விளங்கும் சட்டத்தின் பேரில் எனக்கிருக்கும் கடும் துவேஷத்தைப் பல தடவை வெளியிட்டிருக்கிறேன். 1933-ல் புனாவிலும் 1934-ல் நாகபூரிலும் நடந்த தேசிய மிதவாதக் கட்சியாரின் மகாநாடுகளில் பலமாய்ப் பேசியிருக்கிறேன். வெகு கோபத்துடன் சொன்னபடியால் இந்தப் பிரசங்கங்களின் கருத்துக்கள் எனக்குச் சகஜமல்லவென்றும், பிரிட்டிஷ் ராஜாங்கத்தை வழக்கமாய் எதிர்ப்பவருக்கே ஏற்றதென்றும் என் சிநேகிதரில் பலர் கருதினார்கள்.

## இந்திய ஊழியர் சங்கம்

என் அதிருஷ்ட வசத்தால் ஆறேழு வருஷங்களுக்கு முன்பு இந்திய ஊழியர் சங்கத்திற்கு ஒரு சேவை செய்யும் அவகாசம் கிடைத்தது. சங்கத்தில் கோகலே 'முதல் அங்கத்தினர்' என்று பெயர் வைத்துக் கொண்டிருந்தார். அங்கத்தினருக்கு ஏழு விரதங்கள் விதிக்கப்பட்டுள்ளன. இந்த ஏழையும் சத்திய வடிவில் வரைந்து சங்கத்தில் சேர்வதற்குள்ள சடங்கில் ஒரு பகுதியாகப் புத்தகத்தில் அமைந்துள்ள சொற்களில் கூற வேண்டும். புனாவுக்கு அருகில் இருக்கும் ஒரு மலை மேல் ஏறி, தக்க இடத்தைக் குறித்து உட்கார்ந்து 1905-ஆம் வருஷம் ஜூன் மாதம் 12-ஆம் தேதி காலை சூரிய உதயத்தில் கோகலே தாமே சத்தியங்களைக் கூறினார். உடனே தாம் சத்தியங்களின் வாசகத்தைப் படித்துக் கூட இருந்த மூன்று சிஷ்யர்களையும் கூறச் சொல்லி அங்கத்தினராக்கினார். அந்த ஸ்தலத்தில் பிறகு ஓர் அங்கத்தினரையும் சேர்க்கவில்லை. அடுத்தபடி சேர்ந்த நான்

கல்கத்தாவில் பிரமாணத்தை எடுத்துக்கொண்டேன். இம் மூவரில் இப்பொழுது ஒருவர்தாம் இருக்கிறார். என். ஏ. திராவிட் என்பவர் அவர். இவரை உண்மையில் தஞ்சாவூர் ஜில்லா திருவாலங்காட்டு நடேச தீக்ஷிதரென்று சொல்லவேண்டும். குழந்தைப் பருவத்திலேயே அவரை வடக்கே அழைத்துச் சென்ற தாய் தந்தையர் பிழைக்கப் போன இடத்தில் தங்கிவிட்டார்கள். புனாவைச் சுற்றியுள்ள நாட்டில் இந்தத் தேசத்திலிருந்து போனவர்களுக்கெல்லாம் திராவிட் என்று பெயர். மற்ற இரு ஆதி மெம்பர்களும் பேர்போனவர்களே. ஜி. கே. தேவதார ஒருவர். ஏ. வி. பட்டவர்த்தன் மற்றொருவர். இவர்கள் தேச ஸேவையில் ஈடுபட்டுச் சபதமெடுத்த சம்பவம் மிக்க சிறப்புடையது. இது நிகழ்ந்த இடம் புண்ணிய ஸ்தலமென்று கருதி இதை மறக்காத வண்ணம் ஒரு சிலை நட்டுச் சாஸன மாக்க வேண்டுமென்று எனக்கு அவா உண்டாயிற்று. இந்த எண்ணத்தை நிறைவேற்ற வெகு பாடு பட்டேன். சிலை வைக்கும் இடம் பெர்கஸ்ஸன் காலேஜ் (Fergusson College) காரர்களுடையதென்று தெரிய வந்தது. அவர்கள் வெகு கருணை செய்து, கோகலேயுடன் தங்களுக்குள்ள நெருக்கமான சம்பந்தத்தை மறக்காமல் தாங்களே சாஸனத்தை அங்கே நாட்டி நெடு நாள் காப்பாற்றிக் கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டார்கள்.

## ஞாபகார்த்த விழா

அகஸ்மாத்தாய் அந்தக் காலேஜின் ஐம்பதாவது வருஷக் கொண்டாட்டமும் நேரவே, அந்த விழாவில் ஓர் அம்சமாக எங்கள் சிலாசாஸனத்தைத் திறந்து வைக்கும்படி என்னை நியமித்தார்கள். அந்த நிகழ்ச்சியில் நான் பேசியது மனத்திற்கு வெகு உருக்கமாக இருந்தது. முக்கியமான பாகத்தைச் சுருக்கமாக எழுதுகிறேன்: சபதம் கூறுவோர் சாதாரணமாய் நாலு பேர் கேட்கப் பகிரங்கமான இடத்தில்தான் கூறுவது வழக்கம். முப்

பது வருஷத்திற்கு முன்பு அந்த மலையில் ஏறிப் போவார் அதிகமாயில்லை. முள்ளும் கல்லுமான வழி. ஏன் கோகலே அவ்வளவு நிர்மானுஷ்யப் பிரதேசத்தைத் தேடிப் போய்த் தம் உதவி அங்கத்தினருடன் சங்கல்பத்தைப் பண்ணினார்? இதற்கு விடை என்னவெனில் மனிதர் விரதமெடுத்தால் வேறு சில மனிதருக்குத் தெரிந்தால்தான் அதற்கு மகிமை? மனிதரா தக்க சாட்சிகள்? பயம், லஞ்சம், பக்ஷபாதம் முதலியவற்றிற்கெல்லாம் உள்ளானவர்கள் அல்லவா இவர்கள்? ஒரு நாளும் ஒரு காரணத்தாலும் அசைக்க முடியாத ஸ்திரமான சாட்சிகள் எங்கும் நிறைந்திருக்கிறார்களே. அவர்களை எப்படி ஏமாற்றலாம்? அவர்களிடமிருந்து எப்படித் தப்பலாம்?

आदित्यचन्द्रावनिलोऽनलश्च
द्यौर्भूमिरापो हृदयं यमश्च ।
अहश्च रात्रिश्च उभे च सन्ध्ये
धर्मोऽपि जानाति नरस्य वृत्तम् ॥

"ஆதித்யசந்த்ராவனிலோநலஶ்ச
த்யௌர் பூமி ராபோ ஹ்ருதயம் யமஶ்ச।
அஹஶ்ச ராத்ரிஶ்ச உபே ச ஸந்த்யே
தர்மோபி ஜாநாதி நரஸ்ய வ்ருத்தம்॥"

"சூரியன், சந்திரன், காற்று, தீ, வானம், பூமி, நீர், இருதயம், யமன், பகல், இரவு, காலை, மாலை, தர்மன் இவ்வளவும் மனிதனுடைய செயல்களைப் பார்த்து அறிகின்றன."

இந்தச் சுலோகத்தைக் கேட்டதும் எல்லாரும் திடுக்கிட்டார்கள். அந்தப் பக்கங்களில் சென்னையில் இருப்பதுபோல ஸம்ஸ்கிருதத்தில் துவேஷம் இல்லை. ஆண்: பெண், பிராமணர், மராட்டியர் எல்லாரும் விசேஷமாய்த் தேவ பாஷையென்று அதைப் பக்தியாய்ப் படிப்பர்.

## "பிறப்புரிமை"

சென்ற வருஷம் கும்பகோணத்தில் பிறப்புரிமை (Birth right) என்னும் விஷயத்தைப் பற்றி நுட்பமாக ஆராய்ந்து பேசினேன். பிரசங்கம் வெகு நேரம் பிடித்த போதிலும் கேட்பவர் சற்றேனும் சலிப்படைந்ததாகத் தெரியவில்லை. நன்கு ஆராய்ந்தால் பிறப்புரிமை என்ற தொடருக்கு ஒன்றும் பிரமாத அர்த்தம் இல்லை. ஆனால் வழக்கத்தில் இது பற்றிப் பெரிய பிரசாரமும் இதற்குப் பெரு மதிப்பும் ஏற்பட்டன. பிரஜைகள் மட்டும் அல்ல, தொழிலாளிகள், பெண்மணிகள், மக்கள், மாணாக்கர்கள் எல்லோரும் தாங்கள் விரும்பும் ஒன்றைப் 'பிறப்புரிமை, பிறப்புரிமை' என்று சொல்லிப் போராடுகிறார்கள். அந்தப் போரில் ஏதோ மாயம் இருக்கிறது. காதில் பட்டதும் ஆவேசமும் உற்சாகமும் உண்டாகின்றன. மனிதருடைய சரித்திரத்தைக் கவனித்தாலும் சரி, சுதந்தரங்கள் கிடைத்த வழியைப் பார்த்தாலும் சரி, தாயின் கர்ப்பத்திலிந்து வெளிவந்ததும் விடாமல் ஒட்டிக்கொள்ளும் உரிமை என்று எதுவும் சிசுவினிடம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனாலும் பிறப்புரிமை என்று விடாமல் மிக மும்மரமாகச் சொல்லிச் சண்டைகள் போட்டுச் சில காலம் நிலைத்தும், சில காலம் விட்டும் சட்ட பூர்வமாகப் பேசியும் அதில் அமையாதபடி காட்டியும் வருகிறார்கள். ராஜீய விஷயங்களைச் சாஸ்திர முறையாய்ப் படிப்பவருக்குப் பிறப்புரிமையில் ஒன்றும் இல்லை என்பது நன்கு தெரியும். ஆயினும் மேலெழுந்த வாரியாய்க் கிளர்ச்சியில் கலந்து கூச்சல் போடுவோருக்கோ இது மனத்திற்குச் சமாதானமாயில்லை. வலுவாய் ஆக்ஷேபித்து ஓங்கித் தூஷிக்கிறார்கள். 'பிறப்புரிமை'யென்று அப்படித்தான் உரக்கக் கதறுவோம் என்கிறார்கள். சிலர் விவேகிகளாதலால், 'இது உண்மை தான்' என்று ஒப்புக்கொண்டு, 'ஆனால் இது தத்துவ விசாரத்திற்குக் காலம் அல்ல; கபட ராட்சஸனோடு

யுத்தம் நடத்தும் பொழுதா இந்த உண்மைகளை நோண்டி நோண்டிப் பார்க்கிறது. ஜனங்களுடைய கோப தாபங்களை அடக்கும்படியான ஒன்று சாஸ்திரமாயிருந்தாலும் வெளிப்படுத்தக் கூடாது' என்றெல்லாம் வாதாடுகிறார்கள். தத்துவமும் கூடச் சில வேளைகளில்தான் வரலாம், சில வாசல்களில்தான் நுழையலாம் என்றால் நாம் என்ன செய்யலாம்? ராஜீயக் கிளர்ச்சிக்கு அப்போதைக் கப்போது அநுகூலமானதைத்தான் பிள்ளைகளுக்கு உபதேசிக்க வேண்டுமென்றால் நியாயமா? சுவாதீனம் பெரிது என்ற கொள்கையுள்ள தேசங்களில் இது செல்லாது.

## பிறர் கூறியது

இந்தப் பிரசங்கத்தால், ராஜீயக் கிளர்ச்சியில் ஆழ்ந்துள்ள தேசத் தொண்டர்களுக்கு நான் பிரதிகூலம் பண்ணினேன் என்பது சாமான்ய ஜனங்களின் அபிப்பிராயம். 'ராஜீயப் போரில் வீர கோஷமாகக் கையாண்டு வரும் ஒரு பதப்பிரயோகத்தை ஒழித்து விட்டார்' என்று சொன்னார்கள். பிரசங்கம் நடந்த இரண்டு மூன்று தினங்களுக்குள் ஜார்ஜ் பெர்னார்ட்ஷா (George Bernard Shaw) இதே கருத்தை எச். ஜி. வெல்ஸ் (H. G. Wells) என்பவருடைய வியாசத்திற்குப் பதில் எழுதுங்கால் எடுத்துரைத்தார்.

## தின்ஷா வாச்சா உருவச் சிலை திறப்பு

சென்ற வருஷம் (1940) பம்பாயில் ஸர் தின்ஷா வாச்சாவின் சிலையைத் திறந்து வைக்க ஸர் சிமன்லால் ஸெதல்வாட் என்னை அழைத்தார். வாச்சா ஜீவித்திருக்கும்பொழுது என்னிடம் அந்தரங்கப் பிரீதி இல்லை என்பது பிரசித்தமாகையால் நான் அந்தக் கைங்கரியம் செய்வது யுக்தமல்ல என்று ஆட்சேபித்து எழுதினேன். 'அவர் அப்படித்தான் வெகு பேரிடம் இருந்தார். அதெல்லாம் குற்றம் இல்லை. நீங்களே வரவேண்

டும்' என்று ஸெதல்வாட் வற்புறுத்தியபடியால் ஒப்புக் கொண்டு ஏப்ரல் மாதம் 25-ஆம் தேதி பெருங் கூட்டத்தின் முன்பாக இந்தக் காரியத்தைச் செய்தேன். அப்போதே யோசித்துப் பேச என் தேக அசௌக்கியம் இடம் கொடுக்காது என்கிற பயத்தால் முன்னதாகவே வியாசத்தை அச்சிட்டுக் கொண்டுபோயிருந்தேன். படிப்பதுங்கூட எனக்கு வெகு தொந்தரவாகத்தான் இருந்தது. ஒலிபரப்புக் கருவிகள் வைத்திருந்தபடியால் எப்படியோ சமாளித்தேன். ஒரு நாளும் இல்லாத ஓர் அநுபவம் இச் சமயம் நேர்ந்தது. முதல் நாள் சாயந்தரம் ஒரு தேநீர் விருந்தில் வெகு காலத்து நண்பர் ஒருவர், "நாளைக்கு நீங்கள் அளந்து பேசவேண்டும்; வாச்சா தேச முன்னேற்றத்துக்கு விரோதி. ஒருவிதச் சீர்திருத்தமும் இந்த நாட்டுக்குத் தகாது என்று அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதினார்" என்று என்னிடம் ரகசியமாக உபதேசித்தார். எவ்வளவு கெட்ட எண்ணம் இருந்தாலும் அதை இவ்விதம் வெளியிடுவது பெரியோர்களுக்குள் வெகு அரிது. வாச்சாவுக்கு முன் கோபமும் அவசரக் காரியம் செய்யும் வழக்கமும் உண்டு. வெகு காலம் இருந்து தேசத் தொண்டு புரிந்த ஒருவரின் குண தோஷங்களைத் தராசில் எடை போட வேண்டுமானால் சிறிய குற்றம் குறைகள் எல்லாவற்றையும் தள்ளிப் பிரயோஜனமுள்ளனவாயும் வெகு காலம் நீடித்திருக்கக் கூடியனவாயும் உள்ள அம்சங்களையே கணக்கில் சேர்க்க வேண்டும். இம் முறையில் வாச்சாவின் இயல்பைச் சீர் தூக்கினால், அவர் செய்த பெரிய உபகாரங்களும் அவர் நடவடிக்கையில் பிரகாசித்த நற்குணங்களுமே மேலிடும். என் பிரசங்கத்தில் அவர் புகழை அதிகமாகக் கொண்டாடினாலும் அவரிடமிருந்த சில கெடுதல்களையும் முற்றும் ஒளிக்கவில்லை. ஆனால் அவற்றை வெளியிடும்பொழுது கூடியவரை தீவிரத்தைக் குறைத்தே எழுதியிருந்தேன். 'எவர் ஞாபகத்திற்காக இந்த நிகழ்ச்சி ஏற்பாடாகியதோ அவ

ருக்கு முற்றும் தக்கதாகவே என் பேச்சு அமைந்தது' என்பது பொதுஜனங்களின் அபிப்பிராயம்; இதற்கு அத்தாட்சியாக வாச்சாவின் பெண்கள் மூவர் சேர்ந்து எனக்கு எழுதிய ஒரு கடிதத்தை இங்கே தமிழில் மொழி பெயர்த்துத் தருகிறேன். 'சரீரத் தளர்ச்சியைப் பார்க்காமல் இவ்வளவு தூரம் வந்து எங்கள் தந்தையின் உருவச் சிலையைத் திறந்து வைத்தது எங்களுக்குப் பேருபகாரம். உங்கள் பேச்சு வெகு சிறப்பாக இருந்தது. சம்பிரதாயப்படி இல்லாமல் - சாதாரண ஜனங்கள் கௌரவமென்று, அறியாமையால் கருதுவதைத் தள்ளி - நீங்கள் புது வழியாய் வியாசம் எழுதியது மிக்க சுவையாயிருந்தது. நாங்கள் மட்டுமல்ல, சபையோர் யாவரும் பிரசங்கத்தையும் பிரசங்கத்தின் தோரணையையும் கேட்டு மோகமுற்றனர். "வெள்ளி - நாக்குடையவர் (Silver - tongued)" என்று தங்களுக்கு வாய்த்துள்ள புகழ் பொய்யல்ல.'

# 4. நல்ல நாளும் பெரிய நாளும்

## என் விவாகம்

இந்தப் பகுதி பெரியதாய் வளரும். என் வாழ்வில் நேர்ந்த பெரிய நிகழ்ச்சிகளையெல்லாம் ஒவ்வொன்ருய் இங்கே எடுத்துரைக்கிறேன். சுபத்துடன் துவக்க வேண்டும் என்பார்கள் அல்லவா? 14-ஆம் வயசில் மெட்றிகுலேஷன் வகுப்பில் படிக்கும்பொழுது எனக்கு முதல் விவாகம் நடந்தது. உள்ளூரிலேயே உறவுக்குள் பிள்ளைகளும் பெண்களும் நிறைந்த குடும்பத்தில் பிறந்த ஒரு பெண்ணை என் பெற்ரேர் நிச்சயித்து மணம் செய்வித்தார்கள். இது சம்பந்தமான அநேக விஷயங்களில் ஒன்றையே எடுத்துச் சொல்கிறேன். ஆறு மாதங்களுக்கு முன் கும்பகோணம் டவுன் ஹாலில், ஒரு பெரிய வாலிபர் சபையார் கூட்டம் ஒன்று நடத்தினர்கள். ஹிந்துக்கள் அவசியமாய் மேற்கொள்ள வேண்டிய ஆசாரச் சீர்திருத்தங்களை விவரித்து, காலேஜில் புரொபஸரான சுந்தரராமையரும் நேடிவ் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டரான அப்பு சாஸ்திரிகளும் பேசினர்கள். பக்குவம் பெருத எங்கள் மனத்தை இவர்கள் வலுவாய்க் கவர்ந்து, ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தி, அதற்கு அங்கத்தினர்கள் என்று கையெழுத்து வாங்கிச் சில உறுதிகளை மேற்கொள்ளும்படி செய்தார்கள். அவைகளில் ஒன்று, பிள்ளைகள் 18 வயசுக்குள் மணம் செய்து கொள்ளக் கூடாதென்பது. சுயாதீனமும் முதிர்ந்த அறிவும் இல்லாத இளைஞர்களிடம் பிரதிக்ஞை வாங்குவது அவ்வளவு யுக்தமா? பெற்ரேர்கள் போஷணையிலிருந்து பெரிய காரியம், சின்னக் காரியம் எல்லாவற்றையுமே அவர்களை மீறிச் செய்யாமலும், வாழ்க்கையில் நல்லது, பொல்லாதது, மேன்மையானது தாழ்ந்தது என்கிற

வித்தியாசத்தையே அறியாமலும் இருந்த எனக்குச் சோதனை சீக்கிரத்திலேயே நேர்ந்தது.

## ஊர் வம்பு

எனக்குக் கல்யாணம் வேண்டாமென்றும், அதற்குத் தகுந்த பருவம் வரவில்லையென்றும் சொல்லிப் பார்த்தேன். கடைசியாக ஒரு சத்தியம் செய்திருக்கிறேனென்று கூறியும் பார்த்தேன். இதை என் குடும்பத்தில் பெரியவர் எவரும் ஒரு பொருட்டாக எண்ணவில்லை. சிரித்து, காதில் படாததுபோல் ஒதுக்கிவிட்டார்கள். எனக்கோ, நான்கு வீடுகள் தள்ளிக் குடியிருக்கும் அப்பு சாஸ்திரிகளைத் தினம் ஐந்தாறு தடவையாவது பார்க்கவேண்டுமே என்று பயம்! நான் ஏதோ ஆக்ஷேபம் செய்துகொண் டிருக்கிறேன் என்று மட்டும் அவர் காதில் சமாசாரம் எட்டியிருக்குமே தவிர, நாங்கள் இதைப்பற்றிக் கலந்து பேசவில்லை. ஆனாலும் ஊரில் ஒரு வம்பு கிளம்பிற்று; 'விவாகம் நடக்க முடியாமல் எங்கேயாகிலும் சமயத்தில் ஓடிவிடு; அல்லது நானே உன்னைச் சிறிது நாளைக்கு ஒளித்து வைக்கிறேன்' என்று என்னிடம் அப்பு சாஸ்திரிகள் ஒப்பந்தம் வாங்கியிருந்தார் என்பதே இந்த வம்பு. இந்த வம்பைக் கேட்டும் என் தாய் தந்தையருக்கு என்னிடம் எள்ளளவும் சந்தேகம் விழவில்லை. நானும் இந்தச் சங்கடத்தை விட்டு மீளப் பெரு முயற்சி செய்யவில்லை. மஞ்சள் வேஷ்டி, ஊஞ்சல், நலங்கு, மாலை, மேளதாளம் என்கிற முழக்கம் எல்லாம் அந்தப் பிராயத்தில் மோகம் உண்டாக்கும் அல்லவா?

## பார்வதியின் பிரிவு
## 1894

இப்படி மணம் புரிந்த மனைவியுடன் பன்னிரண்டு வருஷ காலம் கூடி வாழ்ந்து, பெரிய கூட்டுக் குடும்பத்தில் உள்ள இன்ப துன்பங்களை அநுபவித்தேன். 1894-

ஆம் வருஷத்தில், நான் சேலம் காலேஜில் முதல் உதவி ஆசிரியராக இருக்கும்பொழுது எங்களுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். இவனைச் சுமார் $1\frac{1}{2}$ வயசில் விட்டு விட்டுப் பார்வதி என்ற பெயர் பூண்ட உத்தமி காலஞ் சென்ருள். அவள் செய்த புண்ணியத்தால்தான் சங்கரன் நற்படிப்புப் படித்து, இப்போது நல்ல பெயர் பெற்றிருக்கிருன். இந்த வரலாற்றை எழுதுகிற சமயம் கோயம்புத்தூரில் அவன் இருக்கும் வீட்டிலேயே நான் இருக்க நேர்ந்திருக்கிறது!

## தொழிலை ஏற்றது

படிப்பைத் துவக்கியது முதல் பி. ஏ. பரீக்ஷை வரையில் என் தமக்கை புருஷன் விசுவநாத ஐயர் உதவியால் பெரும்பாலும் என் படிப்பு நிறைவேறியது. பி.ஏ. ஆன பிறகும் கூட அவர் தைரியத்தைக்கொண்டே சட்டக் கல்லூரியில் போய்ச் சேர்ந்தேன். ஆனல் இரண்டு, மூன்று மாதங்களுக்குள் அவர் ஒரு தீராத வியாதியால் இறந்துவிட்டார். குடும்பத்தின் வறுமை சட்டப் படிப்பை நிறுத்தி உடனே சம்பாதிக்கும்படி நேரிட்டது. மூன்று வருஷங்கள் மாயூரம் முனிஸிபல் பள்ளியில் உதவி உபாத்தியாயராய் இருந்த பிறகு, போதனைமுறைப் பயிற்சி செய்துகொண்டால்தான் தொழிலில் முன்னேறலாம் என்று சைதாப்பேட்டை டீச்சர்ஸ் காலேஜ் (Teacher's College) - இல் சேர முயன்றேன். வீட்டில் தாய் தகப்பன்மாருக்கு இது இஷ்டமில்லை. 'ஏதோ ஐம்பது ரூபாய் சம்பளம் வருகிறது. மாயவரம் க்ஷேத்திரத்தில் காவேரி ஸ்நானம். நல்ல பிராமண சகவாசம், இவைகளைத் துறக்கக் கூடாது' என்று பிடிவாதம் செய்தார்கள். என் பேரில் மிக்க அன்புள்ள ஹெட்மாஸ்டர் ஸ்ரீ எஸ். நாராயண சுவாமி ஐயரும் அவர்களுடன் சேர்ந்து தடை செய்தார். நானே அதிருஷ்ட வசத்தால், மற்றச் சௌகரி

யங்களுடன் அரிதான ஒரு சுகத்தையும் பெற்றிருந்தேன். என்னிடம் படித்த பிள்ளைகளில் அநேகர் நன்னடத்தையும் நற்புத்தியும் வாய்ந்தவர்கள்.

## என் திடமான கொள்கை

**ஆ**யினும் ஆசிரியத் தொழிலில் மேன்மை யடைய வேண்டுமானால் தொழிற் பயிற்சி இன்றியமையாதது என்று ஒரே தீர்மானமாய் இடையூறுகளைத் தாண்டிச் சைதாப்பேட்டைக் காலேஜில் சேர்ந்தேன். திரும்பி மாயூரம் வந்து ஒரு வருஷத்திற்குள் சேலம் காலேஜுக்கு மாறினேன். அப்பொழுதும் முன்போலவே பெற்றோர்களும் தலைமை உபாத்தியாயரும் அவர்களால் முடிந்த வரை நிறுத்த முயன்றனர். 'சம்பளம் இரட்டிப்பானாலும் அறியாத ஊர்; தண்ணீர் இல்லாத பிரதேசம்; பரம்பரைப் பழக்கம் போதாது; தேக சௌக்கியம் கூடக் குறையும்' என்றெல்லாம் ஓங்கிப் பேசினார்கள். எனக்கு மட்டும், 'முன்னேற்றம் கிடைக்கும் காலங்களில் பின் வாங்கக் கூடாது; நம்முடைய அநுபவம் படிப்படியாய் அதிகரிக்க வேண்டும்' என்கிற கொள்கை திடமாய் இருந்தபடியால் எப்படியோ மாயூரத்தை விட்டுக் கிளம்பினேன். சேலத்தில் இரண்டு வருஷந்தான் இருந்தேன். அவகாசம் கிடைத்தவுடன் சென்னைக்கு அதே 100 ரூபாய் சம்பளத்தில் பச்சையப்பன் ஹைஸ்கூலில் இங்கிலீஷ் ஆசிரியராக மாற்றிக் கொண்டேன். இதற்கும் தடை போட்டார்கள்! குடும்பத்தின் பளுவை எவ்வளவோ திருப்தியுடன் சுமப்பவன்தான் நான். பெற்றோர்கள், உறவினர்கள், நம் சம்ரக்ஷணைக்கு உட்பட்டவர்கள் யாரையும் கைவிட வேண்டும் என்ற எண்ணம் எனக்குக் கனவிலும் இல்லை. இருந்தாலும் உத்தியோக வழியில் லாப நஷ்டத்தைச் சீர் தூக்கிப் பெரிய காரியங்களை முடிவு செய்யும் கடமை

நம்முடையதே என்ற ஊர்ஜிதமான கொள்கையை நான் எப்பொழுதும் கொண்டவன்.

## நான் போன வழியே நல்வழி

மாகாணத்திற்கெல்லாம் தலைநகரான சென்னைக்குப் போய்ப் பிள்ளைகளுக்காக முறையாகப் பாடுபட்டால் புகழ் பெறலாம் என்ற பேராசை கொண்டது வீண் போகவில்லை. இந்தச் சம்பவங்களையும், பிறகு இந்திய ஊழியர் சங்கத்தில், 'வேண்டாம், வேண்டாம்' என்று எல்லோரும் தடுத்தும் கேளாமல் சேர்ந்ததையும் இவ்வளவு காலம் கழித்து ஆராய்ந்து பார்க்கும்போதும் நான் போன வழியே நல்ல வழி என்று தோன்றுகிறது. இவ்விடத்தில் ஒரு நீதியைத் துணிந்து உரைப்பேன். சாதாரணமாய் நம் குடும்பங்களில் ஏறக் குறைய என் தலைமுறையில், பெற்றோர்கள் பழைய வழக்கத்தையும், பிள்ளைகள் புது வழக்கத்தையும் தழுவியவர்கள். இவர்களுக்கு வாழ்க்கையின் முக்கிய லட்சியம் வெவ்வேறு. பெரிது சிறிது, புண்ணியம் பாபம் என்கிற விஷயத்தில்கூட ஒத்துப் போகமாட்டார்கள். குடும்பச் சுமையை ஏற்றுக்கொண் டிருக்கும் யுவர்களுக்குத் தர்ம சங்கடம் அடிக்கடி உண்டாகும். அப்பொழுது பெரியோருக்குக் கீழ்ப்படிவதுதான் முதற்கடமை என்று நடப்பவர் ஜன சமூகத்திற்குத் தக்க ஊழியங்கள் செய்ய முடியாது. பெரிய காரியம், நற்காரியம் இவை எதிரில் நிற்கும்பொழுது அவைகளைக் கைக்கொள்வது உத்தம தர்மம். கூடிய வரையில் குடும்பபாரத்தைச் சுமக்க வேண்டியதுதான்; தொன்று தொட்டு வரும் வழக்கங்களை அசட்டை செய்யக் கூடாது; இவைகளைத் தள்ளாமல் நாட்டுக்கும் சமூகத்திற்கும் நம் கடமையைச் செலுத்த வேண்டியது அவசியம்; சில காலங்களில் இவற்றைத் தள்ளிச் செய்ய வேண்டி வந்தாலும் துணிந்து செய்ய வேண்டியதுதான். நல்லவர் பழக்கத்தா

லும் சிறந்த படிப்பாலும் தேர்ச்சி பெற்ற மனச் சாட்சி தான் தர்ம சங்கடங்களில் தப்புவதற்கு ஆதாரமாகும்.

## இரண்டாம் விவாகம்

இருபத்தாறுவது வயதில் என் முதல் மனைவி காலமானாள். அப்பொழுது என் நண்பர்களாக இருந்தவர்களில் புரொபஸர் லக்ஷ்மிநரஸு நாயுடு என்பவர் ஒருவர்; படிப்பிலும் வயசிலும் கீர்த்தியிலும் சிறந்தவர். அவரிடத்தில் எனக்கு நல்ல பற்றுதல் உண்டு. மீண்டும் மணம் புரியக்கூடாது என்று அவர் என்னைப் பன்முறை தடுத்தார். ஆயினும் அவர் உபதேசம் என் உள்ளத்தில் படவே இல்லை. அதை நான் சரி என்று கூட ஏற்கவில்லை. பெற்றோர்கள் ஒப்பியே, ஜாதி ஒழுக்கம் தவறாமல், இரண்டாம் மனைவியை மன்னார்குடியில் கல்யாணம் செய்துகொண்டேன். இந்தக் கல்யாணம் எனக்கு நன்மையாகவே முடிந்தது. லக்ஷ்மியின் புத்திக்கும் ஒழுக்கத்திற்கும் அழகுக்கும் நான் ஏற்றவன் அல்ல. அவள் எனக்கு வாய்த்தது பெரிய அதிருஷ்டம். அவளும் என்னை விட்டு மேலுலகம் சென்று ஆறு வருஷங்கள் ஆகின்றன.

## லக்ஷ்மியின் பெருந்தன்மை

அவள் பெருந்தன்மையைக் காட்ட இரண்டு உதாரணங்களை மட்டும் இங்கே குறிக்கிறேன். நான் தென் ஆப்பிரிக்காவுக்கு இந்திய அரசாங்கத்தின் ஏஜென்ட் ஜனரலாகப் போன பொழுது அவளையும் அழைத்துப் போகிறது என்ற பேச்சுப் பலமாய் நடந்தது. இதற்கு மூலம் மகாத்மா காந்தி; அவர் இதை மிகவும் வற்புறுத்தினார். எனக்கு மட்டும் முதலிலிருந்து, ‘இது சரிவராது; தென் ஆப்பிரிக்கா வேலைக்கு இது குந்தகமாகும்’ என்ற பயம் உண்டு. எடுத்தவுடன் குறுக்கிடக் கூடாதென்று, புறப்பாட்டுக்கு இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்பு, லக்ஷ்மியைக் கூட அழைத்துப்

போவதில் எனக்குள்ள சங்கடங்களையும் அவளுக்குள்ள கஷ்டங்களையும் தெளிவாக எடுத்துக் காட்டிச் சமாதானம் செய்து நிறுத்தினேன்.

## சமயத்திற் கேற்ப நடந்தது

**பி**ரிவு நீண்டுவிடுமோ என்ற பயம் இருந்தது. நான் ஏற்றுக்கொண்ட வேலை புதிது; ஜாதித்திமிர், நிறத்திமிர் இவை இரண்டும் கொண்ட ஜனங்களுக்கு விரோதமாயும் இருக்குமாதலால் ஆபத்துக்கள் நேரலாம் என்ற பயமும் உண்டு. அக் காலங்களில் தான் கூடவே இருக்க வேண்டும் என்று அவளுக்குக் கவலை இருந்தாலும் எனக்கு உள்ள கடமைகளிலும் விசாரங்களிலும் தானும் நெருங்கிக் கலந்துகொள்ள முடியாதென்று நான் மறக்கிறேன் என்பதை உணர்ந்து, அவள் என் பேரில் அதிருப்தி இல்லாமல் சமயத்திற்கேற்ப வணங்கிக் கொடுத்தாள். இதை நான் நன்கு அறிந்து, கொண்டாடினேன். ஆனால் இதன் பெருமை தென் ஆப்பிரிக்காவுக்குப் போன பிறகுதான் ஒரு சமயத்தில் நன்றாக விளங்கியது. நத்தால் (Natal) ராஜதானியில் சீமாட்டிகள் கூடி என்னை ஒரு சமயம் வரவேற்றனர். அப்பொழுது முக்கியமாகப் பேசியவர், "இச்சமயம் உங்களைக் கொண்டாடுவதை விட உங்களை விட்டுப் பிரிந்து மனமொப்பி, 'போய் வாருங்கள்' என்று அனுப்பிய மிஸஸ் சாஸ்திரியைத்தான் கொண்டாடுவோம்" என்றார். இந்த வார்த்தையைக் கேட்டதுந்தான் எனக்கு லக்ஷ்மியின் செயல் எவ்வளவு சிறப்புள்ளது என்பது தெரிந்தது. சாதாரணமாய் மேலிட்டுப் போராடும் '**தான்**' என்பதை அடக்கினளே என்று வியப்புற்றேன்.

## "எனக்கு மட்டும் எதற்கு?"

**நா**ன் தென் ஆப்பிரிக்காவை விட்டு வரும் சமயத்தில் இந்திய அரசாங்கத்தார் எனக்கு, 'கே. ஸி. எஸ். ஐ.' (K. C. S. I.) பட்டம் அளிப்பதாகத் தீர்மானித்

துச் சம்மதி கேட்டார்கள். எனக்குக் குருவான கோகலே "கே. ஸி. ஐ. இ.(K. C. I. E.)" பட்டத்தை வேண்டாமென்று சொன்னதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டும், அலங்கார வர்க்கத்தைச் சேருவதற்கு இஷ்டம் இல்லாமலும் அதை மறுத்து விட்டேன். இந்தத் தீர்மானத்தைப் பற்றி என் மட்டில் யாதொரு வருத்தமும் குறையும் இல்லை. ஆனால் லக்ஷ்மிக்கு, 'லேடி ஸ்ரீநிவாஸ சாஸ்திரி என்று அழைக்கப்படுவதற்கு வாய்த்த அவகாசத்தைத் தள்ளி விட்டோமே' என்று துயரம் உண்டு. இதைக் குறித்துக் கடிதமூலமாய் அவளுடைய மன்னிப்பைக் கோரினேன். அதற்கு அவள், "உங்களுக்கு வேண்டாத பெருமை எனக்கு வேண்டுமோ? உங்களுக்கு ஆக்ஷேபம் இருக்கும் பொழுது மறுத்ததே உத்தமம். நான் சற்றேனும் அதற்காக வருந்தவில்லை" என்று விடை அனுப்பினாள். இந்த வைராக்கியம் மேலுக்கு மட்டும் அல்ல? பிறகு இருந்த ஏழு வருஷ காலத்தில், லக்ஷ்மி ஒரு நாளாவது இவ்விஷயத்தில் தனக்குக் குறை இருந்ததாகக் காட்டிக் கொள்ளவே இல்லை. அவளுக்கு உண்மையில் குறையில்லை என்று உறுதியாய் நான் சொல்லக் கூடும்.

## ஹைஸ்கூல் தகராறு

## 1902

**1902**-ஆம் வருஷம் எனக்குப் போதாத வருஷம். ஹிந்து ஹைஸ்கூலில் தலைமை ஆசிரியராக இருந்த காலம். மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் வழக்கம்போல் நல்ல சதவிகிதம் கிடைக்கவில்லை யென்று, உதவிக் காரியதரிசி ஸ்ரீ எம். ஏ. திருநாராயணச்சாரியார் என்பவர் ஒரு கண்டனப் பத்திரம் அனுப்பினார். எனக்கு உத்தியோக விஷயங்களில் கூர்மையான உணர்ச்சி எப்பொழுதும் உண்டு. தலைமையாசிரியருடைய உரிமைகளில் அதிகாரிகள் யாராவது முறையின்றிக் குறுக்கிட்டால் அதைக் கூடிய அளவு மரியாதை

யுடன் எதிர்க்க வேண்டுமென்னும் அபிப்பிராயத்தை நான் அடிக்கடி வெளியிட்டிருந்தேன். எனக்கே கடும் சோதனை வந்தபோது பின்வாங்க மனம் இல்லாமல் தக்க காரணங்களைக் காட்டி, இந்த அவதூற்றை நீக்க வேண்டுமென்று கேட்டேன். தலைமை ஆசிரியர் என்ற ஹோதாவில் உதவிக் காரியதரிசிக்கு எழுதிக்கொண்டது தவிர, தனியாகச் சிநேக பாவத்துடன் விஷயங்களை யெல்லாம் தெரியப்படுத்தி, 'ஏதோ ஒரு வருஷம் தேர்தல் விகிதம் குறைந்ததென்று என்னைச் சிக்ஷிக்கலாகாது' என்றும் கேட்டுக்கொண்டேன். இதற்கு ஒன்றும் வழி பிறக்கவில்லை. எனக்கு அப்பொழுது 33 வயசு; தேக திடமும் நிறைந்திருந்தது. நான் அக் காலத்தில் எவ்வளவு கோபதாபங்களை அடக்கி நடந்தாலும், கொஞ்சம் அகம்பாவம் கொண்டவன் என்று பலருக்கு அபிப்பிராயம் இருந்திருக்கக் கூடுமென்று இப்பொழுது நினைக்கிறேன். 'நல்ல தருணம் நேர்ந்தபொழுது இந்த ஆளை மட்டம் தட்ட வேண்டும்' என்று சிலர் காத்தும் இருந்திருப்பார்கள்.

## தொழில் மேன்மையைக் காக்க

திருவல்லிக்கேணியில் பெரிய மனிதர்கள் அடங்கிய நிர்வாகக் கமிட்டியுடன் தகராறு நேர்ந்தது எனக்குப் பெரிய துரதிருஷ்டம். ஆனாலும் ஆசிரியத் தொழிலின் பெருமை குன்ற விடக் கூடாது என்று அவர்களிடமும் பிடிவாதமாய்க் கட்சி யாடினேன். எனக்கு இப்பொழுது நினைவுள்ள வரையில் ஒழுங்கு தவறி ஒன்றும் எழுதிவிடவில்லை. அப்போது கமிட்டிக்குத் தலைமை வகித்தவர் திரு நாராயணைச்சாரியாரின் தகப்பனார் ராவ் பஹதூர் எம். ஏ. சிங்கராச்சாரியார். அவருக்குத் தம் சொந்தப் புத்திரர்களிடம் எவ்வளவு வாஞ்சையுண்டோ அவ்வளவு வாஞ்சை பள்ளிக்கூடத்தின்மீதும் உண்டு. அவர் அதற்காகப் பட்ட பாட்டிற்குக் கணக்கில்லை. ஒரு தம்பிடி கூட அநியாயச் செலவுக்கு இடம் கொடுக்க

மாட்டார். ஒழிந்த பொழுது தாமே வந்து பாடம் சொல்லிக்கொடுப்பது உண்டென்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போது அந்தப் பள்ளிக்கூடம் அடைந்திருக்கும் உயர்விலும் பெருமையிலும் முக்காலே மூன்று வீசம் அவரால் உண்டானவை. கமிட்டியார் அவரை மீறி ஒரு காரியமும் செய்ய மாட்டார்கள். எனக்கு நேர்ந்த கஷ்டம் எவ்வளவு என்று நான் சொல்ல வேண்டியதில்லை. எனக்குத் தெரிந்த கமிட்டி அங்கத்தினர்கள் வீட்டிற்கு நடையாய் நடந்தேன். அந்தக் காலத்தில் இவர்களில் சிலருக்கு என்னைப் பார்த்தாலே, 'இது ஏதடா, வந்துவிட்டாரா?' என்று தோன்றியிருக்கும். நெருங்கிய நண்பர் ஒருவர் என்னைத் தூரத்தில் கண்டவுடன் உள்ளே போய்விடுவார்.

## இறுதியில் வெற்றி

சில நாள் பார்த்தும் கமிட்டியார் ஒன்றும் நெகிழ்ந்து கொடுக்கவில்லை. 'வேலையை ஒரு வாரத்திற்குள் ராஜிநாமாச் செய்வேன்' என்று கடித மூலமாய் அறிவித்தேன். இதனால் பள்ளிக்கூடத்திற்கு ஒருவித உபத்திரவமும் நேரக் கூடாதென்றும் பிள்ளைகளுக்குள் கலக்கம் எள்ளளவேனும் உண்டாகக் கூடாதென்றும் வெகு கவலைப்பட்டுச் சம்பவத்தை மிக ரகசியமாய் அடக்கிக் கொண்டு எல்லாவற்றையும் வழக்கம்போல் நடத்தி வந்தேன். இந்தக் கெட்ட நிகழ்ச்சியை மிஞ்சவிடக் கூடாதென்று கமிட்டியார் மனத்தில் ஊர்ஜிதமாய்ப் படவே, அவர்கள் கூடி, சிங்கராச்சாரியாருடைய உதவியுடன், என்னை நிந்தித்த கடிதத்தை வாபீஸ் வாங்கிக் கொள்ள ஏற்பாடு செய்தனர். உதவிக் காரியதரிசி திருநாராயணாச்சாரியாரும் கடைசியில் பெருந்தன்மையாகவே நடந்துகொண்டார். 'தலைக்கு வந்தது தலைப் பாகையுடன் போயிற்று' என்றபடி இந்தச் சோதனை தீர்ந்தது. இவ் விஷயம் சீராய் முடிந்தாலும் சில பேருக்கு,

'நான் சற்று முரடன், வலுச் சண்டைக்குப் போகா விட்டாலும் வந்த சண்டையை விடமாட்டேன்' என்ற துரபிப்பிராயம் உண்டாயிற்று.

## கும்பகோணம் டவுன் ஸ்கூல்

சில காலம் கழித்துக் கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலில் நல்ல புகழ் வாய்ந்த எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயர் தலைமை யாசிரியர் பதவியை விட்டு ஓய்வு எடுத்துக்கொண்டார். அந்த வேலைக்கு மனுதார்களுள் நானும் ஒருவன். நான் கும்பகோணத்தான் ஆனதாலும், நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள் பலரை நேரில் அறிந் தவனுதலாலும் நேரில் போய் ஒருவரையும் உதவி கேட்கவில்லை. புரொபஸர் சுந்தரராம ஐயருக்கு மட்டும் எழுதிக்கொண்டதாக நினைவு இருக்கிறது. முடிவில் என் மனுவைக் கமிட்டியார் ஏற்கவில்லை. இதற்கு முக் கிய காரணம் நான் ஹிந்து ஹைஸ்கூலில் செய்த பிடி வாதந்தான். நம் ஊராரே நம்மைச் சரியான விதம் அறிந்துகொள்ளாமல் தள்ளிவிட்டார்களே என்ற துக் கம் என்னை வெகு நாள் பாதித்தது.

## பித்தாபுரம் ராஜா காலேஜ்

இதற்குச் சில மாதங்களுக்குப் பின்பு காக்கி நாடாவில் எப். ஏ. வரை படிப்புள்ள பித்தா புரம் ராஜா காலேஜில் பிரின்ஸிபால் வேலை காலி யாயிற்று. அதற்கு நான் ஓர் அபேக்ஷகன். ஸ்ரீமான் (பின்பு ஸர்) ஆர். வேங்கடரத்னம் நாயுடு மற்றோர் அபேக்ஷகர். எங்கள் போட்டி இரண்டு மூன்று விதத் தில் கவனிக்கத்தக்கது. நாங்கள் அவ்வூருக்குப் போக வில்லை. சிபாரிசுக் கடிதங்களைக் கொண்டு போய் வீடு வீடாய் மெம்பர்களுக்குக் காட்டி ஓட்டுக் கேட்கவும் இல்லை. ஆனால் எங்கள் இருவருக்காகவும் பலமான கட்சிகள் உள்ளூரில் ஏற்பட்டு அவர்களே மிகத் தீவிர மாய்ப் போராடினார்கள். வேங்கடரத்னம் நாயுடுவுக்கு

ஒரு பெரிய பலமும் ஒரு பெரிய துர்ப்பலமும் இருந்தன. பலமாவது, ஸ்தாபகரான பித்தாபுரம் ராஜா அவருக்கு அபிமான சிஷ்யரும், சிநேகிதரும் ஆவார். துர்ப்பலமாவது அவர் பெயர் பெற்ற பிரம்மசமாஜக்காரர். மற்ற பிரம்மசமாஜக்காரர்களைப்போல் அல்ல; தம் மதத்தில் மிக்க அபிமானமும், அதைப் பரவச் செய்வதில் அதிக ஆர்வமும், அவ் விஷயமாகப் பிரசங்கம் செய்வதில் மிக்க திறமையும் உள்ளவர். அதனால் அவ்வூரிலிருந்த சநாதனிகளுக்குக் கவலை உண்டாயிற்று. கமிட்டி அங்கத்தினர்களும் இரு பக்கமாகப் பிரிந்து என்னை ஒரு பக்கத்தாரும், அவரை ஒரு பக்கத்தாருமாக ஆதரித்தனர். அவருக்கு எப்படி இருந்ததோ எனக்குத் தெரியவில்லை. எனக்கு மட்டும் உள்ளத்தில் வெகு அசமாதானம். நான், பள்ளிக்கூடங்களில் மத போதனை சரியல்லவென்றும், அரசாங்கம் அநுஷ்டிக்கும் நடு நிலைமையே சிறந்த போக்கு என்றும், பிள்ளைகளுக்கு மதக் கல்வி பயனற்றதென்றும், அநேக சமயங்களில் கலக்கத்திற்கு இடம் கொடுக்குமென்றும் வாதிப்பவனாகையால் என்னைக் கொண்டாடியவர்களுக்குக் கொஞ்சம் பலக் குறைவு இருந்தது. ஹிந்து மதத்தை ஊர்ஜிதமாய்க் கற்பிக்கப் பாடுபடுவேனென்று உறுதி மொழி சொல்லச் சொன்னார்கள். நான் அதற்கு இணங்கவில்லை.

## அந்தரங்கக் கடிதம்

என் நண்பர் ஒருவருக்கு அந்தரங்கமாய் ஒரு கடிதமும் எழுதலானேன்: 'வேங்கடரத்னம் நாயுடு, குணத்தாலும் வயசாலும் போதனு சக்தியாலும் என்னைவிடப் பெரியவர். அவரை நியமித்தால் காலேஜுக்குப் பெரிய நன்மை; எனக்குச் சற்றேனும் சிறுமை அல்ல. ஏதோ அவருடன் போட்டி நேர்ந்தது. அதை ஒழுங்கு தவறாமலும் பெருந்தன்மையாயும் நடத்த வேண்டும். பிற்காலத்தில் நினைத்துப் பார்க்கும்

பொழுது, "ஏன் இந்தக் காரியம் செய்தோம்?" என்ற விசனம் கொஞ்சங்கூட வரக்கூடாது. இம் முறையில் நீங்கள் இந்த உத்தியோகப் போட்டியை நடத்த வேண்டும்' என்பது அந்தக் கடிதத்தின் கருத்து. இரு கட்சியாரும் வேண்டிய ஆர்ப்பாட்டங்களைச் செய்தான பிறகு கமிட்டி கூடுங்கால் தலைவரான கலெக்டர் வந்திருந்து நடத்தினாராம். அப்பொழுது ஓட்டுக்கள் இருவருக்கும் சமமாய்ப் பிரிந்தன. கலெக்டர், "இந்தத் த்வந்த்வ யுத்தம் வெகு வேடிக்கையானது. ஒருவர் சூரியன்; ஒருவர் சந்திரன். என் ஓட்டைச் சூரியனை வேங்கடரத்னம் நாயுடு பக்ஷம் கொடுக்கிறேன்" என்றாராம். அவ்வாறு அந்த வருஷம் என்னுடைய இரண்டாம் பிரயத்தனமும் வீணாகியது. நான்கைந்து மாதங்களுக்குப் பிறகு வேங்கடரத்னம் நாயுடுவிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அக்கடிதத்தின் கருத்து வருமாறு: 'இந்த ஊரிலுள்ள நம்மிருவருக்கும் பொதுவான நண்பரின் தயவால் தாங்கள் அவருக்கு எழுதிய கடிதம் ஒன்று என் கண்ணில் பட்டது. அதில் தாங்கள் வெளிப்படுத்தியிருக்கும் கருத்துக்கள் மிக்க பெருந்தன்மையானவை. துராசையை அடக்கி ஒழுங்கு தவறாமல் தாங்கள் காண்பித்த உயர்நிலை என்னால் எட்ட முடியாதது. இத்தகைய வித்தியா வீரருடன் போராடித் தோற்றாலும் அது வெற்றியே.'

## நலமாகவே முடிந்தது

இவ்வாறு இவ் விரண்டு முயற்சிகளும் வீணானதுங்கூடப் பெரு நலமாகவே முடிந்தது. சென்னையை விட்டு நான் விலகிப் போயிருந்தால் எப்படிச் சிறந்த குணங்கள் நிறைந்த ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி ஐயருடைய சிநேகம் கிடைத்திருக்கும்? எப்படி அவருடைய அகத்தில் மகான் கோகலேயுடன் போஜனமும் சம்பாஷணையும் கிடைத்திருக்கும்? எப்படி கோகலே 1905-ஆம்

வருஷம் ஸ்தாபித்த இந்திய ஊழியர் சங்கமும் அதன் நிபந்தனைகளும் எனக்குத் தெரிந்திருக்கும்? இவை நேரிடாவிட்டால் என் வாழ்க்கை எவ்விதம் போயிருக்குமோ சொல்வதற்கில்லை.

## கோகலே கடிதம்

இந்த 1905-ஆம் வருஷத்தில் காசியில் கூடிய காங்கிரஸ் மகாநாட்டுக்குப் போயிருந்த பொழுதுதான் அதன் தலைவரான கோகலேக்கு, 'ஊழியர் சங்கத்தில் என்னைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்' என்று மனு எழுதினேன். நாலைந்து வாரங்களாகியும் அதற்கு அவர் பதில் அளிக்கவில்லை. இவ் விஷயத்தில் உதவி புரிய வேண்டுமென்று ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரை நான் கேட்டதும், அவர் என்னைப்பற்றி நல்ல முறையில் தம் நண்பருக்கு எழுதினார். அதன் பேரில் அவரிடமிருந்து தம்முடன் கூடப் புனாவில் ஒரு வாரம் வந்திருந்தால் ஒருவரை ஒருவர் செவ்வையாய்த் தெரிந்து கொண்டு சங்கச் சேர்க்கை விஷயத்தை முடிவு கட்டலாம் என்று கடிதம் வந்தது.

## மகத்தான ஆனந்தம்

இதற்கு இணங்கி 1906-ஆம் வருஷம் ஈஸ்டர் விடுமுறையில் ஐந்தாறு நாள் புனாவில் சனிவாரப் பேட்டையில் கோகலே குடியிருந்த ஜாகையில் விருந்தினனாகத் தங்கினேன். அந்த நாட்களை நல்ல நாட்களாகவே சொல்ல வேண்டும். அதுவரை கிணற்றுத் தவளைபோல் கிடந்த எனக்கு, வெளி உலகம் எப்படி, நாட்டின் குண தோஷங்கள் என்ன, தேசாபிமானி ஏற்றுக்கொள்ள வேண்டிய கடமைகள் என்ன என்கிற பெரிய விஷயங்கள் புலப்பட்டன. ஓர் உத்தமருடன் அந்தரங்கமாய்க் கலந்து சுயநலம் முதலியவற்றை மறந்து உயர்ந்த காரியங்களை ஆலோசிப்பதைப் போன்ற ஆனந்தம் வேறு உண்டோ?

## கோகலேயின் உபதேசம்

சங்கத்தின் மூலமாய் நம் தேசத்தாருக்குச் செய்ய வேண்டிய கைங்கரியங்களையும் அங்கத்தினருக்கு உரிய குணங்களையும் இந்தியாவில் ஆங்காங்குள்ள நிலைமைகளையும் எனக்கு அவர் நன்கு உபதேசித்தார். ஏற்கனவே சங்கத்தில் சேர்ந்தவர்களிடமும் நகரத்திலுள்ள வேறு பெரியவர்களிடமும் அறிமுகம் செய்து வைத்தார். தாதாபாய், ரானடே, பண்டார்கர், மேதா இத்தகைய பெரியோர்களின் குணங்களையும் சரித்திரங்களையும் நேரில் தாம் அறிந்தவராதலால் எனக்கு மனத்தில் பதியும்படி விளக்கினார். இதனால் என்னை வசப்படுத்தியும், 'அவசரமாய்ச் செய்யக் கூடாது; ஊருக்குப் போய் வேண்டியவர்களுடன் கலந்துகொண்டு திடமான அபிப்பிராயம் ஏற்பட்ட பிறகு தெரியப்படுத்துங்கள்' என்றார்.

## நண்பர்கள் கருத்து

எனக்கோ தாமதத்திற்குச் சிறிதேனும் காரணம் தோன்றவில்லை. 'கட்டாயம் சேருகிறேன்' என்று வாக்களித்துத் திரும்பினேன். இந்தத் தீர்மானத்தை வெளியிட்டால், 'நற்காரியத்திற்கு ஆயிரம் தடை' என்றபடி நிறைவேற்றுவதற்கு முடியாமற் போகுமோ என்று பயந்து சில நண்பர்களுடன் மட்டும் சொன்னேன். சிலர், 'கூடாது' என்று ஆட்சேபித்தார்கள். சிலர், 'அப்படியா?' என்று ஒன்றும் சொல்லாமலிருந்தார்கள். இரண்டொருவர் தாம், 'நல்ல காரியம்; சென்னையில் துணிந்து ஒருவராவது சங்கத்தில் சேர்ந்தால் பெருமை தான்' என்று அபிப்பிராயப்பட்டார்கள். ஆனால் அவர்களுங்கூட, 'நீங்கள் போய்ச் சேருங்கள்' என்று உறுதியாகச் சொல்லவில்லை; ஆசை காட்டி என்னைத் தூண்டினவர்கள் யாரும் இல்லை. பொய்யாகக் கிருஷ்ணஸ்வாமி ஐயர் பேரில் ஓர் அவதூறு பிறந்தது.

இந்த நிகழ்ச்சியையெல்லாம் பற்றி ஆங்கிலத்தில் ஏற்கனவே விவரமாய் எழுதியிருக்கிறேன்; இங்கே அவற்றைச் சுருக்கிச் சொன்னால் போதுமென்று கருதுகிறேன்.

## ஒரு வீண் அவதூறு

பள்ளிக்கூடத்து வேலையை விட்டு நின்ற பிறகு, என் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகக் கிருஷ்ணஸ்வாமி ஐயர் எனக்குப் பதினாயிரம் ரூபாய் கொடுத்தார் என்பதே அந்த அவதூறு. 'அப்படி இல்லை' என்று மறுத்தாலும் கேட்கவில்லை. நானோ ஏழை; கிருஷ்ணஸ்வாமி ஐயரோ இஷ்டம் இருந்தால் தங்கு தடையில்லாமல் பணம் கொடுப்பவர். வேறு என்ன ருஜு வேண்டும்? 'இரண்டும் இரண்டும் ஐந்துதான்' என்று சாதிப்பவர்கள் வம்பை நிறுத்தவேயில்லை. சில வருஷங்களுக்குப் பிறகு பத்திரிகைகளிலும் எழுதினார்கள். இவ்வளவு காலம் கழிந்த பிறகும் சிற்சில வேளையில், "ஆனால் நீங்கள் பண உதவி பெறவில்லையா?" என்று யாரேனும் கேட்பதுண்டு. கிருஷ்ணஸ்வாமி ஐயருடைய மனைவி, "நீங்கள் மட்டும் லக்ஷம் லக்ஷமாய்ச் சம்பாதித்துக் குடியும் குடித்தனமுமாய் வாழலாம். அவரை எப்படி ஆண்டியாய்ப் போம் என்று தள்ளிவிடலாம்" என்று கேட்டாராம். அதற்கு அவர், "சாஸ்திரியாரின் உத்தேசம் மேன்மையானது. அதை நாமே ஏற்றுக்கொள்ளாவிடினும் துணிந்து ஏற்றுக்கொள்பவரைக் கூடாது என்று நிறுத்தலாமா?" என்று சமாதானப்படுத்தியதாக என்னிடம் சொல்லியிருக்கிறார்.

## சங்கத்தில் சேர்ந்தது 1907

என் வீட்டிலோ தாயார், மனைவி, தம்பிமார்கள் ஒருவரும் என் போக்குக்கு ஒப்பவில்லை. ஆயினும்

அழுது புரண்டு சிலர்போல் அநாகரிகமாய் ஆணையிட்டு மறியல் செய்யவில்லை. பள்ளிக்கூடத்து அதிகாரிகள் அந்த வருஷத்து மாணவர்களைப் பரீட்சை வரைக்கும் கொண்டு போய் விட்டுவிட்டுப் போக விடை கொடுத்தார்கள். அந்த வருஷம் டிசம்பர் மாதம் தாதாபாய் நௌரோஜியைத் தலைவராகக் கொண்டு கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்திற்குப் போய் 1907 - ஆம் வருஷம் ஜனவரி மாதத்தில் இந்திய ஊழியர் சங்கத்திற்கு உரிய பிரமாணங்களை கோகலே முன்பாக வாய்விட்டு மொழிந்து, அங்கத்தினர் புத்தகத்தில் கையொப்பமிட்டுச் சேர்ந்தேன்.

## சூரத் பிளவு : கண்ட காட்சி

அடுத்த காங்கிரஸ் கூட்டத்தில்தான் சூரத் நகரத்தில் பெருத்த சண்டை சச்சரவுடன் காங்கிரஸில் பிளவு ஏற்பட்டது. நான் பந்தலில் முடிந்த வரையில் இருந்து பார்த்தேன். நாற்காலிகள் அங்கும் இங்கும் கல்லைப்போல் எறியப்பட்டன. ஜனங்களுக்குக் காயம் உண்டாயிற்று. கைக்குத்து முதலான சம்பவங்கள் நடந்தன. அப்பொழுதெல்லாம் மேடையிலிருந்து பார்த்துக் கொண்டே நின்றேன். நான்மட்டும் அக் கிளர்ச்சியில் கலக்கவில்லை. ஓர் இளைஞர் முரட்டுத் தனமாய் நாற்காலிகளைத் தூக்கித் தூக்கிச் சுற்றி நிற்பவர் பேரில் போட்டுக்கொண் டிருக்கக் கண்டு கொஞ்சம் நெருங்கினேன். அவர் என்னிடம் படித்த பிள்ளையாதலால், "ஐயோ, நீங்களா ஸார்?" என்று கேட்டேன். உடனே அவர் சேஷ்டையைச் சற்று நிறுத்தினார். மறு நாளே மேதா, கோகலே, கிருஷ்ணஸ்வாமி ஐயர் முதலிய மிதவாதிகள் கூடிக் கன்வென்ஷன் (Convention) என்கிற பெயரைக் கைக்கொண்டு சில நிபந்தனைகளை ஏற்படுத்திக் காங்கிரசைப் புதுப்பித்தார்கள்.

## ஜில்லாக் கமிட்டிகள் ஏற்பாடு

இப்படிச் சீராக்கிய காங்கிரஸ் சென்னையில் கூடுவதாய்த் தீர்மானித்ததால் ஒவ்வொரு ஜில்லாவிலும் காங்கிரஸுக்கு அநுகூலமாகக் கமிட்டிகளை ஏற்படுத்த வேண்டும் என்று சில ஜில்லாக்களுக்கு (இப்பொழுது காலஞ் சென்ற ஸர்.) ஸி. ஒய். சிந்தாமணியும், மற்ற ஜில்லாக்களுக்கு நானுமாகப் போய் உழைத்தோம். பல இடங்களில் இடையூறுகள் நேர்ந்தன. ஆயினும் பொதுக்காரியம் திருப்திகரமாக முடிவு பெற்றது. இதற்காகச் சுற்றியதால் எனக்குப் பல பெரிய மனிதர்களுடைய பழக்கம் கிடைத்தது. மாகாணத்தி லுள்ள ஒற்றுமை வேற்றுமைகளும் நன்றாய்த் தெரிந்தன; அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குள்ள சாதக பாதகங்களும் நன்றாய் வெளியாயின.

## பெங்களூர்க் கூட்டத்துக்குத் தடை

**1911**-ஆம் வருஷம் மிக்க விநோதமான சம்பவம் ஒன்று நேர்ந்தது. பங்களூரில் மாணுக்கர்கள் பெரிய கூட்டம் கூடுவதாக ஏற்பாடு செய்து அதற்குத் தலைமை வகிக்க என்னை அழைத்தனர். அப்பொழுதெல்லாம் இப்பொழுது நிகழும் கேடும் கிளர்ச்சியும் முற்றும் தெரியாதவை. ஆகையால் யோசனை சிறிதும் இன்றி நான் ஒப்புக்கொண்டேன். அந்தச் சமயத்திலேயே வேறு சில பிரசங்கங்களும் செய்ய உத்தேசித்து நான்கு நாட்கள் அந் நகரத்தில் நான் தங்குவதாக நிச்சயமாயிற்று. இந்தப் பிரசங்கங்களில் ஒன்று 'ஹிந்து விவாகம்' என்பதைப் பற்றியது. மாஜி திவானாகிய வி. பி. மாதவராயர் அக்கிராசனம் வகிப்பதாக ஒப்புக்கொண்டிருந்தார். மாணுக்கர் கூடுவதற்கு முன் திவான் ஆனந்தராயரிடமிருந்து காரணம் ஒன்றும் குறிப்பிடாமல் தடை உத்தரவு வந்தது.

## ஜனங்களின் ஆச்சரியம்

அது எனக்கு நேரில் அனுப்பப்படாமல் கூட்டத்தை நிர்வாகம் செய்பவருக்குக் கிடைத்தது. இதை ஒருவரும் எதிர்பாராததால் ஊரெல்லாம் ஆரவாரம் உண்டாயிற்று. நான் பல காலம் வாத்தியார் பதவியிலிருந்து நற்பெயர் பெற்றிருந்ததாலும் மிதவாதிகளுக்குத் தலைவரான கோகலேயினுடைய சிடனானதாலும் இந்த நிகழ்ச்சி எல்லோருக்கும் நிர்மலமான ஆகாயத்திலிருந்து இடி விழுந்ததுபோல் இருந்தது. விவாக விஷயமான கூட்டம் சங்கர மடத்தில் நடப்பதாக விளம்பரம் செய்திருந்தபடியால் பெருத்த கூட்டம் கூடியிருந்தது. மாதவராயர் நுழைந்ததும் கூட்டத்தை நடத்தக் கூடாதென்று தடை செய்து சர்க்காரிலிருந்து அவருக்கே உத்தரவு கிடைத்தது. இது தெரிந்ததும் ஜனங்கள், 'இதென்ன விபரீதம்!' என்று ஆச்சரியப் பட்டனர்.

## மாதவராயர் கூறியது

மாதவராயர் சற்று நேரம் யோசனை செய்து சில வாக்கியங்களைப் பெரு நடையில் கோத்துப் படித்துக் கூட்டத்தைக் கலைத்தார். அந்தச் சிறிய சொற்பொழிவில் தம் அபிப்பிராயத்தை அவர் தெளிவாய்த் தெரிவித்தார். "விளம்பரத்தில் கண்ட பிரசங்கமாவது பிரசங்கியாவது யாதொரு சந்தேகத்துக்கும் காரணமாயிருக்க முடியாது. ஊர் ஜனங்களைக் கோப மூட்டிக் கிளப்பும்படியான இயக்கமும் அல்ல இது. ஆதலால் சர்க்கார் செய்த தடையால் எனக்கு மிக மன வருத்தம்" என்றார்.

## திவானுடன் சம்பாஷணை

பலர் பலவிதமாய்ப் பேசிக்கொண்டார்கள். பலவித யோசனைகளையும் எனக்குச் சொன்னார்கள். எனக்கோ, 'என் மட்டில் இருந்தால் பரவாயில்லை. புனசங்கத்தின் பெயருக்கும் கோகலேயின் பெயருக்கும்

இழிவு தேடி விட்டோமே' என்று மிகுந்த துக்கம். உண்மையான சில நண்பர்களுடன் கலந்துகொண்டு திவானிடம் போய் இந்த நிகழ்ச்சியின் அம்சங்கள் எல்லாவற்றையும் குறித்துப் பேசினேன். அந்தரங்கமான காரணங்களைச் சொல்லாவிடினும் நான் ஊகமாய்த் தெரிந்துகொள்ளும்படி சில கருத்துக்களை அவர் வெளியிட்டார். தமக்கு முற்றும் சுதந்தரமில்லையென்றும், பிரிட்டிஷ் அரசாங்கத்தார் வெளிப்படையாய்க் காட்டும் அபிப்பிராயங்களையே உண்மையாகவும் கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணக் கூடாதென்றும் சொல்லி, கோகலேயைப் பற்றியும் இந்திய ஊழிய சங்கத்தாரைப் பற்றியும் பூர்ண நம்பிக்கை அவர்களுக்கு உண்டென்று நான் எப்படி உறுதியாயிருக்கலாமென்று கேட்டார்.

## சென்னையில் முறையிட்டது

**நா**ன் இதன் பேரில் பிரிட்டிஷ் ரெஸிடென்டைக் கேட்பதற்காகப் போனேன். அவர் என்னை நேரில் காண முடியவில்லையென்று சொல்லி உதவி ரெஸிடென்டை அனுப்பினார். அவர் என் புகார்களை, "அப்படியா! அப்படியா!" என்று காதில் போட்டுக்கொண்டாரே தவிர, வேறு ஒன்றும் தமக்குத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. நான் உடனே சென்னைக்குப் போய் ராஜீயத் துறைகளில் முக்கியஸ்தர்களுடன் கலந்து பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை தயாரித்து அனுப்பினேன். கோகலேக்கு விவரமாய் எழுதினேன் என்று சொல்ல வேண்டியதில்லை. அப்பொழுது என் நண்பர் கிருஷ்ணஸ்வாமி ஐயர் சென்னை நிர்வாக சபையின் அங்கத்தினர். உதகமண்டலம் போய் அவரிடம் எல்லாவற்றையும் தெரியப்படுத்தவே, அவர் மைசூர் மகாராஜாவிடம் பேசி கோகலேக்கு ரகசியமாய் எழுதினார்.

## கிருஷ்ணஸ்வாமி ஐயர் தெரிவித்தது

'ஏதோ தவறு நடந்துவிட்டது, மகாராஜாவுக்கு மிக்க வருத்தம். இதற்கு மாற்றாக ஒன்றும் உடனே செய்ய முடியாவிடினும் சமயம் நேர்ந்தபொழுது பார்க்கலாம். கோகலே இவ் விஷயத்தைப் பெரிது பண்ணாமல் கூடியவரை பொறுமை காட்ட வேண்டும்' என்னும் அபிப்பிராயங்களை மகாராஜாவுடன் தாம் செய்த சம்பாஷணையின் பயனாகக் கிருஷ்ணஸ்வாமி ஐயர் அறிவித்தார். என் நடத்தையில் ஒரு பிழையை எடுத்துக் காட்டினார். மைசூர் போன்ற சுதேச ராஜ்யத்துக்குள் நுழைபவர் அவ்விடத்து அதிகாரிகளுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டுமென்பதும், ஐந்து நாட்கள் சேர்ந்தாற்போல் பிரசங்க விளம்பரம் செய்தது சரியல்ல என்பதுந்தான் அது.

## கோகலேயின் கோபம்

இது குற்றமாகுமா? பெரிய சர்க்காருக்கும் எனக்கும் நேரிட்ட தகராறுகளை விசாரிப்பவர் அந்தச் சர்க்காரின் தவறான காரியங்களை எடுத்துச் சொல்லுங்கால், என் பேரில் ஏதாவது சொல்ல வேண்டியதுதானே. கோகலே இவ் விஷயத்தைப்பற்றித் திவான் ஆநந்தராவுக்கு மிக்க வருத்தத்துடன் எழுதினார். அதற்குப் பதிலாக அவர் சமாதானங்கள் கூற, அவற்றைக் கோகலே ஒப்புக்கொள்ளவில்லை; கோபமாகவே இருந்தார். சிறிது காலம் கழித்துப் பம்பாயிலோ வேறு எங்கேயோ ஒரு பொது இடத்தில் ஆனந்தராவ் நெருங்கிப் பேச வந்தபொழுது கோகலே வேறு பக்கம் திரும்பிக்கொண்டாரென்று கேள்விப்பட்டேன்.

## சமரஸம் ஏற்பட்ட விதம்

நான்கு வருஷங்கள் ஆன பிறகு கோகலே காலமாய் விட்டார். இந்திய ஊழியர் சங்கத்தார் இவர் ஸ்தா

னத்துக்கு என்னை உயர்த்தினார்கள். சில நண்பர்கள் இந்த மைசூர் மனஸ்தாபத்தை நல்ல வழியாய் முடித்து விட வேண்டுமென்று முயன்றார்கள். அவர்களுள் நான் இப்பொழுது நன்றியறிவுடனும் பேரன்புடனும் கொண்டாட வேண்டியவர்கள் பிஷப் வொயிட் ஹெட் (Bishop Whitehead) என்பவரும் அவர் மனைவியும் ஆவர். இவர்கள் சென்னையில் இருந்தபொழுது இந்தியருடன் நெருங்கிப் பழகி அவர்களுக்குத் தக்க உரிமைகளும் முன்னேற்றங்களும் வரவேண்டுமென்று செய்த முயற்சிகளுக்கு அளவில்லை. மைசூர் அரண்மனையில் என் விஷயத்தைக் குறித்துப் பேசி, ஏதாகிலும் தக்க சந்தர்ப்பத்தில் என்னை அழைக்க வேண்டுமென்று இவர்கள் ஏற்பாடு செய்தனர். இந்திய சமூகத்தின் சேவைக்காக ஒரு சங்கம் அமைத்து அதன் துவக்க விழாவுக்கு யுவராஜாவை அக்கிராசனம் வகிக்கக் கேட்டுக்கொண்டு என்னைப் பிரசங்கம் செய்ய வேண்டுமென்று ஏற்பாடு செய்தனர். பங்களூரில் இதற்குக் கூடிய சபை சீராய் நடைபெற்றது. அதனால் ஜனங்களுக்கு மிகவும் திருப்தி. இது முதல் மைசூர் சமஸ்தானத்தில் எப்பொழுதும் எனக்கு, உத்தியோக வர்க்கத்தாரும் மற்றவரும் அதிக மரியாதையையும் அன்பையும் காட்டி வருகிறார்கள்.

## ரகசியப் போலீஸ்

சென்னையில் எங்கள் சங்கத்திற்கு ஒரு கிளை ஏற்படுத்தி, நிலைநாட்டுவதற்கு அதிக முயற்சி செய்ய வேண்டியிருந்தது. சர்க்காருக்கு எங்கள் சங்கத்தினர் பேரில் மெத்த சந்தேகம். எனக்காகவென்று இரண்டு ரகசியப் போலீஸ்காரர்களை இடைவிடாமல், வீட்டில் இருக்கும்பொழுதும் வெளியில் போகும்பொழுதும் காவல் போட்டிருந்தார்கள். அவர்கள் ரகசியப் போலீஸ் என்று பெயரே தவிர என்னைக் கவனித்துத் துப்புச்

சொல்வோர் என்று எல்லோருக்கும் விளம்பரம் போட்டாற்போல் நடந்துகொண்டார்கள். 'இது ஒழுங்கல்ல' என்று என்னை நன்றாய் அறிந்த பெரிய மனிதர்கள் அடிக்கடி ஆக்ஷேபித்தும் சர்க்காரில் உயர்ந்த உத்தியோகஸ்தர்கள், 'அப்படியா? இது கூடாதுதான்' என்பார்களே தவிர, இக் கேட்டை நீக்கப் பிரயத்தனம் செய்யவில்லை. ஒன்றும் அறியாதவர்கள் போலவும், நம் கட்சி நியாயந்தான் என்று ஒப்புக்கொண்டவர் போலவும், நம் சார்பாக முயற்சி செய்பவர் போலவும் பாசாங்கு செய்வதில் ராஜ நீதியின் அந்தரங்கங்களைக் கையாளுகின்ற பொலிடிகல் டிபார்ட்மென்டார்களும் (Political Deapartments) நிர்வாக சபை அங்கத்தினர்களும் அவர்கள் காரிய தரிசிகளும் மிகத் தேர்ந்தவர்கள். சென்னையின் துரதிருஷ்டத்தாலும் என் போன்றவர் அநேகரின் கஷ்டகாலத்தாலும் வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் இளம் பிராயத்திலேயே இறந்துவிட்டார். நற்காரியங்களுக்காகத் தாராளமாய்ப் பணம் கொடுப்பதோடு, தாமே முன் நின்று தர்ம யுத்தம் செய்யும் ஒப்பற்ற வீரர் அவர்.

## லார்ட் பென்ட்லண்டின் பிரீதி

லார்டு கார்மைக்கேல் (Lord Carmichael) என்று ஒரு புதிய கவர்னர் ஆஸ்திரேலியாவிலிருந்து சிறிது காலம் இங்கே வந்திருந்தார். ராஜாங்க முறைகளைத் திருத்த வேண்டுமென்றும் நம் ஜனங்களுக்குப் பலவிதமாய்ப் புது நன்மைகளைச் செய்ய வேண்டுமென்றும் அவருக்கு மிக்க அவா உண்டு. ஆயினும் சுற்றியிருந்த பெரிய உத்தியோகஸ்தரின் எதிர்ப்பால் ஒன்றும் செய்ய முடியவில்லை. துப்புக் கான்ஸ்டேபிள்களைக் கூட என்னிடமிருந்து நீக்க அவரால் முடியவில்லை. "எனக்கே துப்பு வைத்திருக்கிறார்களே!" என்று விளையாட்டுப் போல் முறையிடுவார். வங்காளத்துக்கு முதல் முதல் கவர்னர் என்ற அந்தஸ்துக் கொடுத்து அவரை அங்கே

மாற்றினார்கள். அவர் பதவிக்கு லார்டு பென்ட்லண்டு (Lord Pentland) என்பவர் சென்னைக்கு வந்து சேர்ந்தார். அவரிடம் என் விஷயமாய் இந்தியாவின் உபகாரிகளுள் உத்தமரான ஸர் வில்லியம் வெட்டர்பெர்ன் (Sir William Wedderburn) என்பவர் இங்கிலாந்திலேயே நல்ல சிபாரிசு செய்திருந்தாராம். அதனால் என் பேரில் அன்புவைத்து அவர் சில பேட்டிகள் அளித்தார். அந்தக் காலத்தில் சட்ட சபையின் அங்கத்தினராக, உத்தியோகம் இல்லாதவர் சிலரை நியமிப்பதுண்டு. அந்த ஸ்தானங்களில் எனக்கு ஒன்று கொடுப்பதாகப் பென்ட்லண்டு பிரபு உத்தேசித்தார். இதற்கு அவர் அருகில் உள்ள அதிகாரிகள் இடையூறு செய்தார்கள். அதையெல்லாம் கவனியாது அவர் பிடிவாதமாய் என்னை நியமித்தார்.

## சட்ட சபையில்

எவ்விதத்தாலோ கலந்து யோசனை செய்தாற்போல் அதே சமயத்தில் அலகாபாத்தில் ஸர் தேஜ்பகதூர் சப்ரூவும் (Sir Tej Bahadur Sapru) பம்பாயில் ஆர். பி. பாரஞ்ஜ்பேயும் (R. P. Paranjpye) சட்ட சபைக்கு அங்கத்தினர்களாய் நியமிக்கப்பட்டனர். நாங்கள் மூவருமே ஒருவருக்கொருவர் நேரிலாவது பத்திரிகை மூலமாவது கலந்துகொள்ளாமலே, சர்க்கார் சார்பாக வோட்டுச் செய்கிறது என்கிற கடமையை ஏற்றுக்கொள்ளாமல் எங்களுக்குத் தோன்றிய நியாயப்படி தீர்மானங்கள் பிரேரணை செய்தும் ஓட்டுச் செய்தும் வந்தோம். இது பற்றி ஜனங்கள் தெரிந்தெடுத்த அங்கத்தினர்களுக்கும் எங்களுக்கும் வித்தியாசம் தென்படவில்லை. தங்களால் நியமிக்கப்பட்டவர்களை ஓட்டுக்காக நிர்ப்பந்தப்படுத்துகிறதென்ற வழக்கம் பிற்காலத்தில் பிறந்தது. 1913-ஆம் வருஷத்திலும் பிறகு சில வருஷங்களிலும் சர்க்காருக்கு இப்பொழுது இருப்பது போன்ற நெருக்கடியில்லை.

## சந்தோஷமும் வருத்தமும்

இந்தப் பதவி எனக்குப் பெருத்த சந்தோஷத்துடன் பெருத்த வருத்தத்தையும் தந்தது. அதை விரிவாக எழுதினால் இதைப் படிக்கும் சிறுவர்களுக்கு ஒரு வேளை உபயோகமாகும். அந்தச் சமயம் சென்னைச் சட்டசபையைச் சேர்ந்த, உத்தியோகம் இல்லாத அங்கத்தினர்கள், மத்திய இந்திய சட்ட சபைக்கு இரண்டு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டி வந்தது. ஒவ்வொருவருக்கும் இரண்டு ஓட்டு உண்டு. அவ்விரண்டு ஓட்டையும் ஒருவருக்கே கொடுக்கலாம். என் உரிமையை நான் எவ்விதம் செலுத்துவது? எனக்கு 44 வயசாயினும் உலகப் போக்கை நன்றாய் அறிந்து பொதுக்காரியங்களில் ஒழுங்காய் நடந்துகொள்ள வேண்டுமென்ற வலுத்த கொள்கை உண்டு. அவ்வொழுங்கு இன்னதென்றும் ஒரு பிடிவாதம் உண்டு: அதாவது, பொது விஷயங்களை ஆராயும் விதத்தில் சிநேகப் பான்மை கொண்டாடுவதையும், பதவிகளுக்குத் தேர்ந்தெடுப்பதில் கட்சி, பிரதிகட்சி பார்ப்பதையும் விட்டு அந்த அந்த மனிதரின் திறமையையும் தன்மையையும் மாத்திரம் கவனிக்க வேண்டியது என்பதே. பொதுக்காரியங்களை நடத்துவோர்களுக்குள் நெடுநாளாய் ஊன்றி நிற்கும் வழக்கங்களுக்கும் சங்கேதங்களுக்கும் இது முற்றும் மாறுபாடானது என்பதை நான் அப்பொழுதுதான் முதல் முதல் நன்கு உணர்ந்தேன்.

## நண்பர்களின் வாதம்

அப்பொழுது மத்திய சபைக்கு அபேக்ஷகர்கள் ராஜமகேந்திரபுரம் நியாயாதிபதி சுப்பராவும் சேலம் ஸி. விஜயராகவாச்சாரியாரும். இருவரையும் எனக்கு நன்றாகத் தெரியும். இருவரிடமும் எனக்கு மதிப்பு உண்டு. சுப்பராவ் கட்சியைச் சேர்ந்தவன் நான். விஜயராகவாச்சாரியார் எதிர்க் கட்சியார். இது தவிர அவரு

டன் எனக்கு ஆதியிலிருந்த சிநேகமும் சற்றுக் குறைந் திருந்தது. ஆயினும் இந்த விஷயங்களை மனத்தில் வைக்கக் கூடாதென்று எண்ணி இவருக்கு ஓர் ஓட்டும் அவருக்கு ஓர் ஓட்டும் கொடுப்பதாக எழுதினேன். இதுவே மேன்மையான நடத்தை என்று எனக்குள் திருப்தி அடைந்தேன். இது நண்பர்களுக்குத் தெரிந்தவுடன், "இதென்ன அறியாமை? இதென்ன துஷ்டத்தனம்!" என்று பெரும் சத்தம் கிளம்பியது. அவர்களுள் நெருங்கிய பழக்கத்தால் எல்லாச் சுவாதீனமும் உள்ள இருவர், நான் செய்தது ராஜநீதி முறையில் கொடும் பாவமென்றும் ஒரு கட்சியாரும் என்னை இனி யோக்கியராக மதிக்க மாட்டார்களென்றும் வாதாடினார்கள்.

## முதற் பாடம்

அப்பொழுது எங்களுக்குள் நடந்த சம்பவத்தை நினைக்க இன்றுங் கூட எனக்கு வெட்கமாயிருக்கிறது. விஜயராகவாச்சாரியாருக்கு எழுதிய கடிதத்தை வாபீஸ் வாங்கிக்கொண்டு இரண்டு ஓட்டையும் சுப்பராவுக்கே கொடுப்பதாக அப்பொழுதே எழுத வேண்டுமென்றும் அவர்கள் என்னை நெருக்கினார்கள். நான் எளிதில் படியாமையால் பேச்சுத் தடித்து அழுகையில் முடிந்தது. நான் அவர்கள் விருப்பத்துக்கு இணங்கினேன். விஜயராகவாச்சாரியாரிடம் மனஸ்தாபம் அதிகரித்தது. நானும் பொது நடவடிக்கைகளில் முன்னேற்றம் அடைவதற்கு அவசியமான முதற்பாடத்தைக் கண்ணீர்விட்டுக் கற்றேன்.

## கோகலே ஸ்தானம்

1915-ஆம் வருஷத்தில் ஒரு பெரிய சம்பவம் நிகழ்ந்தது. பெப்ருவரி மாதத்தில் கோகலேயின் வாழ்வு, உயர் நிலையிலிருந்து நம் தாய் நாட்டுக்கு அவர் மிக்க நன்மை விளைவித்துக்கொண் டிருக்கும்பொழுது அநியாயமாய் 49-ஆம் வயசில் முடிந்தது. இச் செய்

தியை மதுரைக்குப் போய்க்கொண்டிருந்த நான் திண்டுக்கல்லில் தந்தி மூலமாய்த் தெரிந்துகொண்டேன். உடனே சென்னைக்குத் திரும்பி முக்கியமான சிநேகிதர்களுடன் ஊழியர் சங்கத்தின் நிலைமையைப் பற்றி வெகு கவலையுடன் யோசனை செய்து புனா போய்ச் சேர்ந்தேன். அங்கே அங்கத்தினர்கள் கூடி என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பினோம். நடுக்காட்டில் திக்குத் திசை புரியாமல் விழிப்பவரைப்போல் சில நாட்களைப் போக்கி என்னைத் தலைவர் என்று பெயர் வைத்துச் சங்கத்தின் சுமையைத் தாங்கும்படி செய்தார்கள். எனக்கோ உள்ளத்துக்குள் இருந்த நடுக்கம் இவ்வளவு என்று சொல்லி முடியாது. கோகலே கடைசிவரை நல்ல ஞாபகத்துடன் இருந்தபடியால், "உங்கள் ஸ்தானத்திற்கு யாரைக் குறிப்பிடுவீர்கள்" என்று கேட்டார்களாம். அதற்கு அவர், "உங்கள் பாடு" என்று சொல்லி விட்டார். 'பின்னர் நன்மை தீமைகளுக்கு உள்ளாக வேண்டியவர் வேறு இருக்க, இறந்து போகிற நாம் நம் இஷ்டத்தால் கட்டுப்படுத்தக் கூடாது' என்ற தெளிவான எண்ணத்தை அவர் மேற்கொண்டதாகத் தோன்றுகிறது.

## காந்திக்குக் கோகலே உபதேசம்

என்னைக் கோகலே நியமித்துப் போனாரென்று ஒரு தப்புச் செய்தி பரவிற்று. இதை எவ்வளவோ தடவைகள் நாங்கள், 'இல்லை, இல்லை' என்று மறுத்தும் இப்பொழுதுங்கூடச் சிலர் அவ்வெண்ணம் கொண்டிருக்கிறார்கள். அச் சமயம் காந்தி அடிகள் சங்கத்தில் சேர்வதாக உத்தேசம் இருந்தது. அவரைச் சேர்த்துவிட வேண்டுமென்று கோகலேக்குப் பெரிய ஆவலிருந்தும் அவரது கொள்கைகளில் சில, சங்கத்திற்குக் கேட்டை விளைவிக்கும் என்று அவர் அஞ்சினார். ஒரு வருஷ காலம் இந்தியா முழுவதும் சுற்றிப் பார்த்தால் அக் கொள்கைகள் மாறும் என்று எண்ணி, அவ்வாறு செய்யும்படி

காந்திக்குக் கோகலே உபதேசித்தார். அந்தத் 'தேசப் பிரதட்சிணம்' அப்பொழுதுதான் துவங்கியிருந்தது. முடிவு பெறும் சமயத்தில் காந்திஜியை அழைத்து ஒரு வாரம் வரையில் இரவும் பகலும் எங்கள் அபிப்பிராயங்களை அந்தரங்கமாய்க் கலந்து பார்த்தோம். பெரிய அம்சங்கள் பலவற்றில் வேற்றுமை புலப்பட்டது. எங்களுக்குள் அவரைச் சேர்ப்பதில் அபிப்பிராயங்கள் வேறுபட்டன. அந்த நிலையில், சங்கத்திற்குக் கேடு நேரும் என்று பயந்து இரு தரத்தாரும் காந்திஜியினிடம் உண்மையைச் சொல்லவே, அவர் ஒதுங்கி விட்டார்.

## பதிவாகாத அங்கத்தினர்கள்

ஆனால் அவருடைய உள்ளத்தில் அன்பு குன்றாமையால், 'ரெஜிஸ்டரில் பதிவாகாத அங்கத்தினர் என்று நானும் எண்ணி வருகிறேன். நீங்களும் எண்ணி வரவேண்டும்' என்று சொன்னார். அப்படியேதான் இப்பொழுதும் பரஸ்பரம் நடந்து வருகிறோம்.

கோகலே காலத்திற்குப் பிறகு நாங்கள் செய்த பெரிய காரியங்களில் இது முதற் காரியமாதலால் வெகுவாய்த் துக்கித்தும் நடுங்கியும் நாட்டில் என்ன சொல்கிறார்கள் என்று ஊக்கமாய்க் கவனித்தோம்; நானாவிதமான அபிப்பிராயம் இருந்தாலும் எங்களுடைய தீர்மானம் அடியோடு கெட்டதென்று யாரும் தூஷணை செய்யவில்லை.

## நல்ல புத்தி

அந்த வருஷத்திலும் அடுத்த வருஷத்திலும் ராஜீய விஷயங்களில் ஊரெல்லாம் மும்முரமாய்ச் சர்ச்சை செய்யப்பட்ட விஷயம் என்னவெனில் சூரத் காங்கிரஸில் மிதவாதிகள், அமிதவாதிகளென்று இரு வகையாகப் பிரிந்த கட்சிகளை மீண்டும் ஒரு வகையாகச் சேர்த்துக் காங்கிரஸை முன்போல் பலப்

படுத்த வேண்டும் என்பதுதான். இது நற்காரியம் என்பதே கோகலேயின் அந்தரங்க அபிப்பிராயம். அதனை அறிந்த நாங்கள் எங்களால் கூடிய மட்டும் உதவி புரிந்தோம். இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குங் கூட ஒரு நாளும் இல்லாத சிநேகபாவம் உண்டாயிற்று. ஸ்ரீமதி பெஸென்டைச் சென்னை அரசாங்கத்தார் உதகமண்டலத்தில் அடைத்து வைத்ததுகூட ராஜீயத் துறையில் ஈடுபட்டவர்களை ஒன்றுயச் சேர்க்கத்தான் பயன்பட்டது. இதற்கு ஓர் அடையாளமாக 1917-ஆம் வருஷத்தில், நாஸிக் அதாவது பஞ்சவடி என்னும் ஊரில், மாகாண மகாநாடு கூடிய பொழுது லோகமானிய திலகர் கட்சியினரும் மிதவாதிகளாகிய நாங்களும் உற்சாகத்துடன் கலந்துகொண்டோம். அந்த மகாநாட்டுக்கு என்னைத் தலைவராக நியமித்தார்கள். அந்த இரண்டு மூன்று வருஷங்களைப் பாரத நாட்டு ஜாதகத்தில் நல்ல புக்தி என்றே சொல்ல வேண்டும். ஆனால் சீக்கிரத்தில் அந்தக் கிரகங்கள் தங்களுடைய சுபஸ்தானங்களை விட்டுப் பெயர்ந்துவிட்டன.

## என் வெற்றி

**நம்** தேசத்துக் கிரகங்கள் அநுகூலமான வீடுகளில் இருந்ததால் கிடைத்த சில க்ஷேமங்களைப் பிறகு சொல்கிறேன். இப்பொழுது எனக்குப் பிரத்தியேகமாய் நேர்ந்த ஒரு சுபத்தைச் சொல்ல வேண்டும். முன்பு, இந்திய சாம்ராஜ்ய சட்டசபையில் 1916-ஆம் வருஷத்தில் ஓர் அபேக்ஷகனாக நான் இருந்தபொழுது பென்ட்லண்டு பிரபு எனக்கு உதவிய வகையைக் குறித்திருக்கிறேன். இந்தத் தேர்தலில் நரசிம்மேசுவர சர்மாவும் நானும் வென்றோம். சேலம் விஜயராகவாச்சாரியாரும் டாக்டர் டி. எம். நாயரும் தோற்றார்கள். இந்த முயற்சியில் அபேக்ஷகர் ஒருவராகிலும் முறை, நாணயம் இவை தப்பி ஒன்றும் செய்ததாக எனக்கு நினைவில்லை. கூடியவரையில் முயற்சிகள் பெரிதாகவே செய்

தோம். வயசிலும் பொது ஊழியத்திலும் இளைஞனை நான் மூத்தவர்களுடன் துணிந்து போட்டியிட்டேன் என்று என்னைச் சிலர் கடிந்தார்கள். ஒவ்வொரு வாக்காளனுக்கும் இரண்டு வாக்குகள் உண்டு என்றும், அவைகளை ஓர் அபேக்ஷகருக்கே கொடுக்கலாம் என்றும் முன்பே சொல்லியிருக்கிறேன். சில நண்பர்களின் வலுவான முயற்சியால் நான்கு வாக்காளர்கள் தங்கள் இரண்டு வாக்குகளையும் எனக்குக் கொடுத்து உபகரித்தார்கள். தனி வாக்குகள் எட்டும் இவ்வெட்டும் சேர்ந்து பதினாறு வாக்குகள் கிடைத்தன. சர்மாவுக்கும் இதே தொகைதான்.

## சிலர் செய்த புகார்

என் சார்பாக வாக்கை இரட்டித்தவர்களில் மூன்று பேர் பிராம்மணர் அல்லாதவர்கள். ஜாதிப் பட்சபாதம் காரணமாக நான் வெல்லவில்லை என்பது இதனால் விளங்கும். நான் அவ் வழியில் செல்லவில்லையென்று உள்ளமொப்பிச் சொல்லவும் தயார். ஆயினும் டாக்டர் நாயரும் அவரைச் சேர்ந்தவரும் நான் இத்தகைய இழிவான உபாயங்களைக் கையாண்டேனென்று புகார் செய்தார்கள். நம் மாகாணத்தில் பிராம்மணர், அல்லாதவர் என்கிற உட்கலகத்திற்கு நான் முதல் காரணம் என்று சிலர் சொல்வதும் உண்டு. இதற்கு ஆதாரமே இல்லை. இதற்கு முன் பல ஆண்டுகளாகவே இந்தச் சச்சரவு இருந்து வந்தது. என் பேரில் குற்றம் இல்லை என்று இந்த இடத்தில் அழுத்தமாய்ச் சொல்கிறேன். ஒப்புவார் சிலர்; ஒப்பாதவர் பலர்; என் செய்யலாம்? இதுதான் பொதுக்காரியங்களில் ஈடுபடுபவர்களின் கதி. 'பெருந்தன்மையாளருக்கு உலகமே குடும்பமாம்' என்ற பழமொழியை எடுத்துக் காட்டுவதற்கு அவதரித்த மகாத்மா காந்தி போன்றவரைக் கூட, 'குஜராத்தியரின் முன்னேற்றத்தையே

கருதியவர்' என்று அநியாயமாகத் தூற்றுவோர் இருக்கும்பொழுது என்போலியர் எந்த மூலை?

## காங்கிரஸ்-லீக் சமரசம்

காங்கிரஸ்காரர்களுக்குள் ஏற்பட்ட சச்சரவுகளைப் போக்கி மறுபடியும் ஒன்று சேர்க்க வேண்டுமென்று 1915-ஆம் வருஷத்தில் நாட்டில் தலைவர் என்று சொல்லக் கூடிய எல்லோரும் நன்குணர்ந்து உழைத்தார்கள். பின்பு சில வருஷங்களில் அவ்வாறே நடந்தது. 1915-ஆம் வருஷத்தில் ஸர் எஸ். பி. ஸின்ஹா தலைமையில் காங்கிரசும் ஜனுப் மஷ்ருல் ஹக் தலைமையில் முஸ்லிம் லீகும், பரஸ்பரம் சேர்க்கைக்கு அநுகூலமாய் இருக்குமென்றே பம்பாயில் கூடின. அப்பொழுது காங்கிரஸிலிருந்து பலர் லீகுக்கும், லீகிலிருந்து பலர் காங்கிரசுக்கும் போக ஒரே மாதிரியான தீர்மானங்கள் பல ஏற்பட்டன.

## ஜனுப் ஜின்னு செல்வாக்கு

அடுத்த வருஷம் பிரயாகையில் ஆநந்தபவனத்தில் மோதிலால் நேருவின் தலைமையில் பெரிய கமிட்டி ஒன்று கூடி, இந்திய சர்க்கார் அமைப்புத் திட்டம் எவ்வாறு இருக்கலாமென்று ஸ்தூலமாய் முடிவு செய்தது. அந்த வருஷத்தில் காங்கிரசும் லீகும் தனித்தனியாக லக்ஞேவில் கூடி ஒரு மனசு கொண்டு இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டன. நம் தேச சரித்திரத்தில் ஒரு நாளும் இல்லாத ஒற்றுமைக்கு ஆணிவேராய் நின்றவரில் லீகுக்குத் தலைமை வகித்த ஜனுப் மகம்மது அலி ஜின்னு ஒருவர் என்றால் வியப்பாய் இருக்கும். அந்தக் காலத்தில் அவருக்கு முஸ்லிம்களுக்குள் எவ்வளவு கீர்த்தியும் செல்வாக்கும் உண்டோ அவ்வளவு கீர்த்தியும் செல்வாக்கும் ஹிந்துக்களுக்குள்ளும் உண்டு என்று சொல்வது மிகையாகாது.

## ராஜீய முறை

இரு வகையாரும் ஒப்புக்கொண்ட ஒரு ராஜீய முறையை இங்கே எடுத்துச் சொல்ல வேண்டும். மார்லி மின்டோ சீர்திருத்தங்களென்று எட்டு வருஷங்களாய்ச் சட்ட மூலம் வழங்கிவரும் பொதுத் தேர்தல்கள் ஜனப் பிரதிநிதிகளின் சம்மதத்தைப் பெற்றன. இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தனித்தனித் தொகுதிகள் வைத்து ஹிந்துக்களை ஹிந்துக்களும் முஸ்லிம்களை முஸ்லிம்களுமே தேர்ந்தெடுக்கலாமென்று கட்டுப் படுத்தி, முஸ்லிம்களுக்கு ஜனத்தொகைக்கு மேற்பட்ட பிரதிநிதித்துவம் கொடுத்த சட்டப் பகுதியை, இந்தியப் 'பொதுஜன ஐக்கியத்திற்கு இடையூறு' என்று சட்டசபைகளிலும் வேறு பிரசங்க ஸ்தலங்களிலும் பத்திரிகைகளிலும் நம் தலைவர்கள் வெகுவாய் ஆக்ஷேபித்து வந்தனர்.

## நான் எழுதிய புத்தகம்

லக்னோவில் இரு வகையாரும் ஒப்பிச் செய்த தீர்மானத்தால் இந்த ஆக்ஷேபம் நீங்கி, தனித் தொகுதி ஏற்பாடு ஸர்வஜன சம்மதத்தைப் பெற்றது. இந்த ஒப்பந்தம் தவிர சர்க்கார் அமைப்புத் திட்டம் முழுவதுமே இந்த மகாநாடுகளில் விளம்பரமாயிற்று. இந்த முயற்சிகளிலெல்லாம் நானும் ஊக்கமாய்க் கலந்து கொண்டேன். இந்த அமைப்பு எத்தகையது, அதன் உத்தேசம் என்ன என்று எடுத்துக் காட்டி, முழுமையும் விவரித்து ஒரு சிறிய புத்தகமாக அச்சிட்டுப் பிரசாரம் செய்தேன். இதற்கு, "காங்கிரஸ்-லீக் உத்தேசம் அல்லது பிரிட்டிஷ் கொடியின் கீழ் இந்தியாவின் சுய ஆட்சி (The Congress League Scheme or Self Government for India under the British Flag)" என்று பெயர் வைத்தேன். இக் காலத்தில் இந்திய அரசியல் 1916-ஆம் வருஷத்து உத்தேசத்தைக் கடந்து

வெகு தூரம் போயிருப்பதால் அது இப்போது மிகப் பழமையாய் விட்டது. ஆயினும், நம் நாட்டு அரசியல் படிப்படியாய் அபிவிருத்தியாயிருக்கிற சரித்திரத்தைப் படிப்பவர்களுக்கு அப் புத்தகம் பிரயோஜனப்படும் என்று நினைக்கிறேன்.

## பொறுப்பாட்சி

**மா**காண அரசாங்கங்களும் அகில இந்திய அரசாங்கமும் எப்படி அமைய வேண்டுமென்று விசாரிக்கும்பொழுது, நிர்வாக சபைகள் (Executive Councils) அந்த அந்தச் சட்டசபைகளுடன் ஒத்து வாழ்ந்து, சட்டசபைகளின் அபிப்பிராயங்களையே பிரமாணமாகக் கொண்டு ராஜ்யம் நடைபெற வேண்டியதென்று விவகரித்த போதிலும், இந்தச் சட்டசபைகள் பிரியப்பட்டால் ஒரு நிர்வாக சபையைத் தள்ளி மற்றொரு நிர்வாக சபையை நியமிக்கலாம் என்கிற அதிகாரத்தை அக் காலத்துத் தலைவர்கள் நாடவில்லை; அதாவது இப்பொழுது ஆங்கிலத்தில் பொறுப்பாட்சி (Responsible Government) என்று வழங்குகிற ஏற்பாடு நம் தேசத்துக்கு வேண்டாம் என்பது அவர்கள் கொள்கை. இதைச் சாதிப்பதற்காகச் சில கட்சிகளும் ஏற்படுத்தி எழுதியிருக்கிறேன். இதைத் தமிழில், ‘பொறுப்பாட்சி’ என்று சொல்லி வருவோம். இந்தக் கட்சி பிறந்ததுமே இறந்தது. இந்த விநோதத்தைப் பின்பு காணலாம்.

## ஏற்பட்ட விதம்

**இ**ந்தக் கிளர்ச்சி அப்பொழுது நிகழ்ந்த மகா யுத்தத்தின் மத்தியில் நடைபெற்றது. இந்தியாவை ஒரு வகையாகத் திருப்தி செய்ய வேண்டுமென்று 1917-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் பார்லிமெண்டில், இந்தியா மந்திரியாக இருந்த மிஸ்டர் இ. எஸ். மான்டேகு (E. S. Montague) அதிகார பூர்வமாய் ஓர் அறிக்கையை வெளியிட்டார். இவ் வறிக்கை மிகப் பிரசித்தி பெற்றது.

இது சிறியதானும், 'பொறுப்பாட்சி (Responsible Government)' என்ற வாசகத்தை அடக்கியுள்ளது. முதலில் மான்டேகு எழுதிய பொழுது இந்த வாசகத்தை உபயோகப்படுத்தவில்லையாம். இதைப் பார்வையிடும்பொழுது கர்ஸன் பிரபு (Lord Curzon) அரசியல் முறையில் மேலான அந்தஸ்தைக் குறிக்கிற பொறுப்பாட்சி இந்தியாவில் ஏற்பட வேண்டுமென்று மாற்றினாராம். இதை ஒட்டிப் பின்னால் ஏற்பட்ட இந்திய சர்க்காரின் ஸ்வரூபத்தைப் பார்த்து, 'ஐயோ! இவ்வளவு விரிவாகுமென்று தெரிந்திருந்தால் அந்தப் பெரிய சொல்லைப் போட்டிருக்கமாட்டேனே!'' என்று அவர் வருந்தினாராம்.

## இரட்டையாட்சி

இந்த முக்கியமான அறிக்கை வெளியாகும் பொழுது அரசியல் துறையில் சிறந்த படிப்பும் அநுபவமும் உள்ள மிஸ்டர் லயனல் காட்டிஸ் (Mr. Lionel Curtis) என்பவர் இந்தியாவின் நிலை எப்படி இருக்கிறது என்பதை நேரில் பார்த்துத் தெரிந்துகொள்வதற்காக வந்திருந்தார். இந்த அறிக்கையை ஒட்டித் தம் அபிப்பிராயங்களைத் தெளிவாய் விவரித்து இந்தியாவில் வெகுவாய்ப் பிரசுரித்தார். இவர்தாம் இரட்டையாட்சி (Dyarchy) என்பதை முதல் முதல் கற்பித்தார். மாகாண ஆட்சியை இரு பகுதியாகப் பிரித்து, ஒரு பகுதிக்குப் பழையபடி நிர்வாக சபையார் என்றும் மற்றொரு பகுதிக்கு மந்திரி சபையார் என்றும் பெயர் வைத்து, இந்த மந்திரிமாருக்குச் சில சிறிய அதிகாரங்களைக் கொடுத்து, சட்டசபையார் இவர்களை மட்டும் வைக்கவும் நீக்கவும் உரிமை பெறவேண்டும் என்று தம் அபிப்பிராயத்தை வெளியாக்கினார். லயனல் காட்டிஸ் எழுதிய பல வியாசங்களில் ஏதோ ஒரு கட்சி யாடும் பொழுது, 'இந்தியருக்கு உயிர்ச்சேதம் இதனால் வந்தால் வரட்டுமே' என்று சொல்லியிருந்தார்.

## மான்டேகு-செம்ஸ்போர்டு வருகை

இது கண்டு ஜனங்களுக்கு அவர் பேரில் அதிகக் கோபம் உண்டாயிற்று. நம் தலைவர்கள் சிலர் அவர் பேரில் சீறிப் பேசியும் எழுதியும் தாக்கினார்கள். ஆனாலும் வெகு புத்திமானும் தீரருமானதால் அவர் பொறுமையுடன் இந்தியருக்குச் சாதகமான சில அபிப்பிராயங்களை வெளியிட்டுத் தம் பேரில் இருந்த ஆத்திரத்தைக் கொஞ்சம் சமனப்படுத்தினார். கொஞ்ச காலம் பொறுத்துப் பார்லிமென்டார் எல்லாக் கட்சியாரும் சேர்ந்து நியமித்த பிரதிநிதிகளுடன் மந்திரியாகிய மான்டேகுவே இந்தியாவுக்கு வந்து வைஸ்ராய் செம்ஸ்போர்டு பிரபுவுடன் பெரிய ராஜதானிகளுக்குச் சென்று ஆங்காங்குள்ள இந்தியத் தலைவர்களை அழைத்து, பொதுஜன அபிப்பிராயங்களைச் செவ்வையாக ஆராய்ந்து, நாட்டு முன்னேற்றத்துக்குச் சில பிரேரணைகள் செய்ய முயன்றனர். இந்த வேலையில் சில மாதங்கள் கழிந்தன.

## காட்டிஸ் திட்ட அமுல்

இந்தக் காலத்தில் மான்டேகுவுடனும் மற்ற ஆங்கிலப் பிரதிநிதிகளுடனும் நெருங்கி அடிக்கடி நான் பேசினேன். இவர்களில் முக்கியமானவர் மிஸ்டர் சார்லஸ் ராபர்ட்ஸ் (Mr. Charles Roberts) என்பவர். இவர் நம் தேசத்தின் நன்மையை உண்மையாகவே விரும்பினவர். அப்போதைக்கப்போது நம் தலைவர்களுடன் கலந்து பேசியதையும், அதனால் உண்டான குழப்பங்களையும் சந்தேகங்களையும் மாறுதல்களையும் முழு நம்பிக்கையுடன் என்னிடம் சொல்லி, மான்டேகு மிக ஊக்கத்துடனும் அன்புடனும் யோசனை செய்வார். இதை அறிந்தவர் 1906 முதல் 1908 வரையில் மார்லிப் பிரபுவிடம் கோகலே பழகியதுபோல் இருக்கிறதென்று அபிப்பிராயப்பட்டார்கள். முடிவில் பிரேரணை

கள் வெளியான பொழுது லயனல் கர்ட்டிஸ் சொல்லிய வாறு இரண்டுபட்ட ஆட்சியும் (Dyarchy) பொறுப் பாட்சியும் (Responsible Government) காணப்பட்டன. இந்த இரண்டு முக்கிய அம்சங்களும் நாங்கள் தயாரித் திருந்த காங்கிரஸ் - லீக் உத்தேசத்தில் இல்லாமையால் அது ஓங்கவில்லை.

## ஸௌத்பரோ கமிட்டி

முன்னேற்றப் பிரேரணைகள் மசோதா ரூபமாகப் பார்லிமெண்டுக்கு வருவதற்கு முன், சில பெரிய விஷயங் களை இந்தியர்களுடைய கொள்கையை ஒட்டி நிச்சயிக்க வேண்டும் என்று ஒரு பெரிய கமிட்டி நியமித்து, அதை இரு பகுதியாகப் பிரித்து, நம் நாட்டில் சுற்றி வர அனுப்பினார்கள். இந்த இரண்டு பகுதிகளுக்கும் தலைவர் ஸௌத்பரோ பிரபு (Lord Southborough). இவர் இங்கிலாந்தில் உத்தியோக வர்க்கத்தில் அமர்ந்து பெரும் பதவிகளெல்லாம் பெற்று, அரசியலுக்கு வேண்டிய விசாரணை செய்வதில் நல்ல அநுபவம் உள்ளவர். இந்தக் கமிட்டியில் ஒரு பகுதி ஓட்டைப்பற்றிய உரிமை (Franchise) முதலானவற்றை விசாரிக்கவும், மற்றொரு பகுதி அரசியல் அதிகாரங்களை (Functions) எவ்விதம் பிரிவினை செய்ய வேண்டுமென்று விசாரிக் கவும் நியமிக்கப்பட்டன. நான் ஓட்டுரிமைக் கமிட்டி (Franchise Committee) என்னும் பகுதியில் இருந் தேன். என் தரப்பில் முக்கியமான அங்கத்தினர்கள் சுரேந்திரநாத் பானர்ஜியும் அப்தாப் மகம்மத்கான் என்பவரும்.

## இரு பெரிய விஷயங்கள்

இரண்டு பெரிய விஷயங்களை நாங்கள் முடிவு செய்யும்படி நேர்ந்தது. அவைகளுள் ஒன்று எனக்குப்

பெரிய மனக்கவலையை உண்டாக்கியது. ஒரு வகையாகத் தீர்மானிக்கும் வரையில் எனக்கு உள்ளத்தில் அமைதி இல்லை. அப்பொழுதெல்லாம் ஸௌத்பரோ பிரபுவுடன் அந்தரங்கமாய்க் கலந்து மன்றாடினேன். அவருக்கு என்னிடத்தில் அன்பும் நம்பிக்கையும் மிகுந்திருந்தன. அவருடன் பேசித் தீர்ந்த சங்கடத்தை இங்கே தான் தெளிவாக வெளிப்படுத்துகிறேன்.

## என் மனச் சங்கடம்

இந்தக் கமிட்டியின் வேலை நடக்கும்பொழுது எனக்குப் பெரிய மனச் சங்கடம் நேர்ந்தது. ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் வெவ்வேறு தொகுதிகள் இருப்பது தேசத்தின் நீடித்த நன்மைக்குப் பெருங்கேடு என்ற அடிப்படையான அபிப்பிராயம் எனக்கு இருந்தது. ஆயினும் இவைகளுக்குச் சம்மதியாவிடில் இந்தப் பெரிய மதஸ்தர்களுக்குள் தற்கால ஒற்றுமை கூட ஏற்படாமற் போகலாம். அப்படியானால் ஸ்திரமான ஒற்றுமை ஒருகாலும் கைகூடாதென்று கண்டு தேசாபிமானிகள் தீராப்படியாக இதை ஒப்புக்கொண்டார்கள். அவர்களில் நானும் ஒருவன். ஓட்டுரிமைக் (Franchise) கமிட்டியாரின் உண்மையான அந்தஸ்து என்ன? இவர்கள் தேசத்தைப் பற்றிய பெரிய விஷயங்களை அடியிலிருந்து கிளறிச் சோதிக்கலாமா? அக்காலத்து நிலையை நோக்கிச் சிபாரிசுகள் செய்ய வேண்டுமா? உயர்ந்த நியாய ஸ்தலங்களில் அதிபதியாயிருப்பவர்போல், 'நமக் கென்ன? அரசியல் நிர்வாகம் செய்கிறவர்கள் தக்கபடி மாற்றிக் கொள்ளட்டும். நாம் நிலையான தர்மங்களையே உறுதிப்படுத்த வேண்டும்.' என்று எண்ணி நாடெங்கும் தொகுதிகள் ஒரே விதந்தான் இருக்க வேண்டுமென்று வாதித்தேன். தொகுதிகளைப் பிரித்த பொழுது இரு வகுப்புத் தலைவர்களுமே, 'பிரிவினை சிறிது காலந்தான் நிற்கும்; பத்து வருஷ அநுபவத்

துக்குள் இது பயன் படாதென்று எல்லோருக்கும் வெளியாகிவிடும். அப்பொழுது நிறுத்திவிடலாம்' என்று நம்பினார்கள்.

## உத்தேசம் நிறைவேறவில்லை

பத்து வருஷங்களான பிறகும் வகுப்புக் கொள்கைகள் நன்றாய் வேரூன்றினவே தவிர, தலைவர்களின் உத்தேசம் நிறைவேறவில்லை. உண்மையான பொது நன்மையைத் தேடுகிறவர்கள் கெட்ட உபாயங்களை மேற்கொண்டால் இப்படித்தான் முடியும். இப்பொழுது வளரவிட்டால் இனி ஒரு நாளும் ஸர்வ ஜனங்களின் ஒற்றுமை (Nationality) என்கிற பெரிய உத்தேசம் வேரூன்றாது என்கிற பயம் பேய்போல் என்னைப் பிடித்து ஆட்டியது. இதே தர்ம சங்கடத்தை மற்றக் கமிட்டி அங்கத்தினர் ஒருவரும் சரி என்று ஒப்புக்கொள்ளவில்லை. ஏட்டுச் சுரைக்காய் என்று ஒதுக்கிவிட்டார்கள். ஸௌத்பரோ பிரபுவும் அப்தாப் அகமத்கானும் தனித்தனியாய் அநேக காரணங்களைச் சொல்லி என் மனத்தைக் கரைத்தார்கள். 'லக்னோவில் சம்மதித்து இரண்டு வருஷங்களுக்குள் புரண்டால், நாட்டு வழக்கங்களும் ஸ்தாபனங்களும் எப்படி ஒழுங்காக நடக்கும்? இரு வகுப்பினரும் ஒருவருக் கொருவர் நம்பிக்கையுடன் வாழவேண்டுமானல் முக்கியஸ்தர்கள் ஒரு நிலையில் நிற்க வேண்டாமா? ஓட்டு உரிமைக் (Franchise) கமிட்டியார் என் எண்ணம் போல் தனித் தொகுதிகளைத் தள்ளி விட்டால் ஊரில் உண்டாகும் கிளர்ச்சியை அடக்க முடியாது; இக் குழப்பத்தைக் கண்டு பார்லிமென்டாரும் அஞ்சக் கூடும்; முன்னேற்றம் பின்னேற்றமாகும்.' —இம்மாதிரி நியாயங்களுக்கு உட்பட்டு என் மனமும் ஒரு வகையாய்ச் சமாதானம் அடைந்தது. இந்த விஷம் நாளாக ஆக எவ்வளவு கொடுமையாகிவிட்டது! ஜனுப் ஜின்ன 1907-ஆம் வருஷம் எங்கே நின்றார்? 1941-ஆம்

வருஷத்தில் எங்கே நிற்கிறார்! இந்த விஷயத்திற்குத் தக்க மாற்று உண்டா? முக்காலத்தையும் ஒரே பார்வையில் காண்கிற நாரதர் கூடத் துணிந்து பதில் சொல்ல முடியாது.

## பெண்களின் உரிமை

மற்றொரு விஷயம்; அது இவ்வளவு பெரிது அல்ல; அடிப்படையானதும் அல்ல. ஆனால் அது கொஞ்சம் என்னை உபத்திரவித்தது. நம் ஸ்திரீகளுக்கு ஓட்டுரிமையும் அபேட்சகராயிருப்பதற்குச் சுதந்தரமும் கொடுப்பதா, வேண்டாமா? சமூகச் சீர்திருத்தத்தில் ஊக்கமுள்ள எனக்கு இந்தப் புது ஏற்பாட்டைச் சிபாரிசு செய்ய வேண்டுமென்று ஆசை உண்டு. ஆனால் எங்கள் விசாரணையில் அதை அவசியம் செய்ய வேண்டுமென்று பெண்கள் அதிகமாய் வாதாடவில்லை. மன்றாடிக் கேட்டவர்களுக்குத்தான் உரிமை என்பது அரசியல் நியாயம். இதில் பாடுபட்டவர்களில் ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடுவைத்தான் முக்கியமாய்க் குறிக்க வேண்டும். கமிட்டி போன பெரிய பட்டணங்களில் பெயர் பெற்ற பெண்மணிகள் சிலரை நேரில் கண்டு நான் தூண்டினேன். பயன்படவில்லை. கல்கத்தாவில் பிரம்மசமாஜத்தைச் சேர்ந்த பெண்மணிகள் நிறைந்த ஒரு சங்கத்தில் ஓட்டுரிமையை மாதர் சீக்கிரம் அடைவது அவசியமென்று நான் வற்புறுத்தினேன். ஆனால் அன்றைக்கு ஏதோ பொல்லாத காலம். வந்திருந்த மாதர்கள், 'எங்களுக்கு அவ்வளவு கவலையில்லை. புருஷர்களையே நம்பியிருக்கிறோம்' என்று சொல்லி என்னைத் திருப்பி விட்டார்கள். முடிவில் கமிட்டியார் மையமாகத் தீர்மானித்தார்கள். உடனே ஒன்றும் செய்யாவிடினும் அந்த அந்தச் சட்டசபையார் பெண்களுக்கு உரிமை வேண்டுமென்று தீர்மானித்தவுடன் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று சிபார்சு செய்தனர்.

## நாட்டில் கட்சி நிலைமை

இந்தியா மந்திரியும் வைஸ்ராயும் சேர்ந்து செய்த பிரேரணைகளுக்கு மான்டேகு-செம்ஸ்போர்டு பிரேரணைகள என்ற பெயர் வழங்கியது. இவைகளை நம் ஜனங்கள் தெரிந்து ஒப்ப வேண்டுமென்று அவைகளை விவரித்தும் கொண்டாடியும் அடிக்கடி பேசினேன்; எழுதினேன். 'இவை போதா! கொடுக்கிற இங்கிலாந்துக்கும் பெறுகிற இந்தியாவுக்கும் மானக் கேடு' என்று எதிர்க் கட்சி வலுத்தது. இக் கட்சிக்கு மிஸஸ் பெஸன்டு முதல்வர் எனலாம். அவ் வருஷத்திய காங்கிரஸ் கூட்டத்தில் இவை வேண்டாமென்று தள்ளி விடுவார்கள் என்ற பயம் உண்டாயிற்று.

ஸர். சுரேந்திர நாத் பானர்ஜி, ஸர் டின்ஷா வாச்சா இவர்கள் போன்ற மிதவாதிகள், 'காங்கிரஸ் தள்ளும் வரை காத்திருக்கக் கூடாது; சாதகமாயுள்ளவர்கள் முன்பாகவே ஆதரிக்க வேண்டும்' என்று காங்கிரசைவிட்டுப் பிரிந்து வேறு ஒரு சபையை ஸ்தாபிக்க நிச்சயித்தார்கள். வேறு சிலர், காங்கிரஸ் கூட்டத்திற்குப் போய்க் கட்சியாடித் தோற்ற பிறகுதான் வெளியேறுவது ஒழுங்கு என்று எண்ணினர். அவர்களில் நானும் ஒருவன். ஆயினும் இதற்காக மூன்றாவது கட்சி ஏற்படுத்துவது நியாய மில்லை; பலாபலம் எப்படியிருக்கிறது பார்ப்போமென்று இந்திய சேவா சங்கத்தாருடன் கலந்து அவர்களுடைய சம்மதியுடன் தேசத்தில் எங்களுக்குள்ள அநேக நண்பர்களுடன் யோசனை செய்தோம் இதைப்பற்றியும் இதனால் ஏற்பட்டு முதல் முதல் பம்பாயில் கூடிய மிதவாதிகள் சபையைப் பற்றியும் முன் பகுதியில் எழுதியிருக்கிறேன். அவ்வாறே அடுத்த வருஷம் மிதவாதிகளின் பிரதிநிதியாக நான் இங்கிலாந்து போனதைப் பற்றியும் எழுதியிருக்கிறேன்.

## இந்தியா மந்திரியுடன் பேச்சு

மசோதா விஷயமாய்ச் சாட்சி சொன்னவர்கள் இந்தியாவுக்குத் திரும்பிய பிறகுங்கூட நான் சில மாதங்கள் தங்கியிருந்து காமன்ஸ் சபையில் இந்தியா விஷயமாய் நடந்த சர்ச்சைகளையெல்லாம் போய்க் கேட்டேன். அப்பொழுதெல்லாம் அடிக்கடி மான்டேகுவுடன் வெகு தடவை அந்தரங்கமாய்ப் பேசியது உண்டு. ஒரு தடவை மார்லி பிரபுவின் வீட்டில் விருந்துண்டு பேசிக் கொண்டிருந்தேன். ஹிந்து முஸ்லிம் தகாறுகளைப் பற்றிப் பேச்சு வந்தபொழுது, அவரும் மின்டோ பிரபுவுமாகச் சேர்ந்து ஸ்தாபித்த தனித் தொகுதிகளால் அநேக துன்பங்கள் விளைந்தன என்று புகார் செய்தேன். அப்பொழுது அவர் சொன்னது இன்னமும் என் மனத்தில் நன்றாகப் பதிந்திருக்கிறது. அந்தப் பிரிவினை, அவராக இஷ்டப்பட்டுச் செய்யவில்லையாம். அது இல்லாவிடில் தாம் உத்தேசித்த சீர்திருத்தங்கள் நடவாமலே போகும் என்று தமக்கு விளங்கிய பிறகுதான் அவர் தீராப் பொறியாக அதற்குச் சம்மதித்தாராம். அரசநீதியெல்லாம் இத்தகையதுதான். 'சின்னதைக் கொடுத்துப் பெரியதை வாங்க வேண்டும். ஜன நாயகத்தில் ஒரு நாளும் முதல் பக்ஷம் நிறைவேறாது. இரண்டாம் பக்ஷத்தைக் கொண்டுதான் திருப்தி அடைய வேண்டும்' என்று உபதேசித்தார். இதையே அவர் எழுதிய புத்தகங்களிலும் தமக்குரிய சிறந்த நடையில் எழுதியிருக்கிறார்.

## மிதவாதிகள் சபை

நம்மூரில் சிலர் தனித் தொகுதி அபிமானத்தால் அந்த ஏற்பாட்டுக்கு மார்லிப் பிரபுவே காரணம் என்று கூறுவது உண்டு. கோகலேயின் பிரசங்கங்களிலிருந்துங் கூட இதற்குச் சில வாக்கியங்களை ஆதாரமாக எடுத்துக் காட்டுவார்கள். இது சரியல்ல; கெடுதல்தான். ஆயினும் வேறு வழி இல்லை என்று ஒப்புக்கொண்டதை

நல்லதென்று அவர்கள் சிபாரிசு செய்ததுபோல் காட்டி, இதையே அளவு கடந்து விஸ்தரித்து, கல்வி, உத்தியோகம், வியாபாரம் மற்றுமுள்ள எல்லா வழிகளிலும் அழைத்து, 'வேற்றுமைதான் இந்தியாவின் தலையில் எழுதியது' என்றெல்லாம் பறை சாற்றியதும் போக, நமக்குப் பின் வரும் சந்ததியார்களுக்கும் இந்தக் கெட்ட எண்ணங்களையே ஊட்டுகிறார்கள். மசோதா சட்டமாவதற்குச் சில நாட்களுக்கு முன்பே இந்தியாவுக்குத் திரும்பலானேன். அமிருதசரசில் நடந்த காங்கிரஸுக்கும் கல்கத்தாவில் நடந்த மிதவாதிகள் சபைக்கும் போய்ப் புதுச் சட்டத்தைப்பற்றிச் சாதகமாகக் கட்சி பேச வேண்டுமென்பது உத்தேசம்.

அமிர்தசரசுக்குப் போய் இரண்டு மூன்று நாட்கள் காத்திருந்தும் இந்தச் சட்ட சம்பந்தமான விஷயம் ஆலோசனைக்கு வராதபடியால், மிதவாதிகள் சபைக்குப் போவது அவசியமென்று கல்கத்தாவுக்குப் பிரயாணமானேன்.

## விதிக் கமிட்டியில் வேலை

இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு முன்பு அநேக விதிகள் (Rules) ஏற்படுத்த வேண்டியிருந்தது. இதற்காகச் சட்டசபை அங்கத்தினர் அடங்கிய கமிட்டியை நியமித்தார்கள். அதில் சில மாதங்கள் உழைத்தேன். இந்த விதிகள், சட்டத்துக்கு உட்பட்டவை என்கிற காரணத்தால் நாம் இவற்றை லேசாக மதிக்கக் கூடாது. அவைகளுக்குச் சட்டத்துக்கு உள்ள வலிமை உண்டு. அதுவும் தவிர, பிரயோகத்திலும் சட்டத்தைப்போலவே இவை முக்கியமானவை அரசியல். எவ்வளவு பெரிய கிளைகளாகவும் சிறிய கிளைகளாகவும் பிரிந்து ஜனங்கள் வாழ்க்கையைக் கவர்ந்து நன்மைதீமைகளை விளைவிக்கிறதென்பதை அந்தக் கமிட்டி வேலையால் நன்கறிந்தேன். அந்தக் கமிட்டிக்கு அக்கிராஸனம் வகித்தவர் ஸர் வில்லியம் மாரிஸ் (Sir William

Morris) என்பவர். அவர் மாகாண கவர்னராயிருந்தவர். இந்திய சிவில் ஸர்விஸில், சாமர்த்தியத்தாலும் அனுபவத்தாலும் முதல் ஸ்தானம் (Rank) பெற்றவர்; ஆங்கிலம் எழுதுவதில் மெத்த நிபுணர்; சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்காக, 'ஆங்கிலம் எழுதும் முறை' என்ற ஒரு நூலும் இயற்றியவர். மான்டேகு செம்ஸ்போர்டு ரிபோர்ட்டு என்னும் பெரும் ராஜீயப் புத்தகத்திற்கு ஆசிரியர்.

## விநோத நிலை

இவருடன் கூடிப் பெரிய பொது விஷயங்களை ஆராய்ந்து தீர்மானித்தது எனக்கு வெகு உபயோகமாய் இருந்தது. இதற்குப் பிற்காலம் சென்னை மாகாணத்தில் ஓட்டுச் சுதந்திரத்துக்காகத் திட்டங்கள் நிர்மாணம் செய்தபொழுது எனக்கு ஒரு விநோதமான நிலை ஏற்பட்டது. எனக்குச் சொத்து, வருமானம் இவை குன்றியதால் நான் ஒரு தொகுதியிலும் சேர அருகதையில்லாமல் போய்விட்டது. இதை நான் அவருக்குத் தெரிவித்தவுடன், சர்வ கலாசாலைத் தொகுதி என்பதில் எனக்குப் பிரவேசம் கிடைக்குமாறு ஒரு சிறிய திருத்தத்தை அவர் செய்வித்தார். இது அந்தக் காலம் முதல் இது வரை சிலருக்குத்தான் தெரியும்.

## ரெயில்வேக் கமிட்டி

இந்த வருஷத்திலேயே (1920) நம் நாட்டு இருப்புப் பாதைகளின் (Indian Railways) நிலைமையைப் பற்றி விசாரிப்பதற்காக ஸர் வில்லியம் ஆக்வொர்த் (Sir William Akworth) தலைவராயும், வேறு இருவர் அங்கத்தினர்களாயும் இங்கிலாந்திலிருந்து இங்கே வந்து சில இந்தியர்களுடன் ஒரு கமிட்டியாகச் சேர்ந்து வேலை செய்தார்கள். அந்தக் கமிட்டியில் நானும் ஒருவன். வெகு இடங்களுக்குச் சென்று விரிவாயும் நுட்பமாயும் விசாரணை செய்தோம். இந்தக் கமிட்டியார் இங்கி

லாந்திலும் அடுத்த வருஷம் சில விசாரணைகளை நடத்தி, அறிக்கை எழுதினார்கள். அப்பொழுது நான் லண்டனில் நடந்த சாம்ராஜ்ய மகாநாட்டில் அங்கத்தினன்; அங்கும் இங்குமாய்ப் போய்க்கொண்டிருந்தேன்.

## தென் ஆப்பிரிக்கா இந்தியப் பிரச்னை 1920

**1920**-ஆம் வருஷ நிகழ்ச்சி ஒன்று விசித்திரமாயிருக்கும். அது இதுவரை வெளியானதில்லை. தென் ஆப்பிரிக்காவிலிருக்கும் நம் ஜனங்களுக்குச் சதா சங்கடம்; இன்னமும் தீராத சங்கடம் என்பது நேயர்களுக்குத் தெரியும். அந்த வருஷத்தில் செம்ஸ்போர்டு பிரபு இந்தியாவிலிருந்து இரண்டு பிரதிநிதிகளை அனுப்பி யூனியன் அரசாங்கத்தாருடன் பேசி நம் ஜனங்களுக்கு ஏதாகிலும் வசதி செய்விப்பதற்கு முயன்றார். அப்பொழுது யூனியன் அரசாங்கத்தின் பிரதம மந்திரியாக இருந்தவர் ஜெனரல் ஸ்மட்ஸ் என்பவர். இவர்தாம் காந்தியைச் சிறையில் வைத்து, பிறகு 1914-ஆம் வருஷத்தில் அவருடன் ராஜி பேசி ஒரு வகையாய்த் தகராறுகளை முடித்ததாகப் பெயர் பண்ணியவர். தகராறு முடியவே இல்லை. (இப்பொழுது இவர் நிகழும் மகா யுத்தத்தில் பிரிட்டனுக்குப் பேருதவி செய்து பீல்ட் மார்ஷல்-Field Marshal-என்னும் பட்டத்தை அடைந்திருக்கிறார்.)

## இந்தியப் பிரதிநிதி நியமன விஷயம்

செம்ஸ்போர்டு உத்தேசித்த பிரதிநிதிகள் மத்திய மாகாணத்துத் தலைவரான ஸர் பெஞ்ஜமின் ராபர்ட்ஸனும் (Sir Benjamin Roberston) நானும். எங்கள் பெயர்களைத் தந்தி மூலமாகத் தெரிவித்தும் தென் ஆப்பிரிக்காவிலிருந்து பின்னுள்ள பதில் வந்தது: 'இந்த நாட்டில் நிறமுள்ளவர் வெள்ளையருடன் சமமாகக்

கூடிப் பார்த்ததில்லை; நீங்கள் சொல்வது சரிவராது.' அதற்கு நம் வைஸ்ராய், 'இப்பொழுது சிறிது காலமாக நாங்கள் பிரிட்டிஷ்காரரையும் இந்தியரையும் எந்தக் கமிஷனிலும் கமிட்டியிலும் சேர்த்தே போடுவது வழக்கம். இதை மாற்றுவது இங்கே பேச்சுக்கு இடமாகும்' என்று மறுபடியும் சொன்னார். 'நீங்கள் குறித்திருக்கும் இந்தியருக்கு நான் ஆக்ஷேபிக்கவில்லை. இருந்தாலும் இந்த ஊரில் அவருக்குத் தகுந்த மரியாதை கிடைக்காது. நல்ல ஹோட்டல்களில் இடம் கொடுக்க மாட்டார்கள். வேறு அசந்தர்ப்பங்கள் ஒருகால் நேர்ந்தாலும் நேரலாம். ஆனாலும் இதனால் வரும் கெட்ட சம்பவங்களைப் பொறுத்துக்கொள்ளுகிறோம் என்று வந்தால் வரட்டும்' என்ற பதில் கிடைத்தது.

## நான் அளித்த பதில்

செம்ஸ்போர்டு பிரபு விடவில்லை. 'யூனியன் அரசாங்கத்தார் அத்தகைய நிகழ்ச்சி ஒன்றும் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்' என்று மறுபடியும் வற்புறுத்தினார். அதற்குப் பதில், 'எங்களால் ஆனவரை பார்க்கிறோம். ஸர் பெஞ்ஜமின் ராபர்ட்ஸனுக்கு நாங்கள் செய்ய வேண்டிய மரியாதைகளைச் சாஸ்திரியாருக்கும் செய்ய வேண்டுமானால் கஷ்டப்படும். ஆகையால் இப்பொழுதே ராபர்ட்ஸனுக்கு உயர்ந்த அந்தஸ்து என்றும் சாஸ்திரியாருக்குத் தாழ்ந்த அந்தஸ்து என்றும் எச்சரிக்கை செய்து விட்டால் ஏதாகிலும் ஏற்படும் வித்தியாசங்களால் மனஸ்தாபத்திற்கு இடமில்லை.' இந்தப் பதிலை என்னிடம் இந்திய அரசாங்கத்தார் காட்டி, 'நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?' என்று கேட்டார்கள். அதற்கு நான், 'தென் ஆப்பிரிக்காவிலுள்ள வெள்ளையருக்கும் நம் ஜனங்களுக்கும் சமபதவி ஏற்படவேண்டும் என்று கட்சியாடப் போகிற நான் என்னுடன் இருக்கும்

வெள்ளையருக்குத் தணிந்தவன்தான் என்று ஒப்புக் கொண்டால் எப்படிக் காரிய சாதனம் ஆகும்?' என்று கேட்டேன்.

## வைஸ்ராய் வருத்தம்

இதன் பேரில் நம் அரசாங்கத்தார் மறுபடியும் யூனியன் அரசாங்கத்தாரை நிர்ப்பந்திக்க, அவர்கள் 'ஆனால் சரி; எங்களால் ஸர் பெஞ்சமின் ராபர்ட்ஸனுக்கு, உரிய மரியாதைகளைச் செய்ய முடியாது. இதற்கு உட்பட்டு உங்கள் இஷ்டம்' என்று முடித்தார்கள். செம்ஸ் போர்டு பிரபு, 'இவ்வளவு தூரம் ஜெனரல் ஸ்மட்ஸ் இணங்கியதே பெரிது. இதை ஒப்புக்கொண்டு போகலாம்' என்று எனக்குப் புத்தி சொன்னார். 'துவக்கத்திலேயே இவ்வளவு ஆக்ஷேபங்கள் ஏற்படுமானால் ஸர் பெஞ்ஜமின் ராபர்ட்ஸனால் சம்பாதிக்கக் கூடிய வசதிகள் நான் போவதால் கைக்கு எட்டாமல் போகலாம். அது தவிர அவருடன் சேர்ந்து நான் உயராமல் என்னுடன் சேர்ந்து அவர் தாழ்வது ஒழுங்கல்ல' என்று நான் நின்று விட்டேன். இதனால் செம்ஸ் போர்டு பிரபுவுக்கு என்பேரில் கொஞ்சம் வருத்தம் உண்டு. இவ்வளவு காலம் கழித்துப் பிறகு நடந்தவைகளை யெல்லாம் யோசித்துப் பார்த்துங் கூட நான் அப்பொழுது போகாமலிருந்ததே நலம் என்று நினைக்கிறேன்.

## ஸ்மட்ஸ் கூறியது

இதைக் குறித்து லண்டனில் கூடிய சாம்ராஜ்ய மகாநாட்டில் (Imperial Conference) ஜெனரல் ஸ்மட்ஸுக்கும் எனக்கும் ஒரு வாக்குவாதம் ஏற்பட்டது. தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களின் கஷ்டங்களை விவரித்து ஒரு நாள் பிரசங்கம் செய்தேன் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அதற்குப் பதில் சொல்லும்போது, 'சென்ற வருஷம் சாஸ்திரியார் எங்கள்

நாட்டிற்கு வருவார் என்று எதிர்பார்த்தோம். வந்திருந்தால் அவருக்கு உண்மை புலப்பட்டிருக்கும். வராமல் இருந்ததற்குக் காரணம் ஏனோ? அது அவருக்குத்தான் தெரியும்' என்று ஜெனரல் ஸ்மட்ஸ் தெரிவித்தார்.

## தனிமையில் நடந்த பேச்சு

அடுத்தபடி பேச எனக்கு முறை கிடைத்த பொழுது இந்திய அரசாங்கத்தாருக்கும் யூனியன் அரசாங்கத்தாருக்கும் நடந்த தந்திப் போக்குவரத்தைத் தெளிவாகச் சொல்லி, 'எனக்குத் தெரிந்ததை விட ஜெனரல் ஸ்மட்ஸுக்கு இந்த விஷயம் நன்றாகத் தெரியும்' என்று வெளியிட்டேன். அன்று மகாநாட்டுக் கூட்டம் கலைந்தவுடன் அவர் என்னிடம் தனியே வந்து, "நீங்கள் இப்பொழுது சொன்னதெல்லாம் எனக்குப் புதிது. ஆச்சரியமாய் இருக்கிறது" என்றார். "அது எப்படி இருக்க முடியும்? இந்தத் தந்திகள் எல்லாம் உங்களுக்குத் தெரியாமல் அங்கும் இங்கும் போயிருக்குமா?" என்றேன். "ஐயோ! உங்களுக்குத் தெரியாது. உங்கள் கவர்னர்ஜெனரலும் எங்கள் கவர்னர்ஜெனரலும் தந்தி மூலமாகச் சம்பாஷணை செய்துகொண்டார்கள்" என்று அவர் சாதித்தார். "எங்கள் கவர்னர் ஜெனரலுக்கு அவ்வித அதிகாரம் உண்டு. டொமினியனாய் இருக்கிற தென் ஆப்பிரிக்கா கவர்னர்ஜெனரலுக்கு, முதல் மந்திரிக்குத் தெரியாமல் இப்பேர்ப்பட்ட பெரிய விஷயங்களை முடிவு செய்ய உரிமை கிடையாதே!" என்று நான் கேட்டதற்கு, "அதில் ஒரு சூக்ஷ்மம் உண்டு. எங்கள் ராஜப் பிரதிநிதியாகிய லார்ட் பக்ஸ்டனும்(Lord Buxton), உங்கள் வர்த்தக அங்கத்தினராகிய (Commerce Member) ஸர் ஜார்ஜ் பார்னஸ் (Sir George Barnes) என்பவரும் மாப்பிள்ளை, மைத்துனர் உறவுள்ளவர்கள். அவர்கள் ஒன்றையும் வெளியிடாமல் தங்களுக்குள்ளேயே இந்தச் சமாசாரம் எல்லாவற்றை

யும் வைத்துக்கொண் டிருப்பார்கள்" என்று அவர் விடையளித்தார்.

## உண்மை வெளியானது

சிறிது நாளைக் கெல்லாம் ஒரு பெரிய விருந்தில் ஜெனரல் ஸ்மட்ஸூக்கும் லார்ட் பக்ஸ்டனுக்கும் மத்தியில் நான் உட்கார்ந்தேன். ஜெனரல் ஸ்மட்ஸைக் கௌரவிப்பதற்காக இந்த விருந்து நடந்தது; ஆகையால் முக்கியமான பிரசங்கம் அவருடையதே. அதில் நான் அவருக்கு முக்கிய நண்பர் என்றும் உண்மையான தென் ஆப்பிரிக்காக்காரன் (South African) என்றும் தோத்திரம் பண்ணினார். லார்ட் பக்ஸ்டனிடம் விஷயங்களைச் சொல்லி உண்மை என்னவென்று நான் கேட்க, அவர், 'கவர்னர்-ஜெனரலுக்குத் தென் ஆப்பிரிக்காவில் என்ன ஸ்வாதீனம்? நான் தபால் ஆபீஸ்தானே' என்று கூறிவிட்டார்.

## ராஜாங்க சபைக்குத் தேர்தல்

இங்கிலாந்துக்குப் போகு முன் புதிய சட்டசபையின் ஒரு பாகமான ராஜாங்க சபை (Council of State) அங்கத்தினனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். நம் மாகாணத்திற்கு நான்கு அங்கத்தினர் - ஜனத்தொகை விகிதாசார முறையாய்த் - தேர்ந்தெடுக்கப்பட்டனர். இக் காலத்துத் தேர்தல்களில் நடக்கும் விநோதங்களை யோசித்துப் பார்த்தால் எங்கள் தேர்தல் மிக்க பரிசுத்தமானதென்று சொல்ல வேண்டும். எனக்கு ராஜா ஸர் அண்ணாமலை செட்டியாரும், கொடியாலம் வி. ரங்கசாமி ஐயங்காரும் சிநேகபாவமாய் உதவி செய்தார்கள். வோட்டர்கள் அநேகமாய்ப் பெரிய மிராசுதார்களும் வர்த்தகர்களுந்தான்; இவர்களுள் சிலர் சிறிய கிராமங்களில் இருந்தார்கள்; எல்லா இடமும் போய் வோட் அபேக்ஷிப்பது அசாத்தியம். ஆயினும்

நான் அநேக பட்டணங்களுக்குப் போய்ப் பிரசங்கங்கள் புரிந்தேன். அப்பொழுது ஒத்துழையாமை (Non-cooperation) யைக் காங்கிரஸ்காரர்கள் கையாண்டனர்.

## எனக்குச் சகஜம்

என்னுடைய சொந்த அபிப்பிராயத்தை மறைக்காமல், ஒத்துழையாமை என்பது கூடாது என்று ஊக்கத்துடன் கட்சியாடினேன். இதனால் மகாஜனங்களுக்கு என் பேரில் அதிருப்தியும் கோபமும் உண்டாயின. இது எனக்குச் சகஜந்தான். கோகலேயிடம் சிக்ஷை பெற்று, வி. கிருஷ்ணஸ்வாமி ஐயருடன் ஒத்துழைத்தவருக்கு ஜனங்களுடைய பிரீதி கிடைக்குமா? முடிவில் அண்ணாமலை செட்டியாரின் மிகுதி வோட்டுகளில் சிலவற்றையும், ரங்கஸ்வாமி ஐயங்காரின் மிகுதி வோட்டுகளில் சிலவற்றையும் பெற்று, அவர்களுக்கு அடுத்தபடி மூன்றாவது அங்கத்தினனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

## கிரிமினல் சட்டத் திருத்தம்

சீமைக்குப் போவதற்கு முன், சட்டசபையில் நான் செய்ததில் ஓர் அம்சத்தை மட்டும் எடுத்துச் சொல்லலாம். கிரிமினல் சட்ட (Criminal Law) த்தில் ஐரோப்பியர்களுக்கும் இந்தியர்களுக்கும் வெகு நாளாக உள்ள சில வித்தியாசங்களை நீக்க வேண்டும் என்பது என் ஆசை. இந்த வித்தியாசங்களால் இரு வகையாருக்கும் அநேக தலை முறைகளாக மனஸ்தாபம் உண்டு. இந்த நோக்கம் கொண்டே மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் ஏற்படுவதற்கு முன் நான் ஒரு முயற்சி பண்ணியது முடியாமற் போயிற்று. இப்பொழுது சர்க்கார் இதை ஒருவாறு ஒப்புக்கொண்டு ஒரு பெரிய கமிட்டியை நியமித்தார்கள். இந்தக் கமிட்டியார் பெரும்போக்காகவே இந்த வித்தியாசங்களை - சில சிறிய அம்சங்களைத் தவிர - அநேகமாய் எடுத்து விட்டார்கள்.

## இருவர் பெருமை

நான் நாட்டை விட்டுப் போக வேண்டியிருந்ததால் இந்தக் கமிட்டியில் சேர்ந்து உதவி செய்ய முடியாமற் போயிற்று. இந்தப் பெரிய சீர்திருத்தத்தை நிறைவேற்றிய பெருமை அநேகரைச் சேருமானாலும், பெரும்பாலும் இரண்டு பேருக்குத்தான் அது உரித்தானது. அக்காலத்துச் சட்ட மெம்பரான ஸா டேஜ்பகதூர் சப்ரூ, ஹோம் மெம்பரான ஸர் வில்லியம் வின்ஸெண்ட் ஆகிய இருவர்தாம் அவர்கள்.

## பொருட்காட்சியைப் பகிஷ்கரிக்க
## 1923

இந்த வருஷமும் என் வாழ்க்கையில் பெரிய நிகழ்ச்சிகள் நிறைந்தவை. அவைகளைச் சென்ற பகுதிகளில் சொல்லியிருக்கிறேன். 1923-ஆம் வருஷம் முக்கியமாய் நேர்ந்தது சீனியா விஷயமான மோசம் இந்த அநுபவம் ஆன பிறகு மார்பு வலி வந்து பெங்களூரில் போய் நான் தங்கியிருந்தேன். அப்பொழுது சாம்ராஜ்ய தேசங்கள் எல்லாவற்றிலுமிருந்த பொருள்களை வரவழைத்து லண்டனில் ஒரு பெரிய பொருட்காட்சியை ஏற்பாடு செய்திருந்தனர். பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் இந்தியாவுக்குச் செய்த துரோகத்தை மனத்தில் வைத்து நம் நாட்டின் கொந்தளிப்பைக் காட்டுவதற்காக, 'நம் நாட்டார் இந்தப் பொருட்காட்சியில் கலந்துகொள்ள வேண்டாம்' என்று ஒரு யோசனையை வெளியிட்டேன். அதில் கலந்து கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் முடிந்து பக்குவமா யிருந்தபடியால் என் யோசனை சற்றேனும் பிரயோசனப்படவில்லை.

## உள்ளே அடி வைக்கவில்லை

எனக்கு மட்டும் ஆத்திரம் குறையவே யில்லை. அடுத்த வருஷம், அதாவது 1924-ல் பொருட்காட்சி

மிகவும் முழ்முரமா யிருந்தபோதிலும் மிஸஸ் பெஸன்டும் நானும் அதற்குள் அடி வைக்காமலே பிடிவாதமாய் லண்டன் நகரில் அநேக நாட்கள் இருந்தோம். அக் காட்சியின் இந்தியப் பிரிவுக்கு முக்கிய நிர்வாகியா யிருந்தவர் நம் பரம நண்பராகிய ஸர் டி. விஜயராகவாச்சாரியார். அவரை நான் அடிக்கடி சந்தித்தேன். நான் காட்சிக்கு வந்து அந்த வைபவத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று அவருக்கு எவ்வளவு அக்கறை யிருந்தபோதிலும் என் மன நிலையை அறிந்து அவர் என்னைக் கட்டாயப்படுத்தாமல் இருந்தார்.

## இங்கிலாந்தில் பிரசாரம்

இந்த வருஷம் நான் சீமைக்குப் போன காரணம் வெகு பெரியது. மிஸஸ் பெஸன்ட் என்னை முக்கிய சகாயமாக அழைத்துக்கொண்டு இங்கிலாந்தில் பெரிய நகரங்களுக்குப் போய், இந்தியாவுக்குச் சுய ஆட்சி அளிக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்தார். ஒவ்வொரு ஊரிலும் அவருடைய பிரசங்கத்திற்குப் பிறகு நானும் அவர் சொல்லாத விஷயங்களை எடுத்து உரைத்தது உண்டு. நாங்கள் இருவரும் அது வரையில் ஒரு காரியத்திலும் இவ்வளவு ஒற்றுமையாக இறங்கியதில்லை. அடிக்கடி இந்தியாவில் எதிர் எதிராகத் தகராறு செய்ததும் உண்டு. போன இடங்களில் எல்லாம் அவருக்குக் கிடைத்த மரியாதையையும் பிரசங்கத்தைக் கேட்க வந்த கூட்டத்தையும் பார்த்து வியந்தேன். அநேக வருஷங்களாய் இந்தியாவுக்காக உழைத்து, பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு விரோதமாய் எவ்வளவோ எழுதி, தம் மதத்தைவிட்டுப் பிரும்மஞானம் அல்லது தியோஸபி (Theosophy) என்பதைப் பிரசாரப்படுத்தி, உற்றார், உறவினர், சிநேகிதர் எல்லோருக்கும்

மனஸ்தாபம் உண்டு பண்ணியும் அவரிடம் ஜனங்களுக்குப் பிரீதியும், அவருடைய அற்புதப் பிரசங்கத்தைக் கேட்க வேண்டுமென்ற ஆவலும் பலமாய் இருந்தன. அவர் பேச்சு முடிந்ததும் மேடையேறி நான் துணிந்து பிரசங்கம் செய்ததெல்லாம் வெகு சாகஸம்; ஆயினும் வந்த ஜனங்கள் கவனத்துடன் கேட்டார்கள் என்று தான் ஞாபகம். இந்தக் கிளர்ச்சியின் பயன் இன்னதென்று குறிப்பிடக் கூடாவிடினும், உபயோகமே இல்லாமற் போயிருந்திருக்குமா?

## மிஸஸ் பெஸன்ட் வழக்கு

தன்னை முன்பு சர்க்கார் பாதுகாப்பில் வைத்திருந்த பொழுது இங்கிலாந்தில் சில பத்திரிகைகள் அவ் விஷயத்தை வாதித்துத் தம்மை ராஜத்துரோகி என்று அவதூறாக எழுதியதாக மான நஷ்ட ஈடு கோரி வியாஜ்யம் போட வேண்டுமென்று இச் சமயத்தில் மிஸஸ் பெஸன்ட் யோசித்தார். கடைசியில் எடின்பரோ (Edinborough) நகரில் ஜூரி வழக்காக அது வெளி வந்தது. என்னைத் தன் சார்பாகச் சாட்சியம் கூறும்படி அவர் அழைத்துப் போனார். என் ஆயுளில் இதற்கு முன்பாவது பின்பாவது கோர்ட்டிற்கு நான் போனதே இல்லை. பொதுவாய், 'இத்தகைய பெரிய விவகாரங்களில் சாட்சியாய்ப் போனால் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்; கேட்ட கேள்விக்குச் சுருக்கிப் பதில் சொல்ல வேண்டும். கேட்டாலொழிய அபிப்பிராயங்களை வெளியிடக் கூடாது' என்று வக்கீல்கள் சொல்வதை நான் கேட்டது உண்டு. இதை மறவாமல் கூடிய வரையில் மிதமாய்த்தான் பேசியிருப்பேன். ஆயினும் மேடையேறிப் பழக்கமாதலால் சில கேள்விகளுக்கு நீண்ட வாக்கியங்களில் பதில் சொல்லியிருப்பேன். என்னை அதிகமாய்க் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

## பெரிய ஏமாற்றம்

நியாயாதிபதி வாதி பட்சமாய் ஜூரர்களுக்குக் கட்சி யெடுத்துச் சொல்லியும், அவர்கள் ஒரே வாக்காகப் பிரதிவாதி பக்ஷமாய்த் தீர்ப்புச் சொல்லிவிட்டார்கள். இது மிஸஸ் பெஸன்டுக்கும் அவரை யடுத்த சிநேகிதர்களுக்கும் பெரிய ஏமாற்றம். இரண்டு மூன்று தினங்களுக்குப் பிறகு நான் லார்டு மெஸ்டனைக் கண்டு பேசினேன். அவர், 'என்னைக் கேட்டிருந்தால் எடின் பரோவில் வியாஜ்யம் போட உபதேசித்திருக்கமாட்டேன். அங்கே லார்டு பென்ட்லண்டும் லேடி பென்ட்லண்டும் எல்லோருடைய ப்ரீதியையும் கௌரவத்தையும் கவர்ந்தவர்கள் அங்கே அவர்களுக்கு விரோதமாகத் தீர்ப்புக் கிடைக்காது" என்றார்.

## என் தந்தி

கீனியா துன்பத்தை நிவர்த்திப்பதற்காக இந்த வருஷம் சாம்ராஜ்ய மகா நாட்டிற்கு நம் தேசப் பிரதிநிதியாகிய ஸர் டேஜ் பகதூர் சப்ரூவை அனுப்பினார்கள். நம் கட்சி தோல்வி அடையும்போல் இருந்தமையால் நம் ஜனங்களின் ஊக்கத்தை அவருக்குத் தெரிவிக்க வேண்டுமென்று பங்களூரிலிருந்து ஒரு தந்தியை அனுப்பினேன். அது எல்லோருடைய அபிப்பிராயத்தையும் நன்கு காட்டியபடியால் பிரசித்தியடைந்தது. அதாவது, 'கீனியா போனால் எல்லாம் போனதுதான்: (Kenya lost Everything lost)' வெகு கெட்டிக்காரத்தனமாய் விவாதித்து, ஜெனரல் ஸ்மட்ஸுடன் பெரும் சண்டையும் போட்டு, முடிந்து போயிற்று என்று தள்ளிய கீனியா விஷயத்தை மறுபடியும் கிளறி விசாரிப்பதற்காக ஒரு கமிட்டியை நியமனம் பண்ணிவைத்து, ஸர் ஸப்ரூ திரும்பினார். இந்தக் கமிட்டியால் நமக்கு லாபம் கிடைக்கவில்லை யென்பதையும் கீனியா சண்டை தீரவே யில்லை என்பதையும் நேயர்கள் அறிவார்கள்.

## இர்வின் பிரபுவின் நன்கொடை

இதற்குச் சில மாதங்களுக்குப் பிறகு இந்திய ஊழியர் சங்கத்தாரின் அச்சுக்கூடமான, 'ஆர்ய பூஷண ப்ரஸ்' - புனா மத்தியில் உள்ள ஒரு பெரிய கட்டிடம்- எரிந்துவிட்டது. அரிதான சில தஸ்தாவேஜிகளும் நாசமாயின. இதைக் கேட்டுப் பங்களூரிலிருந்த நான் சங்கத்திற்குச் சென்று உதவி கோரி எங்களுடைய மித்திரர்களுக்கு ஒரு வேண்டுகோளை அனுப்பினேன். அதில் சுருக்கமாய்ச் சங்கத்தாரின் வரலாற்றையும் குணங்களையும் எடுத்து உரைத்தேன். இதைக் கௌரவித்துப் பணம் அனுப்பியவர் அநேகர். அப்போது தான் இரவின் பிரபு (Lord Irwin) வைஸ்ராயாக இந்தியா வந்து இறங்கினார். அவருக்கு முன் வைஸ்ராய்கள் எல்லோரும் ஒரு வருஷம், இரண்டு வருஷம் கழித்துத்தான் புனாவுக்கு வருவது வழக்கம். இதை மாற்றி இரவின் பிரபு உடனே புனாவுக்கு வந்தார். அவர் இங்கிலாந்தில் வின்ஸ்டன் சர்ச்சில் (Winston Churchill) கீழ்க் குடியேற்ற நாட்டு உதவி மந்திரி (Colonial under-secretary) யாக இருந்தபோது அவரை நான் நன்றாய் அறிவேன். இந்த நட்பைக் கொண்டு அவரை நான் பார்க்கப் போனதும், நான் ஒன்றும் கேளாமலே அவர் பெரிய மனது வைத்து, "நான் சங்கத்திற்குப் பண சகாயம் செய்யலாமா?" என்று கேட்டார். நான், "அவசியம் செய்யவேணடும்" என்று பிரார்த்தித்து, "பணத்துடன் ஒரு சிறிய கடிதம் அனுப்பினால் அதை நான் வெளியிட்டு உபயோகப்படுத்திக்கொள்ள உதவும்" என்று பதில் அளித்தேன். அவர் இதற்கு உடனே இணங்கினார். கூடிய சீக்கிரத்தில் வேண்டிய அளவுக்கு உதவி கிடைத்து சங்கத்தின் தலைமைக் காரியாலய (Head Quarters) த்திற் கருகில் நவீன வசதிகள் அமைந்த ஒரு கட்டிடத்தை அச்சுக் கூடத்திற்காகக் கட்டினோம்.

## தென் ஆப்பிரிக்கா தகராறு

தென் ஆப்பிரிக்கா தகராற்றை, லார்ட் ரெடிங் (Lord Reading) காலத்தில் யூனியன் அரசாங்கத்தார் பிரதிநிதிகளும் நம் அரசாங்கத்தார் பிரதிநிதிகளும் ஒரு வட்டமேஜை மகாநாடு கூடித் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஏற்பட்டாகியிருந்தது. இதை நிறைவேற்றுவது இர்வின்பிரபு முதல் முதலில் எடுத்துக் கொண்ட அலுவல்களில் ஒன்று. இது விஷயமாய் என்னிடம் யோசனை கேட்டு என்னையே ஒரு அங்கத்தினனாக அனுப்ப என் சம்மதியை அவர் வேண்டினார். எங்கள் தூது கோஷ்டிக்குத் தலைவர் வைஸ்ராய் நிர்வாக சபை மெம்பராயிருந்த ஸர் மஹம்மத் ஹபிபுல்லா. எங்கள் காரியதரிசி இப்போது ஹைகமிஷனராக அமெரிக்காவுக்குப் போயிருக்கும் ஸர். கிரிஜா சங்கர் பாஜ்பை.

## வட்டமேஜை மகாநாடு

யூனியன் அரசாங்கத்தாரின் தூதுகோஷ்டித் தலைவா அவ்விடத்து உள்நாட்டு மந்திரி (Minister for Interior) யான டாக்டர் மலான் (Dr. Malan) என்பவர். அப்போது பிரதம மந்திரி ஜெனரல் ஹெர்ட்ஸாக் (General Hertzog) என்பவர். அவர் பிரிட்டிஷ் ஜனங்களுக்கு விரோதியென்று பெயர் பெற்றவர். ஆயினும் சாம்ராஜ்ய மகாநாட்டிற்குப் போய் வெளிநாட்டு விஷயங்களை யெல்லாம் செவ்வையாய்த் தெரிந்துகொண்ட படியால், அவருக்குச் சாம்ராஜ்யதில் ஒரு நாளும் இல்லாத அபிமானம் உண்டாயிற்று. இந்த அபிமானம் பலமாயிருக்கும்போது வட்டமேஜையின் யோசனைகளைத் துவக்கி வைத்தார். 'இந்த யோசனைகள் நன்றாய்ப் பயன் பெறவேண்டும். ஆகையால் எப்போதெல்லாம் சங்கடங்கள் நேருகின்றனவோ அப்போதெல்லாம் முட்டுக்கட்டை என்று பயப்படாமல் என்னிடம் வரவேண்டும்

எப்படியாகிலும் ஒரு வழி தேடி ராஜியாகவே முடிப் போம்' என்று உறுதியாய்ச் சொன்னார்.

## சில பத்திரிகை அவதூறுகள்

அம்மாதிரி நல்ல எண்ணமே அங்கத்தினர்கள் அனைவருக்கும் இருந்தபடியால், 'கேப்டவுன் ஒப்பந்தம்' (Capetown Agreement) என்று பிரசித்தி பெற்ற ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. இந்தச் சம்பாஷணை களிலும் இந்தியர் கட்சி வென்றதென்றும் போவர் கட்சி தோற்றதென்றும் அந்த ஊராருக்கு அபிப்பிராயம். இதற்கு முக்கிய காரணமாக, 'நாங்கள் உலக வழக்கங் களும் பெரிய அநுபவங்களும் நன்றாய்த் தெரிந்தவர்கள். தென் ஆப்பிரிக்காக்காரருக்கு அவ்வளவு பயிற்சியில்லை' என்று அந்த ஊர்ப் பத்திரிகைகள் வெளிப்படையாக எழுதினர். இந்தக் காரணம் தவிர, 'ஹபிபுல்லா லக்ஷக்கணக்காய்ப் பணத்தைக் கொண்டுபோய் யூனியன் மந்திரிகளுக்கு லஞ்சம் அளித்து மோசம் செய்தார்' என்றும் அவதூறாக எழுதினார்கள்.

## வேடிக்கையும் கண்டனமும்

நாங்கள் திரும்பிச் சென்னைக்கு வந்த போது நகரத்தார் எங்களுக்கு வரவேற்பு உபசாரம் செய்தார் கள். இந்த உபசாரத்திற்கு ஹபிபுல்லா சமது நன்றி தெரிவித்த பிறகு, நானும் ஒரு சிறிய பிரசங்கம் பண்ணி னேன். அதில் இந்தப் பழியைக் குறித்து விளையாட் டாக ஒரு வார்த்தை சொன்னேன்: 'ஹபிபுல்லா எங்களிடம் பூரணமாக வேலை வாங்கி உதவி பெற்று இங்கிருந்து கொண்டு போன பணத்தை யெல்லாம் எதிர்க் கட்சியாருக்குக் கொடுத்தாரே யொழிய எங்களை மறந்துவிட்டார்' என்றேன். இதைக் கேட்டு, விஷயம் பிரசித்தமா யிருந்தபடியால், எல்லோ ரும் உரக்க நகைத்தனர். அங்கே வந்திருந்த, 'மதராஸ்

மெயில் (Madras Mail)' ரிபோர்ட்டர் மட்டும், இதை உண்மையென்று கிரகித்து, பத்திரிகையில் அப்படியே பிரசுரிக்க, அந்தப் பத்திரிகைக்காரர்களும் அதைப் பின்பற்றி வேறு சில பத்திரிகைக்காரர்களும் இத்தகைய பெரிய ரகசியங்களை வெளியிடுவது அறியாமை என்று என்னைக் கண்டித்தார்கள். நான் அது விளையாட்டு என்று காட்டிய பிறகு முதலில் எழுதியதை மாற்றி எழுதிய போதிலும், 'பெரிய ராஜாங்க விஷயங்களை விவகரிக்கும்பொழுது விளையாட்டாகப் பேசுவது அபாயந்தான்' என்று முடிவு கட்டினார்கள். பத்திராதிபர்கள் குப்புற விழுந்தாலும் அவர்கள் மீசையில் மண் ஒட்டாது.

## தென் ஆப்பிரிக்கா ஏஜன்ட்

கேப்டௌன் ஒப்பந்தப் பிரகாரம் இந்திய அரசாங்கத்தார் தங்கள் ஏஜன்டாக ஒருவரைத் தென் ஆப்பிரிக்காவுக்கு அனுப்புவதாக ஒரு ஷரத்து ஏற்பட்டது. ஒப்பந்தத்தைச் சரியாக நிறைவேற்றுவதும் நம் ஜனங்களுடைய கஷ்டங்களையும் விருப்பங்களையும் அப்போதைக்கப்போது யூனியன் அரசாங்கத்தாரிடம் தெரிவித்துத் தீர்த்து வைப்பதும் இந்த ஏஜன்டின் முக்கியமான கடமை.

## சங்கத் தலைமை ராஜீநாமா

இந்த உத்தியோகத்தை முதலில் வகிப்பவருக்குப் பெருத்த சிரமங்கள் இருக்குமாதலால், கூடியவரையில் நல்ல பெயர் பெற்று, சர்க்கார் உத்தியோகம் இல்லாதவர் ஒருவரைப் பொறுக்கி அனுப்ப வேண்டுமென்று நான் எழுத்தாலும் பேச்சாலும் வற்புறுத்தினேன். மகாத்மா காந்தியும் இந்த விஷயத்தில் வெகு கவலைப்பட்டுப் பல யோசனைகள் செய்து, கடைசியில் நான்

தான் போக வேண்டுமென்று தம் பத்திரிகையில் எழுதியிருந்தது தவிர, வைஸ்ராய்க்கும் சிபார்சு செய்தார். இது அப்படியே முடிந்ததென்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. நான் தென் ஆப்பிரிக்காவுக்குப் பிரயாணப் செய்வதற்கு முன் இந்திய ஊழியர் சங்கத்தின் தலைமைப் பதவியை ராஜிநாமா செய்தேன். ஸ்ரீ தேவதர் (G. K. Devadhar) என்பவரை எனக்குப் பதிலாக அந்த ஸ்தானத்திற்குச் சங்கத்தார்கள் நியமித்தார்கள். தென் ஆப்பிரிக்காவில் நான் இருந்த பதினெட்டு மாத வரலாற்றைத் தனி அத்தியாயமாக எழுதுவது உசிதம்.

## கீனியா சென்றது

நான் இந்தியாவுக்குத் திரும்பிய மூன்று மாதத்திற்குள் கீனியாவுக்கும் போகும்படி அரசாங்கத்தார் என்னை நியமித்தார்கள். அந்த ஊரில் நம் ஜனங்களுக்கு இந்திய அரசாங்கத்தாருடைய பிரதிநிதி என்றால் சற்றேனும் ஆகாது. எனக்கு இந்தப் பாதகம் போதாதென்று, ராஜீய விஷயங்களில் மிதவாதி என்னும் அபக்கியாதியும் உண்டு. நான் கீனியா போய்ச் சேருவதற்கு முன்னமே, நான் அங்கே வர வேண்டாம் என்றும், வந்தால் இந்தியர் ஒருவரும் என்னை அங்கீகரித்துக் கவனிக்கக் கூடாதென்றும் பத்திரிகைகளில் எழுதி அனர்த்தம் பண்ணியிருந்தார்கள். நாலைந்து பேர்தான் என்னைக் கப்பலில் சந்தித்து, உபசரித்தார்கள்.

## சில நண்பர்கள்

ராஜதானியாகிய நைரோபி (Nairobi) நகர் போய்த் தங்குவதற்குத் தகுந்த ஜாகை கூடக் கிடைக்காமல் கஷ்டப்பட்டேன். அப்போது கவர்னர் ஊரில் இல்லாததால் தலைமை நீதிபதியே தற்காலிக கவர்னராக இருந்தார். வெள்ளையர்களின் அபிப்பிராயத்திற்கு

விரோதமாக அவர் என்னைத் தம் ஜாகையில் வைத்து உபசரித்தார். இது அவருடைய பெருந்தன்மையைக் காட்டியது. ஆனால் என் காரியத்திற்குப் பிரதிகூலமாயிருந்தது. தியோஸாபிகல் சொஸைட்டியில் சேர்ந்து, இந்தியர்களிடம் பிரீதியுள்ள மிஸ்டர் பெஸ்ட் (Mr. Best) என்பவரும் அவர் மனைவியும் என் நிலைமையைக் கண்டு தங்கள் வீட்டிற்கு அழைத்துப் போய் ஒரு பெரிய தேனீர் விருந்து நடத்தி, முக்கியமான வெள்ளையர்களையும் நம் ஜனங்களையும் வரவழைத்தார்கள். அப்பொழுது நான் செய்த பிரசங்கத்தால், இருவகையாருக்கும் என்னிடம் நல்ல அபிப்பிராயம் உண்டாயிற்று.

## இந்தியர் மன மாற்றம்

இதை நன்றாய்ப் பயன்படுத்திக்கொண்டு நான் வீடு வீடாய்ப் போய், செல்வாக்குள்ளவர்களிடம் பேசினேன். என் பேரில் கொடுமை காட்டிய இந்தியரும் மனம் தளர்ந்து தயை கூர்ந்து என் வேலைக்கு வேண்டிய உபகாரங்களைச் செய்யத் துவக்கினார்கள். ஒரு வாரம் போன பிறகு நான் ஜாகை இருப்பதற்கு ஒரு வீடும் திட்டமாயிற்று. பெஸ்ட் தம்பதிகள் எனக்குச் செய்த நன்மைகளைக் கணக்கிட முடியாது. அவர்கள் எனக்கு அருமையான நண்பர்களாய், இப்பொழுதும் கூடக் கடிதப் போக்குவரத்தால் அன்பு பாராட்டி வருகின்றனர். பொதுக்கூட்டங்களில் நம் ஜனங்களின் குறைகளை வெளிப்படுத்தியது தவிர, முக்கியமான வெள்ளையர்களையும் பத்திரிகாசிரியர்களையும் கண்டு நான் வாதாடினேன்.

## அற்ப விஷயத்தில் கோபம்

ஓர் அற்ப சமாசாரத்தில் நம் ஜனங்களுக்கு என் பேரில் பெருத்த கோபம் ஏற்பட்டது. பொதுக் காரி

யங்களில் புகுந்தவருக்கு நேரும் துன்பங்களுக்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டானதால் இதைப்பற்றிச் சில வார்த்தை கூறுவது தகும். ஒரு பிரசங்கத்தில் இந்தியர்களுக்கு ஏற்படும் தாழ்மையையும் உரிமையின்மையையும் விளக்க வேண்டி, 'தாய் நாட்டில் இருப்பதைக் காட்டிலும் கீனியாவில் ஜீவன வசதிகள் அதிகமாக இருந்தாலும் போதுமா? ராஜ்யத் துறையில் மதிப்பும் உரிமையும் அவசியமாயிற்றே' என்று பேசினேன். வருமானம், குடியிருப்பு, சாப்பாடு இவை சம்பந்தமான சௌகரியங்கள் உண்டு என்று பகிரங்கமாய் ஒப்புக்கொண்டது தங்கள் கட்சிக்கு நேர் விரோதமென்று வெகுவாய் என்னைக் கண்டித்து நிர்ப்பந்தம் செய்தார்கள் அங்குள்ள நம்மவர். இது உண்மையாயிருந்தாலும் வெளிப்படையாகக் கூறக் கூடாதாம்! இந்த மனஸ்தாபத்தைத் தீர்த்துக்கொள்வதற்கு நான் வெகு பாடு பட்டேன். வியாஜ்ஜியங்களில் விரோதமான உண்மைகளை ஒப்புக்கொள்ளக் கட்சிக்காரர் தயங்குவது போல, ராஜீய வாதங்களிலும் கூடிய வரையில் உண்மையைச் செட்டுப் பிடிப்பதே சகஜம்.

## "ஸி. எச்." கௌரவம்

இங்கே இருக்கும்பொழுதுதான் வைஸ்ராய் இர்வின் பிரபு எனக்கு 'ஸி. எச் (C. H.)' என்கிற கௌரவத்தைச் செய்து வைப்பதாக உத்தேசித்து என்னை அனுமதி கேட்டார். 'கே. ஸி. எஸ். ஐ' பட்டத்தை மறுத்ததுபோல் இதை மறுக்கக் கூடாது என்றும் 'ஸர்' என்னும் ஹோதாவுக்கு உள்ள ஆக்ஷேபம் இதற்குக் கிடையாதென்றும் வற்புறுத்தி எழுதினார். 'ஸி. எச்' என்றால் (Companion of Honour) என்று பொருள். இந்த வகுப்பினர் வெகு சொற்பப் பேர்தாம். நான் இதற்குச் சம்மதிக்கவே அடுத்த ஜனவரி மாதம் எனக்கு இந்தப் பட்டம் வழங்கப்பட்டது.

## ராயல் லேபர் கமிஷன்

தென் ஆப்பிரிக்காவில் இருக்கும்பொழுதே ராயல் இந்திய லேபர் கமிஷன் (Royal Commission on Indian Labour) நியமன ஏற்பாடுகள் பற்றி அந்தரங்க யோசனைகள் நடந்தன: இதற்குத் தலைவராகிய மிஸ்டர் ஜே. எச். விட்லி (J. H. Whitley) காமன்ஸ் சபை அக்கிராசனராக இருந்தபோதே எனக்கு நன்றாய்த் தெரியும். இதற்கு அங்கத்தினராக நான் சேரவேண்டுமென்று வைஸ்ராயுடன் கலந்துகொண்டு, சம்மதிக்க வேண்டுமென்று என்னை அவர் கேட்டார்; நானும் சம்மதித்தேன்.

## காந்தி - இர்வின் ஒப்பந்தம்

நாங்கள் டில்லியில் கூடியிருந்த பொழுது காந்தி இர்வின் ஒப்பந்தம் (Gandhi - Irwin Pact) விஷயமாகப் பேச்சு வார்த்தைகள் நடந்து வந்தன. இதில் முக்கியமாக உபகாரம் செய்தவர்கள் ஸர் டேஜ் பகதூர் ஸப்ரூவும், ஸ்ரீ ஜயகரும் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இந்தப் பேச்சு வர்த்தைகளில் நெருக்கடியான நிலைமை ஏற்பட்ட பொழுது நானும் அவர்களுடன் சேர்ந்து வைஸ்ராய்க்கும் மகாத்மாவுக்கும் நடுவில் தூது போனேன். ஒப்பந்தம் முடிந்த தினம் மிகக் கஷ்டமானது. காந்திஜியினிடம் கடைசி வார்த்தை சொல்லி முடிந்து நான் வீடு போய்ச் சேர்ந்த பொழுது விடியற் காலை மூன்று மணி யிருக்கும்.

## கமிஷன் தலைமை

ராயல் இந்திய லேபர் கமிஷன் அநேக இடங்களுக்குப் போய் விசாரித்து, பல தொழிற்சாலைகளை நேரில் பார்வையிட்டது. எனக்கு இருதய நோய் அடிக்கடி தொந்தரவு கொடுத்ததால் நான் பர்மாவுக்கும் இலங்

கைக்கும் போகாமல் இருந்துவிட்டேன். கமிஷன் மறுபடியும் சென்னையில் கூடியபோது நான் அதில் சேர்ந்து கொண்டேன். அப்பொழுது மிஸ்டர் விட்லி அசௌகரியத்தினால் கல்கத்தாவில் தங்கும்படி நேர்ந்தது. கமிஷனின் சேர்மன் வேலையைச் சென்னையில் நான் ஏற்றுக் கொள்ளும்படி ஆயிற்று.

## இர்வின் அறிக்கை

இந்த வருஷத்தில் ராஜீயக் கிளர்ச்சி அதிகப்பட்டது. இதைத் தீர்க்க வேறு வழியில்லையென்று இர்வின் பிரபு இங்கிலாந்துக்கு நேரில் சென்று பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் சர்ச்சை செய்தார். அப்போது அங்கே தொழிற் கட்சியார் அதிகாரம் வகித்து, ராம்ஸே மெக்டானல்டு முதல் மந்திரியாக இருந்தார். இவர்கள் யோசனை செய்து வந்த முடிவு என்னவெனில் வைஸ்ராய் மூலமாய் ஒரு பெரிய அறிக்கையை வெளியிடுவது என்பது. இவ்வறிக்கையை இர்வின் பிரபு திரும்பியதும், தீபாவளி தினத்தன்று வெளியிட்டார்.

## விசேஷமான திருப்தி
## 1917

**1917**-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் மாண்டேகு செய்த பேர் போன அறிக்கையின் தாத்பரியத்தின் விளக்கமாக இது அமைந்தது. அவ்வறிக்கையைக் குறைவின்றி நிறைவேற்றினால் இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து (Dominion Status) தருவதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்பதே. சிலர் வழக்கம் போல் இதைத் தாழ்த்திப் பேசிய போதிலும் பொதுமக்களுக்கு இது விசேஷ திருப்தியை உண்டு பண்ணிற்று.

## வட்டமேஜை மகாநாடு - யோசனை

இந்தப் புது அறிக்கையை நடைமுறையாக்க லண்டனில் ஒரு பெரிய வட்டமேஜை மகாநாடு கூட்டுவதாக நிச்சயம் செய்து அதற்குத் தக்கபடி இந்தியாவில் யார் யாரைப் பொறுக்குவதென்று யோசனை, அந்தரங்கமாய் நடந்தது. இதில் வைஸ்ராய் என்னைக் கொஞ்சம் சேர்த்துக்கொண்டார். தீர்மானத்தை வெளியிடும் போது, ஒருவரும் நினைத்திருக்கக் கூடாதபடி, அபசகுனம் போல், சுதேச மன்னர்களையும் மகா நாட்டிற்கு அழைக்க உத்தேசித்திருப்பதாகத் தெரிவிக்கப் பட்டது. இது ஸர் ஜான் ஸைமன் (Sir John Simon) கமிஷன் செய்த கேடுகளில் ஒன்று என்று நினைக்க வேண்டியதாக இருக்கிறது.

## ஸைமன் கமிஷன் குறிப்பு

இந்திய சமஷ்டி என்பதாக இந்தக் கமிஷன் மெம்பர்கள் ஸ்பஷ்டமாய்ச் சொல்லாவிடினும் காலக்கிரமத்தில் நம் தேசத்தின் ராஜீய நிலை பரிபாக மடையும் போது இந்திய சமஸ்தானங்களும் அதில் வந்து சேரும் படியான விதத்தில் அரசியல் திட்டத்தை அமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தனர்.

## நான் எழுதிய வியாசம்
## 1930

**1930**-ஆம் வருஷத்தில், வட்டமேஜை மகாநாடு கூடுவதற்குச் சில மாதங்கள் முன்னதாகவே, ராயல் இந்திய லேபர் கமிஷன் காரியமாக நான் லண்டன் போயிருந்தேன். அப்பொழுது புதிதாய் ஏற்பட்ட, 'பொலிடிகல் க்வார்ட்டர்லி (Political Quarterly)' என்னும் பத்திரிகையில் இந்திய சமஸ்தானங்களை ராஜீயத் திட்டத்தில் சேர்ப்பது அனுசிதம் என்று கட்சியாடி

வியாசம் எழுதியிருந்தேன். இந்த வியாசம் வெளிவந்த போது சமஸ்தானாதிபதிகள் ஏராளமான பணத்தைச் செலவழித்துத் தங்கள் கட்சி முன்னேற்றத்திற்காக ஒரு பெரிய காரியாலயத்தை ஏற்படுத்தி யிருந்தார்கள். இதில் கர்னல் ஹக்ஸர் (Col. Haksar) தலைமை வகித்தார். அவர் படிப்பிலும் பேச்சிலும் சிறந்தவர்; மனிதர் மனத்தைக் கொள்ளை கொண்டவர். அவருக்கு வலக் கையாக உதவி செய்தவர், ரஷ்ப்ரூக் வில்லியம்ஸ் (Rushbrook Williams). அவரும் காரியத்தைச் சாதிப்பதில் அதி நிபுணர். இவர்கள் சமஷ்டி வேண்டுமென்ற முடிவு கட்டியிருந்தபடியால், என் அபிப்பிராயம் சற்றேனும் இவர்களுக்குச் சரிப்படவில்லை.

## சமஷ்டி பற்றிய சர்ச்சை

சீக்கிரத்தில் பிக்கனீர் மகாராஜா, நாவ்நகர் ஜாம் ஸாஹேப், போபால் நவாப், ஆள்வார் மகாராஜா, பரோடா கெய்க்வார் முதலியவர்கள் வந்து சேர்ந்தனர். இவர்களுடன் ஸர் தேஜபகதூர் ஸாப்ரூவும் கலந்து கொண்டார். இதன் பயனாக இந்தியர், இந்தியர் விஷயத்தில் கவலை கொண்ட வெள்ளையர்கள் எல்லோரும் சமஷ்டி விஷயத்தை விசேஷமாகச் சர்ச்சை செய்தார்கள். மகாராஜாக்களும் மகாராஜாக்களுடைய மந்திரிகளும், அவர்களைச் சேர்ந்தவர் அனைவரும் ஏற்கனவே சமஷ்டியை முழுமனசாக அங்கீகரித்து விட்டார்கள் என்று எனக்குத் தெரியவந்தது.

எப்படியாவது சமஸ்தானங்களை உள்ளடக்கினால் தான் இந்தியாவுக்குச் சாஸ்வதமான சுதந்தரம் கை கூடும்; அவை வெளியே நின்றால் இடையூறுகளாகும்; நம் ராஜாக்களும் முன் போல் இல்லை; உலக அநுபவமும் குடிகளின் பாதுகாப்பில் கவலையும் மிகுந்தவர்கள் என்று வாதித்தார்கள். பிரதிகூலமாய் இருக்கும் என் கொள்

கையைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைக்கத் துவக்கினார்கள்.

நன்றாய் வெளியாகாத மற்றொரு சம்பவத்தை நான் இப்போது இந்த வரலாற்றில் சேர்த்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். வட்ட மேஜை மகாநாடு ஆரம்பிப்பதற்கு இரண்டு நாட்கள் முன்பு பிக்கனீர் மகாராஜா கார்ல்டன் ஹோட்டலில் (Carlton Hotel) ல் முக்கியமான இந்தியப் பிரதிநிதிகளை அழைத்து விருந்தளித்தார். சாப்பாட்டிற்குப் பிறகு சபையின் நடைமுறை இன்னதென்று தீர்மானிப்பதற்காக ஒரு கூட்டம் பரோடா கெய்க்வார் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது.

நான் செய்த சிபாரிசு பின் வருமாறு: பிரதம மந்திரி மகாநாட்டைத் திறந்து வைத்தவுடன் காரியத்தைத் துவக்கு முன்னர் சமஸ்தானங்களின் சார்பாக ஒரு மகாராஜா எழுந்திருந்து, 'இர்வின் பிரபு செய்த அறிக்கையில் பிரிட்டிஷ் இந்தியாவுக்குத்தான் குடியேற்ற நாட்டந்தஸ்து என்று உத்தேசித்திருந்தாலும், அவ்வுத்தேசம் பூர்ணப் பிரயோஜனத்தையடைய வேண்டுமானால் எங்களையும் சேர்த்துச் சமஷ்டியாக்குவதற்குரிய யோசனைகள் எல்லாம் அடி முதற்கொண்டு ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள வேண்டியது. இந்தக் கோரிக்கையைப் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகள் அங்கீகரிக்க வேண்டியது. இதற்குப் பிறகு எல்லாப் பிரேரணைகளையும் இந்த நோக்கத்திற்கு இணங்கி விசாரிக்க வேண்டும்' என்றார்.

'நடந்த நிகழ்ச்சிகளுக்கு இது தான் ஒத்த முறை' என்று கெய்க்வாரும் ஸர். ஸி. பி. ராமசாமி ஐயரும் என் அபிப்பிராயத்தை அங்கீகரித்தார்கள். வேறு பலரும் சரியென்று ஒப்பியதாக எனக்கு ஞாபகம். பிக்கனீர் மகாராஜாவுக்கு இது சம்மதம்இல்லை; ஸர்

ஸாப்ரூவும் அவருடன் சேர்ந்தார். ஓட் எடுத்திருந்தால் என் கட்சி மிக வலுத்திருக்கும். அப்படிச் செய்யாமல் சபையைத் தந்திரமாய்க் கலைத்து விட்டார்கள்.

மகாநாடு கூடிய பின் ராம்ஸே மக்டானல்டு பிரசங்கம் முடிந்ததும், திடீரென்று ஸர் தேஜ் பகதூர் ஸாப்ரூ எழுந்து விஸ்தாரமாய்ப் பிரசங்கித்து, சமஸ்தானாதிபதிகள் ராஜீயத் திட்டத்திற்குள் எப்படியாகிலும் சேர்ந்து உதவி செய்ய வேண்டும் என்று வருந்தியழைத்தார். எனக்கு இது மிக ஆச்சரியமாக இருந்தது. தவிர, பின் வரும் பேச்சுகளில் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு விரோதமாய் முடியும் என்ற பயத்தையும் உண்டு பண்ணியது. பிக்கனீர் மகாராஜா தங்கள் சார்பாக இந்த அழைப்பைக் கௌரவித்ததாகவும், கூடியவரையில் பாரத வர்ஷத்தின் முன்னேற்றத்திற்குத் துணையாக நிற்பதாகவும், தாங்கள் தேசாபிமானத்தில் எங்களுக்குப் பின் வாங்காதவர்கள் என்றும், தாங்கள் பூரண சுதந்தரம் (Sovereignity) அநுபவிக்கிறபடியால், புது அமைப்பில் இந்தியாவுக்குக் குடியேற்ற நாடுகள் போல் பூரண சுதந்திரம் (Full Responsibility) கிடைத்தால்தான் தங்களுக்குத் திருப்தியாயிருக்கும் என்றும் வெகு நேர்த்தியாய்ப் பேசினார்.

இதனால் நாங்கள் விருந்தளிப்போர்களாகவும் அவர்கள் விருந்தாளிகளாகவும் வெளிப்பார்வைக்குத் தோன்றியது. உண்மையோ இதற்கு நேர் எதிரானது. பிறகு நடந்த சம்பாஷணைகளில் எல்லாம் அவர்கள் பேரம் பண்ணவும் நாங்கள் விட்டுக் கொடுக்கவும் இது காரணமாயிற்று. நானும் தருணம் கிடைத்தவுடன் சமஷ்டி அமைப்புக்கு முதலில் சம்மதிக்காமல் இருந்தும் அப்பொழுது மனம் மாறிச் சமஷ்டியை ஒப்புக் கொண்டதாகக் கூறினேன். இதை ஒரு பெரு நிகழ்ச்சியாக இந்தியாவில் பிரசுரம் செய்து, என்னைச் சிலர் தூஷித்ததும், சிலர் பூஷித்ததும் உண்டு.

## வட்டமேஜை மகாநாடு

வட்டமேஜை மகாநாட்டைப் பற்றி முக்கியமான விஷயங்கள் சிலவற்றைச் சுருக்கமாகவாவது கூறுவது அவசியமாகும். 1930, 31, 32- இம் மூன்று வருஷங்களிலும் மகாநாடு நடைபெற்றது. நான் முதல் இரண்டு வருஷங்கள்தான் போனேன். மூன்றுவது வருஷம் ஸர் ஸாமுவேல் ஹோர் (Sir Samuel Hoare) அநேக அங்கத்தினரை வேண்டாமென்று தள்ளிவிட்டார். அவர்களில் நானும் ஒருவன்.

துவக்கத்திலே இந்திய சமஷ்டி என்னும் உத்தேசம் வெளியிடப்பட்டது என்று சொல்லியிருக்கிறேன். இதில் பெருங்கவலை கொண்ட ராஜாக்கள் குடியேற்ற நாட்டந்தஸ்து தங்களுக்கும் அத்தியாவசியமாகத் தோன்றியதென்று உறுதி மொழி கூறினார்கள். எனக்கு மட்டும் இவ்விரு உத்தேசங்களும் ஒன்றுக் கொன்று இணங்கா என்று மனத்தில் ஏதோ ஒரு பயம், இன்னதென்று உறுதியாய்ச் சொல்ல முடியாமல், தோன்றியது. இதனால் ஒன்று சிலருக்கும், மற்றொன்று வேறு சிலருக்கும் அதிகப் பிரீதியாயிருந்தாலும், எல்லோரும் ஒன்றுபோல் இரண்டையும் அடைய ஒரே மனசாய் முயல வேண்டுமென்று ஊக்கத்துடன் கேட்டுக்கொண்டேன்.

முதல் வருஷம் முடிவில் இந்த ஆசை முறியும் என்கிற சந்தேகம் உண்டாகிவிட்டது. பிக்கனீர், பரோடா, மைசூர், போபால் ஆகிய சமஸ்தானப் பிரதிநிதிகள் முன் நின்று என்னுடன் ஒத்துழைத்தது போக, வேறு சில மகாராஜாக்களும் ராஜாக்களும் வலிவு பெற்று இவ்விரண்டு உத்தேசங்களுக்குமே பிரதிகூலம் பண்ணினார்கள். இதற்கு வெளி நாட்டிலாகாவின் (Foreign Department) பெரிய உத்தியோகஸ்தர் சிலர் மூல காரணம் என்று எங்களுக்குத் தோன்றியது.

இந்தச் சந்தேகம் உண்டானதுமே நான் அதை ஒரு பிரசங்கத்தில் வெளியிட்டேன். மசோதாவில் சமஷ்டியை இரண்டாம் பாகமாய்ச் செய்து, பின்பு அமலுக்குக் கொண்டு வருவதாக இந்தியா மந்திரி பிரஸ்தாபித்தார். 'இதில் விஷமம் இருக்கிறது. மூன்று மாதம் அல்லது ஆறு மாதம் என்று காலம் குறிப்பிடாவிட்டால் ஏதாகிலும் இடையூறு நேரும் அல்லது விஷமிகள் இடையூறு வேண்டுமென்றே செய்வார்கள். இதனால் சமஷ்டி கிடைக்காமலே போய்விடலாம்' என்று கொஞ்சம் ஆத்திரமாகவே சொன்னேன். இடையூறு எவ்விதம் யாரால் நேருமென்று எனக்கு அப்போது சொல்ல முடியாவிடினும், இப்போது அப்படியே நேர்ந்திருப்பதைப் பற்றி யோசிக்கும்போது, ஏழையான என் வார்த்தை அம்பலம் ஏறவில்லையே என்று இப்பொழுது வெகு வருத்தமாயிருக்கிறது.

## காங்கிரஸ் ஒத்துழைப்பு

**வ**ட்ட மேஜை மகாநாட்டிற்குப் பிரதிநிதிகளைப் பொறுக்கும்பொழுது, காங்கிரஸ்காரர்கள் ஒத்துழையாமை முறையை அநுஷ்டித்து வந்ததால், வெளி நின்றார்கள். பிரிட்டிஷ் இந்தியாவைச் சேர்ந்த ஸாப்ரூ, ஸெதல்வாடு, நான் முதலிய யாவரும் அவர்கள் சேர்ந்து உதவி செய்யாவிடில் காரியம் நடவாதென்று பிடிவாதம் பிடித்தோம். மகா ராஜாக்களும் அவ்வாறே வற்புறுத்தினார்கள். இது கண்டு 1931-ஆம் வருஷத்தில் மகாத்மா காந்தி காங்கிரஸுக்குத் தாம் ஒருவரே பிரதிநிதியென்று ஏற்பட்டு, மதன் மோகன் மாளவியா, ஏ. ரங்கஸ்வாமி ஐயங்கார், சரோஜினி தேவி இவர்களை உதவியாக அழைத்து வந்தார்.

## ஹிந்து - முஸ்லிம் பிரச்னை

**ஹி**ந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் உள்ள சச்சரவுகளை இங்கிலாந்தில் மட்டுமல்ல, உலகம் முழுவதும்

மக்கள் அறிவார்கள். இவ்விஷயத்தில் நல்லவர்களுக்குப் பரிதாபமும் பொல்லாதவர்களுக்குச் சந்தோஷமும் உண்டு. என் கண்ணில் பட்டவரையில் இந்தச் சண்டைகள் தீரக்கூடாவென்று கவலைப்பட்டவர்கள் தாம் அதிகம். மகாநாடு நடைபெற்ற காலமெல்லாம் ஒரு நாள்கூடத் தவறாமல் ராஜி பேசினோம்.

இந்த முயற்சிகளில் மூன்று முக்கியமானவை. லண்டனில் அங்கத்தினர்கள் கூடியதுமே, போபால் நவாபின் அபூர்வமான தேசாபிமானத்தால் அவர் வீட்டிலேயே இரு தரப்பு முக்கியஸ்தர்களும் ஒவ்வொரு ராத்திரியும் கூடினோம். எவ்வளவு சிநேகபாவமாகவும் அக்கறையாகவும் முயற்சி செய்தாலும் காரியம் கைகூடவில்லை. இரண்டு மூன்று தடவைகள் முஸ்லிம் பிரதிநிதிகள் சபைக்கு வரமாட்டோமென்று நின்று விட்டார்கள்.

ஒரு நாள் துக்கத்தை அடக்க முடியாமல், "இப்படி அநியாயம் செய்யலாமா? தேசத்தின் முன்னேற்றம் நெருங்கி வரும்பொழுது குறுக்கிடலாமா? இப்படிச் செய்பவர்கள் ஏற்றுக்கொள்ளும் பளு வெகு அசாத்தியம்" என்று சொல்லிவிட்டேன். இந்தக் கட்சியில் சிலர் சினம் கொண்டு என்னைக் கண்டித்தார்கள். மகாத்மா காந்தி வந்த பிறகு ஒரு பெரிய கமிட்டியைக் கூட்டி அவரை அதற்கு அக்கிராஸனம் வகிக்கும்படி நியமித்தார்கள். மூன்று நான்கு தரம் கூடியும் கொஞ்சமேனும் உபயோகப்படாது என்று வெளியாயிற்று. பகிரங்கமாய் மகாசபையில், 'என்னால் ஆகாது; சொல்ல வெட்கமாயிருக்கிறது' என்று மகாத்மா கைவிட்டார்.

பிறகு ராம்ஸே மக்டானல்டே, தம் ஓய்வு விடுதியாகிய செக்கர்ஸ் (Chequers) என்னும் அழகிய ஸ்தலத்துக்கு எங்களையெல்லாம் வரவழைத்து, தம்மால் கூடின வரை நயபயங்களால் ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்தப் பார்த்தார். இதில் ஒரு சமயம் காரியம் முடியும்

தருணம் கூட எட்டியது. ஆனால் பஞ்சாப் லீக்கியருடைய பிடிவாதத்தால் இது முறிந்தது. அச்சமயம் மக்டானல்டு என்ன என்னவோ யுக்திகள் செய்து இந்தியாவைக் கரையேற்றி விடுகிறதென்று தீர்மானம் கொண்டார். அதற்காக அவர் செய்த பிரேரணைகளில் அதிருப்திப்பட்டு ஆகாகான் முதலியவர்கள் மிகவும் கோபம் காட்டினார்கள்.

ராம்ஸே மக்டானல்டு செய்த முயற்சிகளில் ஒன்று அரிதானது. விசேஷமாய் நம் ஜனங்களுக்குத் தெரியாததால் இவ்விடத்தில் விரிவாக எடுத்துரைத்தால் பயன் உண்டு. அவருடைய அந்தரங்கக் கொள்கை தனித் தொகுதிகள் ஒற்றுமை வரவொட்டாமலே தடுக்குமென்பது; முஸ்லிம்களுக்கோ அவ்வேற்பாட்டிலுள்ள பிரீதியும் நம்பிக்கையும் மாற்றக்கூடியவை அல்ல. ஆயினும் முஸ்லிம் வகுப்பார் மனத்தில் எப்பொழுதும் ஒற்றுமை என்கிற உத்தேசமும் வேரூன்ற வேண்டுமாதலால், சட்டசபைகளில் சில ஸ்தானங்களுக்காவது அங்கத்தினர் முஸ்லிம்களாயிருந்தாலும் அவர்களைத் தேர்ந்தெடுப்பவர் தொகுதி எல்லா வகுப்பாரும் எல்லா மதஸ்தர்களும் சேர்ந்ததாக இருக்க வேண்டுமென்பது தம் ஆழ்ந்த அபிப்பிராயம் என்று மக்டானல்டு சொன்னார்.

இரு விதமாயும் முஸ்லிம் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் எவ்வழி நல்ல வழியென்று சில வருஷங்களுக்குள் நன்றாகப் புலப்படும்; பிறகு அந்த வழியை உறுதி பண்ணிக்கொள்ளலாம் என்கிற எண்ணம் அவருக்கு. அதற்கு ஐந்தாறு வருஷங்களுக்கு முன்பு இந்த இரண்டு முறைகளையுமே ஒரே காலத்தில் பின்பற்ற வேண்டுமென்று நான் எங்கள் சங்கத்திற்குச் சொந்தமான, 'ஸர்வன்ட் ஆப் இந்தியா (Servant of India)' என்ற வாரப் பத்திரிகையில் விரிவாக வாதித்திருந்தேன். ஆகையால் மக்டானல்டு பிரே

ரணத்தை நான் உற்சாகத்துடன் வரவேற்றேன். அப்படியே வேறு சிலரும் கொண்டாடினார்கள்.

உண்மையில் 1905-ஆம் வருஷம் இந்த விஷயம் முதல் முதல் விவாதிக்கப்பெற்றபோதே இந்திய அரசாங்கத்தார் இந்த இரட்டை முறை யுக்தியைச் சிபாரிசு செய்தார்கள். அப்பொழுது இந்தியா மந்திரியாயிருந்த மார்லிப் பிரபு (Lord Morley) அருகிலிருந்த சிலரது துர்ப்போதனையால் அந்தச் சிபாரிசைத் தள்ளி, தனித் தொகுதிகளாகவே ஏற்பாடு செய்தார். முஸ்லிம்கள் இதை நல்ல மனத்துடன் ஒப்புக்கொண் டிருந்திருந்தால் எவ்வளவு க்ஷேமமாக இருந்திருக்கும்! இப்பொழுது நாம் அநுபவிக்கும் கேடுகள் நேரிடாமலே இருந்திருக்கக் கூடும். 'செக்கர்ஸ்' பங்களாவில் மக்டானல்டு இதை வெளியிட்ட தருணமே, பிறந்த சிசு மூச்சு விட முடியாமல் நெஞ்சில் கை வைப்பது போல், முஸ்லிம் முக்கியஸ்தர்கள் வெகு வெறுப்புடன் இதை உதறித் தள்ளினார்கள்.

வட்ட மேஜை மகா நாட்டில் யோசனைகள் முடிந்தவுடன் வகுப்புத் தீர்ப்பு (Communal Award) என்று ஒரு திட்டம் வெளியாகியது. அது அநேக விதங்களில் ஹிந்துக்களுக்குப் பிரதிகூலமாயிற்று. இதைத் தீர்ப்பு அல்லது அவார்டு (Award) எனபது தப்பு. 'அவார்டு (Award)' என்பது இரண்டு கட்சியாரையும் தீர விசாரித்துச் செய்யும் நியாயப் போக்கு. இதை ஓர் உத்தரவு என்றுதான் கூறவேண்டும். பக்ஷபாதமில்லாத நீதிபதி அதைத் தொட்டுப்பார்த்ததாகவே காணவில்லை இதைக் கொஞ்சமேனும் யோசியாமல் மக்டானல்டின் தீர்மானமென்று இந் நாட்டில் அநேகர் பேசி வருகிறார்கள். நான் இப்பொழுது எழுதியிருக்கும் விஷயங்களைப் படிப்பவர் இதைக் கொஞ்சமேனும் நம்பமாட்டார்கள். முதல் மந்திரியாயிருந்தாலும் மக்டானல்டு மனத்தில் ஓர் அலுப்பு ஏற்பட்டு, இந்தியா

விஷயங்களையே தாம் கவனியாது புதிதாய் இந்தியா ஆபீஸில் அதிகாரம் பெற்ற ஸர் ஸாமுவல் ஹோரிடம் ஒப்பித்து விட்டார்.

## பொதுத்தேர்தலும் இந்தியாவும்

நம் நாட்டின் பாவங்களும் துரதிருஷ்டங்களும் திரண்டு உருவமெடுத்து ஒய்ட் ஹாலில் (White Hall) ஸர் ஸாமுவல் ஹோர் ஆக வீற்றிருந்தன. இரண்டாம் வருஷத்து வட்டமேஜை மகாநாடு நடக்கும்போது இங்கிலாந்தில் செல்வநிலை காரணமாகத் திடீரென்று ஒரு பொதுத்தேர்தல் சம்பவித்தது. அதில் கன்ஸர்வேட்டிவ் கட்சியார் அபரிமிதமாய் வெற்றி யடைந்தனர். படாத பாடுபட்டு மக்டானல்டு ஒருவர்தாம் தொழிற் கட்சியில் தேறினார். இவரை முக்கியமந்திரி பதவியிலே வைத்து அதிகாரத்தை யெல்லாம் கன்ஸர்வேட்டிவ் கட்சியார் ஸ்வீகரித்துக் கொண்டனர். வெகு ஆசையுடன் நம்பி யிருந்த இந்தியாவை ஈவு இரக்கமின்றிச் சத்துருக்கள் வசம் இவர் விட்டுவிட்டார்.

நாங்கள் இந்த ஆலோசனைகளுக்காக முதல் முதலில் சென்ற பொழுது எங்களிடம் வெகு விநயமாயும் மரியாதையாயும் இருந்த ஸர் ஸாமுவேல் ஹோர், மந்திரியானதும் பூண்ட கர்வமும் கடுமையும் வருணித்து முடியாது. வெளித்தோற்றம் சபைகளில் இவ்வளவு அடியோடு மாறுமென்று நாங்கள் அப்போதுதான் கண்டு கொண்டோம். மந்திரி மட்டும் அல்ல; இந்தியாவிலிருந்து வந்த வெள்ளையரும் அவ்வாறு மாறினார்கள். ரெடிங் பிரபுகூட முன்போல் இல்லாமல் எங்களைக் கொஞ்சம் தள்ளி வைத்தே பேசினார். ராஜீய விஷயங்களில் நல்ல பழக்கமுள்ள எங்களுக்குங்கூட அதிகாரம் வந்தால் எவ்வளவு தலை சுற்றுமென்பது இதனால் நன்கு விளங்கியது.

## பொய்ப் பிரசாரம்

ஒரே ஒரு நிகழ்ச்சியை மட்டும் நேயர்களுக்கு நினை ஆட்டினால் போதும். இந்திய அரசாங்க மசோதா பார்லி மென்டில் விவாதிக்கப்பெற்றபொழுது நம்முடைய பிரதிநிதிகள் - ஹிந்துக்கள், முஸ்லிம்கள் - இரு கட்சி யாரும் சேர்ந்து ஆகாகான், ஸப்ரூ, ஜயகர் உள்பட - கை யெழுத்திட்டுச் சில வேண்டுகோள்களை அனுப்பினார்கள். இவைகளுள் ஒன்றையாவது அதிகாரிகள் கண்ணெடுத் தும் பார்க்கவில்லை. ஆயினும் அமெரிக்கா முதலிய நாடு களில் - 1935-ஆம் வருஷத்திய பெரிய சட்டமானது - இந்தியர்களும் பிரிட்டிஷ்காரர்களும் கலந்து செய்த யோசனைகளின் பலன் என்று இப்பொழுதுங்கூட வாய் கூசாமல் பிரமாணம் பண்ணுகிறார்கள். கஷ்டப்படும் நமக்கல்லவா உண்மை தெரியும்? எவ்வளவு கதறினாலும் கேட்பார் இல்லை!

## டில்லியில் நடந்த பேச்சுகள்

வட்ட மேஜை மகா நாட்டில், துவக்கத்திலேயே மகாத்மா காந்தியும் காங்கிரஸ்காரரும் சேராவிடில் ஒன் றும் நடைபெறுதென்றும், அவரைச் சேர்க்க வழி தேட வேண்டும் என்றும் நாங்கள் வற்புறுத்தியதாக ஏற் கனவே சொல்லியிருக்கிறேன். இந்தியாவுக்குத் திரும்பி யும் இந்த உத்தேசத்தை நிறைவேற்றுவதற்காக எல்லா முயற்சிகளும் செய்தோம். காங்கிரஸ்காரர் வருவதாக நிச்சயமான பிறகு டில்லியில் அவர்களுடன் கூடிச் சில யோசனைகளும் நடந்தன.

டாக்டர் அன்ஸாரியின் வீட்டில் இரண்டு மூன்று தடவைகள் காந்திஜியிடமும் வேறு சில பெரியார்களிட மும் ஏற்கனவே லண்டனில் நடந்ததை யெல்லாம் ஒன்றையும் குறைக்காமல் சொல்லி, அப்பால் நடக்க வேண்டிய முறைகளையும் நன்றாய் மனத்தில் திடப்படுத் திக்கொள்ள எவ்வளவோ முயன்றோம்.

முக்கியமாய் இந்தியாவின் பாதுகாப்புப் பற்றி நாங்கள் பிரிட்டிஷ்காரர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களைக் காந்திஜி ஏற்று மேல் விவகாரங்களைத் தொடர வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். ராணுவம், போர்வழி, இதற்கு வேண்டிய செலவுகள், இவ் விஷயங்களில் மகாத்மாவின் அபிப்பிராயங்கள் வேறு ஒருவருடைய அபிப்பிராயங்களுடனும் சேரா என்று சொல்லவும் வேண்டுமா?

வெகு நேரம் கட்சியாடியபின், இந்த விஷயத்தில் ஒற்றுமை காண்பது அசாத்தியம் என்று விட்டுவிட்டோம். சில்லறை அம்சங்களிலாவது அவருக்கும் எங்களுக்கும் ஐக்கிய பாவம் ஏற்படுமோ என்று வெகுவாய்ப் பார்த்தோம். திருப்திகரமாயில்லை. சிநேகப் பழக்கத்திற்கும் சம்பாஷணைக்கும் அவர் எளியவரே தவிர பொதுக்காரியங்களில் கருத்துக்களை இணைத்துப் போவதில் சுலபரல்ல. தாம் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று பிடிவாதம் பிடிப்பவர்.

எங்களைத் தம் பட்சம் திருப்ப முடியவில்லையென்று அவர் புகார் செய்யலாம். ஆயினும் ஸெயின்ட் ஜேம்ஸ் அரண்மனை (St. James Palace) யில் எதிர்க்கட்சியாடும் வெள்ளையர்கள் முன்னிலையில் எப்படியாவது ஒற்றுமை வாய்க்காதா என்று நாங்கள் போனோம். கூடிக் கூடிப் பேசியதில் குறைவில்லை. ஐக்கிய புத்திமட்டும் வரவில்லை; எல்லாம் பிரதிகூலமானதற்கு மூலகாரணம் என்னவெனில் காந்திஜி இந்தியாவை விட்டுப் புறப்படும்பொழுதே தம் கட்சியாருடன் செய்துகொண்ட ஏற்பாடுதான் என்று நினைக்கிறேன்.

காங்கிரசுக்குத் தாம் ஒருவரே பிரதிநிதி என்றும், முக்கிய விஷயங்களில் காங்கிரஸ்காரரின் கொள்கை இன்னதென்று வரையறை செய்து அவ் வரையறையைத்

தாண்டத் தமக்கு அதிகாரமில்லை யென்றும் செய்து கொண்ட நிர்ப்பந்தந்தான் அந்த மூலகாரணம். காங்கிரஸ்காரரின் கருத்துகளைக் கண் விழித்து மன உறுதியுடன் காப்பதில் காந்திஜியை விடத் தேர்ந்தவர் உண்டா? அவருக்கு எதிரிகளுடன் ராஜி பேசி விட்டுக் கொடுக்கவும் இழுத்துப் பிடிக்கவும் சுயாதீனம் ஏன் கொடுத்திருக்கக் கூடாது? ஜனநாயகம் வளர, வளரத் தலைவரை முற்றும் நம்புவதில்லை என்கிற குறையும் மேலிடுகிறது.

இரு நாட்டாருக்குமுள்ள தகாறுகளைத் தீர்க்கக் கூடும் சபைகளில் அப்போதைக்கப்போது வெளியாகும் நிகழ்ச்சிகளுக்குத் தக்கபடி நடந்துகொள்ளச் சுதந்தரம் அவசியம். வெவ்வேறு சார்புகளிலிருந்து வெவ்வேறு கொள்கை உடையவர்களை ஒரே இடத்தில் கூட்டுவதன் பலன் என்ன? 'நீர் சொல்வதை நீர் சொல்லிக்கொண்டே இரும். நான் சொல்வதை நான் சொல்லிக்கொண்டே இருக்கிறேன்' என்றால் என்ன பயன்? தந்தி மூலமாகவும் கடித மூலமாகவும் இவற்றைத் தெளிவாய்த் தெரிவிக்கலாமே! பிரதிநிதிகளா? வாக்கு யந்திரங்களா?

'இவ்வாறு ஆக்ஞைகளைப் பெற்று அவைகளை மாற்ற அதிகாரமில்லாமல் வந்ததால்தான் மகாத்மாஜி கைப்பற்றி இருக்க வேண்டிய லாபங்களைக் கைப்பற்றாமல் திரும்பினார்' என்று நான், 'வட்டமேஜை மகாநாட்டில் ஆக்ஞைகள் (Mandates at the R.T C.)' என்கிற வியாசத்தில் இந்தியன் ரெவியூ (Indian Review) என்ற பத்திரிகை மூலம் வெளியிட்டேன்.

## லண்டனில் மகாத்மா

முக்கிய மந்திரி மக்டானல்டுக்கும் மகாத்மாஜிக்கும் அந்தரங்கமாக ஒற்றுமை ஏற்படவே யில்லை. தனித் தனியாக என்னிடம் அவர்கள் சொல்லித் துக்கித்த

தூண்டு. வட்டமேஜை மகாநாட்டின் நாலைந்து கூட்டங்கள் ஆகியவுடனேயே ஒரு நாள் வெகு வருத்தத்துடன், 'இந்த முயற்சி வீண்போகும்போல் இருக்கிறதே' என்று நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, மகாத்மாஜி சொன்ன ஒரு வார்த்தை என் மனத்தில் பதிந்திருக்கிறது.

'இந்தப் பெரிய தகராறுகளைச் சரியானபடி முடித்துக்கொள்ள இது தருணமல்ல. சந்தர்ப்பங்கள் பக்குவமாயில்லை. என் கைக்கு வேண்டிய பலம் ஏற்படவில்லை. இந்தியாவில் நம் ஜனங்களின் கிளர்ச்சியை இன்னமும் வலுப்படுத்தி அதனால் கிடைக்கும் வலிமையுடன் மீண்டும் நான் இங்கே வரவேண்டும்' என்றார் அவர் அச் சமயம்.

இவ் வெண்ணத்திற் கொப்ப அப்பொழுது முயற்சி பயன்படவில்லை. இன்னமும் பயன் படாமலே இருக்கிறது. அவருக்குள்ள பலமும் துர்ப்பலமும் இந்த வட்டமேஜை மகாநாட்டு ஆலோசனைகளில் நன்கு வெளியாயின. அபிப்பிராயங்களைத் தெளிவாய்த் தெரிந்துகொண்டு, கெட்டியாய்ப் பிடிப்பதில் அவரைப் போன்றவர் இல்லை. சமயத்தில் நுழைந்து கொடுத்து, விட்டுப் பிடிப்பதில் சாமர்த்தியம் அவருக்குப் போதாது. இப்படித்தான் இரண்டு மூன்று தடவை நல்ல பயன் கைகூடும் வேளையில் தவர விட்டிருக்கிறார். 1931-ஆம் வருஷம் கடைசியிலுங் கூட இப்படியாயிற்று.

மகாநாடு கலைவதற்குச் சற்று முன்பு நான் இந்த அர்த்தத்தைத்தான் வெகு உருக்கமாயும் சிநேகபாவமாயும் ஒரு பிரசங்கத்தில் தெரிவித்துக்கொண்டேன். அதை மற்றவர் ஒப்புக்கொண்டும், காந்திஜீயும் அவரைச் சேர்ந்தவர்களும் மட்டும் நல்ல மனத்துடன் ஏற்கவில்லை. இப்படி நெருங்கிச் சொல்லவேண்டிய புத்திமதியை ஏகாந்தமாகச் சொல்ல வேண்டுமே தவிர, நால்வர்

முன்பாகச் சொல்லக் கூடாது என்பது அவர்கள் அபிப்பிராயம்.

இந்த முறை, காங்கிரஸ் கட்சியாரை மட்டும் கட்டுப்படுத்துமே தவிர மற்றவர்களை உட்படுத்தாது. வேறு கட்சியாருக்கு அந்தரங்க உபதேசம் செய்யப் பாத்தியமுண்டோ?—நான் இவ்விஷயத்தை விளக்க அவருக்கு ஒரு கடிதம் போட அவர் பதில் அளித்ததாவது: 'எனக்கு உங்கள் பேரில் யாதொரு வருத்தமும் இல்லை. நீங்களும் மற்றும் சிலரும் பிரிட்டிஷ்காரர்கள் கொடுப்பதைப் பெற்றுக்கொண்டு எப்படியாகிலும் ராஜியாக முடிக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். எனக்கோ கிடைத்த லாபம் சற்றும் போதாதென்று தோன்றுகிறபடியால் ராஜி செய்து முடித்துக்கொள்வதில் இஷ்டமே இல்லை.'

## சக்கரவர்த்தி விருந்து

இந்த வட்டமேஜை மகாநாட்டு ஆலோசனைகள் நடைபெறுங் காலத்தில் சக்கரவர்த்தி அரண்மனையில் இந்தியப் பிரதிநிதிகளை ஓர் இரவு அழைத்து உபசரித்தார்கள். இதற்கு மகாத்மா வருவாரா இல்லையா என்றும், வந்தால் வழக்கமான உடைதானா, வேறு இதற்கென்று அரண்மனைக்குரிய உடுப்பு அணிவாரா என்றும் சில கேள்விகள் பிறந்தன. மகாத்மா உறுதியாகவே நின்றார். வின்ஸ்டன் சர்ச்சில் போன்றவர் மனம் மிகவும் கலங்க, பக்கிங்ஹாம் அரண்மனைப் (Buckingham Palace) படிகளில் ஒரு நாளும் காணப்படாத உடையுடன் ஓர் இந்திய சந்நியாசி ஏறிச் சென்றார். ராஜாவும் ராணியும் வந்து பேசும்போது, ராஜாவிடம் மகாத்மாஜியும், ராணியிடம் நானும் ஏக காலத்தில் பேசினோம். அவ்விருவருக்கும் நடந்த சம்பாஷணை என்னவென்று காந்திஜிதான் சொல்ல முடியும்?

அரசருடன் நடந்த பேச்சுகளை வெளியிடுவது முறையல்ல. ராஜீய ரகசியம் அல்லது அது போன்ற முக்கியாம்சம் ஒன்றும் இல்லாததால், நான் கேட்டுத் தெரிந்துகொண்ட ஓர் அற்ப சங்கதி வாசகர்களுக்கு வேடிக்கையாக இருக்குமென்று நம்பி இங்கே எழுதத் துணிகிறேன். ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் வேல்ஸ் இளவரசாக இருந்து, சாம்ராஜ்ய சஞ்சாரம் செய்யும் பொழுது தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்று கேப்டவுன் மகாநகரில் வரவேற்புபசாரம் பெற்ருர். அச் சமயம் அவருக்குப் பல நல்வாழ்த்துப் பத்திரங்கள் அளிக்கப்பட்டன. அவைகளுள் ஒன்று தென் ஆப்பிரிக்கா முழுவதிலும் உள்ள இந்தியர்களுக்கெல்லாம் தலைவராகக் காந்திஜி கொடுத்ததாகும். இந்தச் சமாசாரத்தைப் பெரியதாக என்னிடம் ஒரு பேட்டியில் சக்கரவர்த்தியே சொன்ஞர். "இந்தியாவில் ஒத்துழையாமை என்று புதுக் கிளர்ச்சி செய்து நாட்டின் அமைதியைக் கெடுக்கிருரே! ஏன் இப்படி என்னிடமும் என் அதிகாரத்தை வகிக்கும் வைஸ்ராய் முதலானவர்களிடமும் உங்கள் காந்திக்குக் கோபம் வரவேண்டும்? ராஜ விசுவாசம் நிறைந்த வரவேற்புப் பத்திரத்தை கேப்டவுனில் எனக்குப் படித்தவர்தாமே இவர்? அதற்குப் பிறகு விசுவாசத்தை இழக்கும்படி நான் என்ன தப்பிதம் செய்தேன்?" என்று அவர் ஆத்திரத்துடன் கேட்டார்.

இதை நான் மகாத்மாஜியிடம் சொல்லி, இந்தச் சம்பவத்தை ஞாபகமாக என்னிடம் சொன்ன அவர், அவரையும் அச்சமயம் கேட்பார் என்று எச்சரித்தேன். "அது உண்மைதான். ஏராளமான வரவேற்புப் பத்திரங்கள் வந்திருந்தபடியால் பல பத்திரங்களைப் படித்ததாகப் பாவித்துக் கொடுத்துவிட்டார்கள். அவைகளில் இந்தியரின் விசுவாசப் பத்திரமும் ஒன்று" என்று அவர் கூறிஞர். நான் எதிர்பார்த்தபடியே சக்கரவர்த்தி பக்கிங்ஹாம் அரண்மனை விருந்தில் மகாத்மாஜியைக் கேட்டாராம்.

## தென் ஆப்பிரிக்கா இந்தியர்

இந்த வட்டமேஜை மகாநாடு முடிவதற்கு முன்னமே தென் ஆப்பிரிக்காவில் வட்டமேஜை மகாநாடு கூடப் போகிறதென்றும் அதற்கு ஓர் அங்கத்தினராக நான் போகவேண்டுமென்றும், இந்திய அரசாங்கத்தாரிடமிருந்து ஒரு வேண்டுகோள் வந்தது. இதை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று காந்திஜி சந்தேகமின்றி எனக்கு உத்தரவளித்தார். தென் ஆப்பிரிக்கா இந்தியர்களின் நன்மைக்காக உழைப்பதில் எனக்கு அவர் குரு என்று முன்னமேயே அறிவித்திருக்கிறேன்.

அவர் அந்த நாட்டை விட்டு 25 வருஷங்களாயினும் பத்திரிகைகளாலும் நண்பர்களுடைய கடிதங்களாலும் எல்லாச் செய்திகளையும் தெரிந்துகொண்டிருந்தார். அவர் மனத்தை நன்றாக அறிந்த ஸ்ரீமதி ஸரோஜினி தேவியும் அங்கத்தினராகச் சேர்ந்தார். 1926-ஆம் வருஷம் நிகழ்ந்த சபைபோல் சிநேக பாவமாயும் திருப்திகரமாயும் இல்லாவிடினும், விஷயங்களை எல்லாம் செவ்வையாக ஆராய்ந்து ஓர் ஒப்பந்தம் செய்து முடித்தோம்.

இதன் முக்கியக் கருத்தைக் கொஞ்சம் எடுத்துரைத்தால் பிரயோசனமாகும். தென் ஆப்பிரிக்காவில் இந்தியர் ஜனத்தொகை அதிகம் என்பது வெள்ளையர் புகார். இதைக் குறைப்பதற்காகக் கொஞ்சம் பண உதவி செய்து, கஷ்டப்பட்டு எப்படியாவது தாய் நாட்டுக்குத் திரும்பிப் போக ஆசை கொண்டவர்களை அனுப்ப முதல் ஒப்பந்தத்தில் ஏற்பாடாகி யிருந்தது. இதன் பிரகாரம் நாலைந்து வருஷங்கள் தாம் ஜனங்கள் திரும்பி வந்தார்கள். திரும்பியவர்கள் ஏதாவது வேலையில் அமர முயற்சி செய்தார்கள்.

நம்முடைய சென்னை அரசாங்கத்தாரும் இவர்களுடைய உதவிக்காகத் தகுந்த உத்தியோகஸ்தரை நிய

மனம் செய்தார்கள். ஆயினும் திரும்பி வந்தவர்களில் தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போய்ப் பழையபடி பந்து வர்க்கத்தாருடன் சேர்ந்து சுகமாய் இருந்தவர்கள் குறைவு. அநேகர் கொண்டுவந்த பணத்தையும் இழந்து, வேலை அகப்படாமல், சீதோஷ்ணஸ்திதி மாறுதலால் தேக சௌக்கியத்தையும் இழந்து கஷ்டப்பட்டனர். இவற்றை யெல்லாம் நத்தாலில் உள்ளவர்கள் கேள்விப்படவே தாய்நாட்டிற்குத் திரும்பிப் போக ஆசை சிலருக்குக்கூட இல்லை.

இதனால் வெகு அதிருப்திப்பட்டு யூனியன் அரசாங்கத்தார் புகார் செய்துகொண்டே வந்தார்கள். வேறு சில குறைகளும் சேர்ந்துகொள்ளவே, இரு தேசத்துப் பிரதிநிதிகளும் கூடி ஆலோசனை செய்ய அவசியம் நேரிட்டது. இந்தத் தடவை, 'தாய்நாட்டுக்குத் திரும்புங்கள்' என்று சொல்லாமல், 'குடியேற்றத்திட்டம்' என்று ஓர் ஏற்பாடு செய்தோம். அதாவது இந்தியாவில், சாம்ராஜ்யத்திற்குள்ளான நாடுகளுக்குக் குடியேறுவதாக நம் ஜனங்களை அனுப்பினால், அவர்களுடன் தென் ஆப்பிரிக்கா இந்தியர்களையும் சேர்த்து அனுப்புவதாகச் சம்மதித்தோம்.

## முயற்சி வீணாகியது

இவ்வாறு இந்தியாவில் முயற்சி செய்யாவிடினும் யூனியன் அரசாங்கத்தார் தாங்கள் மட்டுமே செய்யலாமென்றும் ஷரத்து இருந்தது. இந்த ஏற்பாடு அங்குள்ள நம் ஜனங்களுக்குச் சற்றேனும் திருப்தியில்லை. மிகவும் ஆட்சேபம் செய்தார்கள். பிரதிநிதிகள் திரும்பிய பிறகு, சிறிது காலம் காத்திருந்து மத்திய அரசாங்கத்தார் ஒரு பெரிய கமிட்டியைக் கூட்டி இந்திய முக்கியஸ்தர்களுடன் கலந்து ஆலோசனையை நடத்தினார்கள். இந்த முயற்சியெல்லாம் வீணாயிற்று. இப்படித்தான் முடியும் என்கிற பயம் எங்களுக்கு முதலிலேயே உண்டு.

நம் இந்தியர்கள் குடியேறிய எந்த நாட்டிலும் இம்மாதிரித் தகராறுகள் உண்டாகின்றனவே யொழியச் சிறிதாவது முடிந்தது என்பது இல்லை. பர்மாவிலும் இலங்கையிலும் கூட வெள்ளையர்கள் அதிகாரம் வகிக்கும் நாடுகள் போலவே நம் ஜனங்களை எதிரிகளாக எண்ணிக் கொடுமை செய்து வருகிறார்கள். இது ஏதோ சாபத்தீடுபோலும்! இதற்குத் தகுந்த பரிகாரம் தெரியவே இல்லை. நம் நாட்டுக்குச் சுதந்தரம் வந்த பிறகுதான் வெளி நாட்டில் நமக்கு மரியாதை உண்டு என்பது காந்திஜி முதலியவர்களின் தீர்மானம்;

எனக்கும் இந்த அபிப்பிராயந்தான்.

## மூன்றாவது வட்டமேஜை மகாநாடு

மூன்றாவது வட்டமேஜை மகாநாட்டிற்கு என்னை அழைக்கவில்லையென்று முன்னமே சொல்லியிருக்கிறேன். என்னை மட்டுமல்ல; ஸி. ஒய். சிந்தாமணியையும் இன்னும் பலரையும் அழைக்கவில்லை; சுதேச மன்னர்களிலும் அநேகரைக் கூப்பிடவில்லை. இதற்கெல்லாம் காரணம் ஸர் ஸாமுவல் ஹோர் தெரிவித்தார்: ஆலோசனை செய்வதற்குப் பெரும் கூட்டமும் அந்த ஆலோசனைகளால் வெளிப்படும் கருத்துகளை நிறைவேற்றுவதற்குச் சிறிய சபையும் இருக்கவேண்டுமென்பது ஸகஜம் என்பதுதான் அவர் வெளியிட்ட காரணம்.

தள்ளப்பட்டவர்களில் அநேகரோ சண்டைக்காரர்கள். இந்த மாறுதல் மன்னர் வர்க்கத்தில்தான் நன்றாக வெளியாயிற்று. சமஷ்டி, குடியேற்ற நாட்டந்தஸ்து இவைகளில் அதிகப் பற்றுதல் இல்லாதவர்கள் தான் 1932-ஆம் வருஷம் மகாநாட்டிற்குப் போனார்கள். என் விஷயத்தில் என் தேக நிலை சரியாக இல்லையென்றும் அது பற்றி இந்தியா மந்திரிக்கு வெகு

கவலையென்றும் வைஸ்ராய் மூலமாக எனக்குத் தெரி விக்கப்பட்டது.

வில்லிங்டன் பிரபு இனிய சொற்களால் எனக்கு ஆறுதல அனுப்பினார். வெறும் சொற்கள் போதா வென்று எண்ணி இந்திய ராஜாங்க சபைத் தலைவர் ஸ்தானத்தையும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று அவர் என்னை வற்புறுத்தினார். ஸர் ஸி. பி. ராம ஸ்வாமி ஐயர் அச்சமயம் நிர்வாக சபையை விட்டு விலகி யிருந்தபடியால், அவர்போல் தம்முடன் நம் பிக்கையாகப் பழகக் கூடியவா ஒருவர் வேண்டுமென்பது தம் உத்தேசம் என்று அவர் எழுதியிருந்தார். இதனைல் ஒரு பககம் சந்தோஷமிருந்தும் ராஜீய விவகாரங்களில் பிரவேசமற்றுப் போகுமா என்ற பயத்தினால் நான் அந்தக் கௌரவத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

## வெள்ளை அறிக்கை

லண்டனில் பார்லிமென்டரி ஜாயின்ட் கூட்டுக் கமிட்டி செய்த முடிவுகளை, 'வெள்ளை அறிக்கை' (White Paper) மூலமாகப் பிரசுரம் பண்ணியபோது அதில் கண்டிருந்த பிரேரணைகளை விஸ்தாரமாக விசா ரித்து, பேச்சாலும் எழுத்தாலும் கண்டித்தேன். பின்பு வெளியான மசோதா வெகு பெரியது; மிகவும் சிக்க லானது. அந்த அந்தப் பிரிவுகள், ஷரத்துகள் இவைக ளுடைய கருத்துக்களை விளக்கிச் சட்டமாக்கி வைத்தது ஸர் ஸாமுவேல் ஹோருக்கு அளவற்ற புகழைக் கொடுத்தது. சட்டப் பிரபஞ்சத்தில் அது ஓர் அதிசய மான காரியந்தான்.

அநேக நன்மைகள் இருப்பினும், அரசியல் முற் போக்கை எதிர்பார்க்கும் நம்மவருக்கு இச் சட்டம் ஏமாற்றத்தையே விளைவித்தது. அநேக இடங்களில் குறைகளும், அநேக இடங்களில் அபாயங்களும் அதில்

னன்றாய் விளங்கின. ஒவ்வோர் இடத்தில் மோசக் கருத்தோ என்றும் தோன்றியது. இதற்கு உதாரணமாக ஒரு ஷரத்தை இங்கே எடுத்துக் காட்டுகிறேன். அது முக்கியமானது தவிர அநேக விஷயங்களையும் வெளியிட வல்லது.

இர்வின் பிரபு லண்டன் அதிகாரிகளின் அநுமதியின் பேரில் செய்த பெரிய விளம்பரத்தை முன்னமேயே விவரித்தோம். அதாவது ஏற்கனவே இருந்த அரசாங்கச் சட்டத்தில் பூர்வ பீடிகை (Preamble) யில், 'பிரிட்டிஷ் இந்தியாவில் ஜவாப்தாரி ஆட்சி (Responsible Government in British India)' என்கிற சொற்கள் அமைந்திருந்தன. இந்த 'ஜவாப்தாரி ஆட்சி' என்பது படிப்படியாக வளர்ந்து, முடிவில் குடியேற்ற நாட்டந்தஸ்து (Dominion Status) என்பதே சித்திக்கும். இது இர்வின் பிரபுவின் விளம்பரத்தில் சொல்லப்பட்டிருந்தது. அதாவது குடியேற்ற நாட்டந்தஸ்து என்பது சட்டத்திலாவது சட்டத்தின் பீடிகையிலாவது சொல்லப்படாமல் அதற்கு உவமையான வேறு ஓர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

பார்லிமென்டில் மசோதாவைப்பற்றிய விவாதம் நடந்தபோது, இந்தியாவில் இர்வின் பிரபுவால் வாக்களிக்கப்பட்ட குடியேற்ற நாட்டந்தஸ்து மசோதாவில் அடங்கிய ஷரத்துகளில் ஓர் இடத்திலும் காணப்படவில்லை என்று புகார் செய்தனர். இந்தப் புகாரை மேற்கொண்டு காமன்ஸ் சபையில் நம் நண்பர் அநேகரும் முறையிட்டார்கள். இந்த அமளியை அடக்க எண்ணி, இந்திய மந்திரியும் அட்டர்னி ஜெனரலுமாகச் சேர்ந்து ஓர் யுக்தி செய்தனர்; இதை நுட்பமாக வாசகர் கவனிக்க வேண்டும். "இந்தியர்கள் ஆவலாய்த் தேடுவது - அதாவது குடியேற்ற நாட்டந்தஸ்து - ஏற்கனவே சட்டத்தில் இல்லாதபடியால் இனியும் சட்டத்தில் அமைக்க முடி

யாது. அதற்கு மூலாதாரமாயுள்ள, 'ஜவாப்தாரி ஆட்சி' என்கிற சொற்களை ரத்துச் செய்யாமல் முன்போலவே நிறுத்தி வைக்கிறோம்'' என்றார்கள்.

## செய்த காரியம்

இதை எப்படி நிறைவேற்றினார்கள்? புதிய சட்டத்தில் பழைய 1919-ஆம் வருஷச் சட்டம் ரத்துச் செய்யப்பட்டது. ஆனால் இதன் பீடிகையை ரத்துச் செய்யாமல் நிறுத்தினார்கள். அப்படி நிறுத்தியதால், 'ஜவாப்தாரி ஆட்சி' என்னும் சொற்கள் அமலில் இருக்கின்றன. இதனால் பழைய நிலைமைக்குக் கேடில்லை என்று ஆகியது. இப்படிப் பார்லிமென்டில் அதிகார வர்க்கத்தினர் வாதாடியும் பழைய நிலைமைக்குக் கேடு விளைந்தது. இந்தக் கேடு இரு வகைப்பட்டது. சட்டத்தின் தத்துவத்தின்படி, சட்டத்தின் பிரிவுகளுக்கும் ஷெட்யூல்களுக்கும் மட்டுந்தான் வலிமை உண்டு. பீடிகையாவது பீடிகையிலுள்ள கருத்துக்களாவது வலிமை உடையன அல்ல. 'சட்டம் ரத்தான பிறகும் பீடிகை ரத்தாகவில்லையே! அதைக் கண்டு சந்தோஷப்படுங்கள்!' என்று சொன்னது, சோறு கேட்டவனுக்குக் கல்லைக் கொடுத்த மாதிரியாகும். தவிர, பீடிகையின் சொற்கள் 'பிரிட்டிஷ் இந்தியாவில் ஜவாப்தாரி ஆட்சி' என்பது. 1935-ஆம் வருஷத்திய சட்டத்திலோ பிரிட்டிஷ் இந்தியா, என்பதை நீக்கி, 'சமஷ்டி இந்தியா' சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. 'ஜவாப்தாரி ஆட்சி' என்பதற்குப் புது இந்தியாவில் அவகாசமே இல்லாமற் போய்விட்டது. அந்தச் சொற்களை ரத்துச் செய்யாமல் நிறுத்தியதன் பயன் என்ன? அப்படி மோசக் கருத்துடன் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் வாதிப்பார்களா என்று கேட்பது சரியல்ல. சட்டம் இடம் கொடுத்தால் எந்தக் கட்சியையும் அவர்கள் வாதிப்பார்கள். சற்று முன்புதான் உயர் குலத்தினரும் சட்ட

சபைக்கு நாயகருமான ஸெஸில் பிரபு (Lord Cecil), "வைஸ்ராய் விளம்பரமானால்தான் என்ன, பிரிட்டிஷ் மந்திரி சபையின் விளம்பரமானால்தான் என்ன, பிரிட்டிஷ் ஜன சமூகத்தைக் கட்டுப்படுத்துமா? அதற்கு என்ன வலிமை?" என்று தாக்ஷிண்யமில்லாமல் ஆட்சேபித்தார். 'இந்த ஆட்சேபம் ஒழுங்கல்ல; மந்திரி சபையார் கொடுத்த வாக்கைக் கௌரவிக்க வேண்டாமா?' என்று அவரை ஒருவரும் கண்டிக்கவில்லை. அதனால் பீடிகையை மட்டும் நம்பினவர் மண் குதிரை ஏறினவர் ஆவர்.

## நாட்டின் நிலைமை

இதன் பிறகு இரண்டு மூன்று வருஷங்கள் எனக்குப் போதாத காலம்! சரீரத்தில் நோயும் மனத்தில் துக்கமும் அதிகப்பட்டன. காங்கிரஸ்காரர்களும் லிபரல் கட்சியாரும் வேறு தேசாபிமானிகளும் தேச சேவகர்களும் இரண்டு மூன்று தலைமுறைகளாகப் பட்ட பாடெல்லாம் வீண் போனதும் தவிர, 1935-ஆம் வருஷத்து இந்திய அரசாங்கச் சட்டம் எனகிற பெருங் கேடும் விளைந்தது. வகுப்புச் சண்டைகளும் பேச்சாலும் எழுத்தாலும் நடந்தது போக, ஆங்காங்கு உயிருக்கும் ஹானி சம்பவித்தது. நம் நாடு மன்னர்களும், 'எங்களுக்குத் தேசாபிமானம் குறைவா?' என்று சொல்லிக்கொண்டே தேசாபிமானிகளது முயற்சிகளை எதிர்த்து வந்தார்கள்.

## மனைவி மரணம்

வில்லிங்டன் பிரபு வைஸ்ராயாக இருந்த காலத்தில் மகாத்மாஜியிடத்தில் துரபிப்பிராயப்பட்டு அவரையும் காங்கிரஸையும் வெகுவாய்த் தாக்கினார். வீட்டில் என் மனைவிக்கு, 'ப்ளூரஸி' (Pleurisy)' கடுமை

யாய் வந்து கஷ்டப்பட்டாள். இதை ஒருவாறு அடக்கி வைத்த டாக்டர் ரங்காச்சாரி தம் சிறு வயதிலேயே ஆயிரக் கணக்கான ஜனங்களைத் துக்கத்தில் ஆழ்த்தி மாண்டு விட்டார். பிறகு 'ப்ளூரஸி' க்ஷயரோகமாக வளர்ந்து கொடுமை செய்தபோது அவருடைய உதவி கிடைக்காமற் போயிற்று; சொல்லமுடியாத வேதனைக் குள்ளாகிக் காலகதி யடைந்தாள்.

## அண்ணாமலைச் சர்வகலாசாலையில்

இந்தச் சந்தர்ப்பத்தில் அண்ணாமலைச் சர்வகலா சாலை வைஸ்சான்ஸலர் வேலை காலியாகவே, செட்டி நாட்டு ராஜா, அதை ஏற்க வேண்டுமென்று என்னை மிகவும் வற்புறுத்தினார். 1935 ஜுலை மாதம் முதல் ஐந்து வருஷத்திற்கு அந்தப் பதவியில் அமர்ந்திருந் தேன். படிப்புத் துறையில் உழைப்பதும் மாணாக்கர்க ளுடன் பழகி அவர்களுக்குக் கல்வி கற்பிப்பதும் என் னுடைய உண்மையான ஸ்வபாவத்திற்கும் அநுபவத் திற்கும் ஒத்தவை. கூடியவரை மன அமைதியுடன் நான் காலத்தைக் கழித்தேன்.

பிள்ளைகள் வேலை நிறுத்தம் செய்து சர்வ கலாசாலைக்கே கேடு விளைவித்தபோது ஐந்தாறு மாதம் நான் பட்ட துன்பம் இவ்வளவு அவ்வளவு என்று கணக் கிட்டு முடியாது. இருதய நோயும் வலுவாகி, இரண்டு மூன்று தடவைகள் அபாயம் உண்டாகி, ஏதோ அதி ருஷ்ட வசத்தால் தப்பினேன். இந்தப் பெரிய சங்கடத் தில் துணையாய் நின்ற சில நண்பர்களையும் அவர்கள் செய்த சகாயத்தையும் பரம பாக்கியமாகக் கொண் டாட வேண்டும். எள்ளளவேனும் புரளாமல், நம்பிக்கை வைத்திருந்த ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் காட்டிய சகோதர பாசத்தைப் பற்றிப் பன்முறை சொல்லி யிருக்கிறேன்.

## மகாத்மாஜியின் பெருமை

**வே**று ஓர் அநுபவமும் என் நினைவில் முன் நிற்கிறது. நான் ஒன்றும் எழுதிக் கேளாமல் தாமாகவே மகாத்மா காந்தி நான் படும் துயரத்தை எப்படியோ தெரிந்துகொண்டு, பிள்ளைகளுக்கு அருமையான உபதேசம் செய்து, கிளர்ச்சியை அடக்க உத்தேசித்துப் பெரிய தந்தி அனுப்பினார். இது உபாத்தியாயர்களுக்கும் சாமான்ய மாணக்கர்களுக்கும் உயர்ந்த மனோபாவத்தை உண்டு பண்ணியது. கிளர்ச்சியில் கலந்த பிள்ளைகளுக்கோ அச்சமயம் புத்தி வரவில்லை. 'ஏதோ கிழவனுக்குக் கிழவன் சகாயம் செய்கிறான்' என்று அலட்சியம் செய்தார்கள். எனக்கோ அடக்க முடியாத பெருமையும் சந்தோஷமும் உண்டாயின. காந்திஜீயைப் போல் சிநேகத்தின் உண்மையை நல்ல சமயங்களில் காட்டுபவர் இல்லை; சமய சஞ்சீவி என்று அவரைச் சொல்லலாம். அவர் நம்மிடமுள்ள குறைகளை மறந்து தோஷங்களை மன்னித்துப் பொறுமையும் அன்பும் சேர்ந்து உருவமெடுத்ததுபோல் தருணத்தில் பலன் தருபவர். அவர் அனுப்பிய உதவிக்குப் பதில் வேறு ஒன்றும் தோன்றாமல், 'ஔதார்யமே! உனக்குப் பெயர் காந்தியல்லவா? (Magnanimity! Thy name is Gandhi)' என்று பதில் அனுப்பினேன்.

## மூன்றும் அதிருஷ்டம்

**வ**ரப்பிரஸாதமென்று சொல்லக்கூடிய இவ்விரண்டு அதிருஷ்டத்திற்குச் சரியான மூன்றாவதும் உண்டு. சர்வகலாசாலையின் கவலைகளை என் போலவே மேற்கொண்டு எனக்கில்லாத உடலுறுதியும் மனோதிடமும் படைத்த ஸ்ரீ டி. ஆர். வேங்கடராம சாஸ்திரியாரால் எனக்குக் கிடைத்த உபகாரங்களை எவ்வளவு சொன்னாலும் தகும். சுமை தாங்காமல் வருந்தியபோது

அவர்மேல் அதைச் சாய்த்துச் சிறிது காலம் விடைபெற்றேன். தம் காரியங்களை மறந்து, பெருத்த வருமானத்தையும் இழந்து என் கஷ்டங்களைத் தம் கஷ்டங்களாகவே நினைத்து உதவி புரிந்தார். இதை நான் எடுத்துரைப்பதை அவர் விரும்பமாட்டார். சகஜமான காரியந்தானே? ஒருவர் இடக் கைக்கு ஏதாகிலும் கேடு நேர்ந்தால் வலக் கை யோசனை செய்தா காப்பாற்றப் போகும்? வலக் கையைச் சிலாகிப்பதுண்டா? வால்மீகி லக்ஷ்மணரை ராமனுக்கு प्रियः प्राणो बहिश्चरः (வெளியில் நடமாடும் உயிர்) என்று சொல்வது வழக்கம்; இதன் அந்தரங்கத்தை ஸ்ரீ வேங்கடராம சாஸ்திரியால் நான் அறிந்தேன். இப்படி எல்லாப் பந்துக்களிடமும் நண்பர்களிடமும் நன்மை அடைந்த என் வாழ்வு பெரும் வாழ்வே.

———

# மஹாகனம் வ. ச. ஸ்ரீனிவாச சாஸ்திரியாரின் வாழ்க்கை அட்டவணை

1869. செப் 22-தஞ்சை ஜில்லாவில் வலங்கைமான் கிராமத்தில் பிறந்தார்.

1883. மெட்ரிகுலேஷன் பரீக்ஷயில் மாகாணத்தில் 13-வதாகத் தேறி, சம்பளம் கொடுக்காமல் எப். ஏ. படிக்கும் வாய்ப்பைப் பெற்ருர்.

1885. எம். ஏ. முதல் வகுப்பில் தேறிஞர்.

1887. பி. ஏ. முதல் வகுப்பில், மாகாணத்தில் இரண்டாம் இடம் பெற்றுத் தேறிஞர். சமஸ்கிருதத்தில் மாகாணத்தில் முதன்மையாகத் தேறிக் 'கோடேவரி' தங்கப் பதக்கத்தையும் பெற்ருர்.

,, 50 ரூ சம்பளத்தில் மாயவரம் முனிசிபல் ஹைஸ்கூலில் உபாத்தியாயராக அமர்ந்தார்.

1891. சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தார். பிரின்ஸிபால் ஹாலுடன் ஆங்கில உச்சரிப்பைப் பற்றி விவாதம்.

1893. உதவி ஆங்கில ஆசிரியர், சேலம் முனிஸிபல் கல்லூரி சேலம். ஸி. விஜயராகவாசாரியாருடன் தொடர்பு.

1894. உதவி ஆசிரியர், பச்சையப்பன் உயர்தரப் பள்ளி, சென்னை.

1899. தலைமை உபாத்தியாயர் ஹிந்து உயர்தரப் பள்ளி, திருவல்லிக்கேணி.

1904. சென்னை ஆசிரியர் சங்கத்தை (Madras Teacher's guild) ஸ்தாபிக்கப் பத்திரிகைகளில் யோசனை கூறி ஸ்தாபித்தது. ஸ்தாபர்களில்

ஒருவர். பிரசிடெண்டு, திருவல்லிக்கேணிக் கூட்டுறவுப் பண்டகசாலை.

1906. பெண்கள் பெரியவர்களான பிறகே மணம் செய்ய வேண்டுமென்று பிரசாரம் செய்தார். அதைப் பற்றி ஆங்கிலத்தில் ஒரு புத்தகமும் எழுதினார்.

1907. ஜனவரி 6. கோகலே ஸ்தாபித்த இந்திய ஊழியர் சங்கத்தில் வி. கிருஷ்ணஸ்வாமி ஐயருடைய சிபார்சினால் அங்கத்தினரானார்.

1908. சென்னை தேசியக் காங்கிரஸ் மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டியின் காரியதரிசியாக இருந்தார்.

1909. சென்னைச் சர்வகலாசாலை செனெட்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1913. சென்னைச் சட்டசபையின் அங்கத்தினராக நியமனம் பெற்றார். பெண்கள் பெரியவர்களான பிறகே மணம் செய்விக்க வேண்டும் என்ற மசோதாவைப் பிரேரேபித்தார்.

1914. மன்னர் நியமித்த உயர்தர உத்தியோகஸ்தர்கள் கமிஷன் (Royal Public Services Commission) முன் சாட்சியம் கூறினார்.

1915. பிப்ரவரி 19. கோகலேயின் மரணம். சாஸ்திரி இந்திய ஊழியர் சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

" அரசியல் சீர்திருத்தத்தைப் பற்றி யதாஸ்துத் தயாரித்த இந்தியப் பிரமுகர்கள் பதினெட்டுப் பேர்களுள் ஒருவர்.

1916. "பிரிட்டிஷ் கொடியின் கீழ் இந்தியாவுக்குச் சுயாட்சி" என்று ஆங்கிலத்தில் ஒரு புத்தகம் எழுதினார்.

1916 சென்னைச் சட்டசபை அங்கத்தினர்களால், ராஜப் பிரதிநிதி சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். லாகூரில் காங்கிரஸும் முஸ்லிம் லீகும் ஒப்புக்கொண்ட திட்டத்தைப் பற்றி ஒரு விரிவுரையை ஆங்கிலத்தில் வெளியிட்டார்.

1917. இந்தியக் காரியதரிசி மாண்டேகு, இந்தியாவுக்குப் பொறுப்பாட்சி தருவதாக வெளியிட்டார். அதைச் சாஸ்திரியார் வரவேற்று ஆதரித்துப் பல கூட்டங்களில் பேசிப் பிரசாரம் செய்தார். வேறு மிதவாதத் தலைவர்களுடன் - காங்கிரஸிலிருந்து விலகித் - தேசீய மிதவாதக் கட்சியை ஸ்தாபித்தார். நாசிக்கில் கூடிய பம்பாய் மாகாண மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

1918. ராஜப் பிரதிநிதி சபையில் ரௌலட் மசோதாவைப் பலமாக ஆட்சேபித்தார்.

1919. அரசியல் சீர்திருத்த விஷயமாகத் தமது அபிப்பிராயத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எடுத்துச் சொல்ல மிதவாதக் கட்சியின் கோஷ்டியில் ஓர் அங்கத்தினராகச் சென்றார். இதுதான் இங்கிலாந்துக்கு முதல் தடவை சென்றது.

,, சௌத்பாரோ கமிட்டி என்ற வாக்குரிமைக் கமிட்டியில் ஓர் அங்கத்தினராக நியமனம் பெற்றார்.

,, கூட்டுப் பார்லிமெண்டின் அரசியல் சீர்திருத்தக் கமிட்டியின் முன்பு சாட்சியம் கூறினார்.

1920. அடக்குமுறைச் சட்டங்களைப் பரிசிலனை செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட வேண்டுமென்று சாஸ்திரியார் சட்டசபையில் கொண்டு வந்த பிரேரணை நிறைவேறியது.

1920. மான்ட்போர்டு சீர்திருத்தத்தின் கீழ் டெல்லி மேல்சபைக்குச் சாஸ்திரியார் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

1921. பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மகாநாட்டுக்கு இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாகச் சென்றார். ஜினிவாவில் நடந்த சர்வதேச மகாநாட்டிற்கு இந்தியாவின் பிரதிநிதியாகச் சென்றார். மன்னர் பிரானின் அந்தரங்க மந்திரி சபையின் மெம்பராக (Privy Councillor) நியமனம் பெற்றார். லண்டன் நகராட்சி சபையின் நகர சுதந்தரத்தைப் (Freedom of the City of London) பெற்றார். ரெயிலவே விசாரணைக் கமிட்டி மெம்பராக நியமனம்-(சூக்வொர்த்தி கமிட்டி). கௌரவத் தோழர் (Companion of Honour) ஆக்கப்பட்டார்

1922. ஆஸ்திரேலியா, கானடா, நியூஜீலண்டு நாடுகளின் பிரதம மந்திரிகளின் அழைப்புக்கிணங்கி அந் நாடுகளுக்கு விஜயம் செய்து, அங்கே குடியேறிய இந்தியர்களின் நிலைமையை அறிந்து வந்தார். வாஷிங்டன் கப்பல் தளவாடக் குறைப்பு மகாநாட்டிற்கு (Naval disarmament Conference) இந்தியாவின் பிரதிநிதியாகச் சென்றார்.

1923. கீனியாவில் குடியேறிய இந்தியர்களின் கஷ்ட நிஷ்டூரங்களைப் பிரிட்டிஷ் மந்திரி சபையாருடன் கலந்தாலோசிக்க இந்திய அரசாங்கத்தார் அனுப்பிய தூதுகோஷ்டிக்குத் தலைவராக நியமிக்கப்பட்டு இங்கிலாந்து சென்றார்.

1924. மேல் சட்டசபையில் தென்னாப்பிரிக்கா அரசாங்கம் இந்தியர்களைப் பிரித்துவைக்கக் கொண்டு வந்த வகுப்புப் பிராந்திய மசோதாவை (Class

Areas Bill) எதிர்த்துப் பேசினார். மிதவாதக் கட்சியின் சார்பாக இங்கிலாந்து சென்று, இந்தியாவுக்கு அதிகமான அரசியல் உரிமைகள் வேண்டுமென்று பல கூட்டங்களில்பேசினார்.

1925. "பிரஜைகளின் உரிமைகளும் கடமைகளும்" என்ற தலைப்பின்கீழ்க் கல்கத்தா சர்வகலாசாலையில் கமலா பிரசங்கத்தை நிகழ்த்தினார்.

1926. தென்னாபிரிக்காவுக்குப் பாடிஸன் தூதுகோஷ்டியில் ஒரு மெம்பராகச் சென்றார்.

1927. தென்னாப்பிரிக்காவுக்கு இந்தியாவின் ஏஜண்டு ஜெனரலாகச் சென்றார்.

1928. கிழக்காப்பிரிக்காப் பிரதேசங்களை ஒன்று சேர்த்துக் கூட்டும் விஷயத்தில், இந்தியர்களின் சார்பாகச் சாட்சியம் சொல்ல இந்திய அரசாங்கத்தாரால் கீனியாவுக்கு அனுப்பப் பட்டார். அரசாங்கத்தார் அளித்த கே. ஸி. எஸ். ஐ. (K. C. S I.) பட்டத்தைப் புறக் கணித்தார்.

1929. மன்னர்பிரான் நியமித்த தொழில் கமிஷனில் (Royal Commission on Labour) மெம்பராக நியமனம் பெற்று இங்கிலாந்து சென்றார். இந்திய நாடு முழுதும் தேசாடனம் செய்தார்.

,, முதல் வட்டமேஜை மகாநாட்டிற்கு இந்தியப் பிரதிநிதியாக நியமனம் பெற்று இங்கிலாந்து சென்றார். பல கமிட்டிகளில் மெம்பராயிருந்தார்.

1931. எடின்பரோ நகர சுதந்தரம் பெற்றார்.

,, இரண்டாவது வட்டமேஜை மகா நாட்டுக்கு நியமனம் பெற்றார். ரோட்ஸ் ஸ்காலர்ஷிப் என்ற உயர்ந்த கௌரவத்தைச் சாஸ்திரிக்கு

அளிக்க, அதை அவர் உடல் நிலை காரணமாக ஏற்க மறுத்தார். சாஸ்திரியும் ராஜாஜியும் தீண்டாமையைப்பற்றி ஓர் அறிக்கை வெளியிட்டார்கள்.

1934. ஸ்ரீமதி லக்ஷ்மியின் (சாஸ்திரியாரின் மனைவி) மறைவு. இரண்டாம் தடவை ரோட்ஸ் ஸ்காலர்ஷிப்பை ஏற்க மறுத்தார்.

1935. மைசூர்ச் சர்வகலாசாலையின் ஆதரவில் கோகலே யைப் பற்றிப் பிரசங்கங்கள் செய்தார்.

„ அண்ணுமலைச் சர்வகலாசாலையின் உப அத்யக்ஷ கர் பதவியை ஏற்ருர்.

„ காங்கிரஸ், மந்திரி சபை அமைக்க மறுத்த போது சாஸ்திரியாரைக் கவர்னர் அழைத்து மந்திரி சபை அமைக்கும்படி கேட்டார். அவ் வாறு செய்வது நேர்மைக்கு விரோதம் என்று மறுத்தார்.

1936. மலேயா இந்தியர்களின் நிலைமையை ஆராய இந்திய அரசாங்கக் கோஷ்டியின் தலைவராகச் சென்ருர்.

1937. சென்னை மேல் சட்டசபைக்கு மெம்பராக நிய மனம் பெற்ருர்.

1941. சுதேசமித்திரன் வாரப் பத்திரிகையில், 'என் வாழ்க்கையின் அம்சங்கள்' என்று பல கட்டுரை கள் எழுதினுர்.

1943. ஸர் பிரோஷ்ஷா மேதாவைப்பற்றிப் பிரசங்கம் செய்தார்.

1944. ஆங்கிலத்தில் வால்மீகி ராமாயணத்தைப் பற்றிச் சென்னைச் சம்ஸ்கிருத கலாசாலையில் பல பிரசங்கங்கள் நிகழ்த்தினுர்.

1946. ஏப்ரல், 17. புதன் கிழமை, மறைவு.

# எங்கள் வெளியீடுகள்

***மீண்டும் வாழ்ந்தால்*** ரூ. 1-8-0

வ. ச. ஸ்ரீநிவாச சாஸ்திரி

சாஸ்திரியாரவர்கள் தம் இளமை வாழ்க்கை, தம் ஊர், சமூகம் இவைகளைப் பற்றிய பல உண்மைகளை இந்தப் புத்தகததில் விவரமாகக் கூறியிருக்கிறார்.

அந்தக் காலத்துக் கிராம வாழ்க்கை ஒரு சமூகத்தினரின் வாழ்க்கை, இவற்றின் வரலாறாகவே இந்தப் புத்தகம் இருக்கிறது. ரசமான பல செய்திகளை இதில் காணலாம்.

***ஸ்ரீ. வி. கிருஷ்ணசாமி ஐயர்*** ரூ. 8-0-0

கி. சந்திரசேகரன்

சென்ற தலைமுறையில் வாழ்ந்து கொடை, அறி[illegible] தேசசேவை முதலிய பல அம்சங்களில் பெ[illegible] [illegible] பெற்ற ஒரு பெரியவரின் வாழ்க்கை வர[illegible] இந்தப் புத்தகம் அவர் ஒருவர் வரல[illegible] இல்லாமல் அந்தக் காலத்தில அவரைச் [illegible]

[illegible] முதல் முறையாகச் சுற்றுப் பிரயாணம் செய்தபோது டாக்டர் ராஜன் அவர் அருகிலே இருந்தார். அப்போது நடை[illegible]பெற்ற பல ரசமான சம்பவங்களைச் சுவையாக எழுதியிருக்கிறார் டாக்டர் ராஜன்.

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4.